# தமிழ் மொழியும் இலக்கியமும்

## பகுதி I

# தரம் - 11

கடந்த காலங்களில் அரசினால் நடாத்தப்பட்ட வினாப்பத்திரங்களையும்,
பாடசாலை மட்டத்தில் இடம் பெற்ற வினாப்பத்திரங்களையும் மையமாகக் கொண்டு
10 ஆம் தரத்திற்கும் பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்ட இலகு வழிகாட்டி.

- மொழிவளம்
- இலக்கணம்
- ஆக்கத்திறன்
- வினா - விடைகள்



எஸ். ரமேஷ்குமார்
BA (Per), P.G.Dip.in.Master (Spl. Tamil),
National Dip.in.Teach (Merit) Spl. Tamil,
S.L.T.S.

LOYAL PUBLICATION
125, NEW MOOR STREET, COLOMBO - 12.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Class No: -
Acc No 1437

Arasady Public Library
Municipal Coun...

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## பகுதி I

# தரம் - 11

தரம் 10 இற்கும் பொருந்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது

**கடந்த காலங்களில் அரசினால் நடாத்தப்பட்ட வினாப்பத்திரங்களையும் பாடசாலை மட்டத்தில் இடம் பெற்ற வினாப்பத்திரங்களையும் மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இலகு வழிகாட்டி.**

Class No:
Acc No 1437.

- ★ மொழிவளம்
- ★ இலக்கணம்
- ★ ஆக்கத்திறன்
- ★ வினா – விடைகள்

Arasady Public Library
Municipal Council
Batticaloa

எஸ். ரமேஷ்குமார்

வெளியீடு : லோயல் பப்ளிகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : செப்டெம்பர் 2018

தலைப்பு : தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் - 11
பகுதி I

பக்கங்கள் : 200

ஆசிரியர் : எஸ். ரமேஷ்குமார்

பதிப்புரிமை : லோயல் பப்ளிகேசன்

பதிப்பு : லோயல் அச்சகம்

வெளியீடு : **Loyal Publication**
125, New Moor Street,
Colombo - 12.

விலை : 300/=

**ISBN : 978 - 955 - 7732 - 91 - 6**



தொடர்பு : **Dr. A. JOGARAJAH**
**No. 125, New Moor Street,**
**Colombo -12.**

**T.P : 011 - 2433874**
**011 - 4280880**
**0777 556277**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

புதிய கல்வி சீர்திருத்தத்திற்கு அமைவாக தரம் 11 மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட இந்நூலானது தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தில் பகுதி I இனை இலகுவில் வெற்றிக்கொள்வதற்கு உறுதுணையாக அமையும். தரம் 10 மாணவர்களுக்கு உதவும் வகையில் அமையப் பெற்றுள்ள இந்நூலானது மாணவர்களுக்கு மாத்திரமன்றி தரம் 10 - 11 இல் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் இலகு வழிக்காட்டியாக அமைக்கப்பட்டுள்ளது.

இந் நூலானது அரசினால் நடாத்தப்பட்ட கடந்தகால வினாப்பத்திரத்திரங்களையும் பாடசாலை மட்ட வினாப்பத்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் காலங்களில் எவ்வாறான வினாக்களை எதிர்பார்க்கலாம் என ஆய்வு செய்து அதன் அடிப்படையில் இந்நூலினை வெளியிட்டுள்ளேன்.

பகுதி I வினாத்தாளினைப் பொறுத்தவரையில் மொழித்திறன், ஆக்கத்திறன், இலக்கணம் ஆகிய விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. எனவே இம் மூன்று விடயங்களினையும் அதற்குறிய பயிற்சிகளினையும் தான் செய்த பயிற்சிகளின் விடைகள் பொருத்தமானதா என தன்னைத்தானே சுயமதிப்பீடு செய்து கொள்ளும் வகையில் விடைகளையும் வழங்கியுள்ளேன். மாணவர்கள் இந்நூலை முழுமையாகக் கற்று இந்நூலிலுள்ள பயிற்சிகளினை முறையாக செய்வதனூடாக பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறலாம்.

பரீட்சை நோக்காகக் கொண்டு கற்கும் மாணவர்களுக்கு இந்நூல் சிறந்த வழிக்காட்டியாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்நூலை முழுமையாகக் கற்றுணர்ந்து தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தில் அதிக புள்ளிகளைப் பெற வாழ்த்துகிறேன்.

ஆசிரியர்
எஸ். ரமேஷ்குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஒத்தகருத்துச் சொற்கள் | 1 - 2 |
| 2. | எதிர்க்கருத்து சொற்கள் | 3 - 4 |
| 3. | எதிர்பாற் சொற்கள் | 5 - 15 |
| 4. | தொடர் மொழிக்கு ஒரு மொழி | 16 - 29 |
| 5. | தமிழில் பிறமொழிச் சொற்கள் | 30 - 35 |
| 6. | பிரதேச வழக்குச் சொற்கள் | 36 - 41 |
| 7. | மரபுப்பெயர்கள் | 42 - 47 |
| 8. | அணிகள் | 48 - 54 |
| 9. | ஒலி வேறுபாடுகள் | 55 - 62 |
| 10. | சொற் பாகுப்பாடு | 63 - 66 |
| 11. | ஒரு பொருள் பன் மொழி | 67 - 70 |
| 12. | பல பொருள் ஒரு மொழி | 71 - 74 |
| 13. | மரபுத்தொடர் | 75 - 82 |
| 14. | இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், அடுக்கிடுக்குத்தொடர், இணை மொழி | 83 - 89 |
| 15. | அருஞ்சொறொடர்களும் கருத்துக்களும் | 90 - 93 |
| 16. | உவமைத் தொடர்கள் | 94 - 95 |
| 17. | பழமொழிகள் | 96 - 99 |
| 18. | எழுத்துக்களின் வகைகள் | 100 - 103 |
| 19. | சார்பெழுத்துக்கள் | 104 - 106 |
| 20. | மாற்றொலியன்கள் | 107 - 107 |
| 21. | எழுத்துக்களின் பரம்பல் | 108 - 114 |
| 22. | பதம் | 115 - 116 |
| 23. | பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் | 117 - 117 |
| 24. | பெயர்ச்சொற்கள் | 118 - 122 |
| 25. | பெயராகவும் வினையாகவும் வழங்கும் சொற்கள் | 123 - 123 |
| 26. | தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர் | 124 - 125 |
| 27. | வேற்றுமை | 126 - 128 |
| 28. | வினைச் சொல் | 129 - 132 |
| 29. | எச்சவினை | 133 - 134 |
| 30. | பெயரடையும் வினையடையும் | 135 - 136 |
| 31. | இடைச்சொல் | 137 - 138 |
| 32. | உரிச்சொல் | 139 - 139 |
| 33. | இணைப்பிடைச்சொல் | 139 - 140 |
| 34. | முன்னொட்டுகளும் பின்னொட்டுகளும் | 140 - 148 |
| 35. | சொற்றொடரும் வாக்கியமும் | 149 - 153 |
| 36. | வழுவும் வழாநிலையும் வழுவமைதியும் | 154 - 159 |
| 37. | இயல்புவழக்கும், தகுதிவழக்கும் | 160 - 162 |
| 38. | புணர்ச்சி | 163 - 168 |
| 39. | பிரதான கருத்து | 169 - 174 |
| 40. | பாடல் வினா | 175 - 180 |
| 41. | ஒழுங்குபடுத்தல் | 181 - 185 |
| 42. | நிறுத்தற்குறிகள் | 186 - 195 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஒத்தகருத்துச் சொற்கள்

**தமிழ் மொழியிலே பகுதி -I இன் முதல் ஐந்து வினாக்கள் பெரும்பாலும் ஒத்த கருத்து, எதிர்க்கருத்து மற்றும் ஏதிர்பாற் சொற்களை அடிப்படை யாகக் கொண்டே அமைகின்றன.**

1. அருள் - கருணை
2. அளகம் - கூந்தல்
3. அந்தகாரம் - காரிருள்
4. அரியாசனம் - சிம்மாசனம்
5. அம்புலி - திங்கள்
6. அங்காடி - சந்தை
7. அகதி - கதியற்றவர்
8. அச்சம் - பயம்
9. அஞ்சலி - வணக்கம்
10. அடவி - காடு
11. அடிசில் - உணவு
12. அணங்கு - தெய்வப்பெண்
13. அண்மை - சமீபம்
14. அதரம் - உதடு
15. அந்தம் - முடிவு
16. அக்கினி - நெருப்பு
17. அழகு - எழில்
18. அபாயம் - ஆபத்து
19. அப்பு - நீர்
20. அமர் - போர்
21. அம்புயம் - தாமரை
22. அலுவல் - வேலை
23. அவனி - பூமி
24. அறம் - தருமம்
25. அறிவாளி - அறிஞர்
26. அன்னம் - சோறு
27. அரமியம் - நிலாமுற்றம்
28. அனல் - நெருப்பு
29. அகம்பாவம் - செருக்கு
30. அகரமுதலி - அகராதி
31. அகவை - வயது
32. அக்கறை - சிரத்தை
33. அக்கிரமம் - அநீதி
34. அங்கதம் - வசைப்பாட்டு
35. அசலம் - மலை
36. அசுழம் - நாய்
37. அணங்கு - தெய்வப்பெண்
38. அண்டம் - உலகம்
39. அண்டர் - தேவர்
40. அரவு - பாம்பு
41. அனை - மீன்
42. அன்மை - தீமை
43. அமைதி - அடக்கம்
44. ஆசை - விருப்பம்
45. ஆவி - உயிர்
46. ஆயர் - இடையர்
47. ஆரண்யம் - காடு
48. ஆணை - கட்டளை
49. இன்னல் - துன்பம்
50. இழிவு - தாழ்வு
51. இச்சை - விருப்பம்
52. இடுக்கண் - துன்பம்
53. இரை - உணவு
54. இறப்பு - மரணம்
55. இறுதி - முடிவு
56. ஈகை - கொடை
57. ஈசன் - இறைவன்
58. ஈனம் - இழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. உதிரம் - இரத்தம்
60. உரம் - வலிமை
61. எழில் - அழகு
62. ஐயம் - சந்தேகம்
63. ஓதை - ஓசை
64. கபடம் - வஞ்சகம்
65. கருதுகோள் - அனுமானம்
66. களிறு - யானை
67. கங்குல் - இரவு
68. கண்டம் - கழுத்து
69. கதிரோன் - சூரியன்
70. கார் - மேகம்
71. கீர்த்தி - புகழ்
72. குறங்கு - தொடை
73. கூற்று - யமன்
74. கேளிர் - உறவினர்
75. கொங்கை - மார்பு
76. கோலம் - அழகு
77. கோ - அரசன்
78. சான்று - ஆதாரம்
79. சாலை - வீதி
80. சிரம் - தலை
81. சீற்றம் - கோபம்
82. சீவியம் - வாழ்க்கை
83. செருக்கு - ஆணவம்
84. சேய்மை - தூரம்
85. ஞானம் - அறிவு
86. ஞாலம் - உலகம்
87. தடாகம் - குளம்
88. தண்மை - குளிர்ச்சி
89. தாரணி - பூமி
90. தானம் - கொடை
91. திரு - செல்வம்
92. திருமுகம் - கடிதம்
93. திவலை - துளி
94. திகில் - பயம்
95. துன்னிய - நெருங்கிய
96. துஞ்சுதல் - உறங்குதல்
97. தூற்றுதல் - இகழ்தல்
98. தெவ்வர் - பகைவர்
99. நுதல் - நெற்றி
100. பனுவல் - நூல்
101. படர் - துன்பம்
102. பள்ளி - படுக்கை
103. பாவலர் - புலவர்
104. பிணக்கு - மாறுபாடு
105. புலமை - திறமை
106. புரவி - குதிரை
107. புனல் - நீர்
108. மஞ்சு - மேகம்
109. மடமை - அறியாமை
110. மறை - வேதம்
111. மிடுக்கு - வலிமை
112. முறுவல் - சிரிப்பு
113. வரம்பு - எல்லை
114. வரை - எல்லை
115. வானரம் - குரங்கு
116. வானவர் - தேவர்
117. விண் - ஆகாயம்
118. வேய் - மூங்கில்
119. வேந்தன் - மன்னன்
120. ஜனனம் - பிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அகங்கை - புறங்கை | | 33. | உதயம் - மறைவு | |
| 2. | அணுகல் - விலகல் | | 34. | உறவு - பகை | |
| 3. | அறம் - மறம் | | 35. | உயர்வு - தாழ்வு | |
| 4. | அகம் - புறம் | | 36. | உத்தமன் - அதமன் | |
| 5. | அடி - முடி | | 37. | உள்நாடு - வெளிநாடு | |
| 6. | அண்மை - சேய்மை | | 38. | ஊன்றுதல் - பிடுங்குதல் | |
| 7. | அமைதி - குழப்பம் | | 39. | ஊடல் - கூடல் | |
| 8. | அன்பு - வன்பு | | 40. | எளிது - அரிது | |
| 9. | ஆக்கல் - அழித்தல் | | 41. | எதிர்ப்பு - ஆதரவு | |
| 10. | ஆசை - நிராசை | | 42. | எழுதல் - விழுதல் | |
| 11. | ஆத்திகன் - நாத்திகன் | | 43. | ஏறு - இறங்கு | |
| 12. | ஆதரவு - நிராதரவு | | 44. | ஏற்றம் - இறக்கம் | |
| 13. | ஆரம்பம் - முடிவு | | 45. | ஏற்றுமதி - இறக்குமதி | |
| 14. | ஆக்கம் - கேடு | | 46. | ஒருமை - பன்மை | |
| 15. | ஆதி - அந்தம் | | 47. | ஒளி - இருள் | |
| 16. | ஆண்டான் - அடிமை | | 48. | ஒற்றை - இரட்டை | |
| 17. | இசை - வசை | | 49. | ஐது - செறிவு | |
| 18. | இம்மை - மறுமை | | 50. | ஐயம் - தெளிவு | |
| 19. | இல்லறம் - துறவறம் | | 51. | ஒடுக்கம் - விரிவு | |
| 20. | இன்பம் - துன்பம் | | 52. | ஓங்குக - வீழ்க | |
| 21. | இலாபம் - நட்டம் | | 53. | ஓரவஞ்சனை - நடுநிலைமை | |
| 22. | இணக்கு - பிணக்கு | | 54. | கதி - நிர்க்கதி | |
| 23. | இன்சொல் - வன்சொல் | | 55. | கனவு - நனவு | |
| 24. | இணக்கம் - பிணக்கம் | | 56. | கலக்கம் - தெளிவு | |
| 25. | இணைந்து - தனித்து | | 57. | காய்தல் - உவத்தல் | |
| 26. | இம்மை - மறுமை | | 58. | காழ்ப்பு - நயப்பு | |
| 27. | இயற்கை - செயற்கை | | 59. | கிளர்ச்சி - அமைதி | |
| 28. | இளமை - முதுமை | | 60. | கீர்த்தி - அபகீர்த்தி | |
| 29. | ஈரம் - வரட்சி | | 61. | குறில் - நெடில் | |
| 30. | ஈதல் - ஏற்றல் | | 62. | குறை - நிறை | |
| 31. | உபகாரம் - அபகாரம் | | 63. | குழிவு - குவிவு | |
| 32. | உலோபி - வள்ளல் | | 64. | குறுக்கு - நெடுக்கு | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. குறைவு - நிறைவு
66. கூடுதல் - கலைதல்
67. கெழுதகைமை - பகைமை
68. கேண்மை - பகைமை
69. கைதவம் - நேர்மை
70. கைப்பற்றல் - கைவிடல்
71. கைகாரன் - திறமையற்றவன்
72. கொழுத்தல் - இளைத்தல்
73. கொள்வனவு - கொடுப்பனவு
74. கொந்தளிப்பு - அமைதி
75. கொடுமை - செம்மை
76. கொடை - இரப்பு
77. கோடல் - கொடுத்தல்
78. கோரிக்கை - கட்டளை
79. கோழை - வீரன்
80. கோளாறு - செம்மை
81. கௌரவம் - அகௌரவம்
82. கௌமாரம் - வயோதிபம்
83. சஞ்சலம் - மனவுறுதி
84. சகாயம் - இடையூறு
85. சங்கடம் - சௌகரியம்
86. சத்தியம் - அசத்தியம்
87. சத்து - அசத்து
88. சாந்தம் - உக்கிரம்
89. சாதகம் - பாதகம்
90. சாது - முரடு
91. சாவு - வாழ்வு
92. சிறப்பு - இழிவு
93. சிக்கனம் - ஊதாரித்தனம்
94. சீதம் - வெப்பம்
95. சுத்தம் - அசுத்தம்
96. சுருக்கம் - பெருக்கம்
97. சூடு - குளிர்
98. செல்வம் - வறுமை
99. செங்கோல் - கொடுங்கோல்
100. செழுமை - வரட்சி
101. சேர்தல் - பிரிதல்
102. தட்பம் - வெப்பம்
103. தர்க்கம் - குதர்க்கம்
104. தண்ணீர் - வெந்நீர்
105. தாமதம் - துரிதம்
106. தொகை - விரி
107. தொடக்கம் - முடிவு
108. நம்பிக்கை - அவநம்பிக்கை
109. நண்பன் - பகைவன்
110. நிறைவு - குறைவு
111. நீண்ட - குறுகிய
112. நீளம் - அகலம்
113. நீதி - அநீதி
114. நுண்மை - பருமை
115. பாட்டாளி - முதலாளி
116. புராதனம் - நவீனம்
117. பெருமை - சிறுமை
118. போலி - அசல்
119. மங்கலம் - அமங்கலம்
120. வல்லினம் - மெல்லினம்
121. வரவு - செலவு
122. வானம் - வையகம்
123. வாதி - பிரதிவாதி
124. வினா - விடை
125. ஞாபகம் - மறதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 எதிர்பால் சொற்கள்

1. அப்பா - அம்மா
2. அப்பன் - அம்மை
3. அண்ணன் - அக்காள்
4. அழகன் - அழகி
5. அவன் - அவள்
6. ஆசிரியன் - ஆசிரியை
7. இடையன் - இடைச்சி
8. இறைவன் - இறைவி
9. உத்தமன் - உத்தமி
10. உழவன் - உழத்தி
11. எசமான் - எசமாட்டி
12. ஐயன் - ஐயை
13. ஒருவன் - ஒருத்தி
14. கணவன் - மனைவி
15. காவற்காரன் - காவற்காரி
16. கிழவன் - கிழவி
17. குருடன் - குருடி
18. குரு - குருபத்தினி
19. குறவன் - குறத்தி
20. குணவான் - குணவதி
21. கூனன் - கூனி
22. சமையல்காரன் - சமையல்காரி
23. சகோதரன் - சகோதரி
24. சிறுவன் - சிறுமி
25. சீமான் - சீமாட்டி
26. செல்வன் - செல்வி
27. தந்தை - தாய்
28. தம்பி - தங்கை
29. தமையன் - தமக்கை
30. தலைவன் - தலைவி
31. தாதன் - தாதி
32. திருடன் - திருடி
33. திருவாளன் - திருவாட்டி
34. துணைவன் - துணைவி
35. தேவராயண் - தேவராட்டி
36. தோழன் - தோழி
37. நடிகன் - நடிகை
38. பணக்காரன் - பணக்காரி
39. பண்டிதன் - பண்டிதை
40. பாட்டன் - பாட்டி
41. பாணன் - பாடினி
42. பாங்கன் - பாங்கி
43. பாடகன் - பாடகி
44. பாலகன் - பாலகி
45. பிரான் - பிராட்டி
46. புத்திரன் - புத்திரி
47. பூட்டன் - பூட்டி
48. பைத்தியக்காரன்-பைத்தியக்காரி
49. மருத்துவன் - மருத்துவச்சி
50. மணவாளன் - மணவாட்டி
51. மகன் - மகள்
52. மாதா - பிதா
53. மாமா - மாமி
54. மாணவன் - மாணவி
55. மைத்துனன் - மைத்துனி
56. வண்ணான் - வண்ணாத்தி
57. வீரன் - வீராங்கனை
58. வேடன் - வேடுவிச்சி
59. வேட்டைக்காரன் - வேட்டைக்காரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் – 1

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. 'தண்தேன் நுகரா மண்டுகம்' -இங்கு **மண்டுகம்** என்பதன் ஒத்தகருத்துச் சொல்
(1) நண்டு (2) தவளை (3) தேனீ (4) குருவி

2. 'அணி தேர் புரவி ஆட்பெரும் படை' - இங்கு **புரவி** என்பது
(1) குதிரை (2) யானை (3) மக்கள் (4) சூரியன்

3. 'அடக்கம் உடையவர் அறிவிலர்' -இப்பாடலடியில் **அடக்கம்** என்பது
(1) ஆரவாரம் (2) அமைதி (3) கோபம் (4) பொறாமை

4. 'தன்மை இலார் அயல் இருப்பும்' -இங்கு **அயல்** என்பதன் பொருள்
(1) அருகில் (2) பாக்கம் (3) சேய்மை (4) பக்கம்

5. 'கேண்மை கெழீஇக் கொளல்'- இங்கு **கேண்மை** என்பது
(1) பகை (2) தகுதி (3) நட்பு (4)நெருக்கம்

6. "வேல் மெய்யதா வால் குழைக்கும்" - இங்கு **குழைக்கும்** என்பதன் பொருள்
(1) ஆட்டும் (2) நடுங்கும் (3) வளையும் (4) வலையும்

7. "பங்கம் பழனத்து உழும் உழவர்" - இங்கு **பழனம்** என்பது
(1) சேறு (2) நெல் (3) வயல் (4) வரப்பு

8. "வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பர்" - இங்கு **வெகுளி** என்பதன் பொருள்
(1) பொறாமை (2) அகங்காரம் (3) கோபம் (4) செருக்கு

9. 'புலங்களோடு கரணமும் ஆவியும்'- இங்கு **ஆவி** என்பது
(1) பேய் (2) உடல் (3) மெய் (4) உயிர்

10. 'மெலிந்த அப்பு இறைக்கும்'- இங்கு **அப்பு** என்பதன் பொருள்
(1) தழல் (2) நீர் (3) பனி (4) துளி

11. 'அவனி பண்டு ஆண்ட வேந்தர்'- இங்கு **வேந்தர்** என்பது
(1) மன்னன் (2) மண்ணன் (3) மன்ணன் (4) மணன்னன்

12. 'கொற்றத்தார் குரிசில்'- இங்கு **கொற்றம், தார்** என்பதன் பொருள்
(1) அரசன், மாலை (2) பூ, மாலை
(3) வெற்றி, வாழை (4) வெற்றி, மாலை

13. 'படர் எலாம் படைத்தாள்'- இங்கு **படர்** என்பது
(1) இன்பம் (2) துன்பம் (3) மகிழ்ச்சி (4) அன்பு

14. 'நெடுமையால் அன்று அளந்த உலகு எலாம்'- இங்கு **உலகு** என்பதன் பொருள்
(1) ஞலம் (2) அவணி (3) தரணி (4) ஞாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. 'இரக்கம் இலாளையும்'- இங்கு **இரக்கம்** என்பதன் பொருள்
(1) கருனை (2) சினம்
(3) கருணை (4) கோபம்

16. 'ஏதம் கொண்டு ஊதியம்'- இங்கு **ஏதம்** என்பதன் பொருள்
(1) வருமானம் (2) மனம் (3) கேடு (4) இரக்கம்

17. 'நாணாமை நாடாமை நாரின்மை'- இங்கு **நாண்** என்பதன் பொருள்
(1) வெட்கம் (2) கயிறு
(3) நன்மை (4) தீமை

18. 'பேதையின் பேதையர் இல்'- இப்பாடலடியில் **பேதை** என்பதன் பொருள்
(1) அறிவு (2) பெண் (3) பாவை (4) அறிவிலி

19. 'கழாக்கால் பள்ளியுள் வைத்தற்றால்'- இங்கு **பள்ளி** என்பதன் பொருள்
(1) பாடசாலை (2) படுக்கை (3) பண்பு (4) உலகம்

20. 'தண்கயம் ஆடு மகளிர்'- இங்கு **கயம்** என்பதன் பொருள்
(1) குளம் (2) ஏரி (3) ஆறு (4) குலம்

21. 'பொய்கை ஊரன் கேண்மை' - இங்கு **பொய்கை** என்பதன் பொருள்
(1) குலம் (2) குளம் (3) கிணறு (4) ஓடை

22. 'நறு மதுஅருந்தி ஆடும்' - இங்கு **மது** என்பதன் பொருள்
(1) தேன் (2) மதுசாரம் (3) பூ (4) இதழ்

23. 'பனிக்கூட்டம் விரட்டிவரும் பகலவன்' -இப்பாடலடியில் **பகலவன்** என்பதன் பொருள்
(1) சந்திரன் (2) நட்சத்திரம் (3) சூரியன் (4) வெள்ளி

24. 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்' - இங்கு **திங்கள்** என்பதன் ஒத்த சொல்
(1) சூரியன் (2) சந்திரன் (3) நட்சத்திரம் (4) மாதம்

25. 'செய் வரால் இனம் உகளும்' -இங்கு **செய்** என்பதன் பொருள்
(1) சேறு (2) வயல் (3) குளம் (4) கிணறு

26. 'பைவராய் அருங்கானில்' - இங்கு **பைவர்** என்பதன் பொருள்
(1) இன்பம் (2) காடு (3) பள்ளம் (4) துன்பம்

27. 'உய்வர் ஆர் என' - இங்கு **உய்வர்** என்பதன் பொருள்
(1) உயிர்பெறுபவர் (2) பிழைப்பவர்
(3) இறப்பவர் (4) பிறப்பவர்

28. 'உயர் வரைக்காடு என்ன' - இங்கு **வரை** என்பதன் பொருள்
(1) தென்னை (2) மூங்கில் (3) பலா (4) கமுகு

29. 'சந்துப்பட உரைத்தருள்' - இங்கு **சந்து** என்பதன் பொருள்
(1) சமாதானம் (2) கோபம் (3) தூது (4) போர்

30. 'அரவு உயர்த் தோனுடன் மறு சூது ஆடி'- இங்கு **அரவு** என்பதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்தகருத்துச் சொல்
(1) புலி (2) பாம்பு (3) சிங்கம் (4) வேல்

31. 'ஆடை அவனி எல்லாம்'- இங்கு **அவனி** என்பது
(1) கடல் (2) சமுத்திரம் (3) நதி (4) உலகம்

32. 'கரவு உறையும் மனத்தாதை'- இங்கு **கரவு** என்பது
(1) சிந்தனை (2) வஞ்சனை (3) கோபம் (4) பொறுமை

33. 'தண்பதியும் தாயமும் தான் தாரான்'- இங்கு **பதி** என்பதன் பொருள்
(1) நாடு (2) நகர் (3) உலகம் (4) தலைவன்

34. 'தாது ஊதி அளி முரலும்'- இங்கு **அளி** என்பது
(1) நண்டு (2) கொடு (3) நாடு (4) வண்டு

35. 'வளை குலமும் வலம் புரியும்'- இங்கு **வளை** என்பது
(1) புற்று (2) சங்கு (3) பாம்பு (4) மக்கள்

36. 'வெம் பணிக்கொடியோன்'- இங்கு **பணி** என்பதன் பொருள்
(1) புலி (2) பாம்பு (3) கரடி (4) சிங்கம்

37. 'சிந்தூரத் திலக நுதல் சிந்துரத்தின்'- இங்கு **நுதல்** என்பதன் ஒத்தக் கருத்து
(1) தலை (2) நெற்றி (3) முகம் (4) மூக்கு

38. 'அணிந்து வரும் சமரில் எதிர்ந்து'- இங்கு **சமர்** என்பது
(1) சமாதானம் (2) போர் (3) பகை (4) நட்பு

39. 'பவன குமாரனை மலர்க்கை பணிந்து'- இங்கு **பவனம்** என்பதன் பொருள்
(1) காற்று (2) வெயில் (3) மழை (4) குளிர்

40. 'குருகுலத்தோர் போர் ஏறே' - இங்கு **ஏறு** என்பது
(1) கரடி (2) சிங்கம் (3) புலி (4) மான்

41. 'மைவிழி என் வஞ்சியிடை' - இங்கு **விழி** என்பதன் பொருள்
(1) கண் (2) வாய் (3) முகம் (4) கை

42. 'பீடுடைய கல்வி நலம் பெற்றிருக்கும்' - இங்கு **பீடு** என்பதன் கருத்து
(1) சிறுமை (2) நன்மை (3) பெருமை (4) பெறுமை

43. 'தம் பெருமை தாமறியா தஞ்சமிலா' - இங்கு **தஞ்சம்** என்பது
(1) அறிவிலி (2) அடைக்கலம்
(3) பஞ்சம் (4) பேதை

44. 'இன்பம் அடைவதற்கு இடையூறு என இயம்பு' - **இடையூறு** என்பது
(1) இடை (2) படை (3) அழகு (4) தடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. 'கிஞ்சுக வாய்ப்பைந்தொடி' - இங்கு **கிஞ்சுகம்** என்பதன் கருத்து
(1) வெள்ளி (2) செப்பு (3) பவளம் (4) வெல்லி

46. 'சின்ன பதுமைக்கொரு சிறார் செய்மனம்' - இங்கு **பதுமை** என்பது
(1) பொம்மை (2) பெண் (3) ஆண் (4) மகள்

47. 'கன்னல் மொழி கேளாது' -இங்கு **கன்னல்** என்பதன் பொருள்
(1) மூங்கில் (2) கரும்பு (3) பலா (4) கமுகு

48. 'அம் பொன்மலரக் கொம்பு' - இங்கு **அம்** என்பது
(1) பழைய (2) சிறிய (3) பெரிய (4) அழகிய

49. 'கஞ்சமுகம் நோக்காது' - இங்கு **கஞ்சம்** என்பது
(1) மல்லிகை (2) தாமரை (3) ஆம்பல் (4) அல்லி

50. 'காட்டில் விடும் பூஞையை போல்'-இங்கு **பூஞை** என்பதன் பொருள்
(1) பூனை (2) சிங்கம்
(3) சிறுத்தை (4) புள்ளிமான்

## வினாத்தாள் - I
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 2 | (11) - 1 | (21) - 2 | (31) - 4 | (41) - 1 |
| (2) - 1 | (12) - 4 | (22) - 1 | (32) - 2 | (42) - 3 |
| (3) - 2 | (13) - 2 | (23) - 3 | (33) - 1 | (43) - 2 |
| (4) - 1 | (14) - 1 | (24) - 4 | (34) - 4 | (44) - 4 |
| (5) - 3 | (15) - 3 | (25) - 2 | (35) - 2 | (45) - 3 |
| (6) - 1 | (16) - 3 | (26) - 4 | (36) - 2 | (46) - 1 |
| (7) - 3 | (17) - 1 | (27) - 2 | (37) - 2 | (47) - 2 |
| (8) - 3 | (18) - 4 | (28) - 2 | (38) - 2 | (48) - 4 |
| (9) - 4 | (19) - 2 | (29) - 1 | (39) - 1 | (49) - 2 |
| (10) - 2 | (20) - 4 | (30) - 2 | (40) - 2 | (50) - 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 2

☆ **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் கோடிடப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களின் கீழ் கோடிடுக.**

1. 'இரவாது தான் ஈதல்' இங்கு <u>ஈதல்</u> என்பதன் எதிர்ப்பொருள்
   (1) ஏற்றல் (2) கொடுத்தல் (3) வழங்குதல் (4) தேடுதல்

2. 'மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிது' - இங்கு <u>சேர்தல்</u> என்பதன் எதிர்க்கருத்து
   (1) பிரித்தல் (2) கலத்தல் (3) பிரிதல் (4) கூடுதல்

3. 'சாதகங்கள் புரட்டும் பொய்மை சேர்' இங்கு <u>சாதகம்</u> என்பதன் எதிர்ச்சொல்
   (1) ஜாதகம் (2) பாதகம் (3) தீமை (4) தீங்கு

4. 'தன் நண்பனை தூற்றுவார்' இங்கு <u>தூற்றுதல்</u> என்பதன் எதிர்க்கருத்து
   (1) காட்டுதல் (2) தூண்டுதல்
   (3) சாற்றுதல் (4) போற்றுதல்

5. 'முழங்கு திரை புனல் அருவி' - இங்கு <u>புனல்</u> என்பதன் எதிர்க்கருத்து
   (1) அனல் (2) நீர் (3) மணல் (4) நிழல்

6. 'கானவர்கள் விழி யெறிந்து வானவரை அழைப்பர்' - இங்கு <u>கானவர்</u> என்பதன் எதிர்ப்பொருள்
   (1) மாணவர்கள் (2) வேடுவர் (3) வாணவர் (4) வானவர்

7. 'மாத மூன்று மழையுள்ள நாடு' இங்கு <u>நாடு</u> என்பதன் எதிர்க்கருத்து
   (1) பாடு (2) காடு (3) வாடு (4) தேடு

8. 'நீங்கக்காண்பது சேர்ந்தவர் பாவம்' - இங்கு <u>பாவம்</u> என்பதன் எதிர்க்கருத்து
   (1) புண்ணியம் (2) புன்னியம்
   (3) புன்ணியம் (4) புண்னியம்

9. 'கழித்து நீக்கியது என கள்ள ஆசை' - இங்கு <u>ஆசை</u> என்பதன் எதிர்ச்சொல்
   (1) வேட்பு (2) ஆவல் (3) நிராசை (4) சிநேகம்

10. 'அறம் தானே என்கின்ற' - <u>அறம்</u> என்பதன் எதிர்க்கருத்து
   (1) தர்மம் (2) மரம் (3) மறம் (4) கரம்

11. "ஏதிலார் ஆரத் தமர் பசிப்பார்"- இங்கு <u>தமர்</u> என்பதன் எதிர்க்கருத்து
   (1) பிறர் (2) உறவு (3) நட்பு (4) சகோதரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. 'ஈர்ந்து இன்புறும் இளையோர்' இங்கு <u>இளையோர்</u> என்பதன் எதிர்ப்பதம்

(1) யுவதி (2) பாலகன் (3) பாட்டி (4) முதியோர்

13. 'குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்கு' -இங்கு <u>குன்று</u> என்பதன் எதிர்க்கருத்து

(1) மதில் (2) குழி (3) குளி (4) மலை

14. 'பெண்களுக்கும் அடிமைகட்கும் பேதமில்லை' - இங்கு <u>அடிமை</u> என்பதன் எதிர்க்கருத்து

(1) மக்கள் (2) அறிவாளி (3) ஆண்டான் (4) குடிமை

15. அவன் வீட்டிற்கு வருவது அநுகூலமாக அமையும் - இங்கு <u>அநுகூலம்</u> என்பதன் எதிர்க்கருத்து

(1) பிரதிகூலம் (2) நன்மை (3) பலன் (4) பிரதிகூளம்

16. 'அவன் என்னுடன் உறவு கொண்டான்' - இங்கு <u>உறவு</u> என்பதன் எதிர்ப்பதம்

(1) பாசம் (2) நட்பு (3) சிநேகம் (4) பகை

17. அவனுக்கு எல்லாமே ஞாபகம் வந்தது இங்கு <u>ஞாபகம்</u> என்பதன் எதிர்ப்பதம்

(1) மறதி (2) நினைவு (3) மரதி (4) நிணைவு

18. இன் சொல் பேசுவது நல்லது - இங்கு <u>இன்சொல்</u> என்பதன் எதிர்க்கருத்து

(1) வண்சொல் (2) இனியசொல்
(3) வன்சொல் (4) வன்சொள்

19. நாத்திகம் பேசிக்கொண்டிருந்தான் இங்கு <u>நாத்திகம்</u> என்பதன் எதிர்ப் பதம்

(1) ஆத்திகன் (2) ஆத்திகம்
(3) நாத்திகன் (4) சாத்தான்

20. காலம் முழுவதும் அடிமையாக வாழ்ந்தான். <u>காலம்</u> என்பதன் எதிர்க்கருத்து

(1) அகாளம் (2) பாலம் (3) காளம் (4) அகாலம்

21. தன் பெற்றோரே கதி என்று நின்றான் இங்கு <u>கதி</u> என்பதன் எதிர்ப்பதம்

(1) நிர்க்கதி (2) சரணாகதி (3) அடைக்கலம் (4) வேகம்

22. அவன் ஆதரவு இல்லாமல் தடுமாறினான்.இவ் வாக்கியத்தில் <u>ஆதரவு</u> என்பதன் எதிர்க்கருத்துச்சொல்

(1) துணை (2) ஆதரிப்பு
(3) நிராதரவு (4) அன்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. சரவணன் ஆணவத்துடன் காணப்பட்டான்.-இங்கு ஆணவம் என்பதன் எதிர்க்கருத்து

(1) செருக்கு (2) அடக்கம்
(3) அகம்பாவம் (4) சினம்

24. அவன் எல்லாவற்றிற்கும் கேடு விளைவித்தான். இங்கு கேடு என்பதன் எதிர்ச்சொல்

(1) ஆக்கம் (2) அழிவு (3) பாதகம் (4) கொடுமை

25. அநேகமானவர்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள். இங்கு அநேகம் என்பதன் எதிர்ப்பதம்

(1) நிரைய (2) அதிகம் (3) நிறைய (4) ஏகம்

26. டெங்கு நோயை தடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இங்கு ஒத்துழை என்பதன் எதிர்க்கருத்து

(1) ஆதரி (2) ஒதுங்கு (3) முன்வருதல் (4) பதுங்கு

27. 'ஊழி திரண்டதோ கங்குல் தினகரனும்' -இங்கு கங்குல் என்பதன் எதிர்ப்பதம்

(1) பகல் (2) இரவு (3) காலை (4) வைகறை

28. தர்மன் சிறந்த கொடையாளி. இங்கு கொடையாளி என்பதன் எதிர்ப்பதம்

(1) வள்ளல் (2) தர்மம் (3) உலோபி (4) ஏழை

29. 'கானகம் முழுவதும் அழைந்தான்.' இங்கு கானகம் என்பதன் எதிர்ப்பதம்

(1) பூமி (2) வையகம் (3) வானகம் (4) வைகறை

30. 'வையகம் எல்லாம் எமதன்று எழுதுமே'. - இப்பாடலடியில் வையகம் என்பதன் எதிர்ப்பதம்

(1) பூமி (2) நிலம் (3) அண்டம் (4) வானகம்

31. அவன் சுலபமாக வேலைகளைச் செய்வான். இங்கு சுலபம் என்பதன் எதிர்கருத்து

(1) இலகு (2) துர்பலம் (3) எளிது (4) எளிமை

32. பாலர்களைச் சிறந்த முறையில் பாதுகாக்க வேண்டும். இங்கு பாலர் என்பதன் எதிர்ப்பதம்

(1) விருதர் (2) சிறியவர்
(3) மழலை (4) குழந்தை

33. அவர் சிறந்த புலமையானவர் - இங்கு புலமை என்பதன் எதிர்க் கருத்து

(1) இளமை (2) திறமை (3) மடமை (4) கடமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. அவனுக்கு கணிதப்பாடத்தில் ஐயம் ஏற்பட்டது.- இங்கு <u>ஐயம்</u> என்பதன் எதிர்ச்சொல்
(1) பயம் (2) தேற்றம் (3) கலக்கம் (4) அச்சம்

35. சிக்கனத்துடன் செயற்படுவது சிறந்தது. இவ்வாக்கியத்தில் <u>சிக்கனம்</u> என்பதன் எதிர்ச்சொல்
(1) உலோபி (2) கஞ்சன் (3) இடாம்பீகம் (4) செல்வன்

36. சேரன் செங்கோல் ஆட்சியில் சிறந்து விளங்கினான். இங்கு <u>செங்கோல்</u> என்பதன் எதிர்ப்பதம்
(1) கொடுங்கோல் (2) நல்லாட்சி
(3) சமாதானம் (4) கருங்கோல்

37. இம்மை வாழ்க்கையில் சிறப்புடன் வாழ்.- இங்கு <u>இம்மை</u> என்பதன் எதிர்க்கருத்து
(1) மும்மை (2) மறுமை (3) உம்மை (4) உவமை

38. 'அறம் செய்ய விரும்பு' - இவ்வாக்கியத்தில் <u>அறம்</u> என்பதன் எதிர்க்கருத்து
(1) தரம் (2) மரம் (3) மறம் (4) கரம்

39. இருவரும் இணைந்து செயற்பட்டனர்.- இங்கு <u>இணைந்து</u> என்பதன் எதிர்ப்பதம்
(1) ஒருவர் (2) தனித்து (3) குழுவாக (4) சேர்ந்து

40. அவன் ராஜாவின் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்தான்.- இவ்வாக்கியத்தில் <u>மறுப்பு</u> என்பதன் எதிர்ச்சொல்
(1) எதிர்ப்பு (2) மாறுபாடு (3) வெறுப்பு (4) உடன்பாடு

## வினாத்தாள் - 2
## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| (1) - 1 | (11) - 1 | (21) - 1 | (31) - 2 |
| (2) - 3 | (12) - 4 | (22) - 3 | (32) - 1 |
| (3) - 2 | (13) - 2 | (23) - 2 | (33) - 3 |
| (4) - 4 | (14) - 3 | (24) - 1 | (34) - 2 |
| (5) - 1 | (15) - 1 | (25) - 4 | (35) - 3 |
| (6) - 4 | (16) - 4 | (26) - 2 | (36) - 1 |
| (7) - 2 | (17) - 1 | (27) - 1 | (37) - 2 |
| (8) - 1 | (18) - 3 | (28) - 3 | (38) - 3 |
| (9) - 3 | (19) - 2 | (29) - 3 | (39) - 2 |
| (10) - 3 | (20) - 4 | (30) - 4 | (40) - 4 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 3

★ தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்பாற் சொற்களை தருக.

1. **அரசன்** நாட்டை சிறப்பாக ஆட்சி செய்தான்.

.............................................................................................

2. **பொன்னன்** அனைவருடனும் நன்றாகப் பழகினான்.

.............................................................................................

3. நோயாளியைப் பார்க்க **மருத்துவன்** சென்றான்.

.............................................................................................

4. **பாணன்** மன்னனை பார்க்கச் சென்றான்.

.............................................................................................

5. நம்மை எப்போதும் **இறைவன்** காப்பான்.

.............................................................................................

6. கண்ணனின் **தமையன்** என்னுடன் அன்பாகப் பழகினான்.

.............................................................................................

7. **மணவாளன்** மிகுந்த மகிழ்ச்சியோடு நின்றான்.

.............................................................................................

8. அனைவரது வரவேற்புக்கு மத்தியில் **பாடகன்** வந்தான்.

.............................................................................................

9. **சிறுவன்** அந்தப்பக்கம் வேகமாக ஓடினான்.

.............................................................................................

10. தாய் தன் **மகன்** வீட்டிற்குச் சென்றான்.

.............................................................................................

11. **நூலாசிரியன்** தனது நூலை வெளியிட்டார்.

.............................................................................................

12. **ராஜா** மக்களைப் பாதுகாத்தார்.

.............................................................................................

13. **இளைஞர்கள்** மைதானத்திற்குச் சென்றனர்.

.............................................................................................

14. **பாலகன்** வீட்டிற்குத் திரும்பி வந்தான்.

.............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. **வீரன்** களத்தில் பலர் அஞ்சும் வகையில் நின்றான்.

.......................................................................................................

16. தன் தாத்தாவை **பேரன்** பார்க்கச் சென்றான்.

.......................................................................................................

17. **தட்டான்** தம்பியுடன் படம் பார்த்தான்.

.......................................................................................................

18. கோயில் வேலைகள் அனைத்தையும் **அடியான்** செய்தான்.

.......................................................................................................

19. **தோழன்** எங்கள் அனைவருடனும் அன்பாகப் பழகினான்.

.......................................................................................................

20. **தந்தை** கதைப்புத்தகம் வாசித்தார்.

.......................................................................................................

## வினாத்தாள் - 3
## விடைகள்

(1) - அரசி
(2) - பொன்னி
(3) - மருத்துவிச்சி
(4) - பாடினி
(5) - இறைவி
(6) - தமக்கை
(7) - மணவாட்டி
(8) - பாடகி
(9) - சிறுமி
(10) - மகள்
(11) - நூலாசிரியை
(12) - ராணி
(13) - யுவதி
(14) - பாலகி
(15) - வீராங்கனை
(16) - பேத்தி
(17) - தட்டாத்தி
(18) - அடியாள்
(19) - தோழி
(20) - தாய்

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Class No: -
Acc No 1437



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 தொடர்மொழிக்கு ஒரு மொழி

**நீண்ட தொடர் ஒன்றின் பொருளை ஒரு மொழியில் (சொல்லில்) சுருக்கமாக உணர்த்துவது தொடர் மொழிக்கு ஒரு மொழியாகும். இது சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும். சுருக்கம் எழுதவும் உதவும்.**

1. அகராதி - சொற்களை அகர வரிசைப்படி குறிப்பிட்டு அவற்றின் பொருளை கூறும் நூல்.
2. அகதி - போர், உள்நாட்டு குழப்பங்கள் காரணமாக உயிரைப் பாதுகாப்பதன் பொருட்டாக புகலிடம் தேடி வருபவர்.
3. அகாலமரணம் - வயது முதிர்ந்து இறக்காமல், எதிர்பாராத வகையில் இடையே சம்பவிக்கும் மரணம்.
4. அடுக்களை - வீடுகளில் சமையல் செய்யும் இடம்.
5. அதிரடிப்படை - கலகங்களை விரைவாக அடக்குவதற்கெனப் பயிற்றப்பட்ட படை.
6. அபரபக்கம் - பூரணை கழிந்த பிரதமை முதல் அமாவாசை ஈறாக உள்ள காலம்.
7. அங்கதம் - வெளிப்படையான பொருளில் புகழ்ந்தும், மறைப்பொருளில் இகழ்ந்தும் கூறுவது.
8. அசகாயசூரன் - யாருடைய துணையுமின்றித் தானே தனியாக நின்று காரியத்தை முடிக்கும் திறமையுடையவன்.
9. அட்டவதானி - ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்.
10. அந்தப்புரம் - அரண்மனைகளிலே மகளிர் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி இடம்.
11. அநாதர் - தாய் தந்தையரை இழந்தோர்.
12. அல்லங்காடி - மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை.
13. அலி - ஆணும், பெண்ணு மல்லாதது.
14. அறம்பாடுதல் - பிறருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய சொற்களையும் சொற்றொடர்களையும் சேர்த்துக் கவிபாடல்.
15. ஆச்சிரமம் - தபோதனர் வசிக்கும் இடம்.
16. ஆத்திகன் - கடவுள் இருக்கிறார் என நம்புபவன்.
17. ஆதனம் - ஒருவருக்குரிய நிலம் முதலிய சொத்துக்கள்.
18. இடக்கரடக்கல் - சபையிற் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறு வகையில் சொல்லுதல்.

Class No: Acc No Arasady Public Library Municipal Council Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இரட்டுறமொழிதல் - இரண்டு பொருள்படும் படி சொல்லுதல்.

20. இராக்கதம் - பெண்ணும், சுற்றமும் உடன்படாமல் கட்டாயப் படுத்தி மேற்கொள்ளும் மணம்.

21. உப்பரிகை - செல்வர் வீடுகளில் மகளிர் முதலியோர் ஓய்வு நேரங்களில் கூடியிருந்து பொழுது போக்குவதற்காக அமைக்கப்பட்ட மேல் மாடம்.

22. உயர்வு நவிற்சி - ஒரு பொருளைப் பற்றிக் கேட்போர் மகிழுமாறு உயர்த்திக் கூறுவது.

23. உலோகாயுதன் - உலகமும் உலக இன்பங்களும் மாத்திரமே மெய்யென்றும் கடவுளோ மறுமையோ இல்லையென்றும் வாதிடுபவன்.

24. உலோபி - பொருளைத் தேடி எவர்க்கும் ஈயாது வைத்திருப்பவன்.

25. உவமானம் - ஒரு பொருளுக்கு ஒப்பாக எடுத்துச் சொல்லப்படும் மற்றொரு பொருள்.

26. உப்பங்கழி - தரையை ஊடறுத்து கடல் நீர் தேங்கி நிற்கும் இடம்.

27. உப்பளம் - உப்பு விளைவிக்கப்படும் இடம்.

28. உயில் - ஒருவர் தாம் இறந்த பின்னர் தமது சொத்துக்களை எவ்வாறு பிரிக்கப்படல் வேண்டும் என்பதை எழுதி வைத்துள்ள சட்டபூர்வமான ஆவணம்

29. உறங்கலிருக்கை - பயணி ஒருவர் புகைவண்டியில் வசதியாக இருந்து பிராயணம் செய்வதற்காக விசேடமாய் அமைக்கப்பட்ட ஆசனம்.

30. ஊர்காவற்படை - நாட்டின் வன் செயல்கள் தலை தூக்கா வண்ணம் பாதுகாப்பதற்கென ஊர்தோறும் நிறுவப்பட்ட அவ்வப்பகுதி மக்கள் சிலரை உள்ளடக்கிய படை.

31. ஊதாரி - கண் மூடித்தனமாகப் பணத்தை வீண்செலவு செய்பவன்.

32. ஊழி - உலக முடிவின் காலம்.

33. எதுகை - அடிதோறும் செய்யுட் சீர்களின் அல்லது வாக்கியத்தின் சொற்களின் இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

34. ஏகபோகம் - ஒருவர் முழுப்பொருளையும் தானே தனித்து அனுபவித்தல்.

35. ஏற்றப்பாட்டு - நீர் இறைக்கும் போது பாடப்படும் பாட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து உணர்வுகள்.

37. ஐம்பூதம் - நிலம், நீர், தீ, வளி, வான் முதலியன.

38. ஐம்பொறி - மெய்,வாய், கண், மூக்கு, செவி முதலியன.

39. ஒட்டுண்ணி - மற்றோர் உயிர்ப்பொருளிலிருந்து தன் உணவை உறிஞ்சி வாழும் பிராணி அல்லது தாவரம்.

40. ஒப்பாரி - ஒருவர் இறந்த பின்னர் அவரின் உறவுப் பெண்கள் அவரை நினைத்துப் புலம்புதல்.

41. ஒப்புரவு - உலக நடையறிந்து ஒழுகுதல்.

42. ஒற்றி - சொத்தை அனுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்.

43. ஒத்திகை - கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன், சரி பிழை பார்த்து திருத்தும் நிகழ்ச்சி.

44. ஒத்திவைத்தல் - ஒரு காரியத்தை பின்னால் செய்யலாமெனத் தள்ளி வைத்தல்.

45. ஒப்புதல் வாக்கு மூலம் - குற்றம் புரிந்தவர் என ஐயம் கொண்டு விசாரனை நடாத்தும் போது ஒருவர், தாம் சம்பந்தப்பட்ட செய்கையை செய்ததென ஒப்புக்கொண்டு அளிக்கும் வாக்கு மூலம்.

46. ஒற்றர் - எதிரிகள் சந்தேகப்படாத வண்ணம் அவர்கள் மத்தியிலே நடமாடி இரகசிய விடயங்களை அறிந்து அரசுக்கு அறிவிப்பர்.

47. ஓடை - ஆறு முதலியவற்றிலிருந்து நீர் பாய்ந்து நிறைந்து நிற்கும் நீண்ட நீர் நிலை.

48. ஓய்வூதியம் - இளைப்பாறிய உத்தியோகஸ்தர் ஒருவருக்கு மாதந்தோறும் வழங்கப்படும் பணம்.

49. ஓலக்கம் - அரசன் சபாமண்டபத்திலே அமைச்சர், படைத் தலைவர், அறிஞர் முதலிய பரிவாரத்தினர் சூழவீற்றிருக்கும் இடம்.

50. கட்டியம் - கடவுளர், அரசர் என்போர் உலாவரும் போது அவரது பெயர் வெற்றி முதலியவற்றை எடுத்துக்கூறல்.

51. கட்டுக்கதை - ஆதாரமற்ற செய்திகளைக் கொண்டு புனையப்பட்ட கற்பனைக்கதை.

52. கண்டம் - நீர் சூழ்ந்த பெரிய நிலப்பரப்பு.

53. கப்பம் - பகையரசருக்குக் கொடுக்கப்படும் திறைப் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. கலைக்களஞ்சியம் - அறிவுத்துறைகள் அனைத்தையும் பற்றிய விடயங்களைத் திரட்டித் தரும் நூல்.

55. களஞ்சியம் - பொருள் பண்டங்களைச் சேகரித்து வைப்பது.

56. கன்னிக்கவிதை - ஒருவர் முதல் முதல் இயற்றிய கவிதை.

57. கன்னிவேட்டை - அரசகுமாரன் காட்டிற்குச் சென்று முதன் முதல் நிகழ்த்தும் வேட்டை.

58. கடவுச்சீட்டு - ஒரு நாட்டு அரசு தனது பிரசையொருவருக்கு இன்னொரு நாட்டிலே பாதுகாப்புடன் பிரயாணம் செய்வதற்காக வழங்கும் அனுமதிச்சீட்டு.

59. கட்டுத்தறி - மிருகங்களை கட்டி வைப்பதற்காக உபயோகிக்கப்படும் தூண்.

60. கந்தூரி - முஸ்லிம் பெரியோர்களின் நினைவு விழாவின் போது அளிக்கப்படும் விருந்து.

61. கந்தை - பலவிடங்களிற் கிழிந்தும் சிதைந்தும் உளதாய்த் தைக்கப்பட்ட ஆடை.

62. கம்மாலை - சிறிய அளவில் உலோக வேலைகள் செய்யப்படும் இடம்.

63. கன்னிப்போர் - அரசகுமாரன் ஒருவன் முதன் முதல் இயற்றும் போர்.

64. காசோலை - பணம் கொடுக்குமாறு வங்கிக்கு எழுத்து மூலம் கட்டளையிடும் ஒருவகைப்படிவம்.

65. காணிக்கை - கடவுளுக்கேனும், பெரியோர்கேனும் சமர்ப்பிக்கப்படும் பொருள்.

66. கால மரணம் - முதிர்ந்த வயதில் ஏற்படும் மரணம்.

67. காசேடு - காசு சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குரிய குறிப்புப் புத்தகம்.

68. கால்கோள் விழா - யாதாயினும் ஒன்றைத் தொடங்குவதற்காக எடுக்கப்படும் விழா.

69. காவற்காடு - கோட்டையை சேர்ந்துள்ள அகழிக்கு வெளியே அரணாய் அமைந்துள்ள காடு.

70. குழுஉக்குறி - ஒரு கூட்டத்தார் பிறர் அறியாதபடி ஒரு பொருளுக்குரிய பெயரை மறைத்து வேறொரு பெயரால் குறிப்பிடுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. கூலிப்படை - ஒரு பகுதியினருக்காக கூலி பெற்றுக்கொண்டு போரிடும் படை.

72. கூழைப்படை - போர்க்களத்தில் பலவகைப்பட்ட வகுப்புக்களின் இறுதியில் நிற்கும் படை.

73. கெரிலாக்கள் - ஒரு நாட்டின் அதிகாரத்திகுட்பட்ட படைப் போர் இல்லாமல், இரகசியமாய் போர் பயிற்சி பெற்று ஒரு விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு திடீரென தாக்கும் போர்வீரர்.

74. கேள்வு - கப்பலில் பொருளை ஏற்றி செல்வதற்கான கூலி.

75. கைந்நூல் - ஒரு குறித்த விடயம் பற்றிய அறிவுறுத்தல் களையும் செயல் முறைகளையும் சம்பந்தப் பட்டோருக்கு தெரிவிக்கும் நூல்.

76. கைம்மருந்து - ஒருவர் வைத்தியரின்றித் தாமே தமது நோய்க்குச் செய்யும் மருந்து.

77. கையூட்டு - ஒரு காரியத்தை எளிதில் நிறைவேற்றும் பொருட்டு அதனோடு தொடர்புடையோருக்கு வழங்கப்படும் இலஞ்சப்பணம்.

78. கையுறை - குரு, பெரியோர், குழந்தைகள் ஆகியோரைக் காணச் செல்வோர் கொண்டு செல்லும் உபகாரப் பொருள்.

79. சகபாடி - ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன்.

80. சகாப்தம் - நூறு ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி.

81. சகோதரர் - ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர்.

82. சதாவதானி - ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன்.

83. சயந்தி விழா - வருடந்தோறும் ஒருவர் பிறந்த நாளன்று எடுக்கப்படும் விழா.

84. சகலன் - மனைவியின் சகோதரிக்குக் கணவன்.

85. சங்கம் - குறித்த சில நோக்கங்களுக்காக விதிகளை வகுத்துக்காட்டும் வகையில் இயங்கும் அமைப்பு.

86. சஞ்சிகை - குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை புத்தக உருவில் வெளிவரும் பத்திரிகை.

87. சட்டமூலம் - பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அங்கே கொண்டு வரும் சட்டத்தின் பூரவாங்க நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88. சத்திரசிகிச்சை - ஆயுதங்களைக் கொண்டு நோய் ஏற்பட்டுள்ள இடங்களில் அறுத்து செய்யும் வைத்தியம்.

89. சமூகம் - பொது நோக்கத்திற்காக இணைந்து வரும் மக்கள் கூட்டம்.

90. சரமகவி - இறந்தவரை நினைத்து அபரக்கிரியை செய்யும் இறுதி நாளன்று அவரது சிறப்பு முதலியவற்றை குறித்து பாடும் பாட்டு.

91. சாசனவியல் - கல்லிலோ, செப்பேடுகளிலோ எழுதப்பட்ட எழுத்துக்களை வாசிக்கவும், அவற்றின் பொருளினை விளங்கிக் கொள்ளவும் உரு வாகிய கலை.

92. சால்பு - அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் குணங்களைச் சேர்ந்த பண்பு.

93. சிரஞ்சீவி - நெடுங்காலம் வாழ்பவன்.

94. சிறுபட்டி - கட்டுக்கடங்காத இளைஞன்

95. சிந்தாமணி - எண்ணியதை எண்ணியபடி தரவல்ல தெய்வீக மணி

96. சிற்பம் - கல்லிலோ சுதை முதலான பொருள் கொண்டோ கண்ணால் கண்ட உருவத்தை அல்லது கற்பனை உருவத்தை அமைக்கும் கலை.

97. சிரமதானம் - ஊதியம் கருதாது உழைப்பினை தானம் செய்தல்.

98. சுயசரிதை - ஒருவன் தானே தன்னைப்பற்றி எழுதும் வரலாறு.

99. சுயம்வரம் - கன்னியொருத்தி, ஆடவர் கூடிய சபையில் தான் விரும்பிய ஆடவனைத் தெரிந்து மாலையிடுதல்.

100. சுருங்கை - நிலத்தின் கீழ் அமைக்கப்படும் இரகசிய வழி

101. சுங்கவரி - வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பொருளுக்கு அப்பால் விதிக்கப்படும வரி.

102. சுமங்கலி - பூவும் பொட்டும் அணிந்து கணவனும் தானுமாக சுபகாரியங்களை முன்னின்று நடாத்தும் உரிமை பெற்றவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103. சுயாட்சி - ஒன்றுபட்ட மக்கள் சமுதாயம் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும் ஓர் அரசியல் முறை.

104. சுற்றுநிருபம் - ஒரு திணைக்களத்தின் அதிகாரி தன் கீழ் கடமை புரிபவர்களுக்கு காலத்துக்கு காலம் நிருவாக அலுவல்கள் குறித்து அனுப்பும் பணிப்புரை.

105. சூளுரைத்தல் - யான் இதனை இயற்றாது விடின் இதனை செய்வேன் என்று ஆணையிட்டுரைத்தல்.

106. செய்குன்று - அரசர்களுக்குரிய சோலையில் செயற்கையாக அமைக்கப்பட்ட சிறு குன்று.

107. செவிலி - வளர்ப்புத்தாய்.

108. தசாப்தம் - பத்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி

109. தசாவதானி - ஒரே சமயத்தில் பத்து விடயங்களை அவதானிக்கும் ஆற்றல உள்ளவன்.

110. தபுதாரன் - மனைவியை இழந்தவன்.

111. தபோவனம் - துறவறம் பூண்ட தூயோர் ஒதுங்கி வாழும் இடம்.

112. தலைமுறை - ஒருவர் பிறந்ததிலிருந்து இறக்கும் வரையுள்ள காலப்பகுதி.

113. தற்பவம் - ஆரியத்துக்குரிய சிறப்பெழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களாக விகாரப்பட்டுத் தமிழில் வழங்கப்படும் சொல்.

114. தாசமார்க்கம் - இறைவனை ஆண்டானாகவும் தன்மை அடியானாகவும் கருதி வழிபடும் முறை.

115. தீர்க்கதரிசி - எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் கொண்டவன்.

116. திறைசேரி - அரசின் நிதி சம்பந்தமான விடயங்களை செயற்படுத்தும் இடம்.

117. தூசிப்படை - போர்களத்திலே அணிவகுப்பில் முதல் வரிசையிலே நிற்கும் படை.

118. தேடற்கட்டளை - ஓர் இடத்தில் ஆட்களையோ, சாதனங்களையோ, பிரசுரங்களையோ தேடுவதற்கு நீதிமன்றம் விடுவிக்கும் ஆணை.

119. நடுகல் - போரில் வீரமரணம் எய்திய போர் வீரரின் பெயரையும், புகழையுமி எழுதி நாட்டப்படும் கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 120. | நாத்திகன் | - கடவுள் இல்லை என்ற கொள்கையுடையவன். |
| 121. | நாளங்காடி | - காலையிலாயினும் பகலிலாயினும் கூடும் சந்தை. |
| 122. | நிகண்டு | - சொற்களின் பொருளைச் செய்யுள் வடிவில் திரட்டித்தரும் நூல். |
| 123. | நிந்தகம் | - அரசரும், செல்வரும் தமக்குத் கீழ் சேவை புரிவோருக்கு வழங்கும் நிலம். |
| 124. | நிலுவை | - செலுத்திய தொகை இன்றி மீதமாக செலுத்த இருக்கும் தொகை. |
| 125. | நிறைமொழி | - அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தே விடும் அருண்மொழி. |
| 126. | நூலகம் | - வாசிப்பதற்காக நூல்களைத் தொகுத்து வைத்திருக்கும் இடம். |
| 127. | நூன்முகம் | - நூலாசிரியர் தமது நூலைப்பற்றி நூல் முகப்பில் எழுதும் உரை. |
| 128. | நெடுங்கணக்கு | - தமிழிலுள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களும் ஒழுங்கு முறைப்படி அமையப்பெற்றது. |
| 129. | நெய்தல் | - கடலும் கடல் சார்ந்த இடமும். |
| 130. | பஞ்சாங்கம் | - திதி, வாரம், கரணம், யோகம், நட்சத்திரம் என ஐந்து உறுப்புகளை பற்றி விபரங்களைத் தரும நூல். |
| 131. | பதுமநிதி | - தாமரை உருவிலான திரவியமளிக்கும் பொருள் சங்க நிதியின் ஆயிரம் மடங்கு நிதி. |
| 132. | பரிவேடம் | - சூரிய சந்திரர்களைச் சுற்றித் தோன்றும் ஒளிவட்டம். |
| 133. | பால் வீதி | - வானத்தின் ஒரு புறத்தில் வெண்ணிற நீட்சியாகத் தோன்றும் நட்சத்திரத்திரளின் ஒளி. |
| 134. | பன்னசாலை | - முனிவர் வசிப்பதற்கு இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை. |
| 135. | பாசறை | - பகை மேற்சென்று அரசன் தன் படையுடன் தங்கியிருக்கும் இடம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**136.** பிதிர்க்கடன் - இறந்தவர்களைக் குறித்துச் செய்யப்படும் சிரார்த்தம் முதலிய கடன்கள்.

**137.** புருடார்த்தம் - அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்கள்.

**138.** பொன் விழா - ஐம்பதாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா.

**139.** போலி - ஒன்று போல் இருக்கும் வேறொன்று.

**140.** மாலுமி - கப்பலைச் செலுத்துபவன்.

**141.** மானியம் - அரசர் தமக்குக் கீழ் வாழ்வோருக்கு சன்மானமாக வழங்கும் நிலம்.

**142.** முதலீடு - வணிகம் முதலியவற்றை செய்வதற்கு இடும் மூலதனம்.

**143.** மூலவளம் - ஒரு நாட்டுக்கு இயற்கையாக அமைந்த செல்வங்கள்.

**144.** மெய்க்கீர்த்தி - கல்லிலேனும் செப்பேட்டிலேனும் பொறிக் கப்படும் ஒருவருடைய புகழ்.

**145.** மெய்ப்பாடு - மனதில் நிகழும் நகைப்பு முதலான எட்டு வகைச் சுவைகளையும் புறத்துள்ளார்க்கும் புலப்படுமாறு தோற்றுவித்தல்.

**146.** வெள்ளி விழா - இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா.

**147.** வாயாடி - வாக்கு சாதுரியமுள்ளவன்.

**148.** விகாரை - புத்த சமயங்களின் வழிபாட்டிடம்

**149.** விமானி - விண்வெளியில் வானூர்தியை இயக்குபவன்.

**150.** வைரவிழா - அறுபதாவது ஆண்டின் முடிவில் எடுக்கப்படும் விழா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 4

☆ **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. பிறர் தம்மை இன்னார் என்று அறியாதவாறு மாறுவேடம் பூண்டு மக்கள் மத்தியில் வசித்தல்
   (1) சிறைவாசம் (2) சகவாசம்
   (3) சந்நியாசம் (4) அஞ்ஞாதவாசம்

2. வறியவர்களுக்கும், அங்கவீனர்களுக்கும், முதியோருக்கும் உண்டியும் உறையுளும் அளித்து ஆதரிக்கும் இடம்
   (1) பன்னசாலை (2) ஆதுதலர்சாலை
   (3) சிறைச்சாலை (4) நூதனசாலை

3. ஒரு சொல்லையோ சொற்றொடரையோ இரு பொருட்படத் தொடுப்பது
   (1) சிலேடை (2) எதுகை
   (3) மோனை (4) உவமை

4. ஒரு கிரியை முடிவில் அதனை நடாத்தி வைத்த குருவுக்கு கொடுக்கும் சன்மானம்
   (1) சம்பளம் (2) ஓய்வூதியம்
   (3) நன்கொடை (4) தட்சணை

5. தான் பிறந்த நாட்டை நேசிப்பவன்
   (1) தேசபிமானி (2) உலோகாயுதன்
   (3) பற்றாளன் (4) நேசன்

6. ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்களாக விகாரமின்றித் தமிழில் வழங்கும் வடசொல்
   (1) தற்பவம் (2) தற்சமம் (3) கிரந்தம் (4) தட்பவம்

7. ஒரு வராலும் படைக்கப்படாது தானே தோன்றியது
   (1) சுயம்பு (2) சுயசரிதை (3) சுயவரம் (4) சுயநலம்

8. நகருக்கு வெளியே மக்கள் வாழும் இடம்
   (1) நகர்புறம் (2) உப்பரிகை (3) அந்தபுறம் (4) புறஞ்சேரி

9. பேணி பாதுகாத்துக் தருமாறு ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்
   (1) ஓலக்கம் (2) ஒப்பரவு
   (3) ஓம்படை (4) அடைக்கலம்

10. மலையும் மலைசார்ந்த இடமும்
    (1) குறிஞ்சி (2) முல்லை
    (3) மருதம் (4) நெய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11.** முதுமைக்காலத் தேவைகளுக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்

(1) கலைக் களஞ்சியம் (2) கணக்கில் வைப்பு

(3) எய்ப்பில் வைப்பு (4) சேமிப்பு

**12.** மாணாக்கர் ஆசிரியருடன் தங்கியிருந்து கல்வி பயிலுதல்

(1) கல்லூரி (2) குருகுலவாசம்

(3) பல்கலைக்கழகம் (4) ஏகபோகம்

**13.** ஆயுள் முழுவதும் பிரமச்சாரியம் காத்து வாழ்வோன்

(1) விகடகவி (2) பூசகர்

(3) சேவகன் (4) நைட்டிகன்

**14.** அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா

(1) வெள்ளி விழா (2) மணி விழா

(3) பொன் விழா (4) நூற்றாண்டு விழா

**15.** புராணக் கதைகளை சுவைப்படப் பிரசங்கம் செய்வோன்

(1) உலோகாயுதன் (2) பௌராணிகள்

(3) நைட்டிகன் (4) சேவகன்

**16.** இலட்சங்கோடி அளவுடைய நிதி

(1) சங்கநிதி (2) பதுமநிதி

(3) சேமிப்புநிதி (4) சந்தா

**17.** பகையுமின்றி நட்புமின்றி நடு நிலையில் நிற்போர்

(1) நடுவர் (2) அசகாயசூரன்

(3) அநாதர் (4) நொதுமலர்

**18.** ஒரு நாட்டிற்கு வெளியேயிருந்து உணவு முதலிய எவ்விதப் பொருளும் கிடைக்காதவாறு தடுத்து அந்நாட்டை படை கொண்டு நாற்புறமும் சூழ்ந்து நிற்பது

(1) உலகப்போர் (2) வஞ்சிப்போர்

(3) முற்றுகை (4) இனப்போர்

**19.** ஒன்றின் இல்லது இனியது நல்லதைப் புனைந்துக் கூறுதல்

(1) அணிந்துரை (2) புனைந்துரை

(3) முன்னுரை (4) பதிப்புரை

**20.** நினைத்தபோது தெய்வம் ஏறப்பெற்று ஆடுவோன்

(1) முனிவர் (2) சந்நியாசி

(3) தேவராளன் (4) இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ **பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிநிரப்புக.**

21. புதிதாகச் செய்த கப்பலினை ............................ பார்த்தார்கள்.
(1) வெள்ளோட்டம் (2) ஒத்திகை
(3) அரங்கேற்றம் (4) ஓட்டுதல்

22. அரசு தமக்கு கீழ் வாழ்வோருக்கு .................................. நிலம் வழங்கியது.
(1) கடனாக (2) மானியமாக
(3) முற்றுகையாக (4) சேவையாக

23. தனது நிலத்தின் உரிமையை ஏனையோரும் அறிவதற்கு ...................... எடுத்துக் கொடுத்தான்.
(1) அட்டையை (2) புத்தகத்தை
(3) பத்திரத்தை (4) ஆவணத்தை

24. வேள்வியில் தேவர்களுக்குச் சமர்ப்பிக்கும் உணவு ...................... எனப்படும்.
(1) சோறு (2) அவிசு (3) சாதம் (4) அமிர்தம்

25. மண்ணாசைக் கொண்ட சேரன், சோழன் மீது ........................ நடாத்தினான்.
(1) வஞ்சிப்போர் (2) முற்றுகை
(3) மதப்போர் (4) இனப்போர்

26. பொன்னை உரைத்து அதன் தரத்தை அறிந்து கொள்வதற்கு .................. பயன்படுத்தப்படும்.
(1) கருங்கல் (2) செங்கல் (3) உரைகல் (4) நடுகல்

27. தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு ராஜா ........................ செய்தான்.
(1) கைம்மருந்து (2) கையுறை (3) தட்சணை (4) ஆதனம்

28. வாகன விபத்தில் ............................................... ஆனான்.
(1) இறப்பு (2) மரணம்
(3) அகாலமரணம் (4) உயிரில்லாமல்

29. மாலதி தனது நடனத்தை ................................ செய்தாள்.
(1) ஒத்திகை (2) அரங்கேற்றம்
(3) செய்துகாட்டல் (4) மேடையேற்றல்

30. நாளை நீதி மன்றத்திற்கு வருமாறு நீதிபதியால் நிமலனுக்கு ............................ விடுக்கப்பட்டது.
(1) வரவேற்பு (2) அழைப்பு
(3) அழைப்பட்டை (4) அழைப்பாணை

31. இறந்த தாத்தாவுக்கு ................................ செய்யப்பட்டது.
(1) ஈமக்கிரிகை (2) மரணச்சடங்கு
(3) கிரியை (4) சரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. நிமலன் எழுதிய கவிதை நூலுக்கு கவிஞர் கண்ணனால் ............. எழுதப்பட்டது.
(1) முன்னுரை (2) முடிவுரை
(3) அணிந்துரை (4) நுன்முகம்

33. நாளை நடிக்க இருந்த நாடகமானது இன்று அதிபர் ஆசிரியர்களால் .................................. பார்க்கப்பட்டது.
(1) ஒத்திகை (2) அரங்கேற்றம்
(3) ஒற்றி (4) ஓம்படை

34. வேலை ஒன்று தருவதாக மந்திரி பத்தாயிரம் ரூபா..................... வாங்கினார்.
(1) கைமாறு (2) கையூட்டு
(3) சன்மானம் (4) பணம்

35. அரசன் நீதி தவறாமல் .............................................. ஆட்சி நடத்தினார்.
(1) கொடுமை (2) கொடுங்கோன்மை
(3) கடுங்கோல் (4) செங்கோன்மை

36. அறிஞர் கூடி வாதிடும் களம் ............................... எனப்படும்.
(1) பேச்சுவார்த்தை (2) பட்டிமன்றம்
(3) மாநாடு (4) தூதரகம்

37. கமலன் புராதன பொருட்களை பார்வையிட ...........சென்றான்.
(1) நூதனசாலைக்கு (2) பன்னசாலைக்கு
(3) நூலகத்திற்கு (4) கலைக்களஞ்சியத்திற்கு

38. படையில் அனைவரையும் இழந்து எதிர்ப்படையிடம் ............ அடைந்தான்.
(1) போய் (2) தபோவனம்
(3) சரணாகதி (4) சிரஞ்சிவி

39. தனது நிறுவனத்தின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் ............................ கொண்டாடினான்.
(1) மணிவிழா (2) பவளவிழா
(3) வைரவிழா (4) வெள்ளிவிழா

40. கமலனின் நூலை அச்சிட்டு வெளியிட்ட சேரனால் .............. எழுதப்பட்டது.
(1) அணிந்துரை (2) முன்னுரை
(3) ஆசியுறை (4) பதிப்புரை

41. நிலத்தின் உரிமை கொண்டாடுவதற்காகச் சான்றாக அமைந்த உறுதி
(1) ஆதனம் (2) ஆவணம் (3) சங்கம் (4) சஞ்சிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. சஞ்சலம் என்னும் பெயருடைய ஆயிரம் சங்குகளின் நடுவே இருக்கும் உயர்சாதி சங்கு
(1) வலம்புரி (2) இடம்புரி
(3) பாஞ்சசேன்யம் (4) குடாக்கடல்

43. பொது மக்களுக்காக அரங்கிலே ஆடப்படும் கூத்து வகை
(1) பொதுவியல் (2) மேடைநாடகம்
(3) அருச்சுணன்தபசு (4) காமன் கூத்து

44. ஒரு தட்டிலே பல மலர்கள் சேர்ந்துள்ள பூங்கொத்து
(1) காலாள் (2) கேள்வு (3) கற்பகம் (4) மஞ்சரி

45. நகையும் பரிகாசமும் சேர்ந்து வரகவி புனையும் ஆற்றல் படைத்தவன்
(1) குரவர் (2) விகடகவி
(3) சான்றோர் (4) ஆசுகவி

46. உயிர் துறக்கும் துணிவுடன் வடதிசை நோக்கி இருத்தல்
(1) வடக்கிருத்தல் (2) மரணம்
(3) காலமரணம் (4) அகாலமரணம்

47. மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு
(1) ஓம்படை (2) ஓலக்கம் (3) மாராயம் (4) செப்பேடு

48. மனக்கருத்தை குறிப்பாக உணர்த்தும் அங்க அசைவு
(1) கூத்து (2) நாடகம் (3) தாளலயம் (4) அபிநயம்

49. ஒரு நூலில் அதன் ஆசிரியர் அல்லாத பிறரால் எழுதிப் புகுத்தப்பட்ட பகுதி
(1) முன்னுரை (2) இடைச்செருக்கல்
(3) முடிவுரை (4) பதிப்புரை

50. காரணக் காரியத் தொடர்ப்பற்ற வீண் பேச்சு
(1) குதர்க்கம் (2) விவாதம் (3) கவியறங்கு (4) திறனாய்வு

## வினாத்தாள் – 4
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 4 | (11) - 3 | (21) - 1 | (31) - 1 | (41) - 2 |
| (2) - 2 | (12) - 2 | (22) - 2 | (32) - 3 | (42) - 3 |
| (3) - 1 | (13) - 4 | (23) - 4 | (33) - 1 | (43) - 1 |
| (4) - 4 | (14) - 2 | (24) - 2 | (34) - 2 | (44) - 4 |
| (5) - 1 | (15) - 2 | (25) - 1 | (35) - 4 | (45) - 2 |
| (6) - 2 | (16) - 1 | (26) - 3 | (36) - 2 | (46) - 2 |
| (7) - 1 | (17) - 4 | (27) - 1 | (37) - 1 | (47) - 3 |
| (8) - 4 | (18) - 3 | (28) - 3 | (38) - 3 | (48) - 4 |
| (9) - 3 | (19) - 2 | (29) - 2 | (39) - 2 | (49) - 2 |
| (10) - 1 | (20) - 3 | (30) - 4 | (40) - 4 | (50) - 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 தமிழில் பிற மொழிச்சொற்கள்

**தமிழர்கள் பிறநாட்டினருடன் கொண்ட உறவின் காரணமாக தமிழுடன் பிறமொழிகளையும் கலந்து உரையாடுகிறார்கள்.**

1. **அரபு மொழி**
   இலாகா, வசூழ், சைத்தான்

2. **உருது மொழி**
   அண்டா, அசல், ஆசாமி, அமுல், அலாதி, இராஜினாமா,இரத்து, உறுமல், சாமான், கெடுபிடி, சிப்பாய், கச்சேரி, பல்லக்கு, பேட்டி, வக்கீல், மணு, மசோதா, பாக்கி, சப்பாத்து, ரொக்கம்.

3. **தெலுங்குமொழி**
   இராணுவம், இனாம், இலஞ்சம், ஒயில், இடாப்பு, சந்தடி, கம்மல், கொலு, கொலுசு.

4. **கன்னட மொழி**
   சொத்து, அட்டிகை, சமாளித்தல்

5. **கிரேக்க மொழி**
   ஓரை (நேரம்), யனவர், சுருங்கை

6. **பாரசீக மொழி**
   சிப்பந்தி, முலாம், சர்க்கார், சுமார், சால்வை, துப்பாக்கி, அலாதி, குமாஸ்தா, சமுக்காளம், தயார், வாபஸ், ஜாமீன்

7. **பிரேஞ் மொழி**
   பட்டாளம், இலாந்தர், பீரோ, குசினி, துருப்பு

8. **போர்த்துக்கீச மொழி**
   அலுமாரி, கதிரை, கரத்தை, கடுதாசி, சப்பாத்து, அன்னாசி, அலவாங்கு, வாங்கு, யன்னல், பீங்கான், பீப்பாய், பற்ங்கிக்காய், புனல், சாவி, ஏலம், துவாய், பாண், விறாந்தை.

9. **மராட்டி மொழி**
   பட்டாணி, குண்டான், சாம்பார், அபாண்டம்

10. **மலையாள மொழி**
    கச்சவடம், தளபாடம், கொச்சி

11. **ஒல்லாந்து மொழி**
    இலாச்சி, உலாந்தா, நொத்தாரிசு, கேத்தல், கக்கூசு, துட்டு, தோம்பு, சாக்கு.

12. **பாளி மொழிச்சொல்**
    விகாரை, துக்கம், சீலம், தூபி, போதி

13. **ஆங்கில மொழிச் சொல்**
    கோப்பி,விசுகோத்து, மைனர், ஏக்கர், தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | Anaemia | - | குருதிச்சேர்க்கை |
| 2. | Almirah | - | நிலைப்பேழை |
| 3. | Application | - | விண்ணப்பம் |
| 4. | Aesthetics | - | அழகியல் |
| 5. | Archives | - | ஆவணக்காப்பகம் |
| 6. | Auto biography | - | தன் வரலாறு |
| 7. | Acadamic year | - | கல்வியாண்டு |
| 8. | Aids | - | ஏமக்குறைவு நோய் |
| 9. | Bibliography | - | நூலடைவு |
| 10. | Biology | - | உயிரியல் |
| 11. | Budjet | - | பாதீடு |
| 12. | Bubble memory | - | குமிழி நினைவகம் |
| 13. | Black hole | - | கருந்துளை |
| 14. | Community | - | சாதியம் |
| 15. | Compact Dick (CD) | - | இறுவட்டு |
| 16. | Critism | - | திறனாய்வு/ விமர்சனம் |
| 17. | Cartoon | - | கேலிச்சித்திரம் |
| 18. | Critizenship | - | பிரஜாவுரிமை |
| 19. | Climate | - | காலநிலை |
| 20. | Census | - | தொகை மதிப்பு |
| 21. | Concept | - | கருத்தாக்கம் |
| 22. | Character | - | கதாபாத்திரம் / கதைமாந்தர் |
| 23. | Column | - | பத்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. Colloquialism - வட்டார வழக்கு
25. Collection Data - தரவுச்சேமிப்பு
26. Computer Digital - இலக்கக் கணினி
27. Data - தரவு
28. Data base - தரவுத்தளம்
29. Depression - மனத்தளர்வு
30. Data analysis - தரவு பகுப்பாய்வு
31. Demand - கேள்வி
32. Digital - என்மானம்
33. Decomposers - பிரிகையாக்கிகள்
34. E-mail - மின்னஞ்சல்
35. e-commerce - மின் வாணிகம்
36. e-publishing - மின்பதிப்பாக்கம்
37. e- Bussiness - மின்னியல் வணிகம்
38. Election - தேர்தல்
39. Evaluation - மதிப்பீடு
40. Etymology - சொல்பிறப்பியல்
41. Ego - தன்முனைப்பு
42. Economics - பொருளியல்
43. Engineering - இயந்திரவியல்
44. Encoding - குறியாக்கம்
45. Fax - தொலைநகல்
46. Fable - நீதிக்கதை
47. Fiction - புனைவு
48. Folklore - நாட்டாரியல்/ நாட்டுப்புறவியல்
49. Form - வடிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. Formating - வடிவமைத்தல்

51. F.M. - பண்பலை

52. Feminism - பெண்ணியம்

53. Gas - வளிமம்

54. Green house effect - பச்சை வீட்டு விளைவு

55. Globalization - பூகோளமயமாக்கல்

56. Hints - குறிப்புகள்

57. Hardware - வன்பொருள்

58. Idealism - கருத்து முதல் வாதம்

59. Infra red rays - அகச் சிவப்பு கதிர்கள்

60. Interest - ஆர்வம்

61. Internet - இணையம்

62. Interview - நேர்முகம்

63. In put device - உள்ளீட்டுச் சாதனம்

64. Image - படிமம்

65. Information world - தகவல் ஊழி

66. Keyboard - விசைப்பலகை

67. Lap computer - மடிக் கணினி

68. Liquid - நீர்மம் - திரவம்

69. Logic - தர்க்கம்

70. Lyric - பா / பாடல்

71. Mass culture - வெகுசனம் பண்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. Media - ஊடகம்

73. Memory chip - நினைவுச்சில்லு

74. Menu Bar - பட்டியற்பட்டை

75. Message format - செய்திப்படிவம்

76. Memory - நினைவகம்

77. Methodology - முறைமை

78. Minerals - கனிப்பொருள்கள்

79. Microscope - நுண்நோக்கி

80. Microphone - ஒலிவாங்கி

81. Monitoring - கண்காணித்தல்

82. Museum - அருங்காட்சியகம்

83. Multy media - பல் ஊடகம்

84. Myth - தொன்மம்/ புராணிகம்

85. Narrator - கதை சொல்லி

86. Network - வலையமைப்பு

87. Non - Fiction - புனைவுசாரா

88. Novelette - குறுநாவல்

89. Oxgen - உயிரியம்

90. Patent - புனைவுரிமை

91. Pamphlet - துண்டுப்பிரசுரம்

92. Party - கட்சி

93. Physoiological - உடற்றொழிலியல்

94. Poetics - கவிதையியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. Pollution - தூய்மைக்கேடு
96. Prologue - முகவுரை
97. Reccommendation - பரிந்துரை
98. Software - மென்பொருள்
99. Solid - திண்மம்
100. Secondary - இடை நிலைக்கல்வி
101. Seminar - கருத்தரங்கு
102. Species - இனம்
103. Structure - கட்டமைப்பு
104. Supermarket - சிறப்பங்காடி
105. Symbol - குறியீடு
106. Telnet - தொலை வழிநகல்
107. Telescope - தொலை நோக்கி
108. Teriatary Education - மூன்றாம் நிலை கல்வி
109. Tragedy - துன்பியல்
110. Theme - கரு
111. Ultra violet rediation - புற ஊதாக்கதிர் வீச்சு
112. Unicode - ஒருங்குறி
113. User name - பயனர் பெயர்
114. Value - பெறுமதி
115. Voice mail - குரல் அஞ்சல்
116. Vote - வாக்கு
117. Vibrator - அதிரி
118. Weather - வானிலை
119. Website - வலைத்தளம்
120. Web page - வலைப்பக்கம்
121. Work shop - பயிலரங்கு
122. Word wide web (w.w.w) - வையக விரிவு வலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 பிரதேச வழக்குச் சொற்கள்

**பிரதேச ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வேறுபட்டு வழங்கும் பேச்சு வழக்குச் சொற்களே பிரதேச வழக்குச் சொற்கள் எனப்படும்.**

**1. வடக்குப் பிரதேசம்**

| | |
|---|---|
| ஆறுதலா | - மெதுவாக |
| இண்டைக்கு | - இன்றைக்கு |
| இதிலை | - இதிலே |
| இயத்து, ஏதனம் | - சமையற் பாத்திரங்கள் |
| எப்பன் | - சிறிதளவு |
| பொத்தகம் | - புத்தகம் |
| காய் பிஞ்சு | - மரக்கறி |
| கெதியா | - விரைவாக |
| கனக்க | - நிறைய |
| மோன | - மகன் |
| பேந்து | - பிறகு |
| புழகம் | - மகிழ்ச்சி |
| முடக்கு | - பாதை திருப்பம் |
| மோள் | - மகள் |
| விறாந்தை | - முன்கூடம் |
| வெள்ளமை | - வேளாண்மை |

**2. கிழக்குப் பிரதேச வழக்கு**

| | |
|---|---|
| அந்தரங்கு | - மீன் பிடிக்கும் கைவலை |
| அணியம் | - துடுப்பு வலிப்பவர் இருக்கும் இடம் |
| அலவாய்க்கரை | - கடற்கரையோரம் |
| ஆணம் | - சொதி |
| ஏனம் | - பாத்திரம் |
| ஒண்ணா | - முடியாது |
| ஒள்ளுப்பம் | - எள்ளிலும் சிறயது |
| கக்கிசம் | - தொல்லை |
| கடப்படி | - வாசல் |
| களவட்டி | - சூடு போடும் தளம் |
| கெறுவம் | - கர்வம் |
| கோணி | - சாக்கு |
| சங்கை | - ரோசம் |
| சார் | - ஏர் செல்லும் வழி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சிறாம்பு | - பரண் |
| சும்மாடு | - சுமை தூக்க தலையில் வைக்கும் அடை |
| சோங்கன் | - சோம்பேறித்தனம் |
| தலைமுறி | - வாய்க்கால் பிரிந்து செல்லும் வயற்பரப்பு |
| துறைக்காரன் | - படகோட்டுபவன் |
| மண்டா | - மீன் குத்தும் தடி |
| தாரை | - ஆழம் குறைந்த நீர் பகுதி, வெளி |
| துரவு | - சிறுகேணி |
| மறுகா | - பிறகு, பின்பு |
| மனே | - மகனே |
| பத்தை | - பற்றை |
| களவெட்டி | - சூட்டுக்களம் |
| வெள்ளேடன் | - தேங்காய் |
| வேலைக்காரன் கம்பு | - சூடு போடும் வைக்கோலை இழுக்கும் கொழுத்தடி |

**3. தென்னிலங்கை வழக்கு**

| | |
|---|---|
| ஆப்ப | - அப்பம் |
| இடியாப்ப | - இடியப்பம் |
| சல்லி | - பணம் |
| பசுந்து | - அழகு |

**4. மேற்குப்பிரதேச வழக்கு**

| | |
|---|---|
| அன்ன | - அன்னம் |
| பொன்ன | - பொன்னை |
| நம்மளுவொழுக்கு | - எங்களுக்கு |

**5. மலையகப்பிரதேச வழக்கு**

| | |
|---|---|
| எலை | - இலை |
| பொழப்பு | - பிழைப்பு |
| ஸ்ரோர் | - தொழிற்சாலை |
| மடுவம் | - கொழுந்து நிறுக்கும் இடம் |
| அங்கிட்டு | - அங்கே |
| இங்கிட்டு | - இங்கே |
| வேணா | - வேண்டாம் |
| அப்பரம் | - பிறகு |
| வேல | - வேலை |
| மேல | - மேலே |
| சுருக்கா | - வேகமாக |
| கேட்கல | - கேட்கவில்லை |
| ஒனக்கு | - உனக்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் – 5

✯ பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தருக.

1. பின்வருவனற்றுள் அரபு மொழிச்சொல்
(1) வக்கீல் (2) ஏலம் (3) தகவல் (4) யவனர்

2. துப்பாக்கியை எடுத்து அனைவரையும் சுட்டனர். இங்கு துப்பாக்கி என்பது
(1) ஒல்லாந்து மொழி (2) கன்னடமொழி
(3) பிரான்சிய மொழி (4) பாரசீக மொழி

3. பின்வருவனற்றுள் உருது மொழிச் சொல்
(1) சந்தா (2) முலாம் (3) சலவை (4) குசினி

4. அவனுக்கு சிறந்த பாடகனுக்கான விருது கிடைத்தது. இங்கு விருது என்பது
(1) மலையாளம் (2) மராட்டி (3) உருது (4) தெலுங்கு

5. அவன் கந்தோருக்கு வேலைக்குச் சென்றான். இங்கு கந்தோர் என்பது
(1) இந்தி மொழி (2) பிரான்சிய மொழி
(3) ஒல்லாந்து மொழி (4) பாரசீக மொழி

6. பின்வருவனவற்றுள் மராட்டி மொழிச் சொல்
(1) தோம்பு (2) அட்டவணை
(3) ரத்து (4) வசூல்

7. பின்வருவனற்றுள் கன்னட மொழிச் சொல்
(1) ஏலம் (2) சால்வை
(3) சமாளித்தல் (4) பட்டாளம்

8. ராணி பீரோவைத் திறந்தாள். இங்கு பீரோ என்பது
(1) பிரான்சிய மொழி (2) உருது மொழி
(3) கிரேக்க மொழி (4) அரபு மொழி

9. பின்வருவனவற்றுள் மலையாள மொழி
(1) மசோதா (2) சாவி (3) தளவாடம் (4) சந்தடி

10. தம்பி கச்சேரி பார்க்கச் சென்றான். இங்கு கச்சேரி என்பது
(1) அரபு மொழி (2) பாரசீக மொழி
(3) கன்னட மொழி (4) உருது மொழி

11. கண்ணன் தன் தாயை ஆசுபத்திரிக்கு அழைத்துச் சென்றான். இங்கு ஆசுபத்திரி எனும் சொல்
(1) ஆங்கிலம் (2) போர்த்துகீசம் (3) அரபு (4) மராட்டி

12. தனது அதிகாரியை சந்திப்பதற்காக கந்தோருக்குச் சென்றான். இங்கு கந்தோர் என்பது
(1) பிரான்சிய மொழி (2) மராட்டி மொழி
(3) பாளி மொழி (4) ஒல்லாந்து மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நேர அட்டவணையை அதிபரிடம் காட்டினான். நேர அட்டவணையை என்பது
(1) பிரான்சிய மொழி (2) மராட்டி மொழி
(3) அரபு மொழி (4) ஒல்லாந்து மொழி

14. பத்து மைல் தொலைவில் தம்பி சென்று கொண்டிருப்பான். இங்கு மைல் என்பது
(1) ஆங்கில மொழி (2) உருது மொழி
(3) பாளி மொழி (4) பாரசீக மொழி

15. பொலிஸ் நிலையத்திற்கு புகார் செய்ய போயிருந்தான். இங்கு புகார் என்பது
(1) பாரசீக மொழி (2) உருது மொழி
(3) பாளி மொழி (4) ஒல்லாந்து மொழி

16. பணத்தை வசூல் செய்ய வீடுகளுக்குச் சென்றான். இங்கு வசூல் என்பது
(1) பிரான்சிய மொழி (2) ஆங்கில மொழி
(3) அரபு மொழி (4) போர்த்துக்கேய மொழி

17. விகாரையை நோக்கி பிக்கு சென்று கொண்டிருந்தார். இங்கு பிக்கு, விகாரை என்பன
(1) பாரசீக மொழி (2) உருது மொழி
(3) அரபு மொழி (4) பாளி மொழி

18. தனது பாக்கி பணத்தை பெருவதற்காக ராஜா சென்றான். இங்கு பாக்கி என்பது
(1) உருது மொழி (2) மராட்டி மொழி
(3) ஆங்கில மொழி (4) பாரசீக மொழி

19. மகன் பென்சிலை எடுத்து வரையத் தொடங்கினான். இங்கு பென்சில் என்பது
(1) ஒல்லாந்து மொழி (2) ஆங்கில மொழி
(3) பிரான்சிய மொழி (4) உருது மொழி

20. சான்றோர் அந்தஸ்தை பார்த்து பழகமாட்டார்கள். இங்கு அந்தஸ்தது என்பது
(1) அரபு மொழி (2) ஒல்லாந்து மொழி
(3) பாளி மொழி (4) பாரசீக மொழி

21. SMS அனுப்புவதில் ஆசிய நாடுகளில் இலங்கை முதலிடத்தில் உள்ளது. SMS என்பதன் தமிழ்ச் சொல்
(1) செய்தி (2) தகவல்
(3) நீண்ட செய்தி (4) குறுஞ்செய்தி

22. தகவல் தொடர்பாடலில் பக்ஸ் (fax) முக்கிய பங்கு வகிக்கின்றது. பக்ஸ் (fax) என்பதன் தமிழ் சொல்
(1) ஊடகம் (2) பல்ஊடகம்
(3) தொலைநகலி (4) செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. மீடியா(media) மூலமாக இன்று மக்கள் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். இங்கு மீடியா (media) என்பதன் தமிழ்ச் சொல்
(1) ஊடகம் (2) பல்ஊடகம்
(3) வன்பொருள் (4) மென்பொருள்

24. சிற்றி (city) முழுவதும் மக்கள் வெள்ளம் பெருகிக் காணப்பட்டது. சிற்றி (city) என்பதன் தமிழ்ச் சொல்
(1) நகர்ப்புறம் (2) புறநகர் (3) நகர் (4) நகராக்கம்

25. மாணவன் டொக்கியூமென்ட் (Document) அனைத்தையும் பத்திரப்படுத்தினான். இங்கு டொக்கியூமென்ட் (Document) என்பதன் தமிழ்ச் சொல்
(1) தரவு (2) ஊடகம் (3) அட்டை (4) ஆவணம்

26. கண்ணன் உயர்தரத்தில் (Biology) பாடத்தைக் கற்றுக் கொண்டான். Biology என்பதன் தமிழ்ச் சொல்
(1) இயந்திரவியல் (2) உயிரியல்
(3) பொருளியல் (4) இரசாயனவியல்

27. கணினியில் அனைத்து செயற்பாடுகளையும் முடித்துவிட்டு லொக்ஓப் (Log off) செய்தான். இங்கு லொக்ஓப் (Log off) என்பதன் தமிழ்ச் சொல்
(1) விடுபதிகை (2) தரவுச் சேமிப்பு
(3) செய்திப்படிவம் (4) தரவுத்தளம்

28. சந்தையில் சில பொருட்களுக்கு மட்டும் டிமாண்ட் (Demand) அதிகமாக இருந்தது.இங்கு டிமாண்ட் (Demand) என்பதன் தமிழ்ச் சொல்
(1) பெறுமதி (2) ஆர்வம் (3) கேள்வி (4) உழைப்பு

29. இன்றைய கிளைமேட் (Climate) மிக மோசமாக உள்ளது. கிளைமேட் என்பதன் தமிழ்ச் சொல்
(1) காலநிலை (2) வானிலை
(3) மழை (4) வெயில்

30. இன்டர் நெட் (Internet) மனிதனை தீய வழிக்குள்ளும் கொண்டு செல்கின்றது. இன்டர் நெட் (Internet) என்பதன் தமிழ்ச் சொல்
(1) மின்னஞ்சல் (2) தொலைநகல்
(3) பண்பலை (4) இணையம்

31. பின்வருவனற்றில் தென்னிலங்கை வழக்குச் சொல்
(1) சார் (2) மனே (3) சும்மாடு (4) சல்லி

32. தம்பி வீட்டிற்கு ஆறுதலாக வந்தார். இங்கு ஆறுதலா எனும் சொல்
(1) வடக்குப் பிரதேசம் (2) தென்னிலங்கை
(3) மலையகம் (4) மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. மகள் கடப்பங்கியில் நின்று யோசித்துக் கொண்டிருந்தாள். இங்கு கடப்படி என்னும் சொல்
(1) வடக்குப் பிரதேசம் (2) தென்னிலங்கை
(3) மேற்கு (4) மலையகம்

34. பின்வருவனற்றுள் மலையகக்கிளைமொழி
(1) இடியாப்ப (2) பத்தை (3) பொழப்பு (4) பொன்ன

35. பின்வரும் சொற்களுள் மேற்குப்பிரதேச சொல்லாக அமைவது
(1) சங்கை (2) எலை (3) ஆப்ப (4) அன்ன

## வினாத்தாள் – 5
## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| (1) - 3 | (11) - 2 | (21) - 4 | (31) - 4 |
| (2) - 4 | (12) - 4 | (22) - 3 | (32) - 1 |
| (3) - 1 | (13) - 2 | (23) - 1 | (33) - 2 |
| (4) - 4 | (14) - 1 | (24) - 3 | (34) - 3 |
| (5) - 3 | (15) - 1 | (25) - 4 | (35) - 4 |
| (6) - 2 | (16) - 3 | (26) - 2 | |
| (7) - 3 | (17) - 4 | (27) - 1 | |
| (8) - 1 | (18) - 1 | (28) - 3 | |
| (9) - 3 | (19) - 2 | (29) - 1 | |
| (10) - 4 | (20) - 4 | (30) - 4 | |

☆ **உங்களுக்குத் தெரிந்த பிரதேச வழக்குச் சொற்களையும் அச்சொற் களுக்குரிய பிரதேசங்களையும் தருக.**

(1) ........................................ :- ........................................
(2) ........................................ :- ........................................
(3) ........................................ :- ........................................
(4) ........................................ :- ........................................
(5) ........................................ :- ........................................
(6) ........................................ :- ........................................
(7) ........................................ :- ........................................
(8) ........................................ :- ........................................
(9) ........................................ :- ........................................
(10)........................................ :- ........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 மரபுப் பெயர்கள்

**மரபு என்பது ஒரு பொருளுக்குரிய சொல்லைப் பிரயோகிக்கும் நெடுங்கால மொழி வழக்கு. அதாவது ஆன்றோர்கள் எப்பொருளை எச்சொல்லால் தொன்று தொட்டு வழங்கி வந்தனரோ அப்பொருளை அச்சொல்லால் சொல்வது மரபு.**

**1. இளமைப் பெயர்கள்**

1. கீரி - பிள்ளை,குட்டி
2. ஆடு - குட்டி
3. அணில் - குஞ்சு, பிள்ளை
4. குதிரை - குட்டி
5. பாம்பு - குட்டி
6. குரங்கு - குட்டி, பறள்
7. மீன் - குஞ்சு
8. புலி - குட்டி
9. தவளை - குஞ்சு, பேத்தை
10. பூனை - குட்டி, பறள்
11. கோழி - குஞ்சு
12. கிளி - பிள்ளை, குஞ்சு
13. சிங்கம் - குருளை
14. கமுகு - பிள்ளை, கன்று
15. நாய் - குட்டி, குருளை
16. நெல் - நாற்று
17. மான் - குட்டி, கன்று
18. வாழை - குட்டி, கன்று
19. புகையிலை - நாற்று
20. பனை - வடலி
21. கரடி - குட்டி
22. தென்னை - பிள்ளை, கன்று
23. காக்கை - குஞ்சு
24. யானை - கன்று, குட்டி, போதகம்
25. மக்கள் - குழவி, குழந்தை, பிள்ளை
26. வேம்பு, பலா, மா, எலுமிச்சை - கன்று
27. எருமை, மரை - கன்று, குழவி
28. கழுதை, மான், பசு, ஒட்டகம் - கன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தொனியைக் குறிக்கும் சொற்கள்

1. கரடி - கத்தும்
2. குதிரை - கனைக்கும்
3. பசு - கதறும்,கத்தும்
4. நரி - ஊளையிடும்
5. யானை - பிளிறும்
6. பன்றி - உறுமும்
7. நாய் - குரைக்கும்
8. பூனை - கத்தும், சீறும்
9. சிங்கம் - கர்ச்சிக்கும்
10. எருது - முக்காரமிடும்
11. ஆந்தை - அலரும
12. மயில் - அகவும்
13. தேனீ - ரீங்காரம் செய்யும்
14. வண்டு - இரையும்
15. காகம் - கரையும்
16. கிளி - பேசும்
17. பல்லி - சொல்லும்
18. கோழி- கொக்கரிக்கும், கேரும
19. சேவல் - கூவும்
20. புலி - உறுமும்
21. கூகை - குழறும்
22. குரங்கு - அலப்பும்
23. புறா - குறுகுறுக்கும்
24. தேவாங்கு - அழும
25. அணில் - கீச்சிடும்
26. ஆடு - கத்தும
27. கழுதை - கத்தும்
28. எலி - கீச்சிடும்
29. குருவி - கீச்சிடும்
30. மயில் - அகவும்
31. குயில் - கூவும்
32. தவளை - கத்தும்
33. பாம்பு - சீறும்

## 8. கூட்டத்தைக் குறிக்கும் சொற்கள்

1. ஆனை - பந்தி
2. ஆடு - மந்தை
3. காலாள் - படை
4. எறும்பு - கூட்டம், குவியல்
5. முகில் - கூட்டம்
6. நாடகம் -குழு,கோஷ்டி,சபை
7. புத்தகம் - அடுக்கு
8. ஆறு - தொகுதி
9. மா - சோலை,தோப்பு
10. நெல் - குவியல்
11. அறிஞர் ,புலவர் - அவை
12. குண்டர் - கும்பல்
13. ஆ - நிரை
14. கள்ளர் - கூட்டம்
15. சனம் - கும்பல்,திரள், கூட்டம்
16. சுருட்டு - கட்டு
17. சலாகை - கட்டு
18. மக்கள் - தொகுதி
19. கடை - தொகுதி
20. வைக்கோல் - கற்றை
21. புகையிலை - சிப்பம்
22. பெண்கள் - தோழியர் ஆயம்
23. ஆசிரியர் - குழாம்
24. படைவீரர் - அணி
25. காவல் - படை
26. உயிர் - தொகுதி
27. பல் - வரிசை
28. யானை - பந்தி
29. பறவை - தொகுதி
30. உடு - திரள்
31. சேனை - திரள்
32. திறப்பு - கோர்வை
33. தென்னை - தோப்பு
34. நூல் - பந்து
35. புத்தகம் - அடுக்கு
36. புல் - கற்றை
37. மணி - மாலை
38. மலர் - செண்டு
39. மலை - தொடர்
40. முகில் - கூட்டம்
41. முத்து - குவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. சினைப் பெயர்கள்**

(i) **இலைகள்**

1. மா, பலா, வாழை, முருங்கை - இலை
2. தென்னை, பனை, கமுகு, ஈச்சை, தாளை - ஓலை
3. நெல், புல் - தாள்
4. கரும்பு, சோளம் - தோகை

(ii) **இளங்காயின் பெயர்**

1. தென்னையின் இளங்காய் - குரும்பை
2. பனையின் இளங்காய் - நுங்கு
3. பலாவின் பிஞ்சு - மூசு
4. மாவின் இளம்பிஞ்சு - வடு
5. வாழையின் இளம்பிஞ்சு - கச்சல்

(iii) **வித்துப்பெயர்**

1. மிளகாய், கத்தரி - விதை
2. நெல், சோளம், திணை - மணி
3. ஆமணக்கு, மாதுளை - முத்து
4. மா,பலா, தாமரை, புளி - கொட்டை
5. தாமரை, ஆமணக்கு - பொகுட்டு

(iv) **உள்ளீட்டுப் பெயர்**

1. நெல், திணை, வரகு - அரிசி
2. வாழை, மா - சதை
3. பலா, தோடை - சுளை
4. முருங்கை, கற்றாளை - சோறு
5. அவரை, துவரை, பயறு - பருப்பு

(v) **குலைக்குரிய மரபுப் பெயர்**

1. வாழை, முந்திரி, ஈச்சை - குலை
2. மா, புளி, முதலியவற்றின் காய்த்தொகுதி - கொத்து
3. சோளம், நெல், வரகு - கதிர்

**5. ஏனைய மரபுப்பெயர்கள்**

1. யானை, குதிரை, ஒட்டகம் ஆகியவற்றின் மலம் - இலத்தி,இலண்டம்
2. மாடு எருமைகளின் மலம் - சாணம்
3. பறவையின் மலம் - எச்சம்
4. கழுதையின் மலம் - விட்டை
5. ஆட்டு மலம் - பிழுக்கை

**6. மேலும் சில மரபுப்பெயர்கள்**

1. வண்டி வகை செலுத்துவோன் - சாரதி
2. விமானம் செலுத்துபவன் - வலவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கப்பல் செலுத்துபவன் - மீகான், மாலுமி
4. யானை, தேர் செலுத்துபவன் - பாகன்
5. ஆடு மேய்ப்பவன் - இடையன்
6. வைக்கோல் அடுக்கப்பட்டிருப்பது - போர்
7. புகையிலை அடுக்கப்பட்டிருப்பது - சிப்பம்
8. கருவாடு அடுக்கப்பட்டிருப்பது - பாடம்

**7. அஃறிணை மரபுப் பெயர்கள்**

| | பிராணி | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1. | குதிரை | குண்டு | வடவை |
| 2. | குரங்கு | கடுவன் | மந்தி |
| 3. | யானை | களிறு | பிடி |
| 4. | மான் | கலை | பிணை |
| 5. | மாடு | எருது/ நாம்பன் | பசு/ நாகு |
| 6. | புலி | போத்து | பிணா |
| 7. | பூனை, நாய் | கடுவன் | பெட்டை |
| 8. | ஆடு | கடா | மறி |
| 9. | கோழி | சேவல் | பெட்டை,பேடு |
| 10. | நண்டு | அலவன் | பெடை |

**8. பறவை விலங்குகளின் இருப்பிடம்**

1. கோழி - பண்ணை
2. ஆடு - பட்டி
3. மாடு - தொழுவம்
4. கறையான் - புற்று
5. சிலந்தி - வலை
6. எலி, நண்டு - வளை
7. குருவி - கூடு
8. குதிரை - கொட்டில்

**9. வினை மரபுப் பெயர்கள்**

1. பாய் - பின்னுதல்
2. சோறு - உண்ணல்
3. ஆடை - நெய்தல்
4. முறுக்கு - தின்னல்
5. பால் - பருகுதல்
6. தண்ணீர் - குடித்தல்
7. மாத்திரை - விழுங்குதல்
8. பூ - பறித்தல்
9. மரம் - வெட்டுதல்
10. மாலை - தொடுத்தல்
11. கூடை - முடைதல்
12. சுவர் - எழுப்புதல்
13. கூரை - வேய்தல்
14. ஓவியம் - புனைதல்
15. பால் - காய்ச்சல்
16. உணவு - சமைத்தல்
17. நூல் - நூற்றல்
18. சிற்பம் - செதுக்கல்
19. உப்பு - கிளறுதல்
20. தயிர் - கடைதல்
21. செய்யுள் - இயற்றுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 6

☆ **பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1. தவளை பேத்தை ; கீரி
(1) பிள்ளை (2) குஞ்சு (3) கன்று (4) குருளை

2. யானையின் இளமைப் பெயர்
(1) குருளை (2) குஞ்சு (3) போதகம் (4) பறள்

3. பனை வடலி ; நெல்
(1) கன்று (2) குட்டி (3) பிள்ளை (4) பறள்

4. மீனின் இளமைப்பெயர்
(1) பேத்தை (2) குஞ்சு (3) கன்று (4) நாற்று

5. பல்லி சொல்லும் ; பாம்பு
(1) சீறும் (2) உறுமும் (3) பிளிரும் (4) கர்ச்சிக்கும்

6. காகம் கரையும் ; கிளி
(1) சொல்லும் (2) கூவும் (3) அகவும் (4) பேசும்

7. குதிரையின் தொனி
(1) கதறும் (2) கனைக்கும் (3) கத்தும் (4) மூக்காரமிடும்

8. கோழி கொக்கரிக்கும்; சேவல்
(1) கேரும் (2) கரையும் (3) இரையும் (4) கூவும்

9. ஆடு மந்தை ; யானை
(1) பந்தி (2) நிரை (3) திரல் (4) கும்பல்

10. புகையிலை சிப்பம் ; நெல்
(1) தொகுதி (2) கட்டு (3) குவியல் (4) கற்றை

11. நாடகம் குழு ; மக்கள்
(1) கும்பல் (2) கோஷ்டி (3) வரிசை (4) தொகுதி

12. சுருட்டு கட்டு ; புகையிலை
(1) கற்றை (2) சிப்பம் (3) திரள் (4) மஞ்சரி

13. முருங்கை இலை ; புல்
(1) தாள் (2) கதிர் (3) ஓலை (4) தோகை

14. மா வடு ; பனை
(1) குரும்பை (2) வடு (3) நுங்கு (4) கச்சல்

15. புளி கொத்து ; வாழை
(1) இலை (2) தாறு (3) கொத்து (4) ஓலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கத்தரி விதை ; மா

(1) கொட்டை (2) முத்து (3) விதை (4) மணி

17. கற்றாளை சோறு ; கோதுமை

(1) சோறு (2) சுளை (3) அரிசி (4) பருப்பு

18. ஆட்டு மலம் பிழுக்கை; கழுதையின் மலம்

(1) எச்சம் (2) விட்டை (3) சாணம் (4) இலத்தி

19. குரங்கு கடுவன்; குதிரை

(1) வடவை (2) கலை (3) போத்து (4) குண்டு

20. புலி பிணா ; யானை

(1) கடா (2) பிடி (3) அலவன் (4) களிறு

## வினாத்தாள் - 6
## விடைகள்

| | |
|---|---|
| (1) - 1 | (11) 4 |
| (2) - 3 | (12) - 2 |
| (3) - 4 | (13) - 1 |
| (4) - 2 | (14) - 3 |
| (5) - 1 | (15) - 2 |
| (6) - 4 | (16) - 1 |
| (7) - 2 | (17) - 3 |
| (8) - 4 | (18) - 2 |
| (9) - 1 | (19) - 4 |
| (10) - 3 | (20) - 2 |

☆ **உங்களுக்குத் தெரிந்த மேலும் சில மரபுப்பெயர்களினைப் பட்டியல் படுத்துக.**

(1) ........................................ :- ........................................

(2) ........................................ :- ........................................

(3) ........................................ :- ........................................

(4) ........................................ :- ........................................

(5) ........................................ :- ........................................

(6) ........................................ :- ........................................

(7) ........................................ :- ........................................

(8) ........................................ :- ........................................

(9) ........................................ :- ........................................

(10)........................................ :- ........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 அணிகள்

**மொழியில் எடுத்த பொருளை அழகாக்கவும், பொருளை வலிமைப் படுத்தவும் அணிகள் பயன்படுத்தப்படுகின்றன. கவிதையினையோ எடுத்துக்கொண்ட பொருளினையோ அலங்காரப்படுத்துவது இவ் அணிகளேயாகும்.**

## 1. உவமையணி

இரண்டு பொருட்களின் ஒப்புவமை உவமையணியாகும். இது நான்கு பகுதிகளைக் கொண்டது. அவை உவமானம், உவமேயம், பொதுத் தன்மை, உவமை உருபு என்பனவாகும்.

(1) உவமானம் - எவர்க்கும் தெரிந்த பொருள்

(2) உவமேயம் - விளக்க பயன்படுத்தும் பொருள்

(3) பொதுத்தன்மை -உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் இடையிலான ஒற்றுமை

(4) உவமை உருபு - ஒப்பிட்டுக்காட்ட பயன்படுத்தும் சொற்கள் உவமை உருபுகள் ஆகும்.

**சில உவமை உருபுகள்**

போல, போன்ற, புரைய, ஒப்ப, உறழ, அன்ன, இன்ன, நேர, நிகர, கடுப்ப, மான, மாதிரி

**(உ+ம்) 1. தேன் போன்ற மொழி**

(i) உவமானம் :- தேன்
(ii) உவமேயம் :- மொழி
(iii) பொதுத்தன்மை :- இனிமை
(iv) உவமை உருபு :- போன்ற

**2. நிலவு போன்ற முகம்**

(i) உவமானம் :- நிலவு
(ii) உவமேயம் :- முகம்
(iii) பொதுத்தன்மை :- அழகு
(iv) உவமை உருபு :- போன்ற

**மேலும் சில உதாரணங்கள்**

(i) மேகம் இன்ன கூந்தலாள்.
(ii) பால் போன்ற நிலவு.
(iii) பவளம் போன்ற வாய்.
(iv) குயில் போன்ற குரல்.
(v) மயில் போல பெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உருவக அணி

உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் வேறுபாடு இல்லாமல் தோன்ற உவமேயத்தில் உவமானத்தை ஏற்றிக்கூறுவது உருவக அணியாகும்.

உவமையில் உவமானச் சொல் முன்னும் உவமேயச் சொல் பின்னும் வரும். உருவகத்தில் உவமேயச் சொல் முன்னும் உவமானச்சொல் பின்னும் வரும்.

| (உ+ம்) | | உவமை | உருவகம் |
|---|---|---|---|
| | (1) | மலர் போன்ற பாதம் | பாதமலர் |
| | (2) | தாமரை போன்ற முகம் | முகத்தாமரை |
| | (3) | மதிபோன்ற முகம் | முகமதி |
| | (4) | கடல் போன்ற வானம் | வானக்கடல் |

## 3. தற்குறிப்பேற்ற அணி

தன் + குறிப்பு + ஏற்றம் = தற்குறிப்பேற்றம்

இயல்பாக நிகழும் நிகழ்ச்சி ஒன்றின் மீது கவிஞர் தமது கற்பனைக் கருத்தை (குறிப்பை) ஏற்றிக்கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.

(உ+ம்) (1) கண்ணன் இறந்ததைக் கண்டு வானம் கண்ணீர் வடித்தது. (மழை பெய்வது இயற்கை. கண்ணன் இறந்ததால் கண்ணீர் வடித்தது என்று கவிஞர் தனது எண்ணத்தை வெளிப்படுத்துகிறார்)

(2) சூரியன் வெடிப்புகள் தோறும் தன் மனைவியைத் தேடியது.

(3) இராமன் மிதிலை நகருக்கு சென்றபோது அங்கு கட்டப்பட்டிருந்த கொடிகள் இராமனை வருக வருகவென அழைத்தன.

## 4. உயர்வு நவிற்சி அணி

ஒன்றின் இயல்பை மிகவும் அதிகப்படுத்திக் கூறுவது உயர்வு நவிற்சி அணியாகும்.

(உ+ம்) (1) மேகத்தை தொடும் அளவு மாடங்கள் உள்ளன. (இங்கு கட்டிடங்களின் உயரத்தை சிறப்பிக்க அக் கட்டிடங்கள் மேகத்தை தொடும் அளவு உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.)

(2) சீன மாளிகைகள் பொன்னினால் செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. எடுத்துக்காட்டு உவமையணி**

நேர்ப்பொருளில் வெளிப்படையாகச் சொல்லும் அதேவேளை உவமையும் உவமேயமும் தனித்தனி தொடர்களாக வரும். உவமை உருபு வெளிப்பட வருவதில்லை.

*"வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனையது உயர்வு"*

தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

உவமை :- தாமரை தண்டின் நீளம் தண்ணீரின் அளவுதான் இருக்கும்.

உவமேயம் :- மனதின் ஊக்கத்தின் அளவே வாழ்க்கையின் உயர்வு இருக்கும்.

போல எனும் உவமை உருபு வெளிப்படவில்லை.

**6. சிலேடை அணி / இரட்டு மொழிதல் அணி**

ஒரு சொல்லோ சொற்றொடரோ பல பொருள் பட வருவது சிலேடை அணியாகும்.

(உ+ம்) (1) திருக்கை - அழகிய கை, சிவமணம் பொருத்திய கை, ஒரு வகை மீன்

(2) மாதங்கம் - யானை, பெண்ணின் அங்கம், பெரிய மீன்

(3) பழக்கறி - பழைய கறி, பழமும் கறியும்

**7. மோனை**

செய்யுள் அல்லது உரைநடையில் முதல் எழுத்து ஒன்றிவர தொடுப்பது மோனை அணியாகும்.

(உ+ம்) (1) **கா**லையில் **க**திரவனைக் **கா**ண **கா**த்திருந்தேன்.

(2) **அ**வனை **அ**ணு **அ**ணுவாய் **அ**ழித்தான்.

(3) **வி**ழிமேல் **வ**ழி **வை**த்தேன்.

**8. எதுகை**

செய்யுள் அல்லது வாக்கியச் சொற்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவர தொடுப்பது எதுகை அணியாகும்.

(உ+ம்) (1) எ**ல்**லோரும் செ**ல்**வம் இ**ல்**லாதவரே.

(2) அ**ன்**றும் இ**ன்**றும் எ**ன்**றும் ந**ல்**லவன்

(3) ஆ**லு**ம் வே**லு**ம் ப**ல்லு**க்குறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் – 7

☆ **பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1. வானக் குளத்தில் நிலவு நீங்கியது. இங்கு வானக்குளம் என்பது
   (1) உவமை (2) உருவகம்
   (3) தற்குறிப்பேற்றம் (4) உயர்வு நவிற்சி

2. சீதையின் கண்ணீர் கடலாய் பெருகியது. இவ்வணி
   (1) உயர்வு நவிற்சி அணி (2) உவமை
   (3) தற்குறிப்பேற்ற அணி (4) உருவகம்

3. அறிவில்லாதவன் என்பது
   (1) எதுகை (2) மோனை (3) சிலேடை (4) உவமை

4. அங்கத்தவர்கள் சங்கங்களுக்கு பங்கம் செய்தனர்.இவ்வாக்கியத்தில் இரண்டாவதாக வரும் 'ங்'
   (1) உருவகம் (2) எதுகை (3) மோனை (4) சிலேடை

5. அங்கத்தவர் அனைவரும் அவ்விடத்திற்கு அணிவகுத்தனர். இத் தொடரில் முதலாவதாக வரும்'அ'
   (1) மோனை (2) எதுகை (3) சிலேடை (4) உருவகம்

6. பிறை போன்ற நெற்றி என்பது
   (1) உருவகம் (2) உயர்வு நவிற்சி
   (3) உவமை (4) தற்குறிப்பேற்றம்

7. யுத்தத்தின் கொடுமைக்கு பயந்து மேற்கே சூரியன் ஓடினான். இவ்வணி
   (1) உயர்வு நவிற்சி (2) தற்குறிப்பேற்றம்
   (3) எதுகை (4) சிலேடை

8. கமலம் போன்ற பாதம். இதில் உவமானம்
   (1) கமலம் (2) பாதம் (3) மென்மை (4) போன்ற

9. மலர்கள் நிலவைக் கண்டன. இதில் இரண்டாவதாக வரும் 'ல'
   (1) சிலேடை (2) உவமை (3) மோனை (4) எதுகை

10. வாலியின் உடலில் இருந்து சென்ற இரத்தம் கடல் நீரையும் செந்நீராக்கியது.இது
    (1) உயர்வு நவிற்சி (2) தற்குறிப்பேற்றம்
    (3) சிலேடை (4) எதுகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவதே. இங்கு உள்ளக்கமலம் என்பது
(1) எதுகை (2) மோனை (3) உருவகம் (4) உவமை

12. பலகை என்பது
(1) உருவகம் (2) உவமை (3) எதுகை (4) சிலேடை

13. தேன் போன்ற மொழி. இதில் பொதுத் தன்மை
(1) தேன் (2) இனிமை (3) போன்ற (4) மொழி

14. காலையும் மாலையும் வழிப்படு.இதில் இரண்டாவதாக வரும் 'லை'
(1) எதுகை (2) மோனை
(3) சிலேடை (4) உருவகம்

15. இராமன் வனவாசம் செல்வதை எண்ணி சேவல் காலை வேலையில் வயிற்றில் அடித்துக் கொண்டு 'போகாதே போகாதே' என்றது.இதில் இடம் பெற்றுள்ள அணி
(1) உயர்வு நவிற்சி (2) உருவகம்
(3) தற்குறிப்பேற்றம் (4) சிலேடை

16. வதனமதியாய் தோன்றினாள்
(1) உவமை (2) உருவகம் (3) சிலேடை (4) மோனை

17. இராவணன் கால்பட்டு மலைகள் அமிழ்ந்தன.இங்கு இடம் பெற்றுள்ள அணி
(1) எதுகை (2) தற்குறிப்பேற்றம்
(3) சிலேடை (4) உயர்வுநவிற்சி

18. தங்கை என்பது
(1) மோனை (2) சிலேடை (3) உருவகம் (4) உவமை

19. உழைப்பின் உயர்வை உணர்க.இங்கு முதலாவதாக வரும் "உ"
(1) சிலேடை (2) எதுகை (3) மோனை (4) உருவகம்

20. சூரியனைக் கண்டதும் தாமரை கண் மலர்ந்து சிரித்தது. இங்கு இடம் பெற்றுள்ள அணி
(1) உயர்வு நவிற்சி (2) தற்குறிப்பேற்றம்
(3) சிலேடை (4) மோனை

21. 'பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா பேசும் பொற்சித்திரமே'- இங்கு கனியமுது,பொற்சித்திரம் என குறிப்பிடப்படுபவை.
(1) உவமையணி (2) தற்குறிப்பேற்ற அணி
(3) எடுத்துக்காட்டு உவமை (4) உருவக அணி

22. "பட்டத்தளிர் போல, எறும்பு நெரிந்தது போல" இங்கு பயன் படுத்தப்பட்டுள்ள அணி
(1) எடுத்துக் காட்டு உவமை (2) உவமையணி
(3) உருவக அணி (4) தற்குறிப்பேற்ற அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. 'வெங்கதிரோன் தானும் விதர்ப்பன் திருமடந்தை மங்கலநாள் காணவருவான் போல்' இங்கு பயன் படுத்தப்பட்டுள்ள அணி

(1) உயர்வு நவிற்சி அணி (2) உருவகம்

(3) தன்மை நவிற்சி அணி (4) முரண்

24. "கடல் நீரும் நீலவானும் கைக்கோர்க்கும் அதற்கிதற்கும் இடையில் கிடைக்கும் வெள்ளம் எழில் வீணை" இப்பாடலடியில் பயன் படுத்தப்பட்ட அணி

(1) உவமையணி (2) சிலேடை

(3) உருவக அணி (4) எதுகை

25. 'தையல் துயர்க்குத் தாங்காது தம் சிறகாம்
கையால் வயிறலைத்துக் காடருள்வாய் - வெய்யோனை
வாவு பரிந் தேரேறி வாவென்றழைப்பன போல்
கூவினவே கோழிக்குலம்' இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள அணி

(1) எடுத்துக்காட்டு உவமை (2) உருவக அணி

(3) உவமையணி (4) தற்குறிப்பேற்ற அணி

26. "காதலியை காரிருளில் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்ககப் படாதென்றோ - நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கு அலவனோடு
ஒளிக்கின்ற தென்னோ உரை"

(1) தற்குறிப்பேற்ற அணி (2) உவமையணி

(3) உருவக அணி (4) சிலேடையணி

27. 'இதயப்பேழையிலே இலங்கும் நினைப்பு'-இதயப்பேழை என்பது

(1) உவமையணி (2) எடுத்துக்காட்டு உவமை

(3) உருவக அணி (4) தன்மை நவிற்சி

28. 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தருக்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு' - இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணி

(1) உவமையணி (2) எடுத்துக்காட்டு உவமை

(3) உருவக அணி (4) சிலேடை அணி

29. எஃகிய பஞ்சினைப் போல - தமிழ் எல்லால மன்னன் இருதயம் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணி

(1) உருவக அணி (2) தன்மை நவிற்சி

(3) தற்குறிப்பேற்றம் (4) உவமையணி

30. 'மனமெனும் தோணி, மனமெனும் கோல்'-இங்கு கையாளப்பட்ட அணி

(1) தற்குறிப்பேற்றம் (2) உருவக அணி

(3) தன்மை நவிற்சி (4) சிலேடையணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. 'குமதன் இட்ட குலவரை கூத்தில்
திமிதம் இட்டு திரியும் திரைக்கடல் துமிதம்
ஊர்புக வானவர் துள்ளினர்
அமுதம் இன்னும் எழும் எனும் ஆசையால்' இப்பாடலில் இடம் பொற்றுள்ள காட்சியில் கையாளப்பட்ட அணி
(1) உருவக அணி (2) தற்குறிப்பேற்ற அணி
(3) உயர்வு நவிற்சி (4) உவமையணி

32. 'சூரியன் தன் மனைவியை வெடிப்புகள் தோறும் தேடினான். இங்குள்ள அணி
(1) தற்குறிப்பேற்றம் (2) உயர்வுநவிற்சி
(3) உவமை (4) உருவகம்

33. 'வீதி தோறும் வானளவும் கோபுரங்கள்' இவ்வடியில் கையாளப் பட்டுள்ள அணி
(1) உருவக அணி (2) உவமையணி
(3) உயர்வு நவிற்சி (4) தன்மை நவிற்சி

34. 'காலையில் இளத்தளிரில் பனிமுத்துக்கள் பதிந்திருந்தன. இங்கு பனிமுத்து என்பது
(1) உவமையணி (2) உருவக அணி
(3) எடுத்துக்காட்டு உவமை (4) தன்மை நவிற்சி

35. 'முள்ளாலே மகுடத்தை தலையில் வைத்து
ஞானமகன் நின்றவுடன் ஞானம் மெல்லாம்
ஓர் பொழுது நடுகிற்றம்மா' இவ் வடியில் கையாளப்பட்டுள்ள அணி
(1) உயர்வு நவிற்சி (2) உருவக அணி
(3) உவமையணி (4) சிலேடை

## வினாத்தாள் - 7
## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| (1) - 2 | (11) - 3 | (21) - 4 | (31) - 3 |
| (2) - 1 | (12) - 4 | (22) - 2 | (32) - 1 |
| (3) - 3 | (13) - 2 | (23) - 1 | (33) - 3 |
| (4) - 2 | (14) - 1 | (24) - 3 | (34) - 2 |
| (5) - 1 | (15) - 3 | (25) - 4 | (35) - 1 |
| (6) - 3 | (16) - 2 | (26) - 1 | |
| (7) - 2 | (17) - 4 | (27) - 3 | |
| (8) - 1 | (18) - 2 | (28) - 2 | |
| (9) - 4 | (19) - 3 | (29) - 4 | |
| (10) - 1 | (20) - 2 | (30) - 2 | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 ஒலி வேறுபாடுகள்

**ஒலி வேறுபாடு கொண்ட சொற்களை சரியாக உச்சரித்துப் பழகுவதன் மூலமாக உச்சரிப்புப் பிழைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.**

**1. லகர, ழகர, ளகர வேறுபாடுகள்**




ல - மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரம் தடித்துப் பொருந்த பிறக்கும்.
ழ - நுனி நா மேல்வாயைத் தடவ பிறக்கும்.
ள - மேல்வாயை நாவின் ஓரம் தடித்து தடவுவதால் பிறக்கும்

*(1)* அலகு - அளவு, பறவையின் வாய்
அழகு - வடிவு, வனப்பு
அளகு - காட்டுக்கோழி, பெண்மயில், அன்னப்பெடை

*(2)* அலி - பேடி
அழி - இல்லாமல் செய்
அளி - வண்டு, கொடு

*(3)* அலை - திரை
அழை - கூப்பிடு
அளை - குகை

*(4)* ஆலி - அமுதம், மழைத்துளி
ஆழி - கடல், சக்கரம்
ஆளி - யானை, யாளி, சிங்கம்

*(5)* ஆல் - ஒரு மரம்
ஆழ் - அமிழ், மூழ்கு
ஆள் - ஆண்மகன், அரசு, செய்

*(6)* இலவு - இலவ மரம்
இழவு - மரணம், கேடு

*(7)* உலவு - உலாவுதல்
உழவு - உழுதல், பயிர்த்தொழில்
உளவு - வேவு

*(8)* உலை - வருத்து, கொல்லனின் உலை
உழை - முயற்சி செய்
உளை - சிங்கம், குதிரை என்பவற்றின் பிடரி மயிர், சேறு, அழுகை.

*(9)* ஒலி - ஓசை, சத்தம்
ஒழி - அழி, நீக்கு
ஒளி - பிரகாசம், வெளிச்சம், புகழ், மறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| (10) | கலகம் | - | குழப்பம் |
| | கழகம் | - | மன்றம் |
| | களகம் | - | நெற்கதிர், அன்னம், சுண்ணாம்பு |
| (11) | கலை | - | ஆண்மான் |
| | கழை | - | மூங்கில் |
| | களை | - | உதவாத வேற்றுப்பயிர் |
| (12) | காலை | - | முற்பகல் |
| | காளை | - | இளம் ஆண், நாம்பன், வீரன் |
| (13) | கிழவி | - | முதியவள் |
| | கிளவி | - | சொல் |
| (14) | குலவி | - | பிள்ளை |
| | குழவி | - | கொட்டும் ஈ |
| | குளவி | - | உறவாடி |
| (15) | கூலம் | - | பண்டம், தானியம் |
| | கூழம் | - | எள்ளு |
| | கூளம் | - | தூசி |
| (16) | சூல் | - | கர்ப்பம், தோண்டு |
| | சூழ் | - | சுற்று, ஆராய், சூழ்ச்சி |
| | சூள் | - | ஆணை, சபதம் |
| (17) | தலை | - | சிகரம், தலைமை, முதன்மை |
| | தழை | - | இலை, குழை, வளர் |
| | தளை | - | விலங்கு, கட்டு |
| (18) | தாலம் | - | பனை, பாத்திரம் |
| | தாழம் | - | ஆழம், தாழ்வு |
| | தாளம் | - | இசையின் கால அளவைக் குறிக்கும் அடையாளம் |
| (19) | தோல் | - | சருமம் |
| | தோள் | - | புயம் |
| (20) | நீலம் | - | ஒரு நிறம், நவரத்தினங்களிலொன்று |
| | நீளம் | - | தூரம் |
| (21) | பலம் | - | வலிமை, உறுதி |
| | பழம் | - | கனி |
| (22) | புல் | - | புல்லு, சிறுமை, தழுவுதல் |
| | புள் | - | பறவை |
| (23) | பொலிதல் | - | மிகுதல், நெல் |
| | பொழிதல் | - | சொரிதல் |
| | பொளிதல் | - | துளை செய்தல் |
| (24) | மலை | - | குன்று, மயக்கு |
| | மழை | - | மாரி, மேகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(25) வலி - வலிமை, நோவு
வழி - நெற்றி, பாதை, மரபு
வளி - காற்று

(26) வலு - பலம்
வழு - குற்றம்


(27) வாலை - இளம் பெண்
வாழை - வாழைமரம்
வாளை - ஒரு வகை மீன்

(28) விலக்கு - தவிர், தடை, வழு, தடு
விளக்கு - தீபம், தெளிவுபடுத்து

(29) வெல்லம் - சர்க்கரை
வெள்ளம் - தண்ணீர்ப் பெருக்கு

(30) வேலை - கடல், பணி
வேளை - பொழுது

**2. ரகர,ரகர வேறுபாடுகள்**




ர - நா நுனி அண்ணத்தை தொடுவதால் பிறக்கும்.




ற - நா நுனி அண்ணத்தை மிகப்பொருந்த பிறக்கும்.

(1) அரம் - ஓர் ஆயுதம்
அறம் - தர்மம்

(2) அரி - அரித்தல், விஷ்ணு, சிங்கம், வண்டு
அறி - தெரி

(3) அருந்து - உண்
அறுந்து - துண்டுபட்டு

(4) அருகு - விளிம்பு
அறுகு - ஒரு வகைப்புல்

(5) அரை - இரண்டிலொருபங்கு
அறை - அடி, வீட்டின் ஒரு பகுதி

(6) அலரி - ஒரு மரம்
அலறி - கத்தி

(7) இரக்கம் - மனவுருக்கம்
இறக்கம் - சரிவு

(8) இரங்கு - மனமுருகு
இறங்கு - கீழே செல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| (9) | இருத்தல் | - | அமர்தல் |
| | இறுத்தல் | - | செலுத்துதல் |
| (10) | இரை | - | உணவு |
| | இறை | - | கடவுள் |
| (11) | உரி | - | கழற்று, தோல் |
| | உறி | - | பாத்திரங்கள் வைக்க உதவும் தொங்குவடம் |
| (12) | உரை | - | சொல் |
| | உறை | - | வாழ், கவசம் |
| (13) | ஏரி | - | குளம் |
| | ஏறி | - | மேலே தொற்றுதல் |
| (14) | ஒரு | - | ஒன்று |
| | ஒறு | - | தண்டித்தல் |
| (15) | கரை | - | ஓரம் |
| | கறை | - | குற்றம் |
| (16) | குரவர் | - | பெரியோர் |
| | குறவர் | - | மலைவாழ் சமூகத்தினர் |
| (17) | குரை | - | ஒலி |
| | குறை | - | குறைத்தல் |
| (18) | சிரை | - | மொட்டையடித்தல் |
| | சிறை | - | மறியல் |
| (19) | சொரி | - | கொட்டுதல் |
| | சொறி | - | உராய்தல் |
| (20) | தரை | - | நிலம் |
| | தறை | - | அறைதல் |
| (21) | திரை | - | அலை |
| | திறை | - | கப்பம், வரி |
| (22) | நிரை | - | வரிசை |
| | நிறை | - | பாரம், நிரப்பு |
| (23) | பரவை | - | கடல் |
| | பறவை | - | பட்சி |
| (24) | பரி | - | குதிரை |
| | பறி | - | பிடுங்கு, கூடை |
| (25) | மரம் | - | விருட்சம் |
| | மறம் | - | வீரம் |
| (26) | மரித்தல் | - | இறத்தல் |
| | மறித்தல் | - | தடுத்தல் |
| (27) | வருத்தல் | - | துன்புறுதல் |
| | வறுத்தல் | - | வறுவல் செய்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(28) விரல் - கைவிரல்
விறல் - வலிமை

(29) விரை - வேகமாய் போ, வாசனை, விதை
விறை - மரத்துப் போதல்

(30) வரை - மலை, கீறு
வறை - வறுவல்

**3. ணகர, நகர, னகர வேறுபாடுகள்**




ண - மேல்வாய்ப் பகுதியை நாக்கின் நுனி பகுதி சேர்வதால் பிறக்கும்.




ந - நா நுனி மேல்வாய் பல்லினது அடியை பொருத்துவதால் பிறக்கும்.




ன - நா நுனி மேல்வாய் நுனிப்பகுதியை மிகப் பொருந்தினால் பிறக்கும்

(1) அண்ணம் - மேல்வாய்
அன்னம் - சோறு, ஒரு வகை பறவை

(2) அண்மை - அருகே
அன்மை - இன்மை, அல்லாமல்

(3) அணல் - தாடி, கழுத்து
அனல் - சூடு, நெருப்பு

(4) அரண் - காவல்
அரன் - சிவன்

(5) ஆண் - ஆண்மகன்
ஆன் - பசு

(6) ஆணி - இரும்பாணி, எழுத்தாணி
ஆனி - ஒரு மாதம்

(7) ஆணை - சத்தியம்
ஆனை - யானை

(8) உண்ணல் - சாப்பிடுதல்
உன்னல் - நினைத்தல்

(9) ஊண் - உணவு
ஊன் - இறைச்சி

(10) எண் - இலக்கம்
என் - எனது

(11) கணப்பு - சூடு
கனப்பு - பருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| (12) | கணம் | - | கூட்டம் |
| | கனம் | - | பாரம் |
| (13) | கணி | - | கணக்கீடு |
| | கனி | - | பழம் |
| (14) | கணை | - | அம்பு, ஒரு நோய் |
| | கனை | - | ஒலி |
| (15) | கண்ணி | - | அரும்பு, மாலை, பொறிவைத்தல் |
| | கன்னி | - | இளம் பெண் |
| (16) | காணம் | - | செருக்கு |
| | கானம் | - | காடு |
| (17) | காணல் | - | பார்த்தல் |
| | கானல் | - | வெம்மை |
| (18) | காண் | - | பார் |
| | கான் | - | காடு |
| (19) | தணி | - | குறை |
| | தனி | - | தனிமையான |
| (20) | நாண் | - | கயிறு |
| | நான் | - | தன்மை ஒருமை |
| (21) | பணி | - | அடங்கு, தொழில், பாம்பு |
| | பனி | - | குளிர், அச்சம் |
| (22) | பண்ணல் | - | செய்தல் |
| | பன்னல் | - | செல்லுதல் |
| (23) | பாணம் | - | அம்பு |
| | பானம் | - | பருகும்நீர், பதார்த்தம் |
| (24) | புணை | - | மரக்கலம் |
| | புனை | - | அணி, சிருஷ்டி |
| (25) | மண்ணவன் | - | மனிதன் |
| | மன்னவன் | - | மன்னன் |
| (26) | வண்ணம் | - | அழகு, விதம் |
| | வன்னம் | - | நிறம் |
| (27) | வண்மை | - | கொடை |
| | வன்மை | - | திறமை |
| (28) | இந்நிலை | - | இந்த நிலை |
| | இன்னிலை | - | இன்ப நிலை |
| (29) | இந்நாடு | - | இந்த நாடு |
| | இன்னாடு | - | இனிய நாடு |
| (30) | முந்நூறு | - | மூன்று நூறு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் - 8

## பகுதி - 1

☆ கீழே தரப்படும் சொற்கள், முறையே தரும் பொருளின் கீழே கீறிடுக.

1. புரம், புறம்
(1) இடம், உடல் (2) இடம், நகரம்
(3) உடல், இடம் (4) நகரம், உடல்

2. இரை, இறை
(1) பறவை, அரசன் (2) பரவை, கடவுள்
(3) பறவை, உணவு (4) அரசன், கடவுள்

3. உரவு, உறவு
(1) வலிமை, இனம் (2) இனம், வலிமை
(3) இனம், சொந்தம் (4) கோழை, இனம்

4. சுரா, சுறா
(1) கள், கல் (2) மீன்,கள்
(3) கள், மீன் (4) கல், மீன்

5. திரை, திறை
(1) கப்பல், வரி (2) அலை,வரி
(3) வரி, அலை (4) வரி, கப்பல்

6. மணம், மனம்
(1) மரக்கலம், உள்ளம் (2) உள்ளம், மரக்கலம்
(3) உள்ளம், வாசனை (4) வாசனை, உள்ளம்

7. கணை, கனை
(1) அம்பு, ஒலி (2) அம்பு, ஒரு நோய்
(3) ஒலி, ஒரு நோய் (4) ஒலி, அம்பு

8. வண்ணம், வன்னம்
(1) விதம், அழகு (2) அழகு, விதம்
(3) விதம், நிறம் (4) நிறம், அழகு

9 வண்மை, வன்மை
(1) கொடை, திறமை (2) ஏழ்மை, திறமை
(3) திறமை, கொடை (4) திறமை, ஏழ்மை

10. புணை, புனை
(1) சிருஷ்டி, மரக்கலம் (2) அணி, மரக்கலம்
(3) அணி, சிருஷ்டி (4) மரக்கலம், அணி

11. அலி, அழி, அளி
(1) வண்டு, கெடு, கொடு (2) பேடி, கொடு, கெடு
(3) பேடி, கெடு, கொடு (4) கொடு, பேடி, கெடு

12. கூலம், கூழம், கூளம்
(1) தூசி, எள்ளு, பண்டம் (2) பண்டம், எள்ளு, தூசி
(3) எள்ளு, பண்டம், தூசி (4) எள்ளு, தூசி, பண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சூல், சூழ், சூள்
(1) கர்ப்பம், ஆராய்வு, சபதம் (2) கர்ப்பம், சபதம், ஆராய்வு
(3) கர்ப்பம், தீப்பந்தம், ஆராய்வு (4) தீபந்தம், கர்ப்பம், ஆராய்வு

14. பொலி, பொழி, பொளி
(1) ஊற்று, பெய், கொத்து (2) நெல், பெய், கொத்து
(3) வரம்பு, நெல், ஊற்று (4) கொத்து, பெய், நெல்

15. வலு, வழு
(1) பழம், குற்றம் (2) பளம், குற்றம்
(3) பலம், குற்றம் (4) குற்றம், பலம்

☆ **எழுத்து பிழைகளற்ற வாக்கியத்தின் கீழ் கோடிடுக.**

16. (1) குயிலின் குறளை அறிந்தேன்.
(2) குயிலின் குரலை அரிந்தேன்.
(3) குயிலின் குரலை அறிந்தேன்.
(4) குயிலின் குரழை அறிந்தேன்

17. (1) பல்கலைக் கழகம் சென்றான்.
(2) பல்கலைக் கழகம் செண்றாண்.
(3) பள்களைக் கழகம் சென்றான்.
(4) பல்களைக் களகம் சென்றான்.

18. (1) சூறியன் தன்னொலியைப் பரப்பினான்.
(2) சூரியன் தன்ணொலியைப் பறப்பினாண்.
(3) சூரியன் தன்னொலியைப் பரப்பிணான்.
(4) சூரியன் தன்னொளியைப் பரப்பினான்.

19. (1) தேர்தள் காளத்தில் கலவரம் ஏற்படும்.
(2) தேர்தள் காழத்தில் கழவரம் ஏற்படும்.
(3) தேர்தல் காலத்தில் கலவரம் ஏற்படும்.
(4) தேர்தல் காழத்தில் கலவறம் ஏற்படும்.

20. (1) விலக்கின் நிலழிளே மறைந்தால்.
(2) விளக்கின் நிழலிலே மறைந்தாள்.
(3) விளக்கின் நிலளிளே மரைந்தாள்.
(4) விழக்கின் நிலளிலே மறைந்தாள்.

## வினாத்தாள் – 8
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 3 | (2) - 1 | (3) - 1 | (4) - 3 | (5) - 2 |
| (6) - 4 | (7) - 1 | (8) - 3 | (9) - 1 | (10) - 4 |
| (11) - 3 | (12) - 2 | (13) - 1 | (14) - 2 | (15) - 3 |
| (16) - 3 | (17) - 1 | (18) - 4 | (19) - 3 | (20) - 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 சொற்பாகுபாடு

*(1)* திசைச்சொல்

*(2)* திரிசொற்கள்

*(3)* இயற்சொல்

*(4)* வடசொல்

**1. திசைச்சொல்**

பிறமொழிகளில் இருந்து தமிழில் வழங்கி வருகின்ற சொற்கள் திசைச்சொல் என அழைக்கப்படும்.

ஆங்கிலம், பிரேஞ், டச்சு, போர்த்துகீசம்,சிங்களம், அரபு, பாரசீகம், கிரேக்கம், கன்னடம், தெலுங்கு போன்றவை தமிழ் மொழிகளோடு இணைந்துள்ளன. இவை பற்றி விரிவாக இந்நூலில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**2. திரிசொல்**

திரிச்சொல இரண்டு வகைப்படும்

*(1)* ஒரு பொருள் தரும் பல சொல்.

*(2)* பல பொருள் தரும் ஒரு சொல்.

இவை பற்றி இந்நூலில் தனித்தனியாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**3. இயற்சொல்**

கற்றவர்களும் கற்காதவர்களும் இலகுவில் பொருள் விளக்கிக் கொள்ளக்கூடிய வகையில் அமைந்த சொற்களே இயற்சொல் என அழைக்கப்படும்.

**(உ+ம்) நிலம், வீடு, நாடு, பூ**

**4. வடசொல்**

சமஸ்கிருத மொழியில் இருந்து தமிழில் கலந்த சொற்களே வட சொற்கள் என அழைக்கப்படும். இது

*(1)* தற்சமம்

*(2)* தற்பவம்

என இரு வகைப்படும்.

**(1) தற்சமம்**

தமிழுக்கும், சமஸ்கிருதத்திற்கும் பொதுவான எழுத்துக்களால் ஆகி தமிழில் வழங்குபவை தற்சமம் எனப்படும்.

**(2) தற்பவம்**

சமஸ்கிருதத்திற்குரிய சிறப்பெழுத்துக்களாலோ அல்லது பொதுவும் சிறப்புமான எழுத்துக்களாலோ உருவாகி தமிழில் வழங்கும் வட சொற்கள் தற்பவம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ+ம்) இலக்குமி, அபிடேகம், விட்டுனு

தற்காலத்தில் கிரந்த எழுத்துக்கள் சாதாரண பயன்பாட்டில் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (உ+ம்) ஷ | - ஷட்ஜம் | ஹ | - ஹனுமான் |
| ஸ | - சரஸ்வதி | க்ஷ | - அக்ஷரம் |
| ஜ | - ஜனாதிபதி | ஸ்ரீ | - ஸ்ரீதேவி |

| வடசொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|
| (1) அகங்காரம் | - | செருக்கு |
| (2) அக்கிரமம் | - | முறைக்கேடு |
| (3) அசலம் | - | உறுப்பு |
| (4) அதிபர் | - | தலைவர் |
| (5) அத்தியாவசியம் | - | இன்றியமையாதது |
| (6) அபூர்வம் | - | புதுமை |
| (7) அயோக்கியன் | - | நேர்மையற்றவன் |
| (8) அற்புதம் | - | புதுமை |
| (9) ஆயுதம் | - | கருவி |
| (10) ஆராதனை | - | வழிபாடு |
| (11) ஆனந்தம் | - | மகிழ்ச்சி |
| (12) இஷ்டம் | - | விருப்பம் |
| (13) இங்கிதம் | - | இனிமை |
| (14) உபசாரம் | - | முகமன் கூறல் |
| (15) உபயோகம் | - | பயன் |
| (16) உதாசீனம் | - | பொருட்படுத்தாமை |
| (17) உத்தரவு | - | கட்டளை |
| (18) உற்சாகம் | - | ஊக்கம் |
| (19) கர்மம் | - | செயல் |
| (20) கலாசாரம் | - | பண்பாடு |
| (21) கல்யாணம் | - | திருமணம் |
| (22) கஷ்டம் | - | துன்பம் |
| (23) கோஷம் | - | ஒலி |
| (24) சகஜம் | - | வழக்கம் |
| (25) சங்கடம் | - | தொல்லை |
| (26) சங்கதி | - | செய்தி |
| (27) சதா | - | எப்பொழுதும் |
| (28) சந்தேகம் | - | ஐயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| (29) சந்தோசம் | - | மகிழ்ச்சி |
| (30) சரீரம் | - | உடல் |
| (31) சாதாரணம் | - | எளிமை |
| (32) சிம்மாசனம் | - | அரியணை |
| (33) சின்னம் | - | அடையாளம் |
| (34) சேவை | - | பணி |
| (35) தசம் | - | பத்து |
| (36) தர்க்கம் | - | வழக்கு |
| (37) தேகம் | - | உடல் |
| (38) நவீனம் | - | புதுமை |
| (39) நாசம் | - | அழிவு |
| (40) நிச்சயம் | - | உறுதி |
| (41) நிதானம் | - | பதறாமை |
| (42) நிதி | - | செல்வம் |
| (43) பகிரங்கம் | - | வெளிப்படை |
| (44) பரவசம் | - | மெய்மறத்தல் |
| (45) பராமரி | - | பேணு |
| (46) பரிகாசம் | - | இகழ்ச்சி |
| (47) பலாத்காரம் | - | வன்முறை |
| (48) பாணம் | - | அம்பு |
| (49) பாதம் | - | அடி |
| (50) பிரசங்கம் | - | சொற்பொழிவு |
| (51) பிரச்சினை | - | சிக்கல் |
| (52) பால்யம் | - | இளமை |
| (53) பிரதிநிதி | - | சார்பாளர் |
| (54) பிரபலம் | - | புகழ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| (55) பிரவேசம் | - | நுழைவு |
| (56) பீடிகை | - | முன்னுரை |
| (57) பூர்த்தி | - | நிறைவு |
| (58) போதனை | - | கற்பித்தல் |
| (59) மகான் | - | பெரியவர் |
| (60) மத்தியஸ்தர் | - | உடன்படுத்துபவர் |
| (61) மனிதாபிமானம் | - | மக்கள் பற்று |
| (62) மானசீகம் | - | கற்பனை |
| (63) யூகம் | - | உய்த்துணர்தல் |
| (64) ரதம் | - | தேர் |
| (65) ராத்திரி | - | இரவு |
| (66) ராஜா | - | மன்னன் |
| (67) ரசம் | - | சுவை |
| (68) லட்சியம் | - | குறிக்கோள் |
| (69) வதம் | - | அழித்தல் |
| (70) வஸ்திரம் | - | ஆடை |
| (71) விசித்திரம் | - | வேடிக்கை |
| (72) விநாடி | - | நொடி |
| (73) விபூதி | - | திருநீறு |
| (74) வேகம் | - | விரைவு |
| (75) ஜாதகம் | - | பிறப்புக்குறிப்பு |
| (76) ஜாலம் | - | வேடிக்கை |
| (77) ஜோடித்தல் | - | அழகு செய்தல் |
| (78) ஸம்ஹாரம் | - | அழிவு |
| (79) ஸமீபம் | - | அண்மை |
| (80) ஸமரசம் | - | வேறுபாடின்மை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 ஒரு பொருள் பன்மொழி

ஒரே கருத்தைத் தரும் பல சொற்கள் ஒரு பொருள் பன்மொழி எனப்படுகிறது. செய்யுள் உரைநடை இலக்கியங்களில் இவை பயன்படுத் தப்படுகின்றன.

(1) அணிதல் - சூடுதல், தரித்தல், புனைதல், பூணுதல், அலங்கரித்தல்
(2) அரசன் - மன்னன், வேந்தன், கோன், கோ
(3) அம்பலம் - சபை, பொதுவில், மன்றம்
(4) அம்பு - கணை, அத்திரம், சரம், பகழி, பாணம், வாளி
(5) ஆகாயம் - அண்டம், விண், உம்பர், வானம், வான், விசும்பு, அந்தரம், வெளி
(6) ஆசிரியன் - உபாத்தியாயன், ஆசான், தேசிகன், குரவன்
(7) ஆசை - இச்சை, ஆவல், ஆர்வம், நசை, விருப்பம், வேட்கை, அவா, வாஞ்சை, மோகம்
(8) ஆடு - மேடம், தகர், கடா
(9) ஆபரணம் - அணி, ஆரம், இழை, கலன், நகை, பணி, பூண், பூடனம்
(10) இரத்தல் - குருதி, செந்நீர், உதிரம்
(11) இரவு - கங்குல், நிசி, இராத்திரி, அல்
(12) இகழ்தல் - இழித்தல், பழித்தல், நிந்தித்தல், எள்ளல்
(13) இன்பம் - மகிழ்ச்சி, களிப்பு, உவமை, உவப்பு, சந்தோசம்
(14) உண்மை - மெய், சத்தியம், வாய்மை
(15) உடம்பு - உடல், தேகம், காயம், சடலம், சதிரம், யாக்கை சரீரம்
(16) உணவு - உண்டி, ஆகாரம், போசனம், ஓதனம்
(17) ஊமை - ஊமன், மூகன், மூகை, மூங்கை
(18) எருது - இடபம், நந்தி, பகடு, விடபம், விடை
(19) ஒலி - ஆர்ப்பு, அரவம், ஓசை, ஓதை, கம்பலை, தொனி
(20) கடைசி - முடிவு, ஈறு, அந்தம்
(21) கரும்பு - கழை, கன்னல்
(22) கல்வி - கலை, கேள்வி, வித்தை
(23) காடு - கானகம், கானம், அடவி, ஆரணியம்
(24) காமன் - அனங்கன், வேள், மாரன், மன்மதன்
(25) காற்று - கால், பவனம், மாருதம், வளி, தென்றல்
(26) குழந்தை - மகவு, சேய், பிள்ளை, குழவி, சிசு, மழலை
(27) குதிரை - அசுவம், அயம், பரி, புரவி, பாய்மா, மா, அரி, கந்துகம்
(28) குற்றம் - ஆசு, இழிவு, கலங்கம், கறை, பழி, பிழை, இழுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(29) கொடுமை - கோரம், வஞ்சகம், கடினம், வக்கிரம்
(30) சந்திரன் - மதி, அம்புலி, இந்து, சசி, திங்கள், சோமன்
(31) சண்டை - சமர், அமர், போர், யுத்தம்
(32) சம்மதி - அனுமதி, இணங்கு, உடன்படு
(33) சினம் - கோபம், சீற்றம்
(34) சிரிப்பு - புன்னகை, நகைப்பு, முறுவல்
(35) சோலை - பொழிதல், தண்டலை, நந்தவனம், கா
(36) சூரியன் - ஞாயிறு, கலவன், கதிரவன், ஆதவன், பரிதி, அருக்கன், வெய்யோன்
(37) தரித்திரம் - மிடி, நல்குரவு, வறுமை
(38) தண்டனை - அபராதம், குற்றம், தண்டம்
(39) தலை - சென்னி, உச்சி, முடி, சிரசு, சிகரம்
(40) தாமரை - கமலம், பங்கயம், அம்புயம்
(41) தேன் - மது, நறவு, தேறல், கள், நறை
(42) நித்திரை - துயில், உறக்கம், துஞ்சல், தூக்கம்
(43) நீர் - தண்ணீர், புனல், சலம், அப்பு
(44) நெருப்பு - தீ, அக்கினி, அழல், கனல், தழல், தேயு
(45) பாம்பு - அரவம், பணி, கட்செவி
(46) பாட்டு - கவி, கவிதை, செய்யுள், பா, பாடல்,கீதம்
(47) பிள்ளை - மகவு,சேய், குழவி, சிசு, குழந்தை
(48) புகழ் - இசை, ஒளி, ஏற்றம், கீர்த்தி
(49) புத்தகம் - நூல், பனுவல், ஏடு
(50) பூ - மலர், தார், பொது, புஷ்பம்
(51) போர் - அமர், யுத்தம், செரு
(52) பெண் - மாது, மங்கை, நங்கை, காரிகை, தையல், பேதை
(53) மனம் - அகம், உள்ளம், சிந்தை, இதயம்
(54) மனைவி - இல்லாள், கிழத்தி, தலைவி, மனையாள், துணைவி
(55) மாலை - ஆரம், கண்ணி,தொடை
(56) மான் - உழை, நவ்வி, ஏணம், கலை, இரலை
(57) மிகுதி - சால, உறு, தவ, நனி, கூர், கழி
(58) மூங்கில் - வேய், ஓங்கல், கழை, கிளை, முடங்கல்
(59) முகில் - மேகம், கார், கொண்டல்
(60) வனம் - காடு, ஆரணியம், கானகம், அடவி
(61) வயல் - புலம், பழனம், செய், பண்ணை, கழனி
(62) வானம் - ஆகாயம், வான், விசும்பு, விண்ணகம், விண்
(63) வாசனை - கந்தகம், நாற்றம், விரை
(64) வில் - சிலை, தநு, சாபம்
(65) வீடு - இல்லம், மனை, அகம், உறையுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 9

### பகுதி - 1

☆ கீழே தரப்படும் சொற்கள் குறிக்கும் ஒரு பொருளினைத் தெரிவு செய்க.

1. உம்பர், களிறு, கரி
(1) யானை (2) தேவர் (3) புலி (4) சிங்கம்

2. அளி, சாளிகை, மதுசாரம், சுரும்பு
(1) கொடு (2) தேன் (3) வண்டு (4) கரும்பு

3. ஆழி, வேலை, சாகரம்
(1) தொழில் (2) சக்கரம் (3) சில்லு (4) கடல்

4. கொடை, அளி, வண்மை
(1) வண்டு (2) ஈகை (3) வீரம் (4) கொடுமை

5. வைகறை, புலர், விடியல்
(1) உதயம் (2) மலர் (3) நிஷி (4) நண்பகல்

6. அரவம், ஒலி, ஓசை
(1) சத்தம் (2) பாம்பு (3) நாகம் (4) அடவி

7. ஆபரணம், அணி, பணி
(1) மரியாதை (2) அணிதல் (3) நகை (4) அடவி

8. ஞாலம், தரை, தாரணி
(1) ஞானம் (2) விண் (3) அண்டம் (4) பூமி

9. அரி, மிருகேந்திரன், கேசரி
(1) இறைவன் (2) சிங்கம் (3) யானை (4) விஷ்ணு

10. பருவதம், கிரி, குன்று
(1) மலை (2) கீரி (3) காற்று (4) உச்சி

11. மறை, சுருதி, ஆரணம்
(1) இசை (2) இராகம் (3) வேதம் (4) மாலை

12. இடர், இடும்பன், இடுக்கன்
(1) நான் (2) துன்பம் (3) சூரியன் (4) சுடர்

13. அடிசில், அமுது, அன்னம்
(1) பறவை (2) தேன் (3) நறவு (4) சோறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. எழில், அணி, கவின், வடிவு
(1) ஆபரணம் (2) அழகு (3) கவி (4) அணிதல்

15. அறிவு, ஆற்றல், உரம், போதம்
(1) திறமை (2) திறன் (3) ஞானம் (4) சக்தி

16. தகை, தகைமை, பீடு
(1) பெருமை (2) தகுதி (3) இழிவு (4) இகழ்

17. உழை, நவ்வி, ஏணம்
(1) புலி (2) முயற்சி (3) கரடி (4) மான்

18. தானை, சேனை, தண்டம்
(1) வயல் (2) படை (3) சோறு (4) தோட்டம்

19. சதிரம், யாக்கை, சரீரம்
(1) தலை (2) இராக்கை (3) உடம்பு (4) கால்

20. மாசு, வசை, வடு, இழுக்கு
(1) குற்றம் (2) தூசி (3) பிஞ்சு (4) துன்பம்

## வினாத்தாள் - 9
### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 1 | (2) - 3 | (3) - 4 | (4) - 2 | (5) - 1 |
| (6) - 1 | (7) - 2 | (8) - 4 | (9) - 2 | (10) - 1 |
| (11) - 3 | (12) - 2 | (13) - 4 | (14) - 2 | (15) - 3 |
| (16) - 1 | (17) - 4 | (18) - 2 | (19) - 3 | (20) - 1 |

☆ மேலும் சில பல சொற்கள் குறிக்கும் ஒரு பொருளினை பட்டியல்ப் படுத்துக.

(1) ..........................................................................................
(2) ..........................................................................................
(3) ..........................................................................................
(4) ..........................................................................................
(5) ..........................................................................................
(6) ..........................................................................................
(7) ..........................................................................................
(8) ..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 பல பொருள் ஒரு மொழி

ஒரு சொல்லின் பொருளை வேறு சொற்கள் தருவது போல பல பொருளைக் குறிக்க ஒரு சொல் பயன்படுவதும் உண்டு. இதனையே பல பொருள் ஒரு மொழி என்கினறோம். அச்சொல் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தை நோக்கி அதன் பொருளை அறிய வேண்டியது அவசியமாகும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | அகம் | - | வீடு, மனம் |
| (2) | அணி | - | அழகு, ஆபரணம், நிரை |
| (3) | அரவம் | - | பாம்பு, ஒலி, சத்தம் |
| (4) | அரி | - | வண்டு, சிங்கம், விஷ்ணு |
| (5) | அன்னம் | - | சாதம், ஒரு பறவை, சோறு |
| (6) | அம்பு | - | கணை, மூங்கில், நீர், மேகம் |
| (7) | அரை | - | பாதி, இடுப்பு, அரைதல் |
| (8) | அளி | - | கொடு, வண்டு, மது, அன்பு |
| (9) | ஆதி | - | தொடக்கம், முதல் |
| (10) | ஆடி | - | கண்ணாடி, மாதங்களுள் ஒன்று |
| (11) | ஆலம் | - | நஞ்சு, மழைநீர், ஆலமரம், அம்புக்கூடு |
| (12) | ஆழி | - | கடல், சக்கரம், வட்டம் |
| (13) | ஆறு | - | நதி, ஓரெண், வழி |
| (14) | இறை | - | தெய்வம், இறைத்தல், வரி |
| (15) | இசை | - | சங்கீதம், புகழ், பாட்டிசை |
| (16) | இதழ் | - | உதடு, பூவிதல்,கண்ணிமை, புத்தகத்தின் தாள் |
| (17) | ஈரம் | - | குளிர்ச்சி, அன்பு, கிருபை, பண்பு, அறிவு |
| (18) | ஈழம் | - | கள், இலங்கை, பொன் |
| (19) | உடு | - | ஏவல், விண்மீன், அகழி |
| (20) | உரம் | - | எரு, மார்பு, வலிமை |
| (21) | உரு | - | உடல், வடிவம், கோபம், நிறம் |
| (22) | எல் | - | பகல், இரவு, நாள் |
| (23) | ஐயம் | - | பிச்சை, சந்தேகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(24) ஒளி - வெளிச்சம், மறைத்து வை

(25) ஓடு - ஓடுதல், ஆமை, நண்டு, கூரைஓடு, புளியம் பழத்தின் ஓடு

(26) கடி - வாசனை, காவல், கடித்தல்

(27) கடை - முடிவு, அங்காடி, வாயில்

(28) கண்டம் - கழுத்து, ஆபத்து, நிலப்பெரும் பிரிவு

(29) கயம் - குளம், யானை

(30) கரி - கருமை, சாட்சி, யானை, மிளகு

(31) கலம் - ஆபரணம், மரக்கலம், பாத்திரம்

(32) கலி - துன்பம், கடல், ஒலி

(33) கவி - பாட்டு, புலவன், குரங்கு

(34) களி - களிப்பு, கள்வெறி, களிமண்

(35) காயம் - தழும்பு, உடல், பெருங்காயம்

(36) கிரகம் - வீடு, கோள்

(37) கூனல் - சங்கு, நத்தை, வளைதல், முதுகு வளைவு

(38) கோதை - பெண், பூமாலை, குழல்

(39) சரம் - அம்பு, மாலை, அசைவு

(40) சினை - உறுப்பு, பூவரும்பு, கருப்பம், முட்டை, மரக்கொம்பு

(41) சுருதி - வேதம், சுதி, ஒலி, இசை, மந்திரம், காது

(42) சேய் - பிள்ளை, முருகன், சிவப்பு, இளமை

(43) தாலம் - பனை, நா, பூமி

(44) நகை - ஆபரணம், சிரிப்பு, இகழ்ச்சி

(45) பதி - அரசன், இடம், கணவன், இறைவன், வீடு

(46) படி - படித்தல், ஏறும்படி, வாசற்படி, வேதனம் , கூலி, சம்பளம்

(47) மறை - வேதம், இரகசியம், அடையாளம்

(48) மெய் - யாக்கை, உடம்பு, உண்மை

(49) வங்கம் - ஒரு கப்பல், தேசம், ஈயம், வெள்ளி

(50) வடு - பிஞ்சு, தழும்பு, காயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 10

### பகுதி - 1

☆ **கீழ்வரும் பொருட்கள் குறிக்கும் ஒரு சொல்லினைத் தெரிவு செய்க.**

1. உணவு, சத்தமிடு
(1) ஊண் (2) இரை (3) ஊன் (4) இறை

2. பூமி, கற்பாறை, பார்த்தல்
(1) ஞாலம் (2) உலகம் (3) பார் (4) தரை

3. மாதம், சந்திரன், ஒரு நாள்
(1) செவ்வாய் (2) புதன் (3) வெள்ளி (4) திங்கள்

4. மிருகம், கை விலங்கு
(1) அணி (2) விலங்கு (3) வேலை (4) நகை

5. உறவு, கட்டு, கயிறு
(1) பந்தம் (2) நாண் (3) நட்பு (4) கேண்மை

6. அளவு, சத்தியம், சாட்சி
(1) உண்மை (2) ஆதாரம் (3) பாரம் (4) பிரமாணம்

7. பொறுமை, மலை, அடக்கம்
(1) பொறை (2) குன்று (3) மரியாதை (4) இமயம்

8. சூரியன், கிரணம், பயிர்க்கதிர்
(1) ஆதவன் (2) கிரகணம் (3) கரி (4) கதிர்

9. அழகு, மேகம், வலிமை, ஆபரணம்
(1) எழில் (2) மஞ்சு (3) வீரம் (4) அணி

10. சங்கு, புற்று, வளைதல்
(1) அரவம் (2) புரி (3) வளை (4) பறி

11. கருமை, சாட்சி, யானை
(1) கறி (2) கரி (3) நிலம் (4) ஆவணம்

12. நாடகசாலை, சபை, போர்க்களம்
(1) களம் (2) மன்றம் (3) நீர் (4) அரங்கம்

13. வெற்றி, வெற்றி மாலை, ஒரு மரம்
(1) சுருதி (2) ஆலம் (3) வாகை (4) மா

14. கருமை, பெருமை, மயக்கம்
(1) மால் (2) சீர் (3) புகழ் (4) தயக்கம்

15. கட்டளை, ஒழுங்கு முறை, ஊர்
(1) வீதி (2) விதி (3) நேர்த்தி (4) வசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கழுத்து, ஆபத்து, நிலப்பிரிவு

(1) விபத்து (2) மாநிலம் (3) மாகாணம் (4) கண்டம்

17. மூல நோய், காரணம், கிழக்கு

(1) மூலம் (2) நிமித்தம் (3) வழி (4) பிணி

18. ஒழுங்கு, பசுக்கூட்டம், வகுப்பு

(1) நிரை (2) நிறை (3) திரள் (4) திறள்

19. அம்பு, அசையும், பொருள், பூ மாலை

(1) பாணம் (2) பானம் (3) சரம் (4) கரம்

20. குளிர்ச்சி, அன்பு, கிருபை

(1) ஈறம் (2) ஈரம் (3) பாசம் (4) அருள்

## வினாத்தாள் – 10
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 2 | (2) - 3 | (3) - 4 | (4) - 2 | (5) - 1 |
| (6) - 4 | (7) - 1 | (8) - 4 | (9) - 2 | (10) - 3 |
| (11) - 2 | (12) - 4 | (13) - 3 | (14) - 1 | (15) - 2 |
| (16) - 4 | (17) - 1 | (18) - 1 | (19) - 3 | (20) - 2 |

☆ **பல பொருள் குறிக்கும் ஒரு சொல்லினை மேலும் பட்டியல்படுத்துக.**

(1) ..........................................................................
(2) ..........................................................................
(3) ..........................................................................
(4) ..........................................................................
(5) ..........................................................................
(6) ..........................................................................
(7) ..........................................................................
(8) ..........................................................................
(9) ..........................................................................
(10) ..........................................................................
(11) ..........................................................................
(12) ..........................................................................
(13) ..........................................................................
(14) ..........................................................................
(15) ..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 மரபுத்தொடர்கள்

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து அவற்றிற்குரிய நேர்பொருளை உணர்த்தாது. குறிப்பான பொருளை உணர்த்தி வருவதே மரபுத்தொடராகும். இம்மரபுத்தொடர்களில் சில வருமாறு.

**1. அடிபற்றிய மரபுத்தொடர்கள்**

அடிநகர்தல் - இடம்பெயர்தல்
அடிபிடித்தல் - குறிப்பின் வழிசெல்லல்
அடிபடுத்தல் - வெற்றிக்கொள்ளல்
அடி விளக்குதல் - தன்மரபை புகழ் பெறச்செய்தல்
அடிபிறக்கிடல் - தோற்றோடல்

**2. கண்பற்றிய மரபுத்தொடர்கள்**

கண்கலத்தல் - ஒருவரை ஒருவர் விரும்புதல்
கண்டுகளித்தல் - அனுபவித்தல்
கண்விடல் - துவாரம் உண்டாதல்
கண்ணுதல் - அருமையாதல்
கண்ணுறுதல் - அன்பு பிறக்குதல்
கண் மூடித்தனம் - கவனமின்மை

**3. கழுத்துப்பற்றிய மரபுத்தொடர்கள்**

கழுத்தைக்கட்டுதல் - வலிந்து கொடுத்தல்
கழுத்துக்கொடுத்தல் - பிறருக்கு உதவுதல்
கழுத்தை முறித்தல் - வருந்துதல்
கழுத்தறுத்தல் - தீமை செய்தல்

**4. காது பற்றிய மரபுத்தொடர்கள்**

காதிலடிபடுதல் - செய்தி பரவுதல்
காதைக்கடித்தல் - மறை பொருள் சொல்லல்
காது குத்துதல் - ஏமாற்றுதல்

**5. கால் பற்றிய மரபுத்தொடர்கள்**

கால் கிளர்தல் - ஓடுதல்
கால் பின்னுதல் - தடைப்படுதல்
கால் சாய்தல் - கெடுத்தல்
காலைச் சுற்றுதல் - தொடர்ந்து பற்றுதல்
காலில் விழுதல் - மன்னிப்புக் கேட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **கை பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| கை காட்டுதல் | - | திறமையை வெளிப்படுத்தல் |
| கைகொடுத்தல் | - | துன்பத்தில் உதவுதல் |
| கையைக்கடித்தல் | - | பொருள் நஷ்டம் |
| கை தலை வைத்தல் | - | பெருநட்டம் அடைதல் |
| கையறுத்தல் | - | வருந்துதல் |
| கைப்பாடுபடுதல் | - | அரும்பாடு படுதல் |
| கைகட்டல் | - | முயற்சி செய்யாது தடுத்தல் |
| கையோடுகையாய் | - | காரியத்தோடு |
| கையடித்தல் | - | உறுதி தருதல் |
| கைமிகுதல் | - | அளவு கடத்தல் |

7. **செவி பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| செவி சாய்த்தல் | - | இணங்கிக் கேட்டல் |
| செவியறிவுறுத்தல் | - | நல்லறிவு கூறுதல் |
| செவிபடுதல் | - | கேட்கப்படுதல் |

8. **தலை பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| தலைகீழாய் நடத்தல் | - | முறை தவறி நடத்தல் |
| தலைக்கீழாய் நிற்றல் | - | பிடிவாதம் கொள்ளல், செருக்குடன் நடத்தல் |
| தலையால் நடத்தல் | - | முறைதவறி நடத்தல் |
| தலையளி செய்தல் | - | முகம் மலர்ந்து இன் சொல் கூறுதல் |
| தலையை தடவுதல் | - | சிந்தனை செய்தல் |
| தலை மேற்கொள்ளல் | - | பொறுப்பை ஏற்றுக்கொள்ளல் |

9. **நாக்கு பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| நாக்கு அசைதல் | - | வாய்தவறி சொல்லுதல் |
| நாக்கு வளைதல் | - | பழித்தல் |
| நாக்கு புரளுதல் | - | தவறுதல் |
| நாவை அடக்குதல் | - | அமைதியாக பேசமால் இருத்தல் |

10. **பல் பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| பல்லிலித்தல் | - | நேரளி செய்தல் |
| பல்லைக்காட்டுதல் | - | இரந்து கேட்டல் |
| பல்லைக்கடித்தல் | - | துன்பம் தரும் ஒன்றை சகித்துக்கொள்ளல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. முகம் பற்றிய மரபுத்தொடர்கள்**

முகம் கொள்ளுதல் - விரும்புதல்
முகம் மாறுதல் - உடன்படல்
முகம் புகுதல் - எதிர்சென்று நிற்றல்
முகத்திலடித்தல் - நேரே நிந்தித்தல்

**12. வயிறு பற்றிய மரபுத்தொடர்கள்**

வயிறு கடித்தல் - பசி உண்டாதல்
வயிறு கழுவுதல் - அரும்பாடுபட்டு வாழ்தல்
வயிறு வாய்த்தல் - மகப்பேறு உண்டாதல்

**13. வாய் பற்றிய மரபுத்தொடர்கள்**

வாய் திறத்தல் - பேசத் தொடங்குதல்
வாய் மூத்தல் - அடக்கமின்றி பேசுதல்
வாய் பூட்டு போடுதல் - பேசவிடாது தடுத்தல்
வாய் விடுதல் - வெளிப்படையாகக் கேட்டல்

**14. வால் பற்றிய மரபுத்தொடர்கள்**

வாலாட்டுதல் - சேட்டை பண்ணுதல்
வால் முளைத்தல் - உலகம் பிடி படல்
வால் காட்டுதல் - முகமன் கூறி கிளம்பி விடுதல்
வாலை சுருட்டுதல் - பயந்து போதல்

**15. ஏனைய மரபுத்தொடர்கள்**

ஆட்கொள்ளுதல் - அடிமையாகுதல்
குடிமுழுகிப்போதல் - முற்றும் அழிதல்
துறைபோதல் - ஐயந்திரிபறக்கற்றல்
தொழுகள்வன் - ஏமாற்றுக்காரன்
முதலைக்கண்ணீர் - பொய் இரக்கம்
கொள்ளி செருகுதல் - கேடு செய்தல்
புண்படுதல் - மனம் நோக பேசுதல்
அரைமனிதன் - மதிப்பில்லாதவன்
பக்கஞ் செய்தல் - ஒளி விடுதல்
பக்கடுத்தல் - நொறுக்குதல்
தெம்மாடி - ஒன்றுக்கும் உதாவாதவன்
துப்புக்கெட்டவன் - அறிவற்றவன்
குறிகெட்டவன் - நெறியற்றவன்
குள்ளம் பாய்தல் - தந்திரமாய் இருத்தல்
கிள்ளுக்கீரை - மிகவும் எளியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 11

### பகுதி - 1

☆ **வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. பிறரின் துன்பத்தில் உதவி செய்தல் என்னும் கருத்தைத் தரும் மரபுத்தொடர்
   (1) கழுத்தறுத்தல் (2) கண் விடல்
   (3) கழுத்துக் கொடுத்தல் (4) செவிப்படல்

2. ஒருவரை ஒருவர் விரும்புதல் எனும் கருத்தைத் தரும் மரபுத் தொடர்
   (1) கண்ணுதல் (2) கண் கலத்தல்
   (3) அடி விளக்குதல் (4) நாக்கு அசைத்தல்

3. அவன் தன் காரியத்தில் வெற்றிக் கொண்டான். இங்கு வெற்றிக் கொள்ளல் எனும் கருத்தைத் தரும் மரபுத் தொடர்
   (1) அடிப்படுதல் (2) அடி கொடுத்தல்
   (3) கால் சாய்தல் (4) கையறுத்தல்

4. ஊர் முழுவதும் செய்தி பரவியது. இங்கு செய்தி பரவுதல் எனும் கருத்தைத் தரும் மரபுத் தொடர்
   (1) காலைச்சுற்றுதல் (2) கையறுதல்
   (3) கால் சாய்தல் (4) காதிலடிப்படுதல்

5. அவன் தன் திறமையை வெளிப்படுத்தினான். இங்கு திறமையை வெளிப்படுத்துதல் எனும் கருத்தைத் தரும் மரபுத் தொடர்
   (1) கையைக்கட்டுதல் (2) கை காட்டுதல்
   (3) செவிப்படுதல் (4) நாக்கு புரளுதல்

6. முறைதவறி நடத்தல் என்னும் கருத்தைத் தரும் மரபுத் தொடர்
   (1) தலை கீழாய் நடத்தல் (2) தலை கீழாய் நிற்றல்
   (3) வால் காட்டுதல் (4) வாய் மூத்தல்

7. பழித்தல் என்னும் கருத்தைத் தரும் மரபுத் தொடர்
   (1) பல்லிளித்தல் (2) வால் முளைத்தல்
   (3) நாக்கு வளைத்தல் (4) முகமாதல்

8. அவள் மகப்பேறு பெறுநிலையில் உள்ளாள். இங்கு மகப்பேறு என்பது
   (1) வயிறு வாய்த்தல் (2) அடிபிடித்தல்
   (3) கழுத்திற் கட்டுதல் (4) வயிறு கழுவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தான் செய்த தவறினை எண்ணி வருந்தினான். இங்கு வருந்துதல் என்பது
(1) தொழுகள்வன் (2) செவிப்படுதல்
(3) கையறுதல் (4) கால் சாய்தல்

10. அவன் பயங்கர உருவத்தைக் கண்டு ஓடினான். இங்கு ஓடுதல் என்பது
(1) கால் சாய்தல் (2) கால் கிளர்தல்
(3) கால் பின்னுதல் (4) காலைச் சுற்றுதல்

11. பாலன் ஒரு ஏமாற்றுக்காரன். இங்கு ஏமாற்றுக்காரன் என்பது
(1) தொழு கள்வன் (2) திருடன்
(3) தொளு கள்வன் (4) தொலு கள்வன்

12. ஏனையோரைப் பேசாது தடுத்தான். இங்கு பேசாது தடுத்தல் என்பது
(1) நாக்கு வளைத்தல் (2) செவிப்படல்
(3) வாய்ப்பூட்டுப் போடுதல் (4) வாய் திறத்தல்

13. அவன் யார் கூறுவதையும் இணங்கிக் கேட்பான். இங்கு இணங்கிக் கேட்டல் என்பது
(1) செவி படுத்தல் (2) செவி சாய்த்தல்
(3) தலையைத் தடவுதல் (4) வால் கட்டல்

14. அவன் எல்லோரிடமும் சேட்டை பண்ணுவான். இங்கு சேட்டை பண்ணுதல் என்பது
(1) வாய் விடுதல் (2) பல்லிளித்தல்
(3) முகம் புகுதல் (4) வாலாட்டுதல்

15. துன்பம் தரும் ஒன்றை சகித்துக் கொண்டிருந்தல் எனும் கருத்தைத் தரும் மரபுத்தொடர்
(1) கால் சாய்தல் (2) நாக்கு அசைத்தல்
(3) பல்லுக்கடித்தல் (4) முகம் புகுதல்

16. அவன் அனைவருக்கும் நல்லறிவு கூறுவான். இங்கு நல்லறிவு கூறுதல் என்பது
(1) செவியறிவுறுத்தல் (2) அடிப்பிறக்கிடல்
(3) கண்ணுதல் (4) கண் விடல்

17. மகளுக்கு மிகுந்த பசியுண்டானது. இங்கு பசியுண்டாதல் என்பது
(1) வயிறு வாய்த்தல் (2) வயிறு கழுவுதல்
(3) செவிப்படுத்தல் (4) வயிறு கடித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அவன் எல்லோரையும் பார்த்து முகம் மலர்ந்து இன்சொல் கூறுவான். இங்கு முகம் மலர்ந்து இன்சொல் கூறுதல் என்பது
(1) ஒத்துப்பாடுதல் (2) கறுவறுத்தல்
(3) தலையளி செய்தல் (4) தூண்டில் போடுதல்

19. அவன் எடுத்தக் காரியம் தடைப்பட்டது. இங்கு தடைப்படல் என்பது
(1) கால் பின்னுதல் (2) ஆட்கொள்ளுதல்
(3) கையறுத்தல் (4) முகம் கொள்ளுதல்

20. அவர் ஐயந்திரிபறக் கற்றுள்ளார். இங்கு ஐயந்திரிபறக் கற்றல் என்பது
(1) பல்லுக்கடித்தல் (2) நுனிப்புல் மேய்தல்
(3) நாக்கு அசைதல் (4) துறை போதல்

☆ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

21. மகளுக்கு தந்தை மீது கண்ணறுதல் ஏற்பட்டது. இங்கு கண்ணறுதல் என்ற மரபுத் தொடரின் கருத்து
(1) பொறாமை (2) அன்பு குறைதல்
(3) தீமை செய்தல் (4) தோற்றோடல்

22. வால் முளைத்தல் என்ற மரபுத் தொடரின் கருத்து
(1) விரும்புதல் (2) உடன்டல்
(3) உலகம் பிடிபடல் (4) தவறுதல்

23. இறைவன் எல்லோரையும் ஆட்கொண்டார். இங்கு ஆட்கொள்ளுதல் எனும் மரபுத் தொடரின் கருத்து
(1) ஏமாற்றுததல் (2) தடுத்தல்
(3) விரும்புதல் (4) அடிமையாகக் கொள்ளுதல்

24. முகம் கொள்ளுதல் எனும் மரபுத் தொடரின் கருத்து
(1) கெடுதல் (2) உடன்படல்
(3) விரும்புதல் (4) செவிப்படுதல்

25. பல நாட்களுக்கு பிறகு தம்பி வாய் திறந்தான். இங்கு வாய் திறத்தல் எனும் மரபுத் தொடரின் கருத்து
(1) பேசத் தொடங்குதல் (2) பேசாது தடுத்தல்
(3) எதிர் சென்று நிற்றல் (4) இணங்கிக் கேட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. ராஜா வியாபாரத்தால் கைத்தலை வைத்தது. இங்கு கைத்தலை வைத்தல் எனும் மரபுத் தொடரின் கருத்து

(1) நன்மை அடைதல் (2) பெரு இலாபம் அடைதல்
(3) முற்றும் அழிதல் (4) பெரு நட்டம் அடைதல்

27. கண்ணன் எனக்கு காது குத்தப்பார்க்கிறான். இங்கு காதுகுத்தல் எனும் மரபுத் தொடரின் கருத்து

(1) காது குத்துதல் (2) ஏமாற்றுதல்
(3) வருத்துதல் (4) தவறுதல்

28. வால் முளைத்தல் என்ற மரபுத் தொடரின் கருத்து

(1) சேட்டை பண்ணுதல் (2) பொய் இரக்கம்
(3) உலகம் பிடிபடல் (4) தவறுதல்

29. கவிதா அவ்விடத்திலிருந்து அடி நகர்ந்தாள். இங்கு அடி நகர்தல் என்ற மரபுத்தொடரின் கருத்து

(1) தீமை செய்தல் (2) வெற்றிகொள்ளல்
(3) இடம் பெயர்தல் (4) இணங்கிக் கேட்டல்

30. கழுத்தில் கட்டுதல் என்னும் மரபுத் தொடரின் கருத்து

(1) அருமையாதல் (2) வலிந்து கொடுத்தல்
(3) குறிப்பின் வழி செல்லல் (4) செய்தி பரவுதல்

☆ **பின்வரும் மரபுத் தொடர்களுக்கு அதே கருத்தைத் தரும் மற்றுமொரு மரபுத் தொடரினைத் தெரிவு செய்க.**

31. கால் கொள்ளுதல்

(1) அடிப்படை (2) கால்பின்னுதல்
(3) முகமுறிதல் (4) கையிடல்

32. வயிறு கிள்ளுதல்

(1) தலைப்பாரம் (2) வயிறெரிதல்
(3) வயிறு கடித்தல் (4) வயிற்றிலடித்தல்

33. தலைக் கொழுப்பு, தலைப்பாரம், தலைக்கணம்

(1) தலைவீக்கம் (2) தோள்மாற்றுதல்
(3) தலைப்படுதல் (4) கைமிகுதல்

34. நாக்கு தவறுதல், நாக்கு புரளுதல்

(1) நாக்கு விழுதல் (2) நாக்குத் தப்பல்
(3) நாக்கு வளைத்தல் (4) கை கொடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. முகந்தருதல்
(1) நாக்குப்புரளுதல் (2) முகமுறிதல்
(3) முகம் பார்த்தல் (4) கை தருதல்

☆ **பின்வரும் மரபுத்தொடர்களுக்கு எதிரான கருத்தைத் தரும் மற்றுமொரு மரபுத் தொடரினைத் தெரிவு செய்க.**

36. தலை காட்டுதல்
(1) தலை மறைத்தல் (2) தலை கீழாய் நடத்தல்
(3) முகந் தருதல் (4) தலைப்படுதல்

37. வாலைக் கீழே போடுதல்
(1) வயிறு குளிர்தல் (2) தோள் கொடுத்தல்
(3) நாக்கு நீளுதல் (4) கை கொடுத்தல்

38. அடி நகர்தல்
(1) கண்விடல் (2) காலுன்றுதல்
(3) அடிபிடித்தல் (4) வயிறெரிதல்

39. துறை போதல்
(1) நுனிப்புல் மேய்தல் (2) வயிறு கழுவுதல்
(3) கையறுதல் (4) வாய் விடுதல்

40. கழுத்துக் கொடுத்தல்
(1) வெட்டிப் பேசுதல் (2) மண்ணாக்குதல்
(3) நட்டாற்றில் கைவிடுதல் (4) திக்கு முக்காடல்

## வினாத்தாள் – 11
## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| (1) - 3 | (11) - 1 | (21) - 2 | (31) - 4 |
| (2) - 2 | (12) - 3 | (22) - 3 | (32) - 3 |
| (3) - 1 | (13) - 2 | (23) - 4 | (33) - 1 |
| (4) - 4 | (14) - 4 | (24) - 3 | (34) - 2 |
| (5) - 2 | (15) - 3 | (25) - 1 | (35) - 3 |
| (6) - 1 | (16) - 1 | (26) - 4 | (36) - 1 |
| (7) - 3 | (17) - 4 | (27) - 2 | (37) - 3 |
| (8) - 1 | (18) - 3 | (28) - 3 | (38) - 2 |
| (9) - 3 | (19) - 1 | (29) - 3 | (39) - 1 |
| (10) - 2 | (20) - 4 | (30) - 2 | (40) - 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர், அடுக்கிடுக்குத்தொடர், இணைமொழி

**இந்நான்கு தலைப்புகளுக்கும் இடையிலான வேறுபாட்டினை இலகுவில் இனங்காண்பதன் மூலமாக இவை தொடர்பாக வரும் வினாக்களுக்கு இலகுவில் விடையளிக்கலாம்.**

**1. இரட்டைக்கிளவி**

ஓர் அடிச்சொல் இரட்டித்து நின்று பொருள் தருமாயின் அது **இரட்டைக்கிளவி அல்லது இரட்டை மொழி** என அழைக்கப் படும். கிளவி அல்லது மொழி என்பது சொல் என்பதனையே குறித்து வருகின்றது.

இதில் இரண்டு சொல் சேர்ந்து நின்று பொருள் தரும். தனித்து நின்று பொருள் உணர்த்துவது இல்லை.

**படபட** என்பது இதய துடிப்பின் வேகத்தை உணர்த்துகிறது. ஆனால் **பட** என்பதை மட்டும் பிரித்துப் பார்த்தால் அது எவ்வித பொருளையும் உணர்த்துவதில்லை. எனவே இரட்டைக் கிளவி தனித்து நின்று பொருள் உணர்த்தாது.

| | **இரட்டைக்கிளவி** | | **கருத்து** |
|---|---|---|---|
| *1.* | கடகட | - | விரைவு,பொருள் உருளல் |
| *2.* | கணீர்கணீர் | - | மணியோசை |
| *3.* | கடுகடு | - | கோபவெளிப்பாடு |
| *4.* | கணகண | - | உடல் சூடாதல் |
| *5.* | திடுதிடு | - | சத்தத்துடன் வேகம் |
| *6.* | படபட | - | இதயத்தின் வேகத்துடிப்பு |
| *7.* | பளிச்பளிச் | - | ஒளி விட்டுவிட்டு மின்னுதல் |
| *8.* | சலசல | - | நீர் செல்லும் தன்மை |
| *9.* | பளபள | - | மினுங்குதல் |
| *10.* | கமகம | - | மணம் பரவுதல் |
| *11.* | சிடுசிடு | - | எரிச்சல் கலந்த கோபம் |
| *12.* | சடசட | - | மயக்கமான நிலை |
| *13.* | தரதர | - | தரையில் இழுத்துச் செல்லல் |
| *14.* | சரசர | - | உரசி செல்லுதல் |
| *15.* | சளசள | - | ஓயாத இரைச்சல் |
| *16.* | வெலவெல | - | நடுங்கல்,பதறுதல் |
| *17.* | வளவள | - | தெளிவற்ற பேச்சு |
| *18.* | கலகல | - | சிரிப்பொலி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 19. | விறுவிறு | - | வேகம் |
| 20. | தகதக | - | எரிதல்,ஜொலிப்பு |
| 21. | பரபர | - | நிதான இழப்பு |
| 22. | குசுகுசு | - | இரகசியம் பேசுதல் |
| 23. | குபுகுபு | - | நீர் வெளியேறுதல் |
| 24. | கிசுகிசு | - | சிறு சத்தம் |
| 25. | குறுகுறு | - | மனம் உறுத்தல் |

**2. அடுக்குத்தொடர்**

ஒரு சொல் அடுத்தடுத்து வந்து பொருள் தருமாயின் அது **அடுக்குத் தொடர்** அல்லது **அடுக்கு மொழி** எனப்படும். இரட்டைக் கிளவி போல் அல்லாது அடுக்கு மொழிகள் தனித்து நின்றும் பொருள் தரக்கூடியன.

1. கரிய கரிய
2. பெரிய பெரிய
3. வண்ண வண்ண
4. சுடச்சுட
5. ஓடு ஓடு
6. மணிமணி
7. மென்று மென்று
8. நடுங்கி நடுங்கி
9. பழகப்பழக
10. சுற்றிச் சுற்றிச்
11. குனிந்து குனிந்து
12. தடவித்தடவி
13. அடுக்கி அடுக்கி
14. அழுது அழுது
15. பாடிப்பாடி
16. தூக்கி தூக்கி
17. மெல்ல மெல்ல
18. சின்னச் சின்ன
19. துள்ளித்துள்ளி
20. மெய் மெய்

**3. அடுக்கிடுக்குத்தொடர்**

அடுக்குத்தொடர்களுள் சில கூற வந்த பொருளை அழுத்திக் கூறவும் சிறப்பித்துக் கூறவும் முன்மொழி விகாரமடைந்து வரும். இவற்றினை அடுக்கிடுக்குத்தொடர் என அழைப்பர்.

| | அடுக்குத்தொடர் | | அடுக்கிடுக்குத்தொடர் |
|---|---|---|---|
| 1. | கரிய கரிய | - | கன்னங்கரிய |
| 2. | கொதித்து கொதித்து | - | கொதிகொதித்து |
| 3. | சில சில | - | சிற்சில |
| 4. | சிறியசிறிய | - | சின்னஞ்சிறிய |
| 5. | சிவந்தசிவந்த | - | செக்கச்சிவந்த |
| 6. | தனித்தனி | - | தன்னந்தனி |
| 7. | தெளிவு தெளிவு | - | தெட்டத்தெளிவு |
| 8. | நடுநடு | - | நட்ட நடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 9. | நடுங்கி நடுங்கி | - | நடுநடுங்கி |
| 10. | நெடுநெடு | - | நெட்ட நெடு |
| 11. | பகல் பகல் | - | பட்டப்பகல் |
| 12. | பச்சை பச்சை | - | பச்சைப்பசேல் |
| 13. | பல பல | - | பற்பல |
| 14. | பெரிய பெரிய | - | பென்னம்பெரிய |
| 15. | மயங்கி மயங்கி | - | மதிமயங்கி |
| 16. | வெளி வெளி | - | வெட்டவெளி |

## 4. இணைமொழிகள்

ஓசை ஒழுங்கிலான இரு சொற்களை இணைத்து பொருட் செறிவு உடையனவாக வழங்கும் போது அவை **இணைமொழிகள்** எனப்படுகின்றன.

இணைமொழிகளினை மூன்று வகைகளில் அவதானிக்கலாம்.

1. தொடர்புபட்ட இரு சொற்களாக அமைந்தவை.
   **(உ + ம்) கட்டுக்காவல், குப்பைக்கூளம்**
2. மாறுபட்ட பொருள் குறிக்கும் வகையில் அமைந்தவை.
   **(உ + ம்) மேலும்கீழும், கொடுக்கல்வாங்கல்**
3. ஒன்று மட்டும் பொருளுடையதாகவும் மற்ற சொல் ஓசை நயம் கருதியும் வருவன.
   **(உ + ம்) சின்னாபின்னம், கிட்டதட்ட**

**இணைமொழிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அருமை பெருமை | - | முக்கியத்துவம் |
| 2. | அரை குறை | - | முற்றுபெறாமை |
| 3. | அறம் மறம் | - | தர்மமும் இல்லாமையும் |
| 4. | அக்கம் பக்கம் | - | அருகருகே |
| 5. | அங்கும் இங்கும் | - | பல பக்கம் |
| 6. | அல்லும் பகலும் | - | நாள் முழுவதும் |
| 7. | அமளி துமளி | - | பேராரவாரம் |
| 8. | ஆதி அந்தம் | - | தொடக்கமும் முடிவும் |
| 9. | ஆடிப்பாடி | - | மகிழ்ச்சி |
| 10. | இன்பதுன்பம் | - | சுக துக்கம் |
| 11. | இன்னார் இனியார் | - | குறிப்பிட்ட பேர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 12. | இங்குமங்கும் | - | எல்லா பக்கமும் |
| 13. | இசகு பிசகு | - | சிறு தவறு |
| 14. | ஈவிரக்கம் | - | கருணை |
| 15. | உண்டு உடுத்து | - | அநுபவித்து |
| 16. | எலும்பும் தோலும் | - | வறுமை |
| 17. | ஏட்டிப் போட்டி | - | முரண்பாடு |
| 18. | ஒப்பு உயர்வு | - | மேலாண்மை |
| 19. | கணக்கு வழக்கு | - | கணக்குகள் |
| 20. | கட்டித்தழுவி | - | இறுக அணைத்து |
| 21. | கண்டதுண்டம் | - | சின்னாபின்னம் |
| 22. | கண்ணீரும் கம்பலையும் | - | அதிகதுக்கம் |
| 23. | கோபதாபம் | - | கோபம் |
| 24. | கிட்டத்தட்ட | - | ஏறக்குறை |
| 25. | குணங்குறி | - | நல்லவை |
| 26. | குற்றம் குறை | - | குறைகள் |
| 27. | கூடமாட | - | சேர்ந்து |
| 28. | சந்துபொந்து | - | மூலை முடுக்கு |
| 29. | சட்டதிட்டம் | - | ஒழுங்கு |
| 30. | சண்டைசச்சரவு | - | பிரச்சினை |
| 31. | சீரும் சிறப்பு | - | விமரிசை |
| 32. | சூது வாது | - | நல்லது கெட்டது |
| 33. | தட்டு முட்டு | - | பொருட்கள் |
| 34. | தடல்புடல் | - | ஆரவாரம் |
| 35. | தங்குதடை | - | இடையீடு |
| 36. | தப்பித்தவறி | - | தவறாக |
| 37. | துணிமணி | - | உடுபுடவை |
| 38. | தில்லுமுல்லு | - | குழப்பம் |
| 39. | தோட்டம் துரவு | - | எல்லா இடமும் |
| 40. | நரை திரை | - | வயோதிபம் |
| 41. | பட்டம் பதவி | - | படிப்பு வேலை |
| 42. | வாடிவதங்கி | - | காய்ந்து |
| 43. | வீரதீரம் | - | வீரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் - 12

## பகுதி - 1

☆ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

1. தந்தை அல்லும் பகலும் அயராது உழைத்தார். இவ் வாக்கியத்தில் **அல்லும் பகலும்** என்பது
   (1) இரட்டைக் கிளவி (2) அடுக்குத் தொடர்
   (3) இணைமொழி (4) அடுக்கிடுக்குத் தொடர்

2. கோயில் மணி ஓசை கணீர் கணீரென ஒலித்தது. இங்கு **கணீர் கணீர்** என்பது
   (1) இணைமொழி (2) இரட்டைக்கிளவி
   (3) அடுக்குத் தொடர் (4) அடுக்குமொழி

3. மக்கள் கூடிக் கூடி வேலை செய்தாரகள். **கூடிக் கூடி** என்பது
   (1) அடுக்குத் தொடர் (2) இரட்டை மொழி
   (3) இணைமொழி (4) அடுக்கிடுக்குத் தொடர்

4. **சுடச்சுட** என்பது
   (1) இணைமொழி (2) அடுக்கிடுக்குத் தொடர்
   (3) அடுக்குத் தொடர் (4) இரட்டை மொழி

5. பின்வருவனவற்றுள் **அடுக்கிடுக்குத் தொடர்**
   (1) பழகப் பழக (2) வா வா
   (3) பளீர்பளீர் (4) செக்கச் சிவந்த

6. வீண் காரணம் எனும் கருத்தைத் தரும் **இணைமொழி**
   (1) இடைக்கிடை (2) சாக்கு போக்கு
   (3) ஏடா கூடம் (4) அங்கும் இங்கும்

7. குழந்தை தொப்தொப்பென விழுந்தது. **தொப்தொப்** என்பது
   (1) அடுக்கிடுக்குத் தொடர் (2) இரட்டைக் கிளவி
   (3) இணைமொழி (4) அடுக்கு மொழி

8. தன்னந்தனியே நடந்து சென்றான். இங்கு **தன்னந்தனி** என்பது
   (1) அடுக்கிடுக்குத் தொடர் (2) இணைமொழி
   (3) இரட்டைக் கிளவி (4) அடுக்கு மொழி

9. திருடன் கையும் மெய்யுமாக அகப்பட்டான். இவ்வாக்கியத்தில் **கையும் மெய்யும்** என்பது
   (1) அடுக்கு அமொழி (2) இரட்டைக் கிளவி
   (3) இணைமொழி (4) இரட்டை மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஈவிரக்கம் இன்றி அனைவரையும் கொன்றனர். இவ்வாக்கியத்தில் **ஈவிரக்கம்** என்பது
(1) இரட்டைக் கிளவி (2) இணைமொழி
(3) அடுக்கு மொழி (4) அடுக்கிடுக்குத் தொடர்

11. மழை நேரங்களில் வெட்டவெளியில் நிற்பதைத் தவிர்த்துக் கொள்ளவும். **வெட்டவெளி** என்பது
(1) இரட்டைக் கிளவி (2) அடுக்கிடுக்குத் தொடர்
(3) இணைமொழி (4) அடுக்குமொழி

12. பின்வருவனற்றுள் **அடுக்கு மொழி**
(1) விறு விறு (2) பட பட
(3) வா வா (4) பளீர் பளீர்

13. ஓடி ஓடி சென்றால் அவனைப் பிடிக்கலாம். இவ் வாக்கியத்தில் **ஓடி ஓடி** என்பது
(1) அடுக்குமொழி (2) இரட்டை மொழி
(3) அடுக்கிடுக்குத் தொடர் (4) இணைமொழி

14. புகையிரதம் கட கட வென ஓடியது. இங்கு **கட கட** என்பது
(1) அடுக்குத் தொடர் (2) அடுக்குமொழி
(3) இணைமொழி (4) இரட்டைக் கிளவி

15. பாதை குன்றும் குழியுமாக காணப்பட்டது. இங்கு **குன்றும் குழியும்** என்பது
(1) அடுக்குமொழி (2) இரட்டை மொழி
(3) அடுக்கிடுக்குத் தொடர் (4) இணைமொழி

16. பழகப்பழக பாலும் புளிக்கும். இப் பழமொழியில் **பழகப்பழக** என்பது
(1) இரட்டைக் கிளவி (2) அடுக்குத் தொடர்
(3) இரட்டை மொழி (4) இணைமொழி

17. பென்னம் பெரிய மரங்களை கண்டு அதிர்ச்சியுற்றான். **பென்னம் பெரிய** என்பது
(1) அடுக்கிடுக்குத் தொடர் (2) இணை மொழி
(3) அடுக்குத் தொடர் (4) இரட்டைக் கிளவி

18. பிள்ளையை வெடுவெடுவெனப் பேசினாள். இவ்வாக்கியத்தில் **வெடுவெடு** என்பது
(1) அடுக்குத் தொடர் (2) இணை மொழி
(3) அடுக்கிடுக்குத் தொடர் (4) இரட்டைக் கிளவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பாம்பு பாம்பு என்று ஓடினான்.இவ்வாக்கியத்தில் **பாம்பு பாம்பு** என்பது
(1) இரட்டைக் கிளவி (2) அடுக்கு மொழி
(3) இணை மொழி (4) அடுக்கிடுக்குத் தொடர்

20. தகதகவென நெருப்பின் அனல் இருந்தது. இங்கு **தகதக** என்பது
(1) இணை மொழி (2) அடுக்குத் தொடர்
(3) இரட்டைக் கிளவி (4) அடுக்கிடுக்குத் தொடர்

21. தாய் தன் குழந்தையைக் கண்ணும் கருத்துமாய் பார்த்துக் கொண்டாள். இவ்வாக்கியத்தில் **கண்ணும் கருத்துமாய்** என்பது
(1) இணை மொழி (2) இரட்டைக் கிளவி
(3) அடுக்குத் தொடர் (4) அடுக்கிடுக்குத் தொடர்

22. சின்னஞ்சிறிய குருவிகளைக் கண்டு மகிழ்ந்தனர். இவ்வாக்கியத்தில் **சின்னஞ்சிறிய** என்பது
(1) இரட்டைக் கிளவி (2) அடுக்கு மொழி
(3) இணை மொழி (4) அடுக்கிடுக்குத் தொடர்

23. சின்னச் சின்ன கதைகளை வாசிப்பதில் அவனுக்கு பெருவிருப்பு உண்டு. **சின்னச் சின்ன** என்பது
(1) இணை மொழி (2) அடுக்கு மொழி
(3) இரட்டை மொழி (4) இரட்டைக் கிளவி

24. இராமன் காடுமேடெல்லாம் அழைந்தான். இவ்வாக்கியத்தில் **காடு மேடு** என்பது
(1) இணை மொழி (2) இரட்டைக் கிளவி
(3) அடுக்குத் தொடர் (4) அடுக்கு மொழி

25. நீர் சலசல வென ஓடியது. இவ்வாக்கியத்தில் **சல சல** என்பது
(1) அடுக்குத் தொடர் (2) இணை மொழி
(3) அடுக்கிடுக்குத் தொடர் (4) இரட்டைக் கிளவி

## வினாத்தாள் – 12
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 3 | (2) - 2 | (3) - 1 | (4) - 3 | (5) - 4 |
| (6) - 2 | (7) - 2 | (8) - 1 | (9) - 3 | (10) - 2 |
| (11) - 2 | (12) - 3 | (13) - 1 | (14) - 4 | (15) - 4 |
| (16) - 2 | (17) - 1 | (18) - 4 | (19) - 2 | (20) - 3 |
| (21) - 4 | (22) - 4 | (23) - 2 | (24) - 1 | (25) - 4 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 அருஞ்சொற்றொடர்களும் கருத்துக்களும்

1. அண்ட சராசரம் - உலகம் முழுவதும்
2. அமிழ்தினுமினிய தமிழ்மொழி - தமிழின் சிறப்பு
3. அணிவன அணிந்து புனைவன புனைந்து - அனைத்தும் சரியாக
4. ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி -நிலைத்துநிற்கும் தன்மை
5. அருநெறி போற்றாது மருநெறி போற்றி - ஆன்மீகத்தை மறந்து இன்பத்தில் மூழ்குதல்.
6. ஆண்டி முதல் அரசன் வரை - அனைவரும்
7. உணர்வொழி காலம் - வயது முதிர்ந்த காலம்
8. ஊணுரக்கம் இல்லாமல் - கவலை
9. எழுமையும் தொடரும் உழுவலன்பு - ஏழு பிறப்பும் தொடரும் பேரன்பு.
10. ஏழை எளியவர் வாயிலடியாமல் - ஏழை எளியவரை வஞ்சிக்காமல்
11. ஒல்காப் பெரும்புகழ் - அழியாத பெரும்புகழ்
12. ஒல்லும் வகையால் - இயன்ற அளவில்
13. ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் - பற்றற்ற நிலை
14. கண்ணுக்குக் கண்ணாக - பாதுகாப்பு
15. குமரி முதல் இமயம் வரை - எல்லை
16. கருவிலே திருவுடையார் - அறிவு
17. குற்றங்களைந்து குணங்கொண்டு - நற்பண்பை மட்டும் அறிதல்
18. குறுகுறு நடந்து சிறு கை நீட்டி - குழந்தைப்பருவம்
19. கூரிய அறிவும் சீரிய ஒழுக்கமும் - நல்ல அறிவும் ஒழுக்கமும்
20. சாதுரியமாகவும் மாதுரியமாகவும் - சந்தர்ப்பத்திற்கேற்ப செயற்படல்
21. நரை திரை - மூப்பு
22. நுண்மான் நுழைபுலம் - அறிவு
23. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் - வளர்ச்சி
24. சர்வாதிகாரம் - முழு அதிகாரமும் கொண்டிருத்தல்
25. பட்டி தொட்டி எங்கும் - எல்லா இடமும்
26. பாலும் தேனும் போல - இனிமை
27. மந்திரமும் தந்திரமும் மருந்தும் மாயமும் - பொய்கள்
28. மாட மாளிகை கூட கோபுரம் - நகரப்பிரதேசம்
29. வாழையடி வாழையாக - தழைத்தோங்கல்
30. விரிகதிர்ச்செல்வன் - சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 13

### பகுதி - 1

1. ஆசைக்காட்டி மோசம் செய்து எனும் அருஞ்சொற்றொடர் உணர்த்தும் கருத்து
   (1) நன்மை செய்தல் (2) தீமை செய்தல்
   (3) நல்லதைத் தேடுதல் (4) பயனை எதிர்பார்தல்

2. ஆடையின்றி வாடையில் மெலிந்து எனும் அருஞ்சொற்றொடர் உணர்த்தும் கருத்து
   (1) துறவு நிலை (2) ஏக்கம் (3) எதிர்பார்ப்பு (4) வறுமை

3. எல்லா தரத்தினரையும் எடுத்து காட்டும் அருஞ்சொற்றொடர்
   (1) ஆண்டி முதல் அரசன் வரையும்
   (2) குமரி முதல் இமயம் வரையும்
   (3) விரிகதிர்ச் செல்வன்
   (4) நுண்மான் நுழைபுலம்

4. போலித்தன்மையை வெளிக்காட்டுவதாக அமையும் அருஞ்சொற்றொடர்
   (1) ஒல்காப் பெரும் புகழ்
   (2) ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும்
   (3) உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி
   (4) அணிவன அணிந்து புனைவன புனைந்து

5. சுருக்கமாகவும் விரிந்த பொருளையும் தரும் எனும் கருத்தைத் தரும் அருஞ்சொற்றொடர்
   (1) ஒல்லும் வகையால்
   (2) சொற் சுருக்கமும் பொருட் பெருக்கமும்
   (3) கூரிய அறிவும் சீரிய ஒழுக்கமும்
   (4) சாதுரியமாகவும் மாதுரியமாகவும்

6. தனக் கென வாழாப் பிறர்க்குரியாளன் எனும் அருஞ்சொற்றொடர் உணர்த்தும் கருத்து
   (1) பொது நலன் (2) சுயநலன்
   (3) நலன் விரும்பாதவன் (4) உலகம் அறியாதவன்

7. துள்ளித் திரிகின்ற காலம் எனும் அருஞ்சொற்றொடர் உணர்த்தும் கருத்து
   (1) முதுமைப்பருவம் (2) இளமைப்பருவம்
   (3) குழந்தைப் பருவம் (4) வறுமைக்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நெற்றி வியர்வை நிலத்தில் சேர எனும் அருஞ்சொற்றொடர் உணர்த்தும் கருத்து
(1) உழைப்பு (2) உறக்கம் (3) அமைதி (4) விழிப்பு

9. வழிமேல் விழி வைத்து எனும் அருஞ்சொற்றொடரின் கருத்தை உணர்த்தும் மற்றுமொரு அருஞ்சொற்றொடர்
(1) வைத்தக் கண் வாங்காமல் பார்த்து பார்த்து
(2) ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி
(3) அணிவன அணிந்து புனைவன புனைந்து
(4) சாதுரியமாகவும் மாதுரியமாகவும்

10. தெட்டத்தெளிவாக தெரிதல் எனும் கருத்தைத் தரும் அருஞ் சொற்றொடர்
(1) வெள்ளிடை மாலை
(2) உள்ளங் கை நெல்லிக்கனி போல
(3) குடத்துள் விளக்கு போல
(4) உணர்வொழிகாலம்

11. தாயைக் கண்ட சேய் அன்போடு வரவேற்றாள். இதற்கு பொருத்தமான அருஞ்சொற்றொடர்
(1) விரிக்கதிர்ச் செல்வன் (2) அகமும் முகமும் மலர்ந்து
(3) ஆசைக்காட்டி மோசம் செய்தல் (4) கண்ணுக்கு கண்ணாக

12. நிமலன் கற்காவிட்டாலும் பிறரின் நிலை அறிந்து நடந்து கொள்வான். என்பதனை உணர்த்தும் அருஞ்சொற்றொடர்
(1) ஆசைக்காட்டி மோசம் செய்து
(2) அகமும் முகமும் மலர்ந்து
(3) அணிவன அணிந்து புனைவன புனைந்து
(4) அருமை பெருமை அறிந்து

13. எத்தனை சோதனைகள் வந்த போதும் மகிழ்வாக வாழும் தன்மையை உணர்த்தும் அருஞ்சொற்றொடர்
(1) கருவிலே திருவுடையான் (2) இடம், பொருள், ஏவல்
(3) ஆண்டி முதல் அரசன் வரை (4) இகபர இன்பம்

14. தன் குழந்தையின் பெருமையினை மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தாள். இதனை விளக்க பயன்படும் அருஞ்சொற்றொடர
(1) ஈந்துவக்கும் இன்பம் (2) கூடிக்குலாவி
(3) ஒல்காப் பெரும் புகழ் (4) பாலும் தேனும் போல

15. 'கூடிக்குலாவி' எனும் அருஞ்சொற்றொடரின் கருத்தைத் தருவது
(1) மன்னன் எதிர் வேந்தனுடன் போர் செய்தான்.
(2) நாய் பூனையை துரத்தியது.
(3) பெற்றோர்கள் தன் குழந்தைகளுடன் மகிழ்ந்தார்கள்.
(4) கீரியும் பாம்பும் சண்டையிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஆசிரியரின் வழி ரமணண் நடந்தான். என்பதனை உணர்த்தும் அருஞ்சொற்றொடர்
(1) நுண்மாண் நுழைபுலம் (2) நடையுடை பாவனை
(3) ஈந்துவக்கும் இன்பம் (4) விரிக்கதிர்ச்செல்வன்

17. நுண்மாண் நுழைபுலம் என்னும் அருஞ்சொற்றொடர் தரும் கருத்து
(1) அறிவு (2) வரட்சி (3) புலம் பெயர்வு (4) ஆபத்து

18. வளர்ச்சி நிலையினை உணர்த்தி நிற்கும் அருஞ்சொற்றொடர்
(1) ஒல்காப் பெரும் புகழ்
(2) கூறிய அறிவும் சீரிய ஒழுக்கமும்
(3) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்
(4) எழுமையும் தொடரும் உழுவலன்பு

19. ஒரு குடும்பத்தின் பரம்பரை வளர்ச்சி நிலையினை எடுத்துக் காட்ட உதவும் அருஞ்சொற்றொடர்
(1) ஒல்லும் வகையால் (2) வாழையடி வாழை
(3) உணர் வொழி காலம் (4) குறு குறு நடந்து சிறுகை நீட்டி

20. ஒருவர் பேசத் துணியும் போது ......... அறிந்து பேசுதல் வேண்டும். இங்கு இடைவெளிக்கு வரவேண்டிய அருஞ்சொற்றொடர்
(1) உணர் வொழி காலம்
(2) ஒல்காப் பெரும் புகழ்
(3) கூறிய அறிவும் சீரிய ஒழுக்கமும்
(4) இடம்,பொருள்,ஏவல்

## வினாத்தாள் – 13
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 3 | (2) - 4 | (3) - 3 | (4) - 3 | (5) - 3 |
| (6) - 1 | (7) - 1 | (8) - 2 | (9) - 1 | (10) - 1 |
| (11) - 2 | (12) - 4 | (13) - 4 | (14) - 1 | (15) - 3 |
| (16) - 2 | (17) - 1 | (18) - 3 | (19) - 2 | (20) - 4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 உவமைத்தொடர்

**அணிகளிலே தலையாயதாக விளங்குவது உவமையாகும். எடுத்துக் கொண்ட பொருளை நன்கு தெளிவாக விளக்குவதற்கு உவமைகள் சிறப்பாக அமைகின்றன.**

1. அச்சாணியற்ற தேர் போல - உயிர் நாடியற்றது
2. அடியற்ற மரம் போல - மூல பலமற்றது
3. அத்தி பூத்தாற் போல - மிக அரியது
4. ஆலையில் அகப்பட்ட கரும்பு போல - மீளாத்துன்பம்
5. ஆற்றில் கரைத்த புளி போல - வீண் விரையம்
6. ஆழ்கடல் முத்த போல - கவர்ச்சி
7. ஆண்டிகள் கூடி மடங்கட்டியது போல - நடைபெறாத செயல்
8. இடியோசை கேட்ட நாகம் போல - பயம்
9. இலை மறை காய் போல - மறைந்திருத்தல்
10. உள்ளங்கை நெல்லிக்கனி போல - தெட்டத்தெளிவு
11. ஊசியும் நூலும் போல - பிரிக்க முடியாதது
12. ஒளியைக் கண்ட இருள் போல - உடனே மறைதல்
13. கடன்பட்டோர் நெஞ்சம் போல - மனக்கலக்கம்
14. கல் மேல் எழுத்து போல - அழியாமை
15. கீரியும் பாம்பும் போல - பகை
16. சூரியனைக் கண்ட தாமரை போல - மலர்ச்சி
17. நகமும் சதையும் போல - ஒற்றுமை
18. வெள்ளிடை மலை போல - தெட்டத்தெளிவு
19. கொழுகொம்பற்ற கொடி போல - துணையின்மை
20. அக்கினியிற் பட்ட மெழுகு போல - தவிப்பு
21. சித்திரப் பதுமை போல - அழகு
22. அம்பட்டன் குப்பையை கிளறினால் ஆவது போல - ஒன்றும் இல்லாதத் தன்மை
23. ஏவற்பேய் கூரையைப் பிடுங்கியது போல - அழித்தல்
24. ஏறாமடைக்கு நீர்ப்பாய்ச்சினாற் போல - பயனற்றது
25. நடுவூரில் நச்சு மரம் பழுத்தாற் போல - எவருக்கும் உதவாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 14

### பகுதி - 1

☆ **பின்வரும் உவமைத்தொடர்களுக்கு பொருத்தமான விடைகள் கீழே அட்டவணையில் உள்ளது. அவற்றிற்கு பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல
   (1) 3 (2) 4 (3) 6 (4) 2
2. உட்சுவரிருக்க புறச்சுவர் கோலஞ் செய்வது போல
   (1) 9 (2) 7 (3) 5 (4) 4
3. உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைதல் போல
   (1) 10 (2) 5 (3) 6 (4) 4
4. மீகாமன் இல்லாத மரக்கலம் போல
   (1) 3 (2) 1 (3) 5 (4) 4
5. மொட்டைத் தலைச்சியை கூந்தலழகி என்றாற் போல
   (1) 2 (2) 4 (3) 5 (4) 8
6. வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தாற் போல்
   (1) 3 (2) 5 (3) 7 (4) 9
7. வலையில் சிக்கிய மான்போல
   (1) 3 (2) 2 (3) 1 (4) 10
8. பகலவனைக் கண்ட பணி போல
   (1) 9 (2) 4 (3) 7 (4) 8
9. புலித்தோல் போர்த்த பசு போல
   (1) 5 (2) 10 (3) 4 (4) 8
10. பூவும் மணமும் போல
    (1) 6 (2) 9 (3) 7 (4) 4

| | |
|---|---|
| 1. | தந்தையை இழந்த குடும்பம் மிகுந்த கஷ்டப்பட்டது. |
| 2. | தீமை செய்யும் ஒருவனுடன் சேர்ந்து ஒரு காரியத்தில் இறங்குதல். |
| 3. | மகன் தன் தந்தையை அடித்தான். |
| 4. | கமலன் வெளிவேசம் போட்டு இருந்தான். |
| 5. | கையில் பொருளை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் தேடுதல். |
| 6. | ராணியும் கமலியும் சேர்ந்து இருந்தார்கள். |
| 7. | ராஜாவை கண்ட கண்ணன் மறைந்தான். |
| 8. | அழகு குறைந்த கமலினியை அழகானவள் என ராதா கூறினாள். |
| 9. | வெளித் தோற்றத்திற்கு மட்டும் அழகாய் இருத்தல். |
| 10. | கமலன் பல்வேறு கஷ்டங்களால் துன்பப்பட்டான். |

### வினாத்தாள் - 14
#### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 4 | (2) - 1 | (3) - 2 | (4) - 2 | (5) - 4 |
| (6) - 1 | (7) - 4 | (8) - 3 | (9) - 3 | (10) - 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 பழமொழிகள்

**சமுதாயத்தின் பொது சொத்தாக விளங்கும் பழமொழிகள், தான் எடுத்துக்கொண்ட விடயத்தைக் சுருக்கமாகவும் அழகாக கூறவும் பயன் படுகின்றன. கீழே சில பழமொழிகளும் கருத்துக்களும் தரப்படுகின்றன.**

1. அச்சாணியில்லாத் தேர் முச்சாணும் ஓடாது. - முக்கியத்துவத்தின் உயர்வு
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. - ஒற்றுமையே பலம்
3. அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா? - எதனையும் சிறுவயதில் மனதில் பதியச் செய்தல் வேண்டும்.
4. அடக்கம் உடையவர் அறிஞர் ; அடங்காதவர் கல்லார். - அடக்கத்தின் பெருமை
5. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது. - சென்ற காலம் திரும்பாது.
6. ஆக்கப்பொறுத்தவன் ஆறப்பொறுக்க வேண்டும். - பொறுமையின் அவசியம்.
7. ஆடத்தெரியாதவனுக்கு மேடை கோணல். - விடயம் புரியாமல் சாக்கு சொல்லுதல்
8. இக்கரைக்கு அக்கரை பச்சை. - திருப்தியற்ற மன நிலை
9. இரக்கப் போனாலும் சிறக்கப்போ. - வறுமையிலும் செம்மை வேண்டும்
10. ஆழமறியாது காலை விடாதே. - ஆராய்ந்து செய்
11. இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை. - தருமம் செய்
12. ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதளம் மட்டும் பாயும். - பண வலிமை
13. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம். - ஒற்றுமையின்மை
14. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு - வீண் பெருமை
15. எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன்? - தப்பபிப்பிராயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஏழை சிந்திய கண்ணீர் கூரிய வாளை ஒக்கும். - ஏழ்மையின் வலிமை

17. ஐயர் வரும் மட்டும் அமாவாசை காத்திருக்குமா? - காலம் நில்லாது

18. கனிந்த பழம் தானே விழும். - முதிர்வு

19. கற்கையில் கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு. - கல்வியின் சிறப்பு

20. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா? - தகுதிக்கு மேல் எண்ணுதல்

21. கடுகு சிறிது காரம் பெரிது. - சிறிதெனினும் சிறப்புண்டு.

22. கந்தையானாலும் கசக்கிக்கட்டு. - வறுமையிற் செம்மை

23. கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன்? - உலகை அறிந்து கொள்

24. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும். - மனசாட்சி உறுத்தும்

25. கெடுவான் கேடு நினைப்பான். - அழிவு அழிவைத் தரும்

26. சாணேற முழஞ் சறுக்கும். - உயர்ச்சி மிஞ்சிய வளர்ச்சி

27. சுகதுக்கம் சுழல் சக்கரம். - இன்ப துன்பங்கள் இணை பிரியா தவை

28. தன்னைப்புகழாத கம்மாளன் இல்லை. - தற்புகழ்ச்சி

29. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால். - பிடிவாதம்

30. துட்டரை கண்டால் தூர விலக. - தீமைக்கு விலகு

31. நெருப்பின்றி புகையில்லை. - காரணமும் காரியமும்

32. பதறாத காரியம் சிதறாது. - அமைதியின் வெற்றி

33. பார்த்தால் பசு பாய்ந்தால் புலி. - வெளிவேடம்

34. வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை. - தூய்மை மாசற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் – 15

### பகுதி - 1

☆ **கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்துக் களைக் தெரிந்து பழமொழிகளுக்கு முன்னால் உள்ள அடைப்புக்குள் பொருத்தமான கருத்துக்களின் இலக்கத்தினை எழுதுக.**

1. அரைக்காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது. (..........)
2. உருட்டும புரட்டும் ஒடுக்கும் சிறப்பை. (..........)
3. எண் இல்லாதவர் கண் இல்லாதவர். (..........)
4. ஏர் உழுகிறவன் இழப்பமானால் எருது மச்சான் முறை கொண்டாடும். (..........)
5. சேற்றில் புதைந்த யானையை காக்கையும் கொத்தும். (..........)
6. தன் குற்றம் இருக்க பிறர் குற்றம் பார்ப்பதா? (..........)
7. தேள் நெருப்பில் விழுந்தால் எடுத்து விட்டவனையே கொத்தும். (..........)
8. யானை படுத்தால் குதிரை மட்டம் (..........)
9. வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை (..........)
10. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர். (..........)
11. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். (..........)
12. அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான். (..........)
13. அடக்கமே பெண்ணுக்கு அழகு. (..........)
14. அடாது செய்பவன் படாது படுவான். (..........)
15. அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமுதமும். (..........)
16. அன்னைக்கு உதவாதவன் யாருக்கு ஆவான். (..........)
17. அன்று எழுதியவன் அழித்து எழுதுவானா? (..........)
18. இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை. (..........)
19. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது? (..........)
20. கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா? (..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ **கருத்துக்கள்**

1. பொய் கூறுவது ஒருவனின் புகழை இல்லாமல் செய்யும்.
2. வீண் பெருமை.
3. தன் குறையை பொருட்படுத்தாமை.
4. நன்மை செய்தவனுக்கு தீமை செய்தல்.
5. தூய்மை.
6. கற்பின் பெருமை.
7. தனது நிலையில் இருந்து தாழ்ந்தால் மதிப்பில்லை.
8. எண் எழுத்தின் சிறப்பு.
9. போலித் தோற்றம்.
10. யதார்த்தமாக எதனையும் சிந்தித்தல்.
11. தருமத்தின் சிறப்பு.
12. விதியை வெல்ல முடியாது.
13. உள்ளத்தில் உள்ளதனை முகம் காட்டிக் கொடுக்கும்.
14. பெண்ணுக்கு அடக்கமே முக்கியம்.
15. துணிவினால் எதனையும் சாதிக்கலாம்.
16. உடனிருப்பவர்களின் குற்றம் தனக்கு தெரியாது.
17. தாயின் மீது அன்பை செலுத்துதல் வேண்டும்.
18. தீமை செய்தவர் துன்புறுவர்.

## வினாத்தாள் – 15
## விடைகள்


| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 6 | (2) - 1 | (3) - 8 | (4) - 7 | (5) - 7 |
| (6) - 3 | (7) - 4 | (8) - 7 | (9) - 5 | (10) - 2 |
| (11) - 13 | (12) - 15 | (13) - 14 | (14) - 18 | (15) - 9 |
| (16) - 17 | (17) - 12 | (18) - 11 | (19) - 10 | (20) - 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 எழுத்துக்களின் வகைகள்

அடிப்படையில் மொழிக்கு முதற்காரணமாகிய ஒலிகளும் அவ்வொலி களுக்கான வரிவடிவங்களும் எழுத்து எனப்படும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| (அ) | உயிரெழுத்துக்கள் | 12 |
| (ஆ) | மெய் யெழுத்துக்கள் | 18 |
| (இ) | உயிர்மெய்யெழுத்துக்கள் | 216 |
| (ஈ) | ஆய்தம் | 01 |
| | மொத்தம் | 247 |

**(அ) உயிரெழுத்துக்கள் இரண்டு வகைப்படும்.**

(i) குறில் எழுத்துக்கள் - குறுகிய ஓசை உடைய எழுத்துக்கள் (அ, இ, உ, எ, ஒ எனும் 5 எழுத்துக்கள்)

(ii) நெடில் எழுத்துக்கள் - நீண்ட ஓசை உடைய எழுத்துக்கள் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனும் 7 எழுத்துக்கள்)

**(ஆ) மெய்யெழுத்துக்கள் மூன்று வகைப்படும்.**

| | | | |
|---|---|---|---|
| (i) | வல்லினம் | - | க், ச், ட், த், ப், ற் |
| (ii) | மெல்லினம் | - | ங், ஞ், ண், ந், ன், ம் |
| (iii) | இடையினம் | - | ய், ர், ல், வ், ள், ழ் |

**குறிப்பு :- உயிர் 12, மெய் 18, சேர்ந்த 30 எழுத்துக்களை முதல் எழுத்துக்கள் என்பர்.**

**(இ) உயிர் மெய்யெழுத்துக்கள் இரு வகைப்படும்.**

| | | |
|---|---|---|
| (i) | உயிர் மெய்க்குறில் | 90 |
| (ii) | உயிர் மெய்நெடில் | 126 |
| | மொத்தம் | 216 |

**2. இனவெழுத்துக்கள்**

(i) உயிர்க்குறிலுக்கு உயிர் நெடில் இனவெழுத்தாகும்.
அ - ஆ ; இ - ஈ ; உ - ஊ; எ - ஏ ;ஐ - இ;ஒ - ஓ ; ஔ - உ

(ii) வல்லினத்துக்கு மெல்லினம் இனவெழுத்தாகும்.
க்- ங்; ச்- ஞ்; ட் - ண் ; த் - ந்; ப் - ம் ; ற் - ன்

**குறிப்பு :- இடையினத்திற்கு இனவெழுத்துக்கள் இல்லை.**

**3. சுட்டெழுத்துக்கள்**

அ, இ, உ ஆகிய எழுத்துக்கள் சொல்லின் முதலில் நின்று ஒன்றைச் சுட்டிக் காட்டுகையில் அவை **சுட்டெழுத்துக்கள்** எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டெழுத்துக்கள் இருவகைப்படும்.

(i) **அகச்சுட்டு :-** சொல்லின் அகத்தே நின்று சுட்டுப்பொருளை உணர்த்துவது.

(உ + ம்) அவன், இவன், உவன்

(ii) **புறச்சுட்டு :-** சொல்லின் புறத்தே நின்று சுட்டுப் பொருளை உணர்த்துவது.

(உ + ம்) அம்மனிதன், இம்மரம், உவ்வீடு

**4. வினாவெழுத்துக்கள்**

சொற்களை வினாவாக மாற்றுவதற்கு பயன்படும் எழுத்துக்கள் வினா வெழுத்துக்களாகும்.

அவை :- **எ, யா, ஆ, ஓ, ஏ என்பனவாகும்.**

**(அ) வினா வெழுத்துக்கள் மூன்று வகைப்படும்.**

(i) மொழிக்கு முதலில் மட்டும் நின்று வினாப்பொருளைத் தரும் **எ, யா** ஆகிய இரு எழுத்துக்கள்.

**(உ + ம்) என்ன? யார்?**

**"ஆ"** எனும் எழுத்து தற்காலத்தில் மொழிக்கு முதலிலும் வருகின்றது. **(உ + ம்) ஆர்? ஆரோ?**

(ii) மொழிக்கு இறுதியில் மட்டும் நின்று வினாப் பொருளைத் தரும் **ஆ ஓ** ஆகிய இரு எழுத்துகள்

**(உ + ம்) அவனா (ன் + ஆ = னா)**

**அவனோ (ன் + ஓ = னோ)**

(iii) மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வந்து வினாப்பொருளைத்தரும் **ஏ** எனும் எழுத்து.

**(உ + ம்) ஏன்** அவ**னே**? (ன் + **ஏ** = னே)

"ஏ" தற்காலத்தில் மொழிக்கு இறுதியில் பயன்பாட்டில் இல்லை.

**5. போலி**

ஒரு சொல்லின் ஒரெழுத்திற்குப் பதிலாக இன்னோர் எழுத்தை பயன்படுத்தினாலும் கூட பொருளில் எவ்வித மாற்றமும் ஏற்படாமல் இருக்குமாயின் அவ்வெழுத்து **போலி** எனப்படும்.

**(அ) போலி மூன்று வகைப்படும்.**

(i) முதற்போலி :- ஔவை - **அவ்**வை

ஐயர் - **அய்**யர்

(ii) இடைப்போலி :- நேயம் - நே**ச**ம்

அரயர் - அ**ரை**யர்

(iii) கடைப்போலி :- முகம் - முக**ன்**

நிலம் - நில**ன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. கிரந்த எழுத்துக்கள்**

வடமொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் எழுத்து வடிவமே **கிரந்தமாகும். (உ + ம்) ஜ, ஸ, ஷ, ஹ, ஶ்ரீ, க்ஷ**

**7. மாத்திரை**

ஓரெழுத்தை உச்சரிக்க எடுக்கும் கால அளவு மாத்திரை எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (அ) மெய்யெழுத்து | :- | அரை | (1/2) |
| (ஆ) உயிர்க்குறில் | :- | ஒன்று | (1) |
| (இ) உயிர்நெடில் | :- | இரண்டு | (2) |
| (ஈ) ஆய்தம் | :- | அரை | (1/2) |
| (உ) உயிர்மெய்க் குறில் | :- | ஒன்று | (1) |
| (ஊ) உயிர்மெய் நெடில் | :- | இரண்டு | (2) |

**8. சந்தியக்கரம் அல்லது கூட்டுயிர்**

ஐ, ஔ இரண்டும் சந்தியக்கரம் அல்லது கூட்டயிர் / கூட்டொலி எனவும் அழைக்கப்படுகின்றது, (ஐ - அஇ) (ஔ - அஉ) என இரு உயிர்களின் கூட்டாக ஒலிப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. தற்காலத்தில் அய், அவ் என ஒலிக்கிறது.

**(உ + ம்) ஔவை - அவ்வை**

**ஐயர் - அய்யர்**

| இல | எழுத்து | மாத்திரை |
|---|---|---|
| 01 | இ | |
| 02 | ஊ | |
| 03 | க | |
| 04 | கே | |
| 05 | தோ | |
| 06 | க் | |
| 07 | ன் | |
| 08 | ஃ | |
| 09 | பு | |
| 10 | சீ | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 சார்பெழுத்துக்கள்

**முதல் எழுத்துக்களை சார்ந்து நின்று இயங்கும் அதே வேளை அவை பிறக்கும இடங்களில் தோன்றி மாத்திரை குறைந்தோ கூடியோ ஒலிக்கும் எழுத்துக்கள் சார்பெழுத்துகளாகும் இது பத்து வகைப்படும்.**

(அ) உயிர்மெய் *
(ஆ) ஆய்தம் *
(இ) உயிரளபெடை
(ஈ) ஒற்றளபெடை
(உ) ஐகாரக்குறுக்கம் *
(ஊ) ஔகாரக்குறுக்கம் *
(எ) மகரக்குறுக்கம்
(ஏ) ஆய்தக்குறுக்கம்
(ஐ) குற்றியலுகரம் *
(ஒ) குற்றியலிகரம்

*** குறி இட்டவை மட்டும் தற்கால வழக்கில் உள்ளது.**

**அ. உயிர்மெய் எழுத்து***

உயிர் எழுத்துக்கள் 12 உம் மெய்யெழுத்துக்கள் 18 உம் இணைந்து கூட்டு ஒலிகளை குறிக்கவும் தனித்தனி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இதனை உயிர்மெய் எழுத்து என அழைக்கின்றோம். உயிர் மெய் குறில் மாத்திரையும் உயிர்மெய் நெடில் 2 மாத்திரை அளவும் பெறுகிறது.

**ஆ. ஆய்தம்***

தனிக் குற்றெழுத்துக்கும் வல்லினத்துக்கும் இடையே ஆய்தம் வரும். அஃது, இஃது, எஃது தற்காலத்தில் கூடுதலாக பயன்பாட்டில் ஆய்தம் இல்லை. ஆய்தத்திற்குரிய மாத்திரை 1/2 இது முழுமையாக மாத்திரை எடுத்து ஒலிப்பதால் **முற்றாய்தம்** எனவும் வழங்கப் படுகின்றது.

**இ. உயிரளபெடை**

ஓர் எழுத்து தனக்குரிய மாத்திரையில் இருந்து நீண்டு ஒலிப்பது **அளபெடை**யாகும். செய்யுளில் ஓசை குறையும் இடத்து நெட்டுயிர்கள் சொல்லின் முதல், இடை, கடை நிலைகளில் தமக்குரிய மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பது உயிரளபெடையாகும். நெட்டுயிர்கள் நீண்டு ஒலிப்பதற்கு அடையாளமாக அதன் இனவெழுத்து அருகில் இடப்படும். உயிரளபெடைக்குரிய மாத்திரை 3 ஆகும்.

**(உ+ம்) ஓஒதல் நன்று, தெய்வம் தொழாஅள, படாஅள்**

**அழைத்தல், பொருள் விற்றல், இராக ஆலாபனையின் போது உயிரளபெடை உண்டாகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குறைகின்ற சந்தர்ப்பத்தில் மெல்லின எழுத்துக்கள் ஆறும் ர்,ழ தவிர்ந்த நான்கு இடையின எழுத்துக்களும் ஆய்தமும் தமக்குரிய அரை மாத்திரையில் இருந்து நீண்டு ஒலிப்பதனை **ஒற்றளபெடை** என்பர். ஒரு மெய்நீண்டு ஒலிப்பதனைக் காட்டுவதற்கு அதே மெய் அதன் பக்கத்தில் இடப்படும். ஒற்றளபெடைக்கு மாத்திரை ஒன்றாகும்.

(உ + ம்) இலங்ங்கு, எஃஃகு

உ. ஐகாரக்குறுக்கம்*

ஓர் எழுத்து தனது மாத்திரையில் இருந்து குறுகி ஒலிப்பது **குறுக்கமாகும்.** ஐகாரம் தனது மாத்திரையில் இருந்து குறுகி ஒலிப்பது **ஐகாரக் குறுக்கம்** எனப்படும். ஐகாரம் "ஐ" என்று தன்னைச் சுட்டும் போது தவிர ஏனைய இடங்களில் (முதல், இடை, கடை) ஒலிக்கும் போது ஒரு மாத்திரை அளவு குறுகியே ஒலிக்கின்றது.

(உ + ம்) ஐந்து, கைது, யானை

ஊ. ஔகாரக் குறுக்கம்*

ஔகாரம் தனது மாத்திரையிலிருந்து குறுகி ஒலிப்பது **ஔகாரக் குறுக்கம்** எனப்படும். ஔகாரம் "ஔ" என தன்னைச் சுட்டும் போது மாத்திரம் இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும், ஏனைய நிலைகளில் ஒரு மாத்திரை அளவு குறுகி ஒலிக்கும்.

(உ + ம்) ஔவை, நௌவி

..sady Public Library
Municipal Council
Batticaloa.

எ. மகரக்குறுக்கம்

இது பழந்தமிழில் பயன்பாட்டில் இருந்தது. மகரமானது னகர, ணகரத்தை அடுத்தும் வகரத்தின் முன்னும் வரும் போது தனது மாத்திரையிலிருந்து குறுகி ஒலிக்கும்.

(உ + ம்) போன்ம், மருண்ம், தரும்வளவன்

தற்காலத்தில் போன்ம் - போலும் எனவும், மருண்ம் - மருளும் என்றும் ஒலிக்கும் அதேவேளை வகரத்தின் முன்வரும் மகரம் தற்காலத்தில் குறுகி ஒலிப்பதில்லை.

Class No:
Acc No

(உ + ம்) மரம் வெட்டினான்.

ஏ. ஆய்தக்குறுக்கம்

லகர,ளகர ஈற்றுச் சொற்களின் முன் தகரம் வரின் லகர,ளகரங்கள் ஆய்தமாகத் திரியும். இவ்வாறு தோன்றும் ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரை அளவு குறுகி ஒலிக்கும். இது பழந்தமிழ் வழக்கு

(உ + ம்) முள் + தீது = முஃடீது, பல் + தொடை = பஃறொடை

தற்காலத்தில் **பல் + துறை** என்பதனை சேர்த்து எழுதும் போது பஃறுறை என்று எழுதுவதில்லை, பல்துறை என்றே எழுதுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. குற்றியலுகரம்*

தனிக்குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்களின் பின்னே சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரம் குற்றியலுகரமாகம். அதாவது இதழ் குவியாது உச்சரிக்கப்படும் உகரமே குற்றியலுகரமாகும். இவ்வாறு குற்றியலுகரச் சொல்லின் இறுதி எழுத்தின் அயல் எழுத்தைக் கொண்டு ஆறு வகையாகப் பிரிப்பர். **இதற்கான மாத்திரை ½ ஆகும்.**

1. **வன்றொடர்க் குற்றியலுகரம்**
   வல்லின மெய்யை அடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரம்.
   (உ + ம்) நாக்கு, பத்து
2. **மென்றொடர்க் குற்றியலுகரம்**
   மெல்லின மெய்யை அடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரம்.
   (உ + ம் ) பஞ்சு, வண்டு
3. **இடைத் தொடர்க் குற்றியலுகரம்**
   இடையின் மெய்யை அடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரம்.
   (உ + ம்) பெய்து, சால்பு
4. **நெடில் தொடர்க் குற்றியலுகரம்**
   நெட்டெழுத்தை அடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரம்.
   (உ + ம்) மாடு,நாடு
5. **ஆய்தத் தொடர்க்குற்றியலுகரம்**
   ஆய்த எழுத்தை அடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரம். (உ + ம்) அஃது,இஃது
6. **உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்**
   இரு குறிலை அடுத்து அல்லது குறில் நெடிலை அடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரம்.
   (உ + ம்) பயறு, விறகு,தராசு

ஒ. குற்றியலிகரம்

பழந்தமிழ் யகரத்துக்கு முன் வரும் குற்றியலுகரம் புணர்ச்சியின் போது இகரமாகத் திரியும். இவ்வாறு திரியும் இகரம் தனது மாத்திரையில் குறுகி ஒலிக்கம். இதுவே **குற்றியலிகாரமாகும்.** இதேப்போல "மியா" என்ற அசைச் சொல்லில் யகரத்துக்கு முன் வரும் இகரமும் குற்றியலிகரமாகவே ஒலிக்கும்.

**இதற்கான மாத்திரை ½ ஆகும்.**

(உ + ம்) நாகு + யாது = நாகியாது

தற்காலத்தில் இது பயன்பாட்டில் இல்லை. எடுத்துக்காட்டாக **"நமக்கு யார்** தருவார்" என்பதனை **நமக்கியார்** தருவார்? என எழுதுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 மாற்றொலியன்கள்

தமிழில் உள்ள வல்லின மெய்களான க, ச, ட, த, ப, ற எனும் ஆறும் ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளைக் கொண்டு காணப்படுகின்றன. இதனை மாற்றொலியன்கள் என அழைக்கின்றோம். அவற்றில் சில உதாரணங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை உச்சரித்து ஒலி வேறுபாட்டை அறிந்து கொள்ளுங்கள்.

க :- (i) கதை, கனவு, களைப்பு

(ii) முகம், தாகம், வாகனம்

(iii) அங்கம், வங்கம், தங்கம்

ச :- (i) சட்டம், சட்டி, சனம்

(ii) இச்சை, பச்சை, அச்சம்

(iii) தஞ்சம், பஞ்சம், வஞ்சனை

ட :- (i) பட்டம், வட்டம், நட்டம்

(ii) தடம், கூடம். வடம்

(iii) கண்டம், மண்டபம், பண்டம்

த :- (i) தப்பு, தடி, நத்தை

(ii) பதவி, மாதவி, சாதனம்

(iii) பந்தயம், வந்தனம், பந்தம்

ப :- (i) பட்டை, பதவி, பத்து

(ii) அம்பு, ஆம்பல், கம்பல்

(iii) சபதம், சுபம், சாபம்

ற :- (i) மறம், கன்று, மன்றம்

(ii) நெற்றி, நேற்று, அற்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 எழுத்துக்களின் பரம்பல்

**சொற்களில் எழுத்துக்கள் முதல், இடை, கடை நிலைகளில் பயின்று வரும் முறையை விளக்குவதே எழுத்தின் பரம்பலாகும்.**

**1. முதல் நிலை எழுத்துக்கள்**

*(1)* *உயிர் எழுத்துக்கள் 12 உம் சொல்லாக்கத்தில் முதலில் வருகின்றன.*

**(உ + ம்)** ❋ **அன்னை, ஆடு, இலை ...... ஔவை**

*(2)* *வல்லின மெய்களில் க, ச, த, ப ஆகிய நான்கு எழுத்துக்களும் 12 உயிர்களுடன் இணைந்த சொல்லுக்கு முதலில் வரும்.*

**(உ + ம்)** ❋ **கவிதை, கானகம், கிளி, கீரை......கௌரவம்**

❋ **சட்டம், சாதகம், சிறிய, சிலை......சௌகியம்**

❋ **தடம், தாரகை, திமிர், தீமை......தௌ**

❋ **பட்டம், பாடம், பிழை, பீடை......பௌர்ணமி**

*(3)* *மெல்லின எழுத்துக்களில் ந,ம ஆகிய இரண்டெழுத்துக்களும் 12 உயிர்களுடன் இணைந்து சொல்லுக்கு முதலில் வரும்.*

**(உ + ம்)** ❋ **நன்றி, நாம், நிலவு........ நௌடதம்**

❋ **மனம், மாலை, மின்னல் .......மௌனம்**

*(4)* *வகரம் அ, ஆ, இ, ஈ, ஏ, ஐ, ஔ ஆகிய உயிர்களுடன் இணைந்த சொல்லின் முதல் நிலையில் வரும்.*

**(உ +ம்)** ❋ **வட்டம், வானம், விலை.... வௌவால்**

*(5)* *யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய உயிர்களுடன் இணைந்து முதல் நிலையில் வரும்.*

**(உ + ம்)** ❋ **யன்னல், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்**

*(6)* *ஞகரம் "ஆ" உடன் மட்டும் இணைந்து தற்காலத்தமிழில் முதல் நிலையில் வருகின்றது.*

**(உ + ம்)** ❋ **ஞானம்**

*(7)* *ட, ற, ர, ல ஆகியன பிறமொழிச் சொற்களை எழுதும் போது முதல் நிலையில் வருகின்றது.*

**(உ + ம்)** ❋ **டீசல், றேடியம், ரசிகன், லந்தர்**

*(8)* *ஜ,ஷ,ஸ,ஹ ஆகிய கிரந்த எழுத்துக்கள் தற்காலத் தமிழில் முதல் நிலையில் வருகின்றன.*

**(உ + ம்)** ❋ **ஜனாதிபதி, ஷஷ்டி, ஸரஸ்வதி, ஹனுமான்**

*(9)* *மெய்யெழுத்துக்கள் சில மொழிக்கு முதலில் வருகின்றன.*

**(உ + ம்)** ❋ **ப்ரியா, த்ரிஷா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. இறுதிநிலை எழுத்துக்கள்**

(1) எ, ஒ, ஔ தவிர்ந்த ஏனைய உயிர்கள் சொல்லாக்கத்தின் போது இறுதி நிலையில் வருகின்றன.

(உ + ம்) அ - நட | ட = ட் + அ |
ஆ - தா | தா = த் + ஆ |

(2) மெய்களில் ண, ம, ன ஆகிய மெல்லினங்களிலும் ய, ர, ல, ள, ழ ஆகிய ஐந்து இடையினங்களும் சொல்லாக்கத்தில் இறுதி நிலையில் வருகின்றன.

**(உ + ம்) மண், மனம், என், பாய், பார், பால், வாள், வாழ்**

(3) வல்லின மெய்கள் தமிழ்ச் சொற்களின் இறுதி நிலையில் வருவதில்லை ஆனால் தற்காலத்தில் பிறமொழியுடன் இணைந்து வருகின்றன.

**(உ + ம்) ஈராக், சுவிச், டேவிட், பாக்காத், கப், கறற்**

(4) கிரந்த எழுத்துக்கள் மொழிக்கு இறுதியில் வருகின்றன.

**(உ + ம்) ஹஜ், அல்லாஹ், ரமேஷ், சுரேஷ்**

**3. இடைநிலை எழுத்துக்கள்**

சொல்லாக்கத்தில் சொல்லின் இடையில் தனித்தோ பிற எழுத்துக்களுடன் இணைந்தோ இடம் பெறக்கூடிய எழுத்துக்கள் **இடைநிலை எழுத்துக்கள்** என அழைக்கப்படும்.

❋ உயிர் எழுத்துக்கள் 12 உம் சொல்லாக்கத்தில் இடையில் வருகின்றன.

**(உ + ம்) அ - பகல் = ப்அக்அல்**
**ஆ - தராசு = (ர் + ஆ)**
**இ - பதிகம் = (த் + இ)**

❋ மெய்யெழுத்துகளில் ங தவிர்ந்த 17 எழுத்துக்கள் சொல்லாக்கத்தில் இரண்டு உயிர்களுக்கு இடையில் வருகின்றன.

**(உ + ம்) க - அகம் (<u>அ</u>க்<u>அ</u>ம்)**
**ச - பாசம் (ப்<u>அ</u>ச் <u>அ</u>ம்)**

- **இடைநிலை மெய்ம்மயக்கம்**

மெய்யெழுத்துகளானது இரட்டித்தோ அல்லது பிறமெய்களுடன் இணைந்தோ வருவது **இடைநிலை மெய்ம்மயக்கம்** என அழைக்கப்படும். இது இரண்டு வகைப்படும்.

(i) உடனிலை மெய்மயக்கம்

(ii) வேற்றுநிலை மெய்மயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) **உடனிலை மெய்ம்மயக்கம்**

*ஒரே மெய் இரட்டித்து வருவது உடனிலை மெய்ம்மயக்கமாகும். ர், ழ் தவிர்ந்த 16 மெய்கள் சொல் இடையில் இரடித்து வரும்.*

**(உ + ம்) க்க் - அக்கம், தாக்கம் (க் + க் + அ)**

**ச்ச் - அச்சம், இச்சை**

**ட்ட் - சாட்டை, நட்டம்**

(ii) **வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

*வெவ்வேறு மெய்கள் சேர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். க, ச, த, ப தவிர்ந்த 14 மெய்யெழுத்துக்கள் சொல் இடையில் குறிப்பிட்ட சில மெய்களுடன் இணைந்து வரும்.*

**(உ + ம்) ட்ப் - தட்பம்**

**ம்ப் - அம்பு**

**ங்க் - தெங்கு**

**ற்க் - கற்கை**

✻ **தற்காலத்தில்**

(i) *க, த, ப வல்லினங்கள் வேற்று நிலையாகவும் ஒலிக்கின்றன.*

**(உ + ம்) க்த் - சக்தி**

**க்ன் - அக்னி**

**த்ம் - ஆத்மா**

**ப்த் - சப்தம்**

(ii) *தமிழில் கலந்த பிறமொழி சொற்களில் இடைநிலை மெய் மயக்கங்கள் காணப்படுகின்றன.*

**(ஸ்ப், ஸ்ம், ஸ்ல், ஸ்த், ஷ்ட், த்ண்)**

**(உ + ம்) ஸ்ப் - ஆஸ்பத்திரி**

**ஸ்ம் - கிறிஸ்மஸ்**

(iii) **மூன்று மெய்கள் மயங்குதல்**

*ய்,ர்,ல் மெய்கள் வரும் போது மூன்று மெய்கள் மயங்குகின்றன.*

**(ய்க்க்,ய்த்த், ய்ச்ச், ய்ப்ப், ய்ந்ந், ய்ங்க், டுக்க், ர்ச்ச், ர்ப்ப், ழ்த்த, ழ்ப்ப், ழ்ங்க், ழ்ந்த்)**

**ய்க்க் - வாய்க்கள்**

**யச்ச் - பாய்ச்சல்**

**ர்க்க - பார்க்கிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 16

### பகுதி - 1

☆ **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை
   (1) 12 (2) 18 (3) 5 (4) 30

2. தமில் நெடுங்கணக்கில் உள்ள மொத்த எழுத்துக்களின் எண்ணிக்கை
   (1) 147 (2) 347 (3) 247 (4) 216

3. பின்வருவனவற்றுள் நெடில் எழுத்து
   (1) க (2) கா (3) கி (4) கு

4. பின்வருவனற்றுள் வல்லின எழுத்துக்களை மட்டும் கொண்ட விடை
   (1) ட்,ண் (2) ந்,ம் (3) த்,ப் (4) ப்,ந்

5. 'ஐ' என்பதன் இன வெழுத்தாக அமைவது
   (1) இ (2) ஈ (3) உ (4) ஒ

6. பின்வருவனவற்றுள் அகச்சுட்டு **அல்லாதது**
   (1) அவன் (2) அவ் வீடு (3) அந்த (4) இந்த

7. வந்தான் என்ற சொல்லில் உள்ள மாத்திரைகளின் எண்ணிக்கை
   (1) 3 (2) 31/2 (3) 21/2 (4) 4

8. மொழிக்கு முதலிலும் இறுதியிலும் நின்ற வினா பொருளை தரும் எழுத்து
   (1) ஆ (2) ஏ (3) ஓ (4) யா

9. பின்வரும் சொற்களுள் இடைப் போலியாக அமைவது
   (1) அரைசு (2) மையல் (3) நேயம் (4) பந்தர்

10. பின்வருவனவற்றுள் சுட்டெழுத்தாக அமைவது
    (1) ஆ (2) எ (3) உ (4) ஏ

11. பினவருவனவற்றுள் கிரந்த எழுத்து
    (1) ஷ (2) ஞ (3) த (4) ங

12. சார் பெழுத்துக்களின் வகைள்
    (1) 5 (2) 7 (3) 10 (4) 13

13. நெட்டுயிர்கள் சொல்லின் முதல், இடை, கடை நிலைகளின் நீண்டு ஒலிப்பது
    (1) ஒற்றளபெடை (2) உயிரளபெடை
    (3) ஐகாரக் குறுக்கம் (4) மகரக் குறுக்கம்

14. எழுத்துக்கள் தனது மாத்திரையில் இருந்து நீண்டு ஒலிப்பது
    (1) அளபெடை (2) குறுக்கம் (3) உயிர் (4) ஆய்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. எங்ங்கே என்பது
(1) ஐகாரக் குறுக்கம் (2) ஒற்றள பெடை
(3) உயிரள பெடை (4) மகரக் குறுக்கம்

16. எழுத்துக்கள் தனது மாத்திரையில் இருந்து குறுகி ஒலிப்பது
(1) அளபெடை (2) ஐகாரக் குறுக்கம்
(3) குறுக்கம் (4) மகரக் குறுக்கம்

17. பட்டு என்பது
(1) மென்றொடர்க் குற்றியலுகரம்
(2) வன்றொடர்க் குற்றியலுகரம்
(3) இடைத்தொடர்க் குற்றியலுகரம்
(4) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

18. பின்வருவனவற்றுள் இடைத்தொடர்க் குற்றியலுகரம்
(1) சால்பு (2) நண்டு (3) பத்து (4) அம்பு

19. பின்வருவனவற்றுள் நெடில்தொடர் குற்றியலுகரம்
(1) படு (2) தட்டு (3) காசு (4) கன்று

20. பின்வருவனவற்றுள்ஆய்தக் குறுக்கம்
(1) அஃது (2) அஃறிணை (3) இஃது (4) எஃது

21. 12 உயிர்களுடனும் இணைந்து சொல்லாக்கத்தில் முதலில் வரும் உயிர் எழுத்து
(1) ங (2) ஞ (3) ந (4) ண

22. பின்வருவனவற்றுள் யகரத்துடன் இணைந்து சொல்லாக்கத்தில் முதலில் வரும் மெல்லின எழுத்து
(1) இ (2) உ (3) எ (4) ஐ

23. ஞகரம் தற்காலத்தில் பின்வரும் உயிர்களுள் மொழிக்கு முதலில் இணைந்து வருவது
(1) உ (2) ஆ (3) எ (4) ஐ

24. பின்வருவனவற்றில் மொழிக்கு இறுதியில் வரும் எழுத்து
(1) எ (2) ஔ (3) ஒ (4) அ

25. பின்வருவனவற்றில் சொல்லாக்கத்தில் இறுதிநிலையில் வராத எழுத்து
(1) ண் (2) ங் (3) ள் (4) ய்

26. பின்வருவனவற்றில் உடனிலை மெய்மயக்கம்
(1) பண்டம் (2) பட்டு (3) சால்வை (4) இஞ்சி

27. வேற்று நிலையாக அமையும் மெய்எழுத்து
(1) க் (2) ர் (3) ச் (4) த்

28. உடனிலையாகவும் வேற்று நிலையாகவும் அமையும் மெய்யெழுத்து
(1) க் (2) ர் (3) ழ் (4) ய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. பின்வருவனவற்றுள் வேற்று நிலை மெய்மயக்கம்
(1) தக்கை (2) கட்டம் (3) சோர்வு (4) பக்கம்

30. கண்ணி எனும் சொல்லில் உள்ள இறுதி எழுத்து
(1) ணி (2) இ (3) ஈ (4) ண்

31. தற்காலத்தில் மொழிக்கு முதலில் வருகின்ற வினாவெழுத்து
(1) ஏ,யா,ஓ (2) ஆ,ஓ,யா (3) எ,யா,ஆ (4) யா,ஆ,ஏ

32. பின்வருவனவற்றுள் கூட்டுயிர்
(1) ஐ, ஔ (2) ஓ, இ (3) ஔ, இ (4) ஐ, இ

33. ஓர் எழுத்து தனக்குரிய மாத்திரையில் இருந்து குறுகி ஒலிப்பது
(1) ஐகாரக்குறுக்கம் (2) குறுக்கம்
(3) குற்றிய லுகரம் (4) அளபெடை

34. ஓர் எழுத்து தனக்குரிய மாத்திரையில் இருந்து குறுகி ஒலிப்பது
(1) குறுக்கம் (2) உயிரளபெடை
(3) அளபெடை (4) ஒற்றளபெடை

35. பின்வரும் சார்பெழுத்துக்களில் தற்காலத்தில் பயன்பாட்டில் இல்லாதது
(1) ஐகாரக்குறுக்கம் (2) ஔகாரக்குறுக்கம்
(3) மகரக்குறுக்கம் (4) ஆய்தம்

36. இரு குறிலை அடுத்து அல்லது குறில் நெடிலை அடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரம்
(1) நெடில் தொடர் குற்றியலுகரம்
(2) வன்தொடர் குற்றியலுகரம்
(3) ஆய்தத் தொடர் குற்றியலுகரம்
(4) உயிர்த் தொடர் குற்றியலுகரம்

37. தற்காலத்தில் வேற்று நிலையாக வராத வல்லினம்
(1) க (2) ச (3) த (4) ப

38. மூன்று மெய்கள் மயங்குவதற்கு முதலில் வரக்கூடிய மெய் **அல்லாதது**
(1) ய் (2) ல் (3) ர் (4) க்

39. உடனிலை மெய் மயக்கத்தில் வரும் மெய்களின் எண்ணிக்கை.
(1) 17 (2) 16 (3) 18 (4) 12

40. வேற்றுநிலை மெய்மயக்கத்தில் வரும் மெய்களின் எண்ணிக்கை
(1) 10 (2) 06 (3) 14 (4) 04

41. பின்வருவனவற்றுள் ககரம் வேறுப்பட்டு ஒலிக்கும் சொல்
(1) பாகம் (2) யாகம் (3) இகம் (4) வங்கம்

42. பின்வருவனவற்றுள் ககரம் வேறுப்பட்டு ஒலிக்கும் சொல்
(1) சிங்கம் (2) கன்னி (3) காலை (4) கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. சகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) சங்கு (2) சந்தனம் (3) சால்வை (4) பஞ்சம்

44. டகரம் வேறுப்பட்டு ஒலிக்கும் சொல்
(1) நட்டம் (2) வட்டம் (3) படம் (4) மட்டம்

45. டகரம் வேறுப்பட்டு ஒலிக்கும் சொல்
(1) பண்டம் (2) மண்டம் (3) கண்டம் (4) பாடம்

46. தகரம் வேறுப்பட்டு ஒலிக்கும் சொல்
(1) பதவி (2) உதவி (3) சந்தனம் (4) இதயம்

47. தகரம் வேறுப்பட்டு ஒலிக்கும் சொல்
(1) தனம் (2) தமிழ்
(3) தன்னடக்கம் (4) அந்தம்

48. பகரம் வேறுப்பட்டு ஒலிக்கும் சொல்
(1) அம்பு (2) நரம்பு (3) சிலம்பு (4) கபம்

49. பகரம் வேறுப்பட்டு ஒலிக்கும் சொல்
(1) பாகம் (2) அப்பம் (3) சோகம் (4) இகம்

50. றகரம் வேறுப்பட்டு ஒலிக்கும் சொல்
(1) என்று (2) அறம் (3) மன்றம் (4) சிற்பம்

## வினாத்தாள் – 16
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 4 | (11) - 1 | (21) - 3 | (31) - 3 | (41) - 4 |
| (2) - 3 | (12) - 3 | (22) - 2 | (32) - 1 | (42) - 1 |
| (3) - 2 | (13) - 2 | (23) - 2 | (33) - 4 | (43) - 4 |
| (4) - 3 | (14) - 1 | (24) - 4 | (34) - 1 | (44) - 3 |
| (5) - 1 | (15) - 2 | (25) - 2 | (35) - 3 | (45) - 4 |
| (6) - 2 | (16) - 3 | (26) - 2 | (36) - 4 | (46) - 3 |
| (7) - 4 | (17) - 2 | (27) - 2 | (37) - 2 | (47) - 4 |
| (8) - 2 | (18) - 1 | (28) - 4 | (38) - 4 | (48) - 4 |
| (9) - 1 | (19) - 3 | (29) - 3 | (39) - 2 | (49) - 2 |
| (10) - 3 | (20) - 2 | (30) - 2 | (40) - 3 | (50) - 4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..y Public Library
Municipal Council
Batticaloa.

# 22 பதம்

**பதம் என்பது சொல்லினைக் குறித்து நிற்கிறது. சொற்கள் ஓரெழுத்தாலோ ஒன்றுக்கு மேற்பட்ட பல எழுத்துக்களாலோ ஆனது.**

ஓர் எழுத்து சொற்கள் - கை, பூ, தை
பல எழுத்து சொற்கள் - மரங்கள், கால், சூரியன்

**1. பகாப்பதம்**

பகுத உறுப்புக்களாக பகுக்க முடியாத சொற்களை **பகாப்பதம்** என அழைக்கின்றோம். இது நான்கு வகைப்படும்.

(1) பெயர்ப்பகாப்பதம் :- (உ + ம்) நிலம், நீர், மரம், காய்
(2) வினைப்பகாப்பதம் :- (உ + ம்) நட, ஓடு, படி
(3) இடைப்பகாப்பதம் :- (உ + ம்) மற்று, இனி, ஆல்
(4) உரிப்பகாப்பதம் :- (உ + ம்) சால, உறு, தவ, நனி

**2. பகுபதம்**

சொற்களை பொருள் தரக்கூடிய கூறுகளாக பிரிக்கக்கூடியதாக இருந்தால் அதனை **பகுபதம்** என அழைப்போம். பகுபதம் இரு வகைப்படும்.

1. பெயர்ப்பகுபதம் - பொன்னன், அறிஞன்
2. வினைப்பகுபதம் - நடந்தான்,ஓடுவார்

❋ **பகுபத உறுப்புக்கள்**

பகுபதமானது ஆறு உறுப்புக்களைக் கொண்டது அவை யாவன பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம், என்பனவாகும். ஒரு பகுபதத்தில் குறைந்தது பகுதி, விகுதி எனும் இரு உறுப்புக்களாவது காணப்படும்.

(i) **பகுதி**

பெயர் அல்லது வினைப் பகுபதங்களின் முதலில் நிற்கும் உறுப்பு பகுதியாகும். இது எப்போதும் பகாப்பதமாக அமையும். **(உ + ம்)** ஓடினான்
ஓடு + இன் + ஆன் (ஓடு - பகுதி)
பாடுகிறான்
பாடு + கிறு + ஆன் (பாடு - பகுதி)

(ii) **விகுதி**

பகுபதத்தின் இறுதியில் நிற்கும் கூறாகிய இடைப் பகாப்பதமே **விகுதி** எனப்படுகிறது.

**(உ + ம்)** கற்றான்
கல் + ற் + ஆன் (விகுதி - ஆன்)
நாட்டார்கள்
நடு + ட் + ஆர்கள் (விகுதி - ஆர்கள்)

Class No: -
Acc No 1437



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Municipal Council
Batticaloa.

(iii) **இடைநிலை**

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் தோன்றும் பகுபத உறுப்பு **இடைநிலையாகும்.** இது மூன்று வகைப்படும்.

**(அ) பெயரிடை நிலை**

**(உ + ம்)** அறிஞன்

அறி + **ஞ்** + அன் **(ஞ் - இடைநிலை)**

**(உ + ம்)** ஓதுவான்

ஓது + **வ்** + ஆன் **(வ் - இடைநிலை)**

**(ஆ) வினையிடை நிலை**

இது மூன்று வகைப்படும்.

1. இறந்தகால இடைநிலை - த், த்த், ந்த், ட், ற், ன், இன்
2. நிகழ்கால இடைநிலை - கின்று, கிறு
3. எதிர்கால இடைநிலை - ப், ப்ப், வ்

**(இ) எதிர்மறை இடைநிலை** - இல், ஆ, மாட்டு

படித்திலன் - படி + த்த் + **இல்** + அன்

வரமாட்டான் - வா + **மாட்டு** + ஆன்

(iv) **சந்தி**

பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய பகுபத உறுப்புக்கள் புணரும் போது பகுதிக்கு இடைநிலைக்கும் இடையில் தோன்றும் ஓர் எழுத்து **சந்தி** ஆகும்.

**படித்தனன்** - படி + **த்** + த் + அன் + அன் **(த் - சந்தி)**

(v) **சாரியை**

பகுபதத்தின் விகுதிக்கு முன்னால் விகுதியை சார்ந்து வருவது **சாரியை** ஆகும்.

**(உ + ம்)**

நடந்தனன் - நட + ந் + த் + **அன்** + அன் - சாரியை - அன்

படித்தனன் - படி + த் + த் + **அன்** + அன் - சாரியை - அன்

புளியம்பழம் - புளி + **அம்** + பழம் - சாரியை - அம்

மரத்தை - மரம் + **அத்து** + ஐ - சாரியை - அத்து

சிலவற்றை - சில + **அற்று** + ஐ - சாரியை - அற்று

(vi) **விகாரம்**

பகுதி, விகுதி, இடைநிலை என்பன புணரும் போது அவற்றின் வடிவத்தில் ஏற்படுகின்ற மாற்றமே விகாரம் எனப்படும்.

**(உ + ம்)** வந்தனன் - வா + **ந்** + த் + த் + அன் + அன்

(ந் - விகாரம்)

Class No:
Acc.No 14757



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23 பேச்சு வழக்கு எழுத்து வழக்கு

நாம் அனைவரும் அன்றாடம் பேசும் போது நியமத்தமிழை பயன்படுத்துவதில்லை. பேச்சு வழக்கிலேயே உரையாடுகின்றோம். எனவே அவ்வாறு அமைகின்ற சில பேச்சு வழக்கு சொற்களினையும் அதற்குறிய எழுத்து வழக்கினையும் பார்ப்போம்.

| பேச்சு வழக்கு | | எழுத்து வழக்கு |
|---|---|---|
| 1. இளனி | - | இளநீர் |
| 2. வேணும் | - | வேண்டும் |
| 3. சவுக்காரம் | - | சவர்க்காரம் |
| 4. தேதி | - | திகதி |
| 5. வருசம் | - | வருடம் |
| 6. வருது | - | வருகின்றது |
| 7. பாவக்காய் | - | பாகற்காய் |
| 8. தண்ணி | - | தண்ணீர் |
| 9. வெத்திலை | - | வெற்றிலை |
| 10. பொயலை | | புகையிலை |
| 11. ஈக்கு | - | ஈர்க்கு |
| 12. நம்ம | - | நமது |
| 13. அடமழை | - | அடைமழை |
| 14. எல்லாம் | - | எல்லாரும் |
| 15. எங்க | - | எங்கே |

மேலும் சில பேச்சு வழக்குச் சொற்களையும் அதற்குரிய எழுத்து வழக்குச் சொற்களையும் அட்டவணைப்படுத்துக.

1. .................................... ....................................................
2. .................................... ....................................................
3. .................................... ....................................................
4. .................................... ....................................................
5. .................................... ....................................................
6. .................................... ....................................................
7. .................................... ....................................................
8. .................................... ....................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 பெயர்ச் சொற்கள்

**1. சொற்களின் தன்மையின் அடிப்படையில்**

(i) **பெயர்ச்சொல்** - *மரம்*
(ii) **வினைச்சொல்** - *வந்தான்*
(iii) **இடைச்சொல்** - *மற்று*
(iv) **உரிச்சொல்** - *தவ*

**என நான்கு வகைப்படுத்தலாம்.**

**2. பொருளினடிப்படையில்**

(i) **பொருட்பெயர்** - *மேசை*
(ii) **இடப்பெயர்** - *பதுளை*
(iii) **காலப்பெயர்** - *மார்கழி*
(iv) **சினைப்பெயர்** - *பூ*
(v) **குணப்பெயர்** - *வெண்மை*
(vi) **தொழிற்பெயர்** - *ஆடுதல்*

**என ஆறு வகைப்படுத்தலாம்.**

**3. காரணப்பெயர்**

(i) *யாதேனும் ஒரு காரணம் கருதி வழங்குவது* ***காரணப் பெயர்*** *எனப்படும்.*

**(உ + ம்) பறவை, மண்வெட்டி**

(ii) **இடுகுறிப்பெயர்**

*காரணம் கருதாது வழங்கப்படும் பெயர் இடுகுறிப் பெயர் எனப்படும்.* **(உ + ம்) மரம், நிலம்**

(iii) **காரன இடுகுறிப்பெயர்**

*காரணம் கருதிய போது காரணங்களுடைய பொருளாகவுதம் காரணம கருதாத போது இடுகுறியாகவும் வழங்கும் பெயர் காரண இடுகுறிப்பெயர் எனப்படும்.*

**(உ + ம்) நாற்காலி**

**4. மூவிடப் பெயர்**

(i) **தன்மை** - *நான், நாம், நாங்கள்*
(ii) **முன்னிலை** - *நீ, நீங்கள், நீவீர், நீயிர்*
(iii) **படர்க்கை** - *அவன், அவள், பாடசாலை*

**திணை**

(i) **உயர்திணை** - *அவன், தங்கை*
(ii) **அஃறிணை** - *மாடு, பறவைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பால்**

(i) **ஆண்பால்** - அவன், தம்பி
(ii) **பெண்பால** - அவள், தாய்
(iii) **பலர்பால்** - மாணவர், ஆண்கள்
(iv) **ஒன்றன்பால்** - மாடு, குருவி
(v) **பலவின்பால்** - மாடுகள், குருவிகள்

**எண்**

(i) **ஒருமை** - மாணவன், மரம்
(ii) **பன்மை** – மாணவர்கள், மரங்கள்

**5. இருபால் பொதுப்பெயர்**

ஆணையும், பெண்ணையும், பொதுவாக குறிக்கும் பெயர் **இருபால் பொதுப்பெயர்** எனப்படும்.

**(உ + ம்) நோயாளி, முதலாளி, அகதி**

**6. ஆகுபெயர்**

ஒரு பொருளின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய இன்னொரு பொருளுக்கு ஆகிவரும் போது அது **ஆகுபெயர்** எனப்படும். ஆகுபெயர் பல வகைப்படும். அதில் குறிப்பாக ஆறு வகையான ஆகுப்பெயர்களை மட்டும் பார்ப்போம்.

(i) **பொருளாகுபெயர்** – பொருளொன்றின் பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொரு பொருளுக்கு ஆகி வருதல்.
**(உ + ம்) மல்லிகை மணம் வீசுகிறது.**

(ii) **இடவாகு பெயர்** – ஓர் இடத்தின் பெயர் அந்த இடத்தில் உள்ள வேறொன்றுக்கு ஆகி வருதல்
**(உ + ம்) இலங்கை போட்டியில் வென்றது.**

(iii) **காலவாகு பெயர்** – ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தில் இடம் பெறுகின்ற வேறொரு நிகழ்வுக்கு ஆகிவருதல்.
**(உ + ம்) கோடை விளைந்தது.**

(iv) **சினையாகு பெயர்** – ஓர் உறுப்பின் பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொரு பொருளுக்கு ஆகிவருதல்.
**(உ + ம்) வெற்றிலை நட்டான்**

(v) **குணவாகு பெயர்** – குணம் அல்லது பண்பின் பெயர் அதனை உடைய பொருளுக்கு ஆகி வருதல்.
**(உ + ம்) மஞ்சள் அரைத்தாள்**

(vi) **தொழிலாகு பெயர்** – ஒரு தொழிலின் பெயர் அந்தத் தொழிலை உடைய ஒரு பொருளுக்குப் பெயராகி வருதல். **(உ +ம்) வற்றலோடு உண்டான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **ஆக்கப்பெயர்**

பெயர் அல்லது வினைச்சொற்களுடன் சேர்ந்து ஆக்கப்படும் பெயர் **ஆக்கப்பெயர்** எனப்படும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **பெயர்** | **+** | **விகுதி** | | | **=** | **ஆக்கப்பெயர்** |
| **பெயர்** | **+** | **விகுதி** | **+** | **விகுதி** | **=** | **ஆக்கப்பெயர்** |

❊ பெயர்ச்சொல்லுடன் ஆளி, இயல், சாலி, காரன், காரி, தனம், துவம், இயல், ஆளன் போன்ற விகுதிகள் இணைந்து ஆக்கப்பெயர் உருவாகும்.

**(உ+ம்)**

**முதல்+ ஆளி = முதலாளி**

**முதல் + ஆளி + துவம் = முதலாத்துவம்**

**புத்தி + சாலி = புத்திசாலி**

**புத்தி + சாலி + தனம் = புத்திசாலித்தனம்**

(புவியியல், காவல்காரன், வேலைக்காரி, பொருளாலன், பெண்ணியம்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வினை** | **+** | **விகுதி** | | | **=** | **ஆக்கப்பெயர்** |
| **வினை** | **+** | **விகுதி** | **+** | **விகுதி** | **=** | **ஆக்கப்பெயர்** |

❊ வினைச்சொல்லுடன் ச்சி, சி, ப்பு, ஐ, அம், வு, க்கை, கை, மதி, வை, வி, ச்சல், அல் போன்ற விகுதிகள் இணைந்து ஆக்கப்பெயர் உரு வாகும்.

**(உ+ம்)**

தொடர் + ச்சி = தொடர்ச்சி

பெறு + மதி = பெறுமதி

முயல் + சி + ஆளன் = முயற்சியாளன்

(படிப்பு, நடை, நீளம், தாழ், தணிக்கை, வருகை, பெறுமதி, பார்வை, தோல்வி, காய்ச்சல், நாடல்)

8. **தொழிற்பெயர்**

வினையடியாகப் பிறந்துவினை நிகழ்வை அல்லது நிகழாமையை எடுத்துக்காட்டுவது **தொழிற்பெயராகும்.** இதனை அமைப்பின் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

(i) **வினையடி + தல் / த்தல் / அல்**

**(உ+ம்)**

தேடு + தல் = தேடுதல்

கடி + த்தல் = கடித்தல்

பாடு + அல் = பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) **வினையடி + காலஇடைநிலை + அது / அ + மை**

**(உ+ம்)**

வா + கின்று + அது = வருகின்றது
நட + ந்த் + அது = நடந்தது
வா + ந்த் + அது = வந்தது
போ + ன் + அ + மை = போனமை

(iii) **வினையடி + எதிர்மறை இடைநிலை + அது / மை**

**(உ+ம்)**

வா + ஆத் + அது = வராதது
வா + ஆ + மை = வராமை

**9. கூட்டுப்பெயர்**

இரண்டு அல்லது பல சொற்கள் இணைந்து உருவாக்கப்படும் பெயர்ச் சொல் **கூட்டுப்பெயர்** எனப்படும். இது இரு வகையில் அமைக்கப்படுகின்றன.

(i) **பெயர் + பெயர் = கூட்டுப்பெயர்**

**(உ+ம்)** புகை + வண்டி = புகைவண்டி
காலை + காட்சி = காலைக்காட்சி

(ii) **வினை + பெயர் = கூட்டுப்பெயர்**

**(உ+ம்)** செய் + நன்றி = செய்ந்நன்றி
சொல் + வளம் = சொல்வளம்

❋ இரண்டுக்கும் மேற்பட்ட சொற்களும் இணைந்து கூட்டுப் பெயர் உண்டாகின்றது.

**(உ+ம்)** பரீட்சை + திணை + களம் = பரீட்சைத்திணைக்களம்

**10. வினையாலணையும் பெயர்**

வினை அடியாகப் பிறந்து வினை, காலம், வினை புரியும் கருத்தா போன்றவற்றை உணர்த்தி நிற்குமாயின் அது வினையாலணையும் பெயர் எனப்படும்.

**(உ+ம்)** படித்தான், நடந்தவன், ஓடியவன், வந்தவள்

❋ **வினையடி + காலஇடைநிலை + படர்க்கை இடப்பெயர்**

நட + ந்த் + அவன் = நடந்தவன்
நட + ந்த் + அவள் = நடந்தவள்
நட + ந்த் + அவர்கள் = நடந்தவர்கள்
நட + ந்த் + அவர் = நடந்தவர்
நட + ந்த் + அது = நடந்தது
நட + ந்த் + அவை = நடந்தவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ வினையாலணையும் பெயர் எதிர்மறைப் பொருளையும் தருகின்றன.

**வினையடி + எதிர்மறை இடைநிலை + பார்க்கை இடப்பெயர்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நட | + | ஆத் | + | அவன் | = | நடக்காதவன் |
| நட | + | ஆத் | + | அவர் | = | நடக்காதவர் |
| நட | + | ஆத் | + | அவள் | = | நடக்காதவள் |
| நட | + | ஆத் | + | அவர்கள் | = | நடக்காதவர்கள் |
| நட | + | ஆத் | + | அவை | = | நடக்காதவை |
| நட | + | ஆத் | + | அது | = | நடக்காதது |

**இடப்பெயர் என்பது தன்மை,முன்னிலை,படர்க்கையாகும். படர்க்கை இடப்பெயர் அவன், அவர், அவள், அவர்களை, அவை, அது என்பனவாகும்.**

சில சந்தர்ப்பங்களில் தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் ஒரே சொல் அமைகின்றது. "அது" என அமையும். தொழிற்பெயர் விகுதியும் "அது" என வினையாலணையும் பெயரில் வரும் படர்க்கை இடப்பெரும் ஒன்று போல் தோன்றும்.

**தொழிற்பெயர்**

**(உ + ம்)** வினையடி + கால இடைநிலை = அது

நட + ந்த் + அது = நடந்தது

வா + ந்த் + அது = வந்தது

**வினையாலணையும் பெயர்**

**(உ + ம்)**

வினையடி + கால இடைநிலை + படர்க்கை இடப்பெயர்

நட + ந்த் + அது = நடந்தது

வா + ந்த் + அது = வந்தது

இவ்வாறான சந்தர்ப்பங்களில் தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் இடையிலான வித்தியாசத்தை எவ்வாறு அறிந்து கொள்வது?

❊ தொழிற் பெயர்கள் ஒரு வாக்கிய இணைப்பினால் உருவாகின்றது.

**(உ + ம்)** முயல் குட்டி வேகமாக வந்தது நல்லதாயிற்று.

மாடு வேமாக நடந்தது நல்லதாகும்.

❊ வினையாலணையும் பெயர்கள் வாக்கியங்களின் இணைப்பில் தோன்றுகின்றன.

**(உ + ம்)**

நேற்று முயல் குட்டி வந்தது ; அது என்னுடையது.

நேற்று வந்தது என்னுடைய முயல் குட்டி.

நேற்று மாடு வேகமாக வந்தது, அது கண்ணனுடையது.

நேற்று வந்தது கண்ணனுடைய மாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 பெயராகவும் வினையாகவும் வழங்கும் சொற்கள்

தமிழிலே சில சொற்கள் பெயர்சொற்களாக அமைகின்றன. சில சொற்கள் வினைச்சொற்களாக அமைகின்றன. ஆனால், சில சொற்கள் பெயர்ச் சொற்களாக அமையும் அதேவேளை வினைச்சொற்களாகவும் அமைகின்றன. அவ்வாறான சில சொற்களைக் கீழே பார்ப்போம்.

| சொல் | பெயர் | வினை |
|---|---|---|
| 1. அளை | புற்று, தயிர் | தீண்டுதல் |
| 2. எட்டு | ஓர் இலக்கம் | அகப்படு, தாவு |
| 3. குலை | பழக்குலை | கட்டவிழ் |
| 4. கூறு | பகுதி | சொல்லுதல் |
| 5. கேள் | சுற்றம் | கேட்டல் |
| 6. சூடு | குவியல் | அணிதல் |
| 7. செல் | கறையான் | போதல் |
| 8. தறி | யானைக்கட்டும் தறி | துண்டு செய் |
| 9. தட்டு | ஒரு பாத்திரம் | அடி |
| 10. திரி | விளக்குதிரி | திரிதல் |
| 11. தீட்டு | அழுக்கு | எழுது, வரை |
| 12. தை | மாதம் | தைத்தல் |
| 13. நாடு | தேசம் | அணுகுதல் |
| 14. மதி | சந்திரன் | மதித்தல் |
| 15. விரை | வாசனை | விரைந்து செல் |

**ஒரேசொல் பெயராகவும் வினையாகவும் அமையக்கூடியவற்றை பட்டியல் படுத்துக.**

1. ........................ ........................ ........................
2. ........................ ........................ ........................
3. ........................ ........................ ........................
4. ........................ ........................ ........................
5. ........................ ........................ ........................
6. ........................ ........................ ........................
7. ........................ ........................ ........................
8. ........................ ........................ ........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 தொகைநிலைத் தொடர் தொகாநிலைத் தொடர்

## 1. தொகை நிலைத்தொடர்

சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து வரும் போது உருப்புகளோ சொல்லுருப்புகளோ மறைந்து நிற்கும் தொடர் **தொகைநிலைத் தொடர்** எனப்படும். அதனைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

### (i) வேற்றுமைத்தொகை

வேற்றுமை உருபுகள் தொடக்கம் வரும் தொடர்மொழிகள் **வேற்றுமைத் தொகை** எனப்படும்.

| | | |
|---|---|---|
| **1. கதை வாசித்தான்** | - | கதையை வாசித்தான்.<br>2ம் வேற்றமைத் தொகை |
| **2. வெள்ளி மோதிரம்** | - | வெள்ளியால் ஆன மோதிரம்.<br>3ம் வேற்றுமைத் தொகை |
| **3. பாலன் நண்பன்** | - | பாலனுக்கு நண்பன்.<br>4ம் வேற்றுமைத் தொகை |
| **4. ஊர் நீங்கினான்** | - | ஊரிலிருந்து நீங்கினான்.<br>5ம் வேற்றுமைத் தொகை |
| **5. என் புத்தகம்** | - | எனது புத்தகம்.<br>6ம் வேற்றுமைத் தொகை |
| **6. மலைக் கோயில்** | - | மலையின் கண் கோயில்.<br>7ம் வேற்றுமைத் தொகை |

### (ii) வினைத்தொகை

காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்கும் தொகை **வினைத்தொகை**யாகும்.

**(உ + ம்)** சுடுசோறு, (சுட்ட, சுடுகின்ற, சுடும்)
கொல்களிறு (கொன்ற, கொல்கின்ற, கொல்லும்)

### (iii) பண்புத்தொகை

பண்புப்பெயருக்கே உரிய ஆகிய, ஆன எனும் உருபு தொக்கி வருதல் **பண்புத்தொகை**யாகும்.

**(உ + ம்)** கரும்பலகை (கருமையாகிய பலகை)

### (iv) உவமைத்தொகை

உவமை உருபுகள் தொக்கி வருதல் **உவமைத்தொகை**யாகும்.
**(உ + ம்)** பவளவாய் (பவளம் போன்ற வாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(v) **உம்மைத்தொகை**

உம் எனும் இடைச்சொல் மறைந்து இரண்டு பெயர்ச் சொற்களை இணைத்து உருவாகும் தொகை **உம்மைத்தொகை** எனப்படும். **(உ + ம்)** உயிர்மெய் (உயிரும் மெய்யும்)

(vi) **அன்மொழித்தொகை**

மேற்கூறப்பட்ட ஐவகைத் தொகை நிலைத் தொடர் மொழிகளுக்குப் புறத்தே பிற மொழி உருபுகள் தொக்க வருந் தொடர்மொழி **அன்மொழித்தொகை**யாகும்.

**(உ + ம்)** கொடியிடை

கொடி போன்ற இடையை உடையவள்.

இது உவமைத் தொகைப் புறத்து பிறந்த அன்மொழித் தொகை

**2. தொகாநிலைத் தொடர்**

ஒரு சொல்லை பிறிதொரு சொல் தொடர்ந்து வரும் போது உருபுகளோ சொல்லுருபுகளோ மறையாமல் நிற்கும் தொடர் **தொகாநிலைத் தொடர்** எனப்படும். இது **ஒன்பது** வகைப்படும்.

(i) எழுவாய்த் தொடர் - பாலன் வந்தான்.

(ii) விளித் தொடர் - கண்ணா வா.

(iii) வேற்றுமைத் தொடர் - புத்தகத்தை எடுத்தான்.

(iv) வினைமுற்றுத் தொடர் - ஓடியது மான்.

(v) பெயரெச்சத் தொடர் - பறந்த பறவை.

(vi) வினையெச்சத் தொடர் - பார்த்துச் சென்றான்.

(vii) இடைச்சொற்றொடர் - இனி வருவேன்.

(viii) உரிச்சொற்றொடர் - சாலவும் நன்று.

(ix) அடுக்குத்தொடர் - வா வா.

✱ **பின்வருவனவற்றுக்கு உதாரணங்கள் தருக.**

1. 2ம் வேற்றுமைத்தொகை :- ....................................
2. வினைத் தொகை :- ....................................
3. பண்புத்தொகை :- ....................................
4. உவமைத்தொகை :- ....................................
5. உம்மைத்தொகை :- ....................................
6. விளித்தொடர் :- ....................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 வேற்றுமை

பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை எனப்படும். தமிழில் எட்டு வேற்றுமைகள் உள்ளன என்பர்.

**1. முதலாம் வேற்றுமை** – எழுவாய் வேற்றுமை

**உருபு** - இல்லை

**சொல்லுருபு** - இல்லை

**பொருள்** - வினை முதலாதல்

**(உ + ம்)** கண்ணன் வந்தான்

**2. இரண்டாம் வேற்றுமை** – செயற்படும்பொருள் வேற்றுமை

**உருபு** - ஐ **சொல்லுருபு** - இல்லை

**பொருள்** - செயப்படுபொருள்

(i) ஆக்கல் - மேசையைச் செய்தான்.

(ii) அழித்தல் - மரத்தை வெட்டினான்.

(iii) அடைதல் - நாட்டை அடைந்தான்.

(iv) நீத்தல் - மனையைத் துறந்தான்.

(v) ஒத்தல் - சிங்கத்தைப் போன்றவன்.

(v) உடைமை - சொத்தை உடையான்.

**3. மூன்றாம் வேற்றுமை –கருவி வேற்றுமை, உடனிகழ்ச்சி வேற்றுமை**

**கருவி வேற்றுமை**

**உருபு** - ஆல், ஆன் **சொல்லுருபு** - கொண்டு,மூலம்

(i) கருவிப்பொருள் - பேனையால் எழுதினான்

(ii) கருத்தாப் பொருள் - பாரதியரால் பாடப்பட்டது

❋ **தற்காலத்தில் ஆல் உருபு வேறு பொருள்களிலும் வருகிறது.**

(i) காரணப் பொருள் - வலியால் துடித்தான்

(ii) மூலப்பொருள் - பலகையால் செய்த கட்டில்

**உடனிகழ்ச்சி வேற்றுமை**

தற்கால மொழியியலாளர்கள் உடனிகழ்ச்சி வேற்றுமையை மூன்றாம் வேற்றுமையோடு இணைக்காது தனியான வேற்றுமையாகவே கருதுகிறார்கள்.

**உருபு** - ஒடு, ஓடு **சொல்லுருபு** - உடன்

**பொருள்** -

(i) உடனிகழ்ச்சிப் பொருள் - தந்தையோடு சென்றான்.

- தந்தையுடன் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ **தற்காலத்தில் 'ஓடு' உருபு வேறு பொருள்களிலும் வருகின்றது.**

(i) அடைமொழிப் பொருள் - மரியாதையோடு வருகின்றது.

(ii) கலப்புறு பொருள் - பகைவனோடு சேர்ந்தான்.

(iii) கூட்டல் அல்லது சேர்த்தல் பொருள்-திங்களோடு திங்கள் எட்டு.

(iv) ஓர் இடத்தில் தொடர்ந்திருத்தல் - வீட்டோடு இருந்தார்.

(v) வரையறைப் பொருள் - நாளையோடு நின்று விடு.

(vi) வினையடை ஆக்கி - மழையோடு மழையாக.

**4. நான்காம் வேற்றுமை - கொடை வேற்றுமை**

**உருபு** -கு **சொல்லுருபு** - பொருட்டு, நிமித்தம், ஆக

**பொருள்**

(i) கொடை - அண்ணனுக்கு கொடுத்தான்.

(ii) பகை - கமலன் கண்ணனுக்கு பகை.

(iii) நட்பு - அவன் எனக்கு நண்பன்.

(iv) தகுதி - மாணவருக்கு உரியது அடக்கம்.

(v) நிமித்தக் காரணம் - கூலிக்கு வேலை செய்தான்.

(vi) உறவு - எனக்கு மகன்.

❋ **தற்காலத்தில் 'கு' உருபு வேறு பொருள்களிலும் வருகிறது.**

(i) எல்லைப் பொருள் - வீட்டுக்கு முன் தோட்டம்

(ii) ஓர் இடம் நோக்கி நகர்தல் - வீட்டுக்குப் போகிறேன்

(iii) அனுபவப்பேரு - அவனுக்கு நீச்சலில் அனுபவமுண்டு

(iv) காலக்குறிப்பு - பத்து மணிக்கு வருவேன்.

(v) வீதம், விகிதாசாரம் - நூற்றுக்கு முப்பது புள்ளிகள்

(vi) வினையடை ஆக்கி - வீதிக்கு வீதி

**5. ஐந்தாம் வேற்றுமை**

**உருபு** - இல், இன்

**சொல்லுருபு** - நின்று, இருந்து, நின்றும், இருந்தும், விட, காட்டிலும் பார்க்கிலும்.

**பொருள்**

நீங்கல் - காட்டிலிருந்து சென்றான்.

ஒப்பு - என்னில் நல்லவன்.

எல்லை - வீட்டின் வடக்கே உள்ளது.

ஏது - கற்பில் சிறந்தவள் கண்ணகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. ஆறாம் வேற்றுமை - உடைமை வேற்றுமை**

**உருபு** - அது, ஆது, அ

**சொல்லுருபு** - உடைய

**பொருள்**

(i) **தற்கிழமை**

1. பண்புத் தற்கிழமை - பாலினது வெண்மை
2. உறுப்புத் தற்கிழமை - மாட்டினது கொம்பு
3. ஒன்றன் கூட்டத் தற்கிழமை - கல்லினது குவியல்
4. பலவின் கூட்டத் தற்கிழமை - மந்தையினது கூட்டம்
5. திரிபின் ஆக்கத்தற்கிழமை - நெல்லினது பொரி

(ii) **பிறதின் கிழமை**

1. பொருள் பிறிதின் கிழமை - எனது புத்தகம்
2. இடப்பிறிதின் கிழமை - எனது இடம்
3. காலப் பிறதின் கிழமை - மாலனது நேரம்

**7. ஏழாம் வேற்றுமை - இடவேற்றுமை**

**உருபு** - கண், இல், உள், இடம் என 28 உருபுகள்.

**சொல்லுருபு** - இல்லை

**பொருள்** - இடப்பொருள்

(உ + ம்) குருவி மரத்தில் உள்ளது.
என்னிடம் பணம் உண்டு.

❊ **தற்காலத்தில்**

(i) கால வரையறையை உணர்த்தல்

(உ + ம்) இரண்டு நாட்களில் வருவார்.

(ii) ஒரு குழுவில் அமையும மற்றொரு குழுவைச்சுட்டிக்காட்டல்

(உ + ம்) மனிதர்களில இவன் மாணிக்கம்.

**8. எட்டாம் வேற்றுமை - விளிவேற்றுமை**

**உருபு, சொல்லுருபு** - இல்லை

**பொருள்**

விளிப்பொருள் - மகனே வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28 வினைச்சொல்

ஒரு செயலினை அல்லது ஒரு பொருளின் புடைப் பெயர்ச்சினை உணர்த்தி நிற்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.

**✱ வினைச் சொற்களின் இயல்புகள்**

1. செயலை உணர்த்தும்
2. காலம் காட்டும்
3. ஏவல் பொருளில் வரும்
4. வினைவிகுதிகளை பெறும்
5. வினையடைகளை பெறும்
6. வேற்றுமை உருபை ஏற்காது.

**1. முற்றுவினை**

**இது இரு வகைப்படும்**

(i) தெரிநிலை வினைமுற்று
(ii) குறிப்பு வினைமுற்று

(i) **தெரிநிலை வினைமுற்று**

செய்பவன், கருவி, நிலம், காலம், செயல், செய்பொருள் ஆகிய ஆறு வகைப் பொருளையும் காட்டி காலத்தையும் வெளிப்படையாகக் காட்டுமாக இருந்தால் அது **தெரி நிலை வினைமுற்று** எனப்படும். இது இடைநிலைகள் மூலம் காலம் காட்டும்.

(அ) இறந்தகால இடைநிலை
(ஆ) நிகழ்கால இடைநிலை
(இ) எதிர்கால இடைநிலை
(ஈ) எதிர்மறை இடைநிலை

(உ +ம்) படித்தான், படிக்கிறான், படிப்பான், படிக்க மாட்டான்.

(ii) **குறிப்பு வினைமுற்று**

முக்காலத்தையும் குறிப்பால் உணர்த்தும் வினை **குறிப்பு வினை** எனப்படும். (உ +ம்) நல்லன், கரியன்

**மேலும் சில வினைகள்**

(i) **உடன்பாட்டு வினைமுற்று**

ஒரு செயல் நிகழ்வதைக் காட்டுவது **உடன்பாட்டு வினைமுற்று** எனப்படும். (உ +ம்) வந்தான்.

(ii) **எதிர்மறை வினைமுற்று**

ஒரு செயல் நிகழாமைய உணர்த்துவது எதிர் **மறை வினைமுற்று** எனப்படும்.

(உ +ம்) வரா, வராது, வரவில்லை, வரமாட்டன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. ஏவல் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று**

ஒரு செயலை செய்யுமாறு கட்டளை இடுவதற்கு பயன்படுத்தப் படும் வினை வடிவம் ஏவல் வினை முற்றாகும்.

(உ + ம்) நில், ஓடு, பாடி




**ஏவல் வினைமுற்றினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.**

(i) உடன்பாட்டு ஏவல் ஒருமை
(உ + ம்) வா, போ, நட, ஓடு

(ii) உடன்பாட்டு ஏவல் பன்மை
(உ + ம்) வாருங்கள், போங்கள், நடவுங்கள்

(iii) எதிர்மறை ஏவல் ஒருமை
(உ + ம்) வராதே, போகாதே, நடக்காதே, ஓடாதே

(iv) எதிர்மறை ஏவல் பன்மை
(உ + ம்) வராதீர்கள், போகாதீர்கள், நடக்காதீர்கள், ஓடாதீர்கள்

**வியங்கோள் வினைமுற்று**

ஒருவரை வாழ்த்தல், எதிர்ப்பைத்த தெரிவித்தல், வினையமாக வேண்டுதல் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படும் வினை வடிவம் வியங்கோள் வினைமுற்றாகும். இது க, இய, இயர் எனும் விகுதிகளை பெற்றுவரும். தற்காலத்தில் அட்டும் எனும் விகுதியும் இணைகிறது.

(உ +ம்) வாழ்த்தல் - நீடூழி வாழ்க.
எதிர்ப்பை தெரிவித்தல் - ஒழிக
வினையமாக வேண்டுதல் - தருக.

✶ **தற்காலத்தில் அட்டும் எனும் விகுதி வாழ்தல், வெறுப்பு, விருப்பு ஆகிய பொருள்களில் வருகின்றது.**

**வாழ்த்தல்** - பல்லாண்டு வாழட்டும்

**வெறுப்பு** - ஒழியட்டும்

**விருப்பு** - மழை பொழியட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. தனிவினை கூட்டுவினை**

**தனிவினை**

பகாப்பதமாக அமையும் வினையடி **தனிவினையாகும்.**

(உ + ம்) வா, போ, நில்

**கூட்டு வினை**

பகுபதமாக அமையும் வினையடிகளைக் கொண்ட வினைச் சொற்கள் **கூட்டு வினை**யாகும்.

(உ + ம்) கண்டு + பிடி = கண்டுபிடி

எடுத்து + கொள் = எடுத்துக்கொள்

| | | |
|---|---|---|
| பெயர் | + வினை | = கூட்டு வினை |
| தந்தி | + அடி | = தந்தியடி |
| கைது | + செய் | = கைதுசெய் |
| வினை | + வினை | = கூட்டுவினை |
| சுடு | + சோறு | = சுடுசோறு |
| ஏவு | + கணை | = ஏவுகணை |
| இடை | + வினை | = கூட்டுவினை |
| முன் | + ஏறு | = முன்னேறு |
| பின் | + பற்று | = பின்பற்று |

**4. தன்வினை, பிறவினை, காரணவினை**

**தன்வினை**

எழுவாய் தானே ஒரு செயலை செய்வதாக அமையும் வினை **தன்வினை** எனப்படும்.

(உ + ம்) அடங்கினான், திருந்தினான்

**பிறவினை**

ஒரு செயலை பிறரைக் கொண்டு செய்வித்தல் **பிறவினை** எனப்படும்.

(உ + ம்) அடக்கினான், திருத்தினான்

✱ **தன் வினைகள் பிறவினைகளாக மாறும் போது கீழ்வரும் மாற்றங்கள் இடம் பெறும்.**

(அ) தன்வினையிலுள்ள மெல்லெழுத்துக்கள் வல்லெழுத்துக்களாக மாறுதல்.

(உ + ம்) திருந்து - திருத்து

அடங்கு - அடக்கு

(ஆ) தன்வினைப் பகுதி ஈற்றிலுள்ள உயிர்மெய்யின் மெய்யெழுத்த இரட்டித்தல்.

(உ + ம்) உருகு - உருக்கு

தேறு - தேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) **காரணவினை**

கருத்தா தானே வினையை நிகழ்த்தாமல் பிறிதொன்றை கொண்டு வினையை நிகழ்த்துவது. அதாவது வினை நிகழ்வதற்கு காரணமாக அமையும் வினை **காரணவினை**யாகும். வி, ப்பி, பிப்பி போன்ற விகுதிகளை ஏற்று வரும்.

(உ +ம்) உருட்டுவித்தான், படிப்பித்தான்

**5. செய்வினை, செயப்பாட்டுவினை**

**செய்வினை**

எழுவாயைக் கருத்தாவாக கொள்ளும் வினை **செய்வினை** எனப்படும்.

(உ +ம்) நான் பாடம் படித்தேன்.

**செயப்பாட்டு வினை**

செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் அதேவேளை "படு" எனும் விகுதி புணர்ந்து வருவது **செயப்பாட்டு வினையாகும்.**

(உ +ம்) பாடம் என்னால் படிக்கப்பட்டது.

| வினையெச்சம் | + படு | + கால இடைநிலை | + திணைப்பால் விகுதி | |
|---|---|---|---|---|
| கொல்ல | + படு | + கிறு | + அது | = கொல்லப்படுகிறது |
| எழுத | + படு | + கிறு | + அது | = எழுதப்படுகிறது |

**6. செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை**

**செயப்படுபொருள் குன்றாவினை**

செயப்படுபொருளை எழுவாயாக ஏற்றுவரும் வினைகள் **செயப்படுபொருள் குன்றாவினைகள்** எனப்படும். வினையுடன் எதை? என்ற வினா எழுப்பும் போது விடை பெறக்கூடியதாக இருந்தால் அவ்வினை செயப்படுபொருள் குன்றாவினை எனப்படும்.

(உ +ம்) நான் பத்திரிகையை வாசித்தேன்.

எதை வாசித்தேன்?

விடை = பத்திரிகையை

**செயப்படுபொருள் குன்றியவினை**

செயப்படுபொருளை எழுவாயாக ஏற்றுவராத வினைகள் **செயப்படுபொருள் குன்றியவினைகள்** எனப்படும். வினையுடன் எதை? என்ற வினா எழுப்பும் போது அதற்குப் பொருத்தமான விடையினை பெற முடியாவிட்டால் அவ்வினை **செயப்படு பொருள் குன்றியவினை** எனப்படும்.

(உ +ம்) நான் மெதுவாக குதித்தேன்

எதைக் குதித்தேன்?

விடை = ..................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29 எச்சவினை

ஒரு செயல் முற்று பெறாமல் இருக்குமாயின் அது **எச்சவினை** என அழைக்கப்படும். இது பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகைப்படும்.

**(1) பெயரெச்சம்**

செய்த, செய்கின்ற, செய்யும் எனும் அமைப்பில் வரும் வினைகள் எச்ச வினைகள் எனப்படும்.

***படித்த*** சிறுவன்

***படிக்கின்ற*** சிறுவன்

***படிக்கும்*** சிறுவன்

ஒரு எச்ச வினை முற்று பெற பெயர்ச்சொல்லை எதிர்பார்த்து நிற்குமாயின் அது பெயரெச்சம் என அழைக்கப்படும்.

* **இறந்தகால, நிகழ்கால பெயரெச்ச அமைப்பு**

***வினையடி + கால இடைநிலை + அ***

உடை + ந்த் + அ = உடைந்த - இறந்தகாலம்

உடை + கின்று + அ = உடைகின்ற - நிகழ்காலம்

* **எதிர்கால பெயரெச்ச அமைப்பு**

***வினையடி + உம்***

உடை + உம் = உடையும்

ஓடு + உம் = ஓடும்

எதிர்கால பெயரெச்சம் எதிர்கால அஃறிணை ஒன்றன் பால் பலவின்பால் வினைமுற்று ஒரே தன்மைக் கொண்டதாக இருக்கும்.(உ +ம்) ஓடும், நடக்கும், பறக்கும்

| | |
|---|---|
| எதிர்கால பெயரெச்சம் | **பறக்கும்** பறவை<br>**ஓடும்** மான். |
| எதிர்கால ஒன்றன்பால் வினைமுற்று | பறவை **பறக்கும்**<br>மான் **ஓடும்.** |
| எதிர்கால பலவின் பால் வினைமுற்று | பறவைகள் **பறக்கும்**<br>மான்கள் **ஓடும்.** |

**எதிர்மறைப்பெயரெச்சம்**

* **எதிர்மறை பெயரெச்சத்தின் அமைப்பு**

***வினையடி + ஆத் + அ = படிக்காத***

(உ +ம்) படி + ஆத் + அ = படிக்காத

ஓடு + ஆத் + அ = ஓடாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(2) வினையெச்சம்**

செய்து, செய்ய, செய்தால் எனும் அமைப்பைக் கொண்ட எச்சவினை **வினையெச்சம்** என அழைக்கப்படும்.

(உ +ம்) **படித்து** முடித்தான்

**படிக்க** வந்தான்

**படித்தால்** தருவேன்.

ஒரு எச்சவினை முற்றுபெற வினைச்சொல்லை எதிர்பார்த்து நிற்குமாயின் அது **வினையெச்சம்** எனப்படும்.

**வினையெச்சத்தின் அமைப்பு**

(i) **வினையடி + இறந்தகால இடைநிலை + உ**

படி + த்த் + உ = படித்து

(ii) **வினையடி + அ**

படி + அ = படிக்க

(iii) **வினையடி + இறந்தகால இடைநிலை + ஆல்**

படி + த்த + ஆல் = படித்தால்

**எதிர்மறை வினையெச்சம்**

**வினையடி + ஆ + விட்டால்**

படி + ஆ + விட்டால் = படிக்காவிட்டால்

(உ+ம்)நடக்காவிட்டால், கடக்காவிட்டால், பார்க்காவிட்டால்.

**பெயரெச்சம், வினையெச்சம் சொற்களுக்கு உதாரணம் தருக.**

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 பெயரடையும் வினையடையும்

**1. பெயரடை**

பெயர்ச் சொல்லின் பண்பை உணர்த்தி நிற்கும் சொல் **பெயரடை**யாகும்.

***பெயரடைகளை எவ்வாறு அறிவது?***

*1.* எப்படிப்பட்ட என்ற வினாவுக்கு விடையாக அமையக்கூடிய சொற்களாக அமையும்.

(உ+ம்) அது அழகான புத்தகம்.

***எப்படிப்பட்ட*** புத்தகம்? அழகான

*2.* பெயருக்கு அடையாக வரும் சொற்கள் ***மிக, மிகவும், ஆகவும், மிகமிக*** போன்ற மிகை இடைச்சொற்கள் சேர்ந்து வரும்.

(உ+ம்) மிக அழகான புத்தகம்
மிகவும் அழகான
மிக மிக அழகான

✷ **பெயரடை வகைகள்**

(i) தனிப்பெயரடை

(ii) ஆக்கப்பெயரடை

(i) **தனிப்பெயரடை**

***புது, சிறு, கரு, நெடு, நல்*** போன்ற அடிச் சொற்களோடு ***இய், அ*** முதலிய விகுதிகள் இணைந்து ஆக்கப்படுவது ***தனிப்பெயரடை***களாகும்.

புது + இய = புதிய
சிறு + இய = சிறிய
நல் + அ = நல்ல

புதிய புதிய, சிறிய சிறிய, நல்ல நல்ல, கரியகரிய - போன்று பெயரடைகள் அடுக்கி வரும்.

(ii) **ஆக்கப்பெயரடை**

ஆக்கப்பெயரடையின் அமைப்பு

**பெயர் + ஆன**

**பெயர் + உள்ள**

(உ+ம்) அழகு + ஆன = அழகான
உயரம் + உள்ள = உயரமுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. வினையடை வகைகள்**

வினைக்கு அடையாக வந்து வினை நிகழும் முறை, நிகழும் காலம், நிகழும் இடம் போன்றவற்றை உணர்த்தப் பயன்படுவதாகும்.

(1) தனிவினையடை

(2) கூட்டு வினையடை / ஆக்கவினையடை

**(1) தனி வினையடை**

நேற்று, இன்று, நாளை, மறுபடியும், அடிக்கடி போன்றன தனி வினையடைகளாகும்.

(உ + ம்) நேற்று வந்தான்.

இன்று வருவான்.

**(2) கூட்டு வினையடை**

கூட்டு வினையடை உருவாகுதல்

* பெயர்ச்சொற்களுடன் **ஆக, ஆய்** ஆகிய வினையடை விகுதிகளை இணைத்து உருவாக்கப்படுவது கூட்டு வினையடையாகும்.

**பெயர்ச்சொல் + ஆக / ஆய்**

(உ + ம்) இனிமை + ஆக = இனிமையாக

இனிமை + ஆய் = இனிமையாய்

* அடுக்கு சொற்களோடு **ஆக** என்னும் விகுதி பெற்று வினையடை ஆக்கப்படுகின்றது.

**அடுக்கு சொற்கள் + ஆக**

(உ+ம்) மெதுமெதுவாக, அடுக்கடுக்காக, எதிர் எதிராக

* ஒலிக்குறிப்பு சொற்களை அடுத்து **"என்று"** என்னும் இடைச்சொல் இணைந்து வினையடை உருவாக்கப் படுகின்றது.

**ஒலிக்குறிப்பு சொல் + என்று**

(உ+ம்) படபடவென்று, திருதிருவென்று, மடமடவென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 இடைச்சொல்

தனித்து நின்று பொருளை உணர்த்தாது பெயர் அல்லது வினைச் சொல்லோடு சார்ந்து நின்று இயங்கும் சொல் **இடைச்சொல்** எனப்படும்.

**1. இடைச் சொற்களைப் பின்வரும் வகைக்குள் உள்ளடக்கலாம்.**

(i) வேற்றுமை உருபுகள் - ஐ, ஆல், கு, இன், அது, கண் போன்றன.

(ii) விகுதிகள்

(அ) கள், மார், எனும் பன்மை விகுதிகள்.

(ஆ) ஆன், ஆள், ஆர், ஓம், ஆய், ஆர்கள் போன்ற திணை, பால் விகுதிகள்.

(இ) இ, உ, மல், ஆல் போன்ற பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள்.

(ஈ) மை, சி, காரன், இயம், சாலி, ஆளி, துவம் போன்ற ஆக்கப் பெயர் விகுதிகள்.

(உ) க, இய, இயர், அட்டும், ங்கள் போன்ற ஏவல் வியங்கோள் வினை விகுதிகள்.

(iii) காலம் காட்டும் இடைநிலைகள் - கின்று, கிறு, த்த், த், ட், ற், இன், ப், ப்ப், வ்

(iv) எதிரமறை இடை நிலைகள் - ஆ, ஆத், மாட்டு

(v) சாரியைகள் - அத்து, அற்று, அம்

(vi) இணைப்பிடைச்சொற்கள் - அல்லது, ஆனால், ஓ, ஆகவே போன்றன

(vii) தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் - உம், ஓ, ஏ, தான், ஆவது கூட, மட்டும் போன்றன

(viii) உவமை உருபுகள் - போல, ஒப்ப, புரைய போன்றன.

(ix) சொல்லுருபுகள் - மூலம், கொண்டு, உடன் இருந்து போன்றன.

**2. ஏகார இடைச்சொல்**

(i) பிரிநிலை - ரோசாவில் சிவப்பே சிறந்தது.

(ii) வினா - நீயே செய்தாய்.

(iii) எண் - மாவே, பலாவே, வாழையே.

(iv) ஈற்றசை - வாழ்வு மாயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| (v) | தெளிவு | - | தர்மமே வெல்லும். |
| (vi) | இசைநிறை | - | ஏயே இவளொருத்தி பேடியே. |
| (vii) | எதிர்மறை | - | அரிச்சந்திரனே பொய் சொல்வான். |

**3. ஓகார இடைச்சொல்**

| | | | |
|---|---|---|---|
| (i) | ஒழியிசை | - | வகுப்புக்கோ சென்றாய்? |
| (ii) | வினா | - | ஆணோ பெண்ணோ? |
| (iii) | உயர்வு சிறப்பு | - | ஓஒ அவன் நல்லவன். |
| (iv) | இழிவுச் சிறப்பு | - | ஓஒ அவன் கஞ்சன். |
| (v) | எதிர்மறை | - | அவனோ கொள்வான். |
| (vi) | தெளிவு | - | மானோ அதுவுமன்று மரச்செடியோ அதுவுமன்று |
| (vii) | கழிவிரக்கம் | - | அந்த நல்லவரோ இறந்தார். |
| (viii) | பிரிநிலை | - | இவனோ தலைவன். |
| (ix) | அசைநிலை | - | படிக்க வாராரோ. |

**4. உம் இடைச்சொல்**

| | | | |
|---|---|---|---|
| (i) | எதிர்மறை | - | களவும் கற்று மற. |
| (ii) | உயர்வு சிறப்பு | - | மன்னரும் போற்றிய மனிதன். |
| (iii) | இழிவு சிறப்பு | - | நாயும் திண்ணா உணவு. |
| (iv) | ஐயம் | - | அவன் சொன்னாலும் சொல்வான். |
| (v) | எச்சம் | - | நண்பனும் வந்தான். |
| (vi) | முற்று | - | எல்லோரையும் மதிப்போம். |
| (vii) | எண் | - | உயிரும் மெய்யும். |
| (viii) | தெரிநிலை | - | இவன் நண்பனும் மல்லன்; நல்லவனும்மல்லன் |
| (ix) | ஆக்கம் | - | உணவுமாயிற்று |

**உமக்கு தெரிந்த இடைச்சொற்களை அட்டவணைப்படுத்துங்கள்.**

*(1)* ..........................................................................................

*(2)* ..........................................................................................

*(3)* ..........................................................................................

*(4)* ..........................................................................................

*(5)* ..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32 உரிச்சொல்

பொருளின் குணப்பண்பினையும் தொழிற் பண்பினையும் உணர்த்தி நிற்கும் சொல் **உரிச்சொல்** எனப்படும்.

1. **ஒரு குணந்தழுவிய உரிச்சொற்கள்.**

சால, உறு, தவ, நனி, கூர், கழி

2. **பல குணந்தழுவிய உரிச்சொல்**

கடி - கடி எனும் உரிச்சொல் காவல், கூர்மை, வாசனை, அச்சம், வேகம், மிகுதி, புதுமை, ஒலி, சிறப்பு, கரிப்பு என பல குணந்தழுவி வருகின்றது.

# 33 இணைப்பிடைச்சொல்

வாக்கிய இணைப்புக்கு பயன்படும் இடைச்சொற்கள் **இணைப் பிடைச் சொற்கள்** எனப்படும். இது மூன்று வகைப்படும்.

(1) உம்

(2) அல்லது, இல்லையென்றால், ஓ, ஆவது, ஆ

(3) ஆனால், ஆகவே

(1) **உம்**

★ நான் சென்றேன்
அவன் சென்றான்.

★ நானும் அவனும் சென்றோம்.

(2) **அல்லது, இல்லையென்றால், ஆ, அவது, ஓ**

★ அவன் பால் குடிப்பான்.

★ அவன் தேநீர் குடிப்பான்.

அவன் பால் இல்லையென்றால் தேநீர் குடிப்பான்.
அவன் பாலா,தேநீரா? குடிப்பான்.
அவன் பாலாவது தேநீராவது குடிப்பான்.
அவன் பாலோ தேநீரோ குடிப்பான்.

(3) 1. **ஆனால்**

★ அவன் விளையாடுவான்.

★ அவன் படிக்கமாட்டான்.

★ அவன் விளையாடுவான் **ஆனால்** படிக்கமாட்டான்.

2. **ஆகவே**

அவன் படிப்பான்.
அவன் பரீட்சையில் சித்தியடைவான்.
அவன் படிப்பான் **ஆகவே** பரீட்சையில் சித்தியடைவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என, என்று, மற்றும், தோறும், மட்டும், இனி, முன், பின், ஆவது, ஆயினும், தான், கூட, ஆம், யாரும், எதுவும், போன்ற இணைப்பிடைச் சொற்களைக் கொண்டு வாக்கியம் எழுதிப்பாருங்கள்.**

# 34 முன்னொட்டுக்களும் பின்னொட்டுக்களும்

தமிழ் சொல்லாக்கத்தில் முன்னொட்டுக்களும் பின்னொட்டுகளும் இணைந்த சொல்லாக்கம் பெறுகின்றன.

(i) **முன்னொட்டுகள்**

அ - அநீதி (நீதி)
- அநியாயம் (நியாயம்)

அவ - அவமானம்
- அவமரியாதை

**அல், மறு, அ, பிர, சுய, போன்ற முன்னொட்டுக்களைக் கொண்டு உருவான சொற்களை அறிந்து கொள்ளுங்கள்.**

(ii) **பின்னொட்டுகள்**

காரன் - வேலைக்காரன் (வேலை + காரன்)
- பாற்காரன் (பால் + காரன்)
- வீட்டுக்காரன் (வீடு + காரன்).

ஆளி - தொழிலாளி
- கடனாளி

**வாதி, மார், வான், மான், மை, பாடு, ஈடு, கோள், அம், படை, உறை போன்ற பின்னொட்டுக்களை கொண்டு உருவான சொற்களை அறிந்து கொள்ளுங்கள்.**

**முன்னொட்கள், பின்னொட்டுக்களைக் கொண்டு சொற்களை உருவாக்குங்கள்.**

| முன்னொட்கள் | பின்னொட்டுக்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 17

### பகுதி - 1

☆ **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. உண்டனன் என்பதைப் பிரித்து எழுதினால்
(1) உண் + ட் + ஆன் (2) உண் + ட் + ஆன் + ஆன்
(3) உண் + ட் + அன் + அன் (4) ஊண் + ட் + ஆன் + ஆன்

2. வந்தான் என்பதில் பகுதி
(1) வ (2) வா (3) வந்து (4) ஆன்

3. படித்தனன் என்பதில் இறுதியின் அயலில் நிற்கும் 'அன்'
(1) விகுதி (2) இடைநிலை (3) சந்தி (4) சாரியை

4. பின்வருவன்வற்றுள் பெயர்ப்பகுபதம்
(1) வந்தான் (2) முதலாளி
(3) நட்டான் (4) ஓடினான்

5. புளியங்காய் என்பதில் சாரியை
(1) அம் (2) அங் (3) காய் (4) புளி

6. பின்வருவனவற்றுள் எதிர்மறை இடைநிலை
(1) கின்று, கிறு (2) த், ற்
(3) ஆ, மாட்டு, ஆத் (4) ப், வ்

7. நடந்தனன் என்பதில் விகாரம்
(1) த் (2) ந் (3) அன் (4) ஆன்

8. வெற்றி என்பதில் விகுதி
(1) ற் (2) றி (3) இ (4) ற்றி

9. பெயர்ச் சொல்லின் சிறப்பிலக்கணமாக அமையக் கூடியது
(1) திணை, பால், எண், இடம் உணர்த்தல்.
(2) காலம் காட்டுதல்
(3) வேற்றுமை உருபை ஏற்றல்
(4) பகுபதமாக மட்டும் இருக்கக்கூடியது.

10. பின்வருவன்றறுள் தொழிற் பெயர்
(1) ஓடுதல் (2) நாடு (3) படி (4) கலைஞர்

11. வந்தவனைக் கண்டேன். இவ்வாக்கியத்தில் வந்தவன் என்பது
(1) தொழிற் பெயர் (2) வினையாலணையும் பெயர்
(3) கூட்டுப் பெயர் (4) ஆக்கப் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பின்வருவனற்றுள் உயர்திணை ஆண் பால் படர்கை ஒருமையாக வரக்கூடிய சொல்
(1) நீ (2) பாடசாலை (3) கண்ணன் (4) நாம்

13. பொதுப்பாலினை ஆண்பாலுக்குரியதா பெண் பாலுக்குரியதா என காணும் முறை
(1) சொற்களைக் கொண்டு
(2) விகுதியினைக் கொண்டு
(3) முற்றுப் பெறுகின்ற வினையின் மூலம்
(4) பொதுப்பாலின் பகுதியின் மூலம்

14. பின்வருவனவற்றுள் காரண இடுக்குறிப் பெயராக அமையக் கூடியது
(1) மண்வெட்டி (2) வானொலி
(3) பாக்கு வெட்டி (4) கடல்

15. தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு மூலதனம் முக்கியமானதாகும் இங்கு மூலதனம் என்பது
(1) தொழிற் பெயர் (2) ஆக்கப் பெயர்
(3) கூட்டுப் பெயர் (4) வினையாலணையும் பெயர்

16. தொலைக்காட்சி மூலம் மக்கள் பல்றே நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இங்கு தொலைக்காட்சி என்பது
(1) ஆக்கப் பெயர் (2) கூட்டுப் பெயர்
(3) தொழிற் பெயர் (4) வினையாலணையும் பெயர்

17. பொங்கல் உண்டான் என்பது
(1) குணவாகுபெயர் (2) சினையாகு பெயர்
(3) தொழிற் பெயர் (4) வினையாலணையும் பெயர்

18. பின்வருவனவற்றுள் பெயராகவும் வினையாகவும் வரக்கூடிய சொல்
(1) நட (2) வா (3) ஓடு (4) போ

19. பண்பையும் பொருளையும் இணைக்காமல் பொதுப் பெயரோடு சிறப்புப்பெயரோ, சிறப்புப்பெயரோடு பொதுப் பெயரோ ஒரு பொருள் தரும் வகையில் இணைந்து நிற்பது
(1) உவமைத் தொகை
(2) உம்மைத் தெகை
(3) அன் மொழித் தொகை
(4) இருபெயரொட்டு பண்புத் தொகை

20. பின்வருவனவற்றுள் இருபெயரொட்டுப் பண்புத் தொகை **அல்லாதது**
(1) கவிஞர் கண்ணன் (2) சாரைப்பாம்பு
(3) வைத்தியர் ராஜா (4) கருங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. நடந்த சிறுவன் என்பது
(1) பெயரெச்சத்தொடர் (2) வினையெச்சத்தொடர்
(3) விளித்தொடர் (4) எழுவாய்த்தொடர்

22. தலை வணங்கினான் என்பது
(1) வினைத்தொகை (2) வேற்றுமைத்தொகை
(3) பண்புத்தொகை (4) உவமைத்தொகை

23. ஒரு எழுவாயைத் தொடர்ந்து பயனிலைச் சொல்லொன்று இயல்பாகவே தொடர்ந்து வருவது
(1) விளித்தொடர் (2) வேற்றுமைத்தொடர்
(3) வினையெச்சத்தொடர் (4) எழுவாய்த்தொடர்

24. தீவாளி என்பதன் திருத்திய வடிவம்
(1) தீவாலி (2) தீபாவலி (3) தீபாவளி (4) தீபாவழி

25. கம்பனால் பாடப்பட்டது என்பது
(1) முதலாம் வேற்றுமை (2) மூன்றாம் வேற்றுமை
(3) ஆறாம் வேற்றுமை (4) எட்டாம் வேற்றுமை

26. என்னுடன் வந்தான் என்பது
(1) எழுவாய் வேற்றுமை (2) கருவி வேற்றுமை
(3) விளி வேற்றுமை (4) உடனிகழ்ச்சி வேற்றுமை

27. பின்வருவனவற்றுள் தற்கிழமை **அல்லாதது**
(1) மரத்தினது கிளை (2) எனது கை
(3) பூவினது வாசம் (4) எனது புத்தகம்

28. கண்ணனைப் பார்க்கிலும் சிறந்தவன். இதிலுள்ள வேற்றுமை
(1) ஐந்தாம் வேற்றமை (2) ஆறாம் வேற்றுமை
(3) ஏழாம் வேற்றுமை (4) எட்டாம் வேற்றுமை

29. உடனிகழ்ச்சி வேற்றுமை தற்காலத்தில் வரக்கூடிய பொருள்
(1) அனுபவப்பேறு (2) எல்லைப் பொருள்
(3) வினையடை ஆக்கி (4) வீதம்

30. பின்வரும் உருபுகளில் நடைமுறை வழக்கில் கையாளப்படுவது
(1) ஒடு (2) ஓடு (3) ஆது (4) ஆன்

31. இன் உருபுக்கு பதிலாக பயன்படுத்தக் கூடிய உருபு
(1) அது (2) ஒடு (3) ஐ (4) இல்

32. விழுந்த சிறுவனைத் தூக்கினேன். இங்கு விழுந்த என்பது
(1) பெயரெச்சம் (2) வினையெச்சம்
(3) முற்று (4) தெரிநிலை வினைமுற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. பின்வருவனற்றுள் செயற்படுபொருள் குன்றிய வினை
(1) படித்தான் (2) பார்த்தான்
(3) எடுத்தான் (4) சிரித்தான்

34. நடந்தேன் என்பது
(1) செய்வினை (2) செயப்பாட்டுவினை
(3) பிறவினை (4) குறிப்புவினை

35. பின்வருவனவற்றுள் தன்வினைப் பகுதிகளைப் பிறவினைப் பகுதிகளாகப் மாற்றக்கூடிய விகுதி
(1) கு,டு (2) க,கு (3) வி,ச (4) து,த

36. பின்வருவனவற்றுள் வியங்கோள்வினை
(1) நில் (2) படித்தான் (3) செய்க (4) கண்டான்

37. வடையும் தோசையும் சாப்பிட்டான். இங்கு உம் இடைச்சொல் வந்துள்ள பொருள்
(1) ஆக்கம் (2) முற்று
(3) எச்சம் (4) எண்

38. பொன்னோ பொருளோ இதில் ஓகார இடைச்சொல் வந்துள்ள பொருள்
(1) வினா (2) உயர்வு (3) தெரிநிலை (4) பிரிநிலை

39. கடிமாலை சூடினாள். இங்கு கடி என்னும் உரிச் சொல் உணர்த்தும் பொருள்
(1) மிகுதி (2) கூர்மை (3) காவல் (4) வாசனை

40. கடிநகர் என்பதில் கடி என்னும் உரிச் சொல் உணர்த்தும் பொருள்
(1) கூர்மை (2) காவல் (3) புதுமை (4) வேகம்

41. ஓடுமின் ஓட உறுமீன் வருமளவு.உறுமீன் என்னும் உரிச் சொல் உணர்த்தும் பொருள்
(1) சிறிய (2) பெரிய (3) அழகிய (4) பெறிய

42. பின்வருவனவற்றுள் இறந்தகால இடைநிலை
(1) ப் (2) த் (3) வ் (4) கிறு

43. பின்வருவனவற்றுள் பெயரிடை நிலை
(1)த் (2) ஞ் (3) ந் (4) வ்

44. முதலாளித்துவம் எனும் சொல்
(1) கூட்டுப் பெயர் (2) தொழிற் பெயர்
(3) ஆக்கப் பெயர் (4) வினையாலணையும் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. வினையடி + ஆத் + ஏ என்னும் அமைப்புடைய வினைமுற்று
(1) உடன்பாட்டு ஏவல் ஒருமை வினைமுற்று
(2) உடன்பாட்டு ஏவல் பன்மை வினைமுற்று
(3) எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று
(4) எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்று

46. 'கட்டிடம் என்னால் கட்டப்பட்டது' இவ்வாக்கியம்
(1) செய்வினை (2) செயப்பாட்டு வினை
(3) பிறவினை (4) தன்வினை

47. கமலன் உறுபசியால் வாடினான். இவ்வாக்கியத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள உரிச் சொல்.
(1) கமலன் (2) வாடினான் (3) பசி (4) உறு

48. கடிமாலையினை கடவுளுக்கு சாத்தினான். இங்கு கடி என்னும் உரிச் சொல் வெளிப்படுத்தப்படும் பொருள்
(1) வாசனை (2) கூர்மை (3) பாதுகாப்பு (4) வேகம்

49. பின்வருவனவற்றுள் வியங்கோள் வினைமுற்று விகுதி **அல்லாதது**
(1) க (2) இயர் (3) அட்டும் (4) மை

50. பின்வருவனவற்றுள் பிறவினை
(1) நடந்தான் (2) படித்தான்
(3) உருட்டினான் (4) ஆடினான்

51. வினையடி + கால இடைநிலை + படர்க்கை இடப்பெயர் எனும் அமைப்பைக் கொண்டது
(1) தொழிற் பெயர் (2) ஆக்கப்பெயர்
(3) ஏவல் வினை (4) வினையாலணையும் பெயர்

52. உயரத்தில் பறந்தது என்னுடைய பறவையாகும். இங்கு பறந்தது என்பது
(1) ஆக்கப் பெயர் (2) தொழிற்பெயர்
(3) வினைமுற்று (4) வினையாலணையும் பெயர்

53. அவன் ஓடியது நல்லது. இங்கு ஓடியது என்பது
(1) வினையாலணையும் பெயர் (2) தொழிற்பெயர்
(3) ஆக்கப்பெயர் (4) வினைமுற்று

54. பின்வரும் கூட்டு வினையமைப்பில் **பொருத்தமற்றது**
(1) வினை + பெயர் (2) பெயர் + வினை
(3) வினை + வினை (4) இடை + வினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. தற்காலத்தில் அட்டும் எனும் விகுதி **இணையாத** வியங்கோள் வினைமுற்றின் பொருள்

(1) வாழ்த்தல் (2) வைதல் (3) வேண்டுதல் (4) விருப்பு

56. வியங்கோள் வினைமுற்றின் விகுதி **அல்லாதது**

(1) க, இய (2) இய, இயர் (3) க, அட்டும் (4) க, மை

57. 'நீடுழி வாழ்க! இங்கு 'வாழ்க' என்பது

(1) ஏவல் வினைமுற்று (2) வியங்கோள் வினை முற்று

(3) உடன்பாட்டு ஏவல் வினைமுற்று (4) செயப்பாட்டு வினை

58. சுடு நீரை நன்றாகப் பருகினான். இவ்வாக்கியத்தில் சுடுநீர் என்பது

(1) தொழிற் பெயர் (2) கூட்டுப்பெயர்

(3) கூட்டுவினை (4) ஆக்கப் பெயர்

59. ஏவல் வினைமுற்றின் அமைப்புக்கு **பொருத்தமற்றது**

(1) வினையடி+ ங்கள் / உங்கள்

(2) வினையடி+ கால இடைநிலை+ அது

(3) வினையடி+ ஆத் + ஏ

(4) வினையடி+ ஆத்+ஈர்கள்

60. நீங்கள் யாரும் அங்கு செல்லாதிர்கள். இவ்வாக்கியத்தல் செல்லாதீர்கள் என்பது

(1) உடன்பாட்டு ஏவல் ஒருமை

(2) உடன்பாட்டு ஏவல் பன்மை

(3) எதிர்மறை ஏவல் ஒருமை

(4) எதிர்மறை ஏவல் பன்மை

61. எவதிர் கால பெயரெச்சமும் எதிர்கால அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் வினைமுற்றும் கொண்ட ஒரு சொல்

(1) பறக்கும் (2) ஓடு (3) நட (4) படி

62. பின்வருவனவற்றில் பெயரெச்சத்தின் அமைப்பு

(1) வினையடி+ கால இடைநிலை + அது

(2) வினையடி+ கால இடைநிலை+ மை

(3) வினையடி+ கால இடைநிலை+ அ

(4) வினையடி+ கால இடைநிலை+படர்கைப் இடப்பெயர்

63. கண்ணன் படித்து முடித்தான். இங்கு படித்து என்பது

(1) பெயரெச்சம் (2) வினையெச்சம்

(3) ஏவல் வினை முற்று (4) வியங்கோள் வினைமுற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ **இடைவெளிக்கு வரவேண்டிய பொருத்தமான இணைப்பிடைச் சொல்லை அறிந்து கோடிடுக.**

64. சாப்பிட்ட ............................................ வீட்டிற்குப் போகலாம்.
(1) முன் (2) இனி (3) எதுவும் (4) பின்

65. மரங்கள்.................................கொடிகள் கட்டப்பட்டிருந்தன.
(1) உம் (2) கூட (3) தோறும் (4) மற்றும்

66. தண்ணீர் ............................................ கிடைத்தால் போதுமானது.
(1) என (2) ஆவது (3) தான் (4)அல்லது

67. சிறிது ............................................ எம்மை அவன் நினைக்கவில்லை.
(1) தான் (2) பின் (3) கூட (4) என்று

68. அவனை பார்க்கும் ............................................ எதனையும் கூறாதே.
(1) பின் (2) கூட (3) முன் (4) மற்றும்

69. சேது படிப்பான் ............................................ நான் சிறிதும் நினைக்கவில்லை.
(1) என (2) எதுவும் (3) ஆயினும் (4) கூட

70. நீ படிக்கவில்லை ..................................... பண்பாக நடந்துகொள்.
(1) தான் (2) ஆயினும் (3) கூட (4) தோறும்

☆ **பொருத்தமான விடையை தருக.**

71. கண்ணன் புதிய புத்தகத்தை வாங்கினான். இங்கு புதிய என்பது
(1) தனிப்பெயரடை (2) ஆக்கப்பெயரடை
(3) தனிவினையடை (4) கூட்டுவினையடை

72. அது மிகவும் நல்ல புத்தகம். இங்கு நல்ல என்பது
(1) தனி வினையடை (2) கூட்டு வினையடை
(3) தனிப் பெயரடை (4) ஆக்கப் பெயரடை

73. உயரமான கட்டிடத்தில் ஏறினான். இங்கு உயரமான என்பது
(1) தனிப் பெயரடை (2) ஆக்கப் பெயரடை
(3) தனி வினையடை (4) கூட்டு வினையடை

74. பாரமுள்ள பொதியினை சுமந்து வந்தான். இங்கு பாரமுள்ள என்பது
(1) தனிவினையடை (2) தனிப்பெயரடை
(3) ஆக்கப்பெயரடை (4) கூட்டுவினையடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. தம்பி அடிக்கடி வந்தான் இவ்வாக்கியத்தில் அடிக்கடி என்பது
(1) தனிவினையடை (2) ஆக்கப்பெயரடை
(3) தனிப்பெயரடை (4) கூட்டுவினையடை

76. பாம்பு மெதுவாக ஊர்ந்தது. மெதுவாக என்பது
(1) தனிப்பெயரடை (2) கூட்டுவினையடை
(3) தனிவினையடை (4) ஆக்கப்பெயரடை

77. நாய்க்குட்டி வேகமாய் ஓடியது. வேகமாய் என்பது
(1) கூட்டு வினையடை (2) தனி வினையடை
(3) ஆக்கப் பெயரடை (4) தனிப் பெயரடை

78. உள்ளம் படபட வென்று அடித்தது. படபட வென்று என்பது
(1) தனி வினையடை (2) ஆக்கப் பெயரடை
(3) கூட்டு வினையடை (4) தனிப் பெயரடை

79. பின்வருவனவற்றுள் முன்னொட்டு
(1) மார் (2) வாதி (3) சுய (4) மான்

80. பின்வருவனவற்றுள் பின்னொட்டு
(1) அ (2)பிர (3) அல் (4) அம்

## வினாத்தாள் – 17
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 3 | (2) - 2 | (3) - 4 | (4) - 2 | (5) - 1 |
| (6) - 3 | (7) - 2 | (8) - 3 | (9) - 3 | (10) - 1 |
| (11) - 2 | (12) - 3 | (13) - 3 | (14) - 2 | (15) - 2 |
| (16) - 2 | (17) - 4 | (18) - 3 | (19) - 4 | (20) - 4 |
| (21) - 1 | (22) - 2 | (23) - 4 | (24) - 3 | (25) - 2 |
| (26) - 4 | (27) - 4 | (28) - 1 | (29) - 3 | (30) - 2 |
| (31) - 4 | (32) - 1 | (33) - 4 | (34) - 1 | (35) - 1 |
| (36) - 3 | (37) - 4 | (38) - 1 | (39) - 4 | (40) - 2 |
| (41) - 2 | (42) - 2 | (43) - 2 | (44) - 3 | (45) - 3 |
| (46) - 2 | (47) - 4 | (48) - 1 | (49) - 4 | (50) - 3 |
| (51) - 4 | (52) - 4 | (53) - 2 | (54) - 1 | (55) - 3 |
| (56) - 4 | (57) - 2 | (58) - 3 | (59) - 2 | (60) - 4 |
| (61) - 1 | (62) - 3 | (63) - 2 | (64) - 4 | (65) - 3 |
| (66) - 2 | (67) - 3 | (68) - 3 | (69) - 1 | (70) - 2 |
| (71) - 1 | (72) - 3 | (73) - 2 | (74) - 3 | (75) - 1 |
| (76) - 2 | (77) - 1 | (78) - 3 | (79) - 3 | (80) - 4 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 சொற்றொடரும் வாக்கியமும்

**1. சொற்றொடர்**

சொற்கள் பொருள் படத்தொடர்ந்து கருத்து முற்றுப்பெறாது நிற்கும் தொடர் மொழி **சொற்றொடர்** எனப்படும்.

(உ +ம்) நான் ஓடி

**2. வாக்கியம்**

சொற்கள் பொருள் படத்தொடர்ந்து கருத்து முற்றுப் பெற்று நிற்கும் தொடர் மொழி **வாக்கியம்** எனப்படும்.

(உ +ம்) நான் ஓடி விளையாடினேன்.

**3. வாக்கிய உறுப்புகள்**

(i) **பயனிலை**

கருத்து முற்றுப் பெற்று நிற்கும் இடம் பயனிலையாகும்.

(உ +ம்) நான் **வந்தேன்.**

(ii) **எழுவாய்**

வாக்கியம் ஒன்றில் கருத்து ஆரம்பிக்கும் இடம் எழுவாயாகும். பயனிலையோடு எது? எவை? யார்? எனும் வினாக்களைக் கேட்பதன் மூலம் அறியலாம்.

(உ +ம்) நேற்றுமழை பெய்தது.
எது பெய்தது?
**மழை** - எழுவாய்

(iii) **செயற்படுபொருள்**

வினையின் பயனையுறுத்துவது **செயப்படுபொருள்** என அழைக்கப்படும். இது இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்று நிற்கும்.

(உ +ம்) நான் **வீட்டைக்** கட்டினேன்.

**4. வாக்கியத்துணை உறுப்புக்கள்**

வாக்கியத்துணை உறுப்புகளாக அடைமொழிகள் அமைகின்றன. அடைமொழி என்பது ஒரு சொல்லை சிறப்பித்துக் கூறுவது என்பதாகும். இது

(i) எழுவாய் அடைமொழி }
(ii) செயப்படு பொருள் அடைமொழி } பெயரடை
(iii) பயனிலை அடைமொழி — வினையடை

என மூன்று வகைப்படும்

**ஒரு சொல்லுடன் எப்படி? அல்லது எப்படிப்பட்ட? என வினா எழுப்புவதன் மூலம் அடைமொழியினை அறியலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ +ம்) நீல வானத்தில் வட்ட நிலா நீந்தி வந்தது.

எழுவாய் அடைமொழி :- எப்படிப்பட்ட நிலா? வட்டம்.

செயப்படுபொருள் அடைமொழி :-எப்படிப்பட்ட வானம்? நீலம்

பயனிலை அடைமொழி :- எப்படி வந்தது? நீந்தி

**எழுவாய் அடைமொழியும் செயப்படுபொருள் அடைமொழியும் பெயரடையாகும். பயனிலை அடைமொழி வினையடையாகும்.**

## 5. வாக்கிய வகைகள் I

வாக்கியங்களை அவை வெளிப்படுத்தும் கருத்திற்கேற்ப பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

(i) கூற்று வாக்கியம் (ii) வினா வாக்கியம்
(iii) விருப்பு வாக்கியம் (iv) மெய்பாட்டு வாக்கியம்

### (i) கூற்று வாக்கியம்

ஏதேனும் செய்தியைக் கூறுவதாக அமையும் வாக்கியம் **கூற்று வாக்கியம்** எனப்படும்.

(உ +ம்) நான் பாடலைப் பாடினேன்.

### (ii) வினா வாக்கியம்

ஒரு வினாவை எழுப்புவதாக அமையும் வாக்கியம் **வினாவாக்கியம்** எனப்படும்.

(உ +ம்) நீ எங்கு சென்றாய்

### (iii) விருப்பு வாக்கியம்

இரு வகைப்படும்.

**(அ) ஏவல் வாக்கியம்**

ஒருவருக்கு ஒரு செயலை செய் அல்லது செய்யாதே என கட்டளையிடும் வாக்கியம் **ஏவல் வாக்கியம்** எனப்படும்.

(உ +ம்) நீ நன்றாகப் படி

**(ஆ) வியங்கோள் வாக்கியம்**

வாழ்த்தல், வைதல், வேண்டுதல், விதித்தல் எனும் நான்கு பொருளினையும் கொண்டு அமையும் வாக்கியம் **வியங்கோள் வாக்கியம்** எனப்படும். இது க, இய, இயர் எனும் விகுதிகளை ஏற்று வரும்.

(உ +ம்)
**வாழ்த்தல்** - வாழ்க
**வைதல்** - ஒழிக
**வேண்டுதல்** - தருக
**விதித்தல்** - செய்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) **மெய்பாட்டு வாக்கியம்**

ஒருவரது உணர்ச்சியை வெளிகாட்டுவதாக அமையும் வாக்கியம் **மெய்ப்பாட்டு வாக்கியம்** அல்லது **உணர்ச்சி வாக்கியம்** எனப்படும்.

*(உ +ம்) ஆகா! என்ன அழகு!*
*ஐயோ பாவம்!*

**6. வாக்கிய வகைகள் II**

வாக்கியங்களை அவற்றின் அமைப்பின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

(i) தனிவாக்கியம் (ii) தொடர் வாக்கியம்
(iii) கூட்டு வாக்கியம் (iv) கலப்பு வாக்கியம்

(i) **தனிவாக்கியம்**

ஓர் எழுவாயையும் ஒரு பயனிலையையும் கொண்டு அமையும் வாக்கியம் **தனிவாக்கியம்** எனப்படும்.

*(உ +ம்) கண்ணன் பாடல் பாடினான்.*

(ii) **தொடர்வாக்கியம்**

ஒரு எழுவாயின் பல செயல்களில் ஒரே ஒரு செயல் மாத்திரம் முற்றுப்பெற்று நிற்பது **தொடர்வாக்கியம்** எனப்படும்.

*(உ +ம்) அவன் கடைக்குச் சென்று பொருட்களைப் பெற்று பணத்தைக் கொடுத்தான்.*

(iii) **கூட்டுவாக்கியம்**

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்களையும் பல பயனிலைகளையும் நெருங்கிய தொடர்புடன் கொண்டமைகின்ற வாக்கியம் **கூட்டு வாக்கியம்** எனப்படும்.

*(உ+ம்) நான் பாடசாலைக்குச் சென்றேன்; பாடத்தைப் படித்தேன் ; வீட்டுக்குத் திரும்பினேன்.*

(iv) **கலப்புவாக்கியம்**

தலைமை வாக்கியத்தோடு ஒரு சார்பு வாக்கியமோ அல்லது பல சார்பு வாக்கியங்களோ சேர்ந்து வருவது **கலப்புவாக்கியம்** எனப்படும்.

*(உ+ம்) நாளை விடுமுறை தினம் என அதிபர் கூறினார்.*

*தலைமைத்தொடர் - அதிபர் கூறினார்*
*சார்புத் தொடர் - நாளை விடுமுறை தினம்*
*நிரப்பித்தொடர் - என*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் - 18

## பகுதி - 1

☆ **பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.**

1. நீ அந்த வேலையை செய். இவ்வாக்கியம்
   (1) கூற்று வாக்கியம் (2) வினா வாக்கியம்
   (3) ஏவல் வாக்கியம் (4) வியங்கோள் வாக்கியம்

2. நாளை இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்தது இவ்வாக்கியம்.
   (1) கூட்டு வாக்கியம் (2) கலப்பு வாக்கியம்
   (3) தனி வாக்கியம் (4) தொடர் வாக்கியம்

3. தனி வாக்கியங்களை தொடர் வாக்கியங்களாக மாற்றும் போது பின்பற்றக் கூடிய விதிகள் **அல்லாதது.**
   (1) எண்ணுமைச் சேர்த்தல்
   (2) எச்சங்களை வினை முற்றாக்கள்.
   (3) வேற்றுமை உருபுகளைச் சேர்த்தல்.
   (4) அடைமொழியாக்கள்.

4. நீ நீடுழி வாழ்க! என்பது
   (1) கூற்று வாக்கியம் (2) கூட்டு வாக்கியம்
   (3) உணர்ச்சி வாக்கியம் (4) வியங்கோள் வாக்கியம்

5. தம்பி புத்தகத்தை எடுத்து பாடத்தை வாசித்தான். இவ்வாக்கியம்
   (1) கூட்டு வாக்கியம் (2) தொடர் வாக்கியம்
   (3) கலப்பு வாக்கியம் (4) தனி வாக்கியம்

6. நன்றாகப் படித்தான். இதில் தோன்றா எழுவாய்
   (1) நீ (2) நான் (3) அவன் (4) நாம்

7. பின்வருவனவற்றில் தோன்றாப் பயனிலையினைக் கொண்டமைந்த வாக்கியம்
   (1) சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.
   (2) இக்கரை மாட்டிற்கு அக்கரைப் பச்சை.
   (3) ஆனைக்கும் அடி சறுக்கும்.
   (4) நிறைகுடம் தளும்பாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மெதுவாக பேசினான். இங்கு மெதுவாக என்பது
(1) எழுவாய் அடை மொழி
(2) செயப்படு பொருள் அடை மொழி
(3) பயனிலை அடை மொழி
(4) பெயரடை

9. பின்வருவனவற்றுள் கூற்றுவாக்கியம்
(1) நீ படி. (2) ஆகா! அழகு!
(3) அவன் வந்தான். (4) நீ வாராதே.

10. பின்வருவனவற்றுள் வியங்கோள் விகுதி **அல்லாதது**
(1) த (2) க (3) இய (4) இயர்

**வினாத்தாள் - 18**
**விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 3 | (2) - 2 | (3) - 2 | (4) - 4 | (5) - 2 |
| (6) - 3 | (7) - 2 | (8) - 3 | (9) - 3 | (10) - 1 |

☆ **கலப்பு வாக்கியங்கள் ஐந்தினைத் தந்து அவற்றில் உள்ள தலைமைத் தொடர், சார்புத்தொடர்களினைத் தருக.**

......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36 வழுவும் வழாநிலையும் வழுவமைதியும்

**1. வழுக்கள்**

தொன்று தொட்டுக் கூறப்பட்டு வந்த இலக்கண மரபுக்கு மாறாக வாக்கியங்களை பிழையாக எழுதுவது **வழுக்கள்** எனப்படும்.

(i) திணைவழு - ஒரு திணைச் சொல்லை மற்றொரு திணையால் சொல்வது.

(உ +ம்) - பாமா வந்தது.
வழாநிலை - பாமா வந்தாள்.

(ii) பால்வழு - ஒரு பாற் சொல்லை வேறொரு பாற் சொல்லால் சொல்வது.

(உ +ம்) - அவன் சென்றாள்.
வழாநிலை - அவன் சென்றான்.

(iii) எண்வழு - ஒருமைச் சொற்களை பன்மைச் சொற்களோடு பன்மைச் சொற்களை ஒருமைச் சொற்களோடும் மாற்றிக் கூறுவது.

(உ +ம்) - மான்கள் ஓடியது.
வழாநிலை - மான்கள் ஓடின.

(iv) இடவழு - தன்மை, முன்னிலை, படர்க்கை எழுவாய்கள் வரும் வாக்கியங்களில் பயனிலை இடங்களை மாற்றிக் கூறுதல்.

(உ +ம்) - நீ சென்றான்.
வழாநிலை - நீ சென்றாய்.

(v) காலவழு - ஒரு காலத்துக்குரிய சொல்லை பயனிலையில் வேறொரு காலத்தில் இணைத்தல்

(உ +ம்) - நாளை வந்தேன்.
வழாநிலை - நாளை வருவேன்.

(vi) வினாவழு - வினாவைப் பொருள் இயல்பு இல்லாமல் வழங்குதல்.

(உ +ம்) - "நாளை என்ன கிழமை" என்று கேட்க, நான் ஊருக்குப் போகிறேன் என்று கூறுதல்.
வழாநிலை - நாளைய கிழமையைக் கூறல்.

(vii) விடைவழு

(உ +ம்) - முக்கனிகள் மூன்றும் எவை?
வழாநிலை - முக்கனிகள் எவை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(viii) மரபுவழு - தொன்று தொட்டு வழங்கி வரும் வழக்கிற்கு மாறாகக் கூறல்.

(உ +ம்) - சோளத்தின் சினைப்பெயர் இலை என்று கூறுவது.

வழாநிலை - சோளத்தின் சினை தோகை

**2. வழாநிலைகள்**

வாக்கியங்கள் இலக்கண விதிக்கு ஏற்ப அமைவது **வழாநிலைகள்** எனப்படும். வழாநிலைகள் தொடர்பாக பின்வரும் விதிகள் காணப்படுகின்றன.

(i) எழுவாயாக ஆண்பாலும், பெண்பாலும் வருமாயின் பயனிலை பலர்பாலில் வரும்.

(உ +ம்) - கமலனும் மல்லிகாவும் வந்தார்கள்.

(ii) எழுவாயாக ஒன்றுக்கு மேற்பட்ட அஃறிணைப் படர்க்கைப் பெயர்கள் வருமானால் பயனிலை பலவின் பாலில் வரும்.

(உ +ம்) - சிங்கமும் கரடியும் வந்தன.

(iii) எழுவாயாக முன்னிலை பெயரும் படர்க்கைப் பெயரும் அடுக்கி வந்தால் பயனிலை முன்னிலைப் பன்மையாக வரும்.

(உ +ம்) - நீயும் அவனும் வந்தீர்கள்.

(iv) எழுவாயாக தன்மைப் பெயரோடு முன்னிலைப் பெயரும் படர்க்கைப் பெயரும் அடுக்கி வந்தால் பயனிலை தன்மைப் பன்மையாக வரும்.

(உ +ம்) - நானும் நீயும் அவனும் செல்வோம்.

(v) (அ) திணையில் சந்தேகம் ஏற்பட்டால் "உருவு", "வடிவு" போன்ற பொதுச் சொற்களைப் பயன்படுத்தலாம்.

(உ+ம்) - சிலையா சிறுமியா அங்கே தோன்றுகின்ற உரு?

☆ அது சிலையாக இருப்பின்.
அவ்வுரு சிறுமியன்று, சிலை என்று விடை வரும்.

☆ அவள் சிறுமியென்றாள்.
அவள் சிலையல்லள், சிறுமி என்று விடை வரும்.

(ஆ) உயர்திணையில் ஐயந்தோனறினால் உயர்திணைப் பன்மைச் சொல்லைப் பயன்படுத்தலாம்.

(உ+ம்) - மகனோ மகளோ அங்கே தோன்றுகின்றவர்?

☆ மகனாக இருப்பின் விடை.
அங்கே தோன்றுகின்றவன் மகளல்லன், மகன் என்று வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ மகளாக இருப்பின் விடை?
அங்கே தோன்றுகின்றவள் மகனல்லன், மகள் என்று வரவேண்டும்.

(இ) அஃறிணைப பாலில் ஐயந்தோன்றினால் பால்பகா அஃறிணைச் சொல்லைப் பயன்படுத்த முடியும்.

(உ+ம்) - ஒன்றோ பலவோ வயலில் நிற்கும் நாய்?
☆ விடை ஒன்றாக இருப்பின்.
நாய் பலவன்று ஒன்று என விடை வரவேண்டும்.
☆ விடை பலவாக இருப்பின்.
நாய் ஒன்றல்ல பல என விடை வரவேண்டும்.

**3. வழுவமைதி**

இலக்கண வரம்பினை மீறியதாக இருந்தாலும் அவற்றிற்கு அமைதி கூறி இலக்கணமாக ஏற்றுக்கொள்ளும் நிலை உண்டு. மகிழ்ச்சி, உயர்வு,சிறப்பு, கோபம், இழிவு காரணமாக இலக்கண விதி மீறப்படுகின்றது.

(i) திணை வழுவமைதி - "இவன் ஒரு நாய்" என கோபத்தில் கூறுதல்.

(ii) பால் வழுவமைதி - "என் குட்டிபாப்பா" என மகனை பாசத்தில் அரவணைத்தல்.

(iii) எண் வழுவமைதி - கை இரண்டும் உடைந்தது
☆ கைகள் இரண்டும் உடைந்தன என வர வேண்டும்.

(iv) இடவழுவமைதி - "ராஜா நினைத்தால் முடியாதது எதுவுமில்லை" என்றான் ராஜா.
☆ நான் என்பதற்கு பதிலாக ராஜா என பயன்படுத்தப்பட்டுள்ளது.

(v) கால வழுவமைதி - அவனோடு சேர்ந்தால் கெட்டாய்.
☆ அவனோடு சேர்ந்தால் கெடுவாய் அல்லது கெட்டு விடுவாய் என வர வேண்டும்.

☆ **வழுவமைதி வகைகளுக்கு உதாரணங்கள் குறிப்பிடுக.**

................................................................................................

................................................................................................

................................................................................................

................................................................................................

................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 19

### பகுதி - 1

☆ **பொருத்தமான முடிக்கும் சொற்களை அறிந்து அதன் கீழ் கோடிடுக.**

1. அவன் நேற்று ............................................
   (1) வருவான். (2) வந்தான்.
   (3) வந்தாள். (4) வந்தது.

2. பசுக்கள் எல்லாம் ....................................
   (1) மேய்ந்தான். (2) மேய்ந்தது.
   (3) மேய்ந்தன. (4) மேய்வாள்.

3. நீயும் அவனும் ........................................
   (1) வந்தார். (2) வந்தான்.
   (3) வந்தீர்கள். (4) வந்தோம்.

4. ராஜாவும் ராணியும்..................................
   (1) பாடினான். (2) பாடினார்கள்.
   (3) பாடினாள். (4) பாடுவான்.

5. நானும் நீயும் அவனும் ............................
   (1) படித்தான்? (2) படித்தேன்?
   (3) படித்தோம்? (4) படித்தாள்?

6. கண்ணனா கண்மணியா அங்கே...........................
   (1) நிற்பவர்? (2) நிற்பவள்?
   (3) நிற்பவன்? (4) நிற்பது?

7. மயிலா மல்லிகாவா அங்கே ...........................
   (1) ஆடுவது. (2) ஆடுபவள்.
   (3) அடுபவர். (4) ஆடுகின்ற உரு.

8. தம்பி நாயுடன் ...............................................
   (1) வந்தது. (2) வந்தான்.
   (3) வந்தன. (4) வந்தார்கள்.

9. புலியும் நரியும் ...............................................
   (1) ஓடின. (2) ஓடியது.
   (3) ஓடினார்கள். (4) ஓடுவார்கள்.

10. நானும் கண்ணனும் பாடசாலைக்கு ...............................
    (1) சென்றோம். (2) சென்றேன்.
    (3) சென்றான். (4) செல்லேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ **பொருத்தமான முடிக்கும் சொற்களை அறிந்து அதன் கீழ் கோடிடுக.**

11. பின்வருவனவற்றுள் மரபு வழு
   (1) ஆட்டின் இளையது மறி
   (2) பூனையின் இளையது பறழ்
   (3) யானையின் இளையது குருளை
   (4) எருமையின் இளையது குழவி

12. ஆணா பெண்ணா அங்கே நிற்பவர்? என்ற வினாவுக்கான விடை
   (1) அங்கே நிற்பவன் பெண்ணல்லன்; ஆண்.
   (2) அங்கே நிற்பவர் பெண்ணல்ல; ஆண்.
   (3) அங்கே நிற்பவன் பெண்ணல்லள்; ஆண்.
   (4) அங்கே நிற்பவள் ஆண்ணல்லன்; பெண்.

13. பின்வருவற்றுள் கால வழு
   (1) நாளை வந்தேன். (2) நேற்று படித்தேன்.
   (3) நான் சென்றான். (4) கண்மணி வந்தாள்.

14. கண்ணன் படித்தான் என்பது
   (1) திணை வழு (2) எண் வழு (3) பால் வழு (4) இட வழு

15. மரங்கள் சரிந்தது என்பது
   (1) திணை வழுவமைதி (2) எண் வழுவமைதி
   (3) பால் வழுவமைதி (4) இட வழுவமைதி

16. 'இவன் ஒரு பெண்'என நண்பன் கூறினான். இங்கு இடம் பெற்றுள்ள வழுவமைதி
   (1) திணை வழுவமைதி (2) எண் வழுவமைதி
   (3) பால் வழுவமைதி (4) இட வழுவமைதி

17. பூனையார் கூறினார் என்பது
   (1) திணை வழுவமைதி (2) கால வழுவமைதி
   (3) பால் வழுவமைதி (4) இட வழுவமைதி

☆ **பொருத்தமான வாக்கியத்தினை தெரிவு செய்க.**

18. (1) நண்பனும் நாயும் வந்தார்கள். (2) நாய் நண்பனோடு வந்தான்.
   (3) நண்பன் நாயோடு வந்தது. (4) நண்பன் நாயோடு வந்தான்.

19. (1) ஒன்றோ பலவோ அங்கு நிற்கும் குதிரை?
   (2) ஒன்றோ அல்லது பலவோ அங்கு நிற்கும் குதிரை?
   (3) ஒன்றோ பலவோ அங்கு நிற்கும் குதிரைகள்?
   (4) ஒன்றோ அல்லது பலவோ அங்கு நிற்கும் குதிரைகள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. (1) நாங்கள் அனைவரும் பாடசாலைக்கு வந்தேன்.
(2) நாங்கள் அனைவரும் பாடசாலைக்கு வந்தோம்.
(3) நாங்கள் அனைவரும் பாடசாலைக்கு வந்தாய்.
(4) நாங்கள் அனைவரும் பாடசாலைக்கு வந்தீர்.

## வினாத்தாள் - 19
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 2 | (2) - 3 | (3) - 3 | (4) - 2 | (5) - 3 |
| (6) - 1 | (7) - 4 | (8) - 2 | (9) - 1 | (10) - 1 |
| (11) - 3 | (12) - 1 | (13) - 1 | (14) - 3 | (15) - 2 |
| (16) - 3 | (17) - 1 | (18) - 4 | (19) - 1 | (20) - 2 |

☆ **பின்வருவனவற்றுக்கு உதாரணங்கள் தருக.**

1. கூற்று வாக்கியம் :- ..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

2. ஏவல் வாக்கியம் :- ..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

3. மெய் பாட்டு வாக்கியம் :- ..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

4. வியங்கோள் வாக்கியம் :- ..........................................................
..........................................................
..........................................................
..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37 இயல்பு வழக்கும் தகுதி வழக்கும்

## அ. இயல்பு வழக்கு

எந்த பொருளை உணர்த்த எந்தச் சொல் அமைந்ததோ அந்தச் சொல்லை அந்தப் பொருளால் கூறுவது **இயல்பு வழக்கு** எனப்படும்.

**இயல்பு வழக்கு**

- **இலக்கணமுடையது**
- **இலக்கணப்போலி**
- **மரூஉ**

### 1. இலக்கணமுடையது

சொற்கள் இயல்பாகப் பொருளை உணர்த்தி இலக்கண நெறிக்கு உட்பட்டதாய் அமைவன இலக்கணமுடையவை என அழைக்கப்படும்.

*(உ +ம்)* - மண், நிலம்

### 2. இலக்கணபோலி

இலக்கண முறைக்கு புறம்பாக சொற்கள் அமைந்தாலும் இலக்கணமுடையதைப் போல சான்றோர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தவைகள் **இலக்கணம்** எனப்படும்.

| (உ +ம்) | இலக்கணபோலி | இலக்கணமுடையது |
|---|---|---|
| | நுனிநா | நாநுனி |
| | முன்றில் | இல்முன் |
| | புறநகர் | நகர்புறம் |

### 3. மரூஉ

இயல்பாக வழங்கி வருகின்ற சில சொற்கள் இலக்கணம் சிதைவடைந்தும். சொல்லுருபு கெட்டும் காணப்பட்டாலும் சான்றோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவது மரூஉ ஆகும்.

| (உ +ம்) | மரூஉ | இலக்கணமுடையது |
|---|---|---|
| | ஆடாதொடை | ஆடுதொடாபாலை |
| | தேதி | திகதி |
| | அருமந்த | அருமருந்தன்ன |
| | யார் | யாவர் |
| | ஆணை | யானை |
| | பாண்டிநாடு | பாண்டிய நாடு |
| | திருகோணமலை | திரிகோணமலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. தகுதி வழக்கு

ஒரு விடயத்தை இயல்பான சொல்லால் கூறக்கூடியதாக இருந்தாலும் அது தகுதியன்று எனக்கருதி வேறொரு சொல்லால் கூறுவது **தகுதி வழக்கு** எனப்படும்.

**தகுதி வழக்கு**

**இடக்கரடக்கல்** | **மங்கலம்** | **குழூஉக்குறி**

### 1. இடக்கரடக்கல்

*சபை முன்னிலையில் கூறத்தகாத சொற்களை மறைத்து வேறொரு சொல்லால் சொல்லுதல்* ***இடக்கரடக்கல்*** *எனப்படும்.*

*(உ +ம்) - 1. மலங்கழித்தல் - கொல்லைக்குப் போகுதல்*

*2. சிறுநீர் கழித்தல் - ஒன்றுக்குப் போகுதல்*

### 2. மங்கலம்

*அமங்கலமான விடயத்தை மங்கலமாகக் கூறுதல்* ***மங்கலம்*** *எனப்படும்.*

*(உ +ம்) -*

| அமங்கலம் | மங்கலம் |
|---|---|
| சுடுகாடு | நன்காடு |
| செத்தார் | இறைவனடி சேர்ந்தார் |
| நச்சுப் பாம்பு | நல்ல பாம்பு |
| தாலி அருத்தல் | தாலி பெருக்குதல் |

### 3. குழூஉக்குறி

*ஒரு குழுவினர் தமக்குள் ஒரு விடயத்தைக் குறிக்கும் இயல்பான சொல்லால் சொல்லாது அதனை மறைத்து வேறொரு சொல்லால் கூறுவது* ***குழூஉக்குறி*** *எனப்படும்.*

*(உ +ம்) - 1. குறிப்பிட்ட சில குழுவினர் கள்வனை புறாக்குஞ்சு எனக்கூறுதல்.*

*2. அந்தணர்கள் தோசையை சர்க்கரைத்தாழ்வான் என கூறுதல்.*

*3. தற்காலத்தில் ஆடைகளின் விலைகளுக்குப் இடப் பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் -20

## பகுதி - 1

☆ **பொருத்தமான விடையின் கீழே கீறிடுக.**

1. பின்வருவனவற்றுள் இயல்பு வழக்கில் **உள்ளடங்காதது**
(1) இலக்கணமுடையது (2) மரூவு
(3) இலக்கணப் போலி (4) மங்கலம்

2. நீர் என்பது
(1) மரூஉ (2) இலக்கணமுடையது
(3) மங்கலம் (4) அமங்கலம்

3. கடைவாயில் வெற்றிலையை அடக்கினான். இங்கு கடைவாய் என்பது.
(1) இலக்கணமுடையது (2) இடக்கரடக்கல்
(3) இலக்கணப் போலி (4) அமங்கலம்

4. பின்வருவனற்றுள் மரூவு
(1) ஆடாரோதடை (2) முன்றில்
(3) கால்வாய் (4) சாம்பர்

5. வெள்ளாடு ஒன்றைக் கொண்டு வந்தான். இங்கு வெள்ளாடு என்பது
(1) இடக்கரடக்கல் (2) மங்கலம்
(3) குழூஉக்குறி (4) மரூஉ

6. தகுதி வழக்கில் **உள்ளடங்காதது**
(1) மரூஉ (2) மங்கலம்
(3) இடக்கரடக்கல் (4) அமங்கலம்

7. பொற் கொல்லர்கள் பொன்னைப் பறி என்று அழைக்கின்றனர் இது
(1) மரூஉ (2) குழூஉக்குறி
(3) இடக்கரடக்கல் (4) மங்கலம்

8. நல்லப்பாம்பைக் கண்டு ஓடினர். இங்கு நல்லப்பாம்பு என்பது
(1) அமங்கலம் (2) இடக்கரடக்கல்
(3) இலக்கணப் போலி (4) குழூஉக்குறி

9. அனைவரும் பேர்களை எழுதினர். இங்கு பேர் என்பது
(1) இலக்கணமுடையது (2) மரூஉ
(3) மங்கலம் (4) குழூஉக்குறி

10. "மலங்கழுவி வந்தான்" என்பதனைக்"கால் கழுவி வந்தான்" என்று கூறுவது
(1) இடக்கரடக்கல் (2) இலக்கணப்போலி
(3) இலக்கணமுடையது (4) குழூஉக்குறி

### வினாத்தாள் – 20
### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 4 | (2) - 2 | (3) - 3 | (4) - 1 | (5) - 2 |
| (6) - 1 | (7) - 2 | (8) - 4 | (9) - 2 | (10) - 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38 புணர்ச்சி

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும் போது இயல்பாகவேனும விகாரப்பட்டேனும் பொருத்துவது **புணர்ச்சி** எனப்படும்.

மரம் + வேர் = மரவேர்

மரம் - நிலைமொழி

வேர் - வருமொழி

**1. அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி**

**அகப்புணர்ச்சி**

இரண்டு அல்லது பல பகுபத உறுப்புகள் சேர்ந்து ஒரு சொல்லாக அமைவது அகப்புணர்ச்சியாகும்.

(உ +ம்) - பாடத்தை = பாடம் + அத்து + ஐ

மரங்கள் = மரம் + கள்

இரண்டு அல்லது பல தனிச்சொற்கள் இணைந்து கூட்டுச் சொற்கள் உருவாக்கப்படுவதும் அகப்புணர்ச்சியாகும்.

(உ +ம்) - புகைவண்டி, கண்காட்சி

**புறப்புணர்ச்சி**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சொற்றொடராகவோ வாக்கியமாகவோ வருவது புறப்புணர்ச்சியாகும்.

(உ +ம்) - கண்ணன் வீட்டிற்குச் சென்றான்

அவன் புத்தகத்தை எடுத்தான்.

**2. சொற்றொடர் அடிப்படையில் புணர்ச்சி இருவகைப்படும்.**

(i) **வேற்றுமைப்புணர்ச்சி**

வேற்றுமை உருபுக்கள் வெளிப்பட்டேனும் மறைந்தேனும் புணருவது **வேற்றுமைப்புணர்ச்சியாகும்.**

(உ +ம்) தலை வணங்கினான்.

தலையால் வணங்கினான்.

ஆல் உருபு முதல் வாக்கியத்தில் மறைந்தும் இரண்டாம் வாக்கியத்தில் தோன்றியும் உள்ளது.


(ii) **அல்வழிப்புணர்ச்சி**

வேற்றுமை உருபுகள் வெளிபட்டேனும் மறைந்தேனும் வராதவாறு புணருதல் **அல்வழிப்புணர்ச்சியாகும்.** தொகை நிலைத் தொடரும், தொகாநிலைத் தொடரும் இதில் உள்ளடங்குகின்றன. (உ +ம்) ஏவுகணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஒலிமரபின் அடிப்படையில் புணர்ச்சி இரு வகைப்படும்.




(i) **இயல்புப்புணர்ச்சி**

நிலை மொழி ஈறும் வருமொழி முதலும் சேரும்போது அவற்றின் ஓசை அமைப்பில் எவ்வித மாற்றமும் இன்றி புணர்வது **இயல்புப்புணர்ச்சி** எனப்படும்.

(உ +ம்) கண் + பார்வை = கண்பார்வை

கடல் + ஓசை = கடலோசை = ல் + ஓ = லோ

**நிலைமொழி இறுதியில் மெய்யெழுத்தும் வருமொழி முதலில் உயிரெழுத்தும் சேர்ந்து ஓசையமைப்பில் மாற்றமின்று புணர்வதும் இயல்புப்புணர்ச்சி ஆகும்.**

(ii) **விகாரப்புணர்ச்சி**

நிலைமொழியும் வருமொழியும் புணரும் போது அவற்றின் அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் **விகாரப்புணர்ச்சி** எனப்படும். இது மூன்று வகைப்படும்.

**(அ) தோன்றல் விகாரம்**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் ஓரெழுத்து தோன்றுதல் **தோன்றல் விகாரம்** எனப்படும்.

(உ +ம்) நாய் + குட்டி = நாய்க்குட்டி

பூ + செடி = பூச்செடி

**(ஆ) கெடுதல் விகாரம்**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது ஓரெழுத்து இல்லாமல் போதல் **கெடுதல் விகாரம்** எனப்படும்.

(உ +ம்) வட்டம் + மேசை = வட்டமேசை

நீலம் + வானம் = நீலவானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(இ) திரிதல் விகாரம்**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றில் உள்ள ஓரெழுத்து இன்னொரு எழுத்தாக மாறுதல் **திரிதல் விகாரம்** எனப்படும்.

**(உ+ம்)** கடல் + கரை = கடற்கரை (ல-ற் ஆக திரிந்துள்ளது)

முள் + செடி = முட்செடி (ள்-ட் ஆக திரிந்துள்ளது)

பொன் + குடம் = பொற்குடம் (ன-ற் ஆக திரிந்துள்ளது)

மண் + பானை = மட்பானை (ண்-ட் ஆக திரிந்துள்ளது)

**4. நிலைமொழியின் இறுதி எழுத்தின் அடிப்படையில் புணர்ச்சியை இருவகைப் யாகப் பிரிக்கலாம்.**

(i) **உயிரீற்றுப் புணர்ச்சி**

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிரெழுத்தாக இருப்பின் அது உயிரீற்றுப் புணர்ச்சி எனப்படும்.

(உ+ம்) பலா + பழம் | **லா = ல் + ஆ** |

(ii) **மெய்யீற்றுப் புணர்ச்சி**

நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யெழுத்தாக இருப்பின் அது **மெய்யீற்றுப் புணர்ச்சி** எனப்படும்.

(உ+ம்) கடல் + அலை = கடலலை

I. **உயிரீற்றுப் புணர்ச்சி இரு வகைப்படும்.**

**(அ) உயிர்முன் உயிர் புணர்தல்**

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் உயிராக இருந்துப் புணர்தல் **உயிர்முன் உயிர் புணர்தல்** எனப்படும்.

(உ+ம்) **மணி** + **அ**டி | ணி = ண் + **இ** |

வா**ழை** + **இ**லை | ழை = ழ் + **ஐ** |

**(ஆ) உயிர் முன் மெய் புணர்தல்**

நிலைமொழியின் இறுதி எழுத்தும் உயிராகவும் வருமொழியின் முதல் எழுத்து மெய்யாகவும் இருந்துப் புணர்தல **உயிர் முன் மெய் புணர்தல்** எனப்படும்.

(உ+ம்) கா**லை** + **வே**லை | லை = ல் + **ஐ** / வே = **வ்** + ஏ |

II. **மெய்யீற்றுப் புணர்ச்சி இரு வகைப்படும்.**

**(அ) மெய்முன் உயிர் புணர்தல்**

நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாகவும் வருமொழியின் முதல் எழுத்து உயிராகவும் இருந்துப் புணர்தல் **மெய்முன் உயிர் புணர்தல்** எனப்படும்.

(உ+ம்) | கட**ல்** + **ஓ**சை / தே**ர்** + **அ**ழகு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ஆ) மெய்முன் மெய் புணர்தல்**

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் மெய்யாக இருந்துப் புணர்தல் **மெய்முன் மெய் புணர்தல்** எனப்படும்.

(உ+ம்) பொன் + தொடி [ தொ = த் + ஓ ]

கண் + மணி [ ம = ம் + அ ]

## வினாத்தாள் -21

### பகுதி - 1

☆ **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. பின்வருவனவற்றுள் உயிர்முன் உயிர் புணர்தலுக்கு உதாரணமாக அமைவது
   (1) கனி+சுவை (2) தடி+அடி
   (3) பலா+இலை (4) விலா+எழும்பு
2. பின்வருவனவற்றுள் உயிர்முன் மெய் புணர்தலுக்கு உதாரணமாக அமைவது
   (1) வாள்+கண் (2) வாள்+பேய்
   (3) மணி+அழகு (4) நிலா+சோறு
3. பின்வருவனவற்றுள் மெய்முன் மெய் புணர்தலுக்கு உதாரணமாக அமைவது
   (1) கடல்+அலை (2) மண்+பானை
   (3) நிலா+சோறு (4) பனை+மரம்
4. பின்வருவற்றுள் மெய்முன் உயிர் புணர்தலுக்கு உதாரணமாக அமைவது
   (1) மரம்+வேர் (2) சிறிய+வீடு
   (3) வான்+ஒலி (4) தாய்+குருவி
5. தன்+பகை என்பதைப் புணர்த்தி எழுதுக
   (1) தன்பகை (2) தற்பகை (3) தட்பகை (4) தம்பகை
6. பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சி
   (1) மலைக்கோயில் (2) கடலழகு
   (3) வாழைப்பழம் (4) பூந்தோட்டம்
7. நெற்கதிர் என்பது
   (1) தோன்றல் (2) கெடுதல் (3) திரிதல் (4) இயல்பு
8. பூச்செடி என்பது
   (1) தோன்றல் (2) கெடுதல்
   (3) திரிதல் (4) இயல்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பூச்செடி என்பது

(1) உயிர்முன் மெய் புணர்தல் (2) உயிர்முன் உயிர் புணர்தல்
(3) மெய்முன் மெய் புணர்தல் (4) மெய்முன் உயிர் புணர்தல்

10. நெல் + கதிர்

(1) உயிர்முன் மெய் புணர்தல் (2) உயிர்முன் மெய் புணர்தல்
(3) மெய்முன் உயிர் புணர்தல் (4) மெய்முன் மெய் புணர்தல்

✯ **பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.**

11. அருமை + உயிர் = ..........
12. வெறுமை + உயிர் = ..........
13. பெருமை + அழகு = ..........
14. இ + சோலை = ..........
15. பல் + பொடி = ..........
16. கோ + இல் = ..........
17. சே + அடி = ..........
18. தீ + ஒளி = ..........
19. பொன் + தாமரை = ..........
20. பசுமை + தொடி = ..........
21. பனை + ஓலை = ..........
22. அருள் + கொடை = ..........
23. அ + காலம் = ..........
24. விளா + காய் = ..........
25. பூ + சோலை = ..........

✯ **பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.**

26. கட்புலன் = .......... + ..........
27. அஞ்ஞானம் = .......... + ..........
28. பாடியாடி = .......... + ..........
29. கடலை = .......... + ..........
30. எள்ளளவு = .......... + ..........
31. வடகிழக்கு = .......... + ..........
32. வெற்றிடம் = .......... + ..........
33. வெண்கட்டி = .......... + ..........
34. பசுஞ்சோலை = .......... + ..........
35. நாட்டுப்பற்று = .......... + ..........
36. மேல் வீதி = .......... + ..........
37. தீயணைப்பு = .......... + ..........
38. மாவிலை = .......... + ..........
39. பெருங்கடல் = .......... + ..........
40. பொற்காசு = .......... + ..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் – 21
## விடைகள்

| | | |
|---|---|---|
| (1) - 1 | (11) - ஆருயிர் | (21) - பனையோலை |
| (2) - 3 | (12) - வெற்றிலை | (22) - அருட்கொடை |
| (3) - 2 | (13) - பேரழகு | (23) - அக்காலம் |
| (4) - 3 | (14) - இச்சோலை | (24) - விளாங்காய் |
| (5) - 2 | (15) - பற்பொடி | (25) - பூஞ்சோலை |
| (6) - 1 | (16) - கோவில் /கோயில் | (26) - கண்+ புலன் |
| (7) - 3 | (17) - சேவடி | (27) - அ + ஞானம் |
| (8) - 1 | (18) - தீயொளி | (28) - பாடி + ஆடி |
| (9) - 1 | (19) - பொற்றாமரை | (29) - கடல்+அலை |
| (10) - 4 | (20) - பைந்தொடி | (30) - எள்+அளவு |

| | |
|---|---|
| (31) - வடக்கு + கிழக்கு | (36) - மேற்கு + வீதி |
| (32) - வெறுமை + இடம் | (37) - தீ + அணைப்பு |
| (33) - வெண்மை +கட்டி | (38) - மா + இலை |
| (34) - பசுமை + சோலை | (39) - பெருமை + கடல் |
| (35) - நாடு + பற்று | (40) - பொன் + காசு |

**உயிர்முன் உயிர் புணர்தல், மெய்முன் உயிர் புணர்தல் ஆகியவற்றுக்கு உதாரணங்கள் தருக.**

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39 பிரதான கருத்து

பகுதி 1 இல் பந்திகளை வழங்கி அதன் பிரதான கருத்தை தெரிவு செய்யுமாறு வினாக்கள் அமைகின்றன. வழங்கப்படுகின்ற பந்திகளை நன்றாக வாசித்துப் புரிந்து கொள்வதன் மூலமாக பிரதான கருத்தை இலகுவாக தெரிவு செய்யலாம்.

## வினாத்தாள் –22

### பகுதி – 1

★ **பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தை தெரிவு செய்க.**

1. "ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா?" என்பார்கள். காலம் எதற்காகவும் காத்திருக்கப் போவதில்லை. நமது கடமைகளை செய்ய வேண்டிய காலத்தில் சிறப்பாக செய்து முடிக்க வேண்டும்.
   (1) ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்காது.
   (2) கடமைகளை உரிய நேரத்தில செய்ய வேண்டும்.
   (3) கடமைகளை அமாவாசைக்கு முன் செய்ய வேண்டும்.
   (4) கடமைகளை எப்போதும் செய்யலாம்.

2. அனைத்திற்கும் ஆசைப்பட்டு வாழ்வதைவிட உள்ளதைக் கொண்டு நன்றாக வாழ்வது மேலானது. "செல்வமென்பது சிந்தையின் நிறைவே" என்பது போல் வாழ்வது நல்லது.
   (1) மனத்திருப்தியுடன் வாழ வேண்டும்.
   (2) செல்வத்தைப் பெற்று வாழ வேண்டும்.
   (3) செல்வமின்றி வாழலாம்.
   (4) மனத்திருப்திக்காக வாழ வேண்டும்.

3. அரச குமாரன் காட்டிற்குச் சென்று முதன் முதலாக நடத்திய தனது வேட்டையில் அவனது அம்பு பெரிய மான் ஒன்றைத் தாக்கியது. மான் துடிதுடித்து தனது உயிரை நீத்தது.
   (1) அரச குமாரனின் வேட்டையில் மான் இறந்தது.
   (2) அம்பு மானைத் தாக்கியது.
   (3) அரச குமாரனின் அம்பால் மான் இறந்தது.
   (4) அரசகுமாரன் தன் கன்னி வேட்டையில் மானைக் கொன்றான்.

4. பொதுசனத் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி, பத்திரிகை வானொலி போன்றவற்றில் செவ்வி காணும் விடயம் அடிக்கடி இடம்பெறும் ஒரு நிகழ்வாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலியில் செவ்வி காண்கிறார்கள்.

(2) பொதுசனத் தொடர்பு சாதனங்களில அடிக்கடி செவ்வி காண்கிறார்கள்.

(3) பொதுசனத் தொடர்பு சாதனங்கள் செவ்விகாண பயன்படுகின்றது.

(4) பொதுசனத் தொடர்பு சாதனங்கள் செவ்வி காண்பது நல்லது.

5. தேன் நிரம்பியிருக்கும் குளிர்ந்த தூய மாலையணிந்த செங்கண்ணும் கரிய மழைமுகில் நிறத்தோனுமாகிய இராமனைப் பார்த்து மானைப் பிடித்துத் தருமாறு மயில் போன்ற சீதை வேண்டி நின்றாள்.

(1) மானைப் பிடித்துத் தருமாறு இராமனை சீதை வேண்டினாள்.

(2) மயில் போன்ற சீதை மானைப் பிடித்துக் கேட்டாள்.

(3) கரிய முகில் போன்ற இராமனிடம் மானைப் பிடித்துக் கேட்டாள்.

(4) இராமனிடம் மயில் போன்ற சீதை மானை வேண்டி நின்றாள்.

6. செல்வர் வீடுகளில் மகளிர் முதலியோர் ஓய்வு நேரங்களில் கூடியிருந்து பொழுது போக்குவதற்காக அமைக்கப்பட்ட மேல்மாடத்தில் கண்மணி அமர்ந்திருந்தாள்.

(1) கண்மணி அந்தப்புரத்தில் அமர்ந்திருந்தாள்.

(2) கண்மணி மாடி வீட்டில் அமர்ந்திருந்தாள்.

(3) கண்மணி உப்பரிகையில் அமர்ந்திருந்தாள்.

(4) கண்மணி மாடியில் அமர்ந்து பொழுது போக்கினாள்.

7. கண்ணன் ஏழ்மையாகப் பிறந்தான். எங்கோ தொலை தூரத்தில் அமைந்துள்ள கிராமம் ஒன்றிலேயே, இருட்டிய பிறகு வெளியே அடியெடுத்து வைக்க முடியாத ஒரு சூழலில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தான்.

(1) கண்ணன் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்தான்.

(2) கண்ணன் பின்தங்கிய பிரதேசத்தில் வளர்ந்தான்.

(3) கண்ணன் மோசமாக வாழ்ந்தான்.

(4) கண்ணன் பின்தங்கிய பிரதேசத்தில் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்தான்.

8. முதலைகள் எல்லாம் தேவையான நல்ல நீரை, மீன்கள் மற்றும் முதுகெலும்புள்ள பிராணிகளின் இரத்தத்தின் செல்லிடையில் உள்ள உப்பின் அளவு மிகவும் குறைந்து காணப்படுவதால், அவற்றிலிருந்து பெற்றுக்கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) முதலைகள் நல்ல நீரை மட்டும் அருந்துகின்றன.

(2) முதலைகள் சில உணவிலிருந்தும் நல்ல நீரை பெறுகின்றன.

(3) முதலைகள் அனைத்து உணவிலிருந்தும் நல்ல நீரைப் பெறுகின்றன.

(4) முதலைகள் உப்பிலிருந்து நல்ல நீரைப் பெறுகின்றன.

9. ஒரு மொழியானது பேச்சு மொழி, எழுத்து மொழி என இரு வேறுபட்ட வடிவங்களைக் கொண்டு காணப்படுகின்றது. நாள்தோறும் தங்களின் தொடர்பாடல்களினை மேற்கொள்வதற்காக எழுத்து மொழியினையும் பயன்படுத்துகின்றார்கள்.

(1) மனிதர்கள் பேச்சுமொழியை அதிகம் பயன்படுத்துகிறார்கள்.

(2) மனிதர்கள் எழுத்து மொழியை குறைவாகவே பயன்படுத்துகிறார்கள்.

(3) மனிதர்கள் தமது தேவைகளுக்கேற்ப பேச்சு மொழியினையும் எழுத்து மொழியினையும் பயன்படுத்துகின்றார்கள்.

(4) மனிதர்கள் எழுத்து மொழியினை விட பேச்சு மொழியினை அதிகம் பயன்படுத்துகிறார்கள்.

10. பாண்டியன் சோழநாட்டுக்கு வெளியேயிருந்து உணவு முதலிய எவ்வித பொருளும் கிடைக்காதவாறு தடுத்து அந்நாட்டை படை கொண்டு நாற்புறமும் சூழ்ந்து நின்றான்.

(1) பாண்டியன் சோழநாட்டை முற்றுகையிட்டான்.

(2) பாண்டியன் சோழனுக்கெதிராகப் போர் செய்தான்.

(3) பாண்டியன் சோழநாட்டுக்கு வந்த பொருளைப் பெற போர் செய்தான்.

(4) பாண்டியன் சோழனை அழிக்கப்போர் செய்தான்.

11. அவசிய தேவைக்கு மட்டுமே நாம் தொலைபேசியை பயன்படுத்த வேண்டும். எடுத்ததற்கெல்லாம் தொடர்பு கொள்ளும் போது மற்றவருக்கு அன்புத்தொல்லையாகி விடுவது மட்டுமல்ல, வீண் செலவையும் ஏற்படுத்தும்.

(1) தொலைபேசியால் தீமை ஏற்படும்.

(2) தொலைபேசியியை அதிகம் பயன்படுத்துவது தவறு.

(3) தொலைபேசியைத் தேவைக்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

(4) தொலைபேசி வீண் செலவை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. யானை தன் பாகனைக் கொல்லும் அளவிற்கு நன்றியுணர்வு அற்றது. ஆனால் நாயோ சில நாள் தனக்கு உணவளித்தவர் தன் உடம்பினில் காயத்தை ஏற்படுத்தினால் கூட அவரைக் கண்டு வாலாட்டும் அளவிற்கு நன்றி உணர்வு கொண்டது.

(1) யானையை விட நாய் நன்றி உணர்வுக் கொண்டது.

(2) நாய் உடம்பில் காயத்தை ஏற்படுத்தினால் பொருத்துக் கொள்ளும்.

(3) யானையிடம் அன்பாக இருக்க முடியாது.

(4) யானை நன்றியுணர்வு அற்றது.

13. உரையாடலில் இருந்து வேறுபட்டதே செவ்வி எனும் வடிவமாகும். உரையாடலில் பங்கு பற்றுபவர்கள் ஒருவருக் கொருவர் தமது கருத்துக்களைப் பரிமாறுவர். ஆனால் செவ்வியிலோ செவ்வி காண்பவர்கள் செவ்வி கொடுப்பவரிட மிருந்து பல தகவல்களைப் பெறும் வகையில் வினாக்களை வினவுவர்.

(1) உரையாடலைவிட செவ்வி சிறந்தது.

(2) செவ்வியை விட உரையாடல் சிறந்தது.

(3) உரையாடலுக்கும் செவ்விக்கும் வேறுபாடு உண்டு.

(4) உரையாடலிலும் செவ்வியிலும் கருத்துக்களைப் பரிமாறுகிறார்கள்.

14. பண்டைய கூட்டுச் சமுதாயத்தில் பெண்ணே தலைவியாக இருந்தாள். ஆண் அல்லன். இன்று பெண் அடிமையாகவே காணப்படுகிறாள். ஆனால் அன்று பெண்களும் ஆண்களும் குழந்தைகளும் முதியவர்களும் கொண்ட பண்டைய சமுதாயத்தில், பெண்தான சமுதாயத் தலைவியாக இருந்துள்ளாள்.

(1) பண்டைய சமுதாயத்தில் பெண் சிறப்பாக வாழ்ந்துள்ளாள்.

(2) இன்று அடிமையாகக் காணப்படும் பெண் பண்டைய கூட்டுச் சமுதாயத்தின தலைவி.

(3) பண்டைய காலத்தை விட தற்காலத்தில் பெண்களை அதிகமாக அடிமையாக்குகிறார்கள்.

(4) ஆரம்பகாலத்தில் அனைவரையும் பெண் நன்றாக கவனித்துள்ளாள்.

15. தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி எனும் ஐம்பெருங்காப்பியங்களும் சூளாமணி காவியம் நாககுமார காவியம், உதயணகுமார காவியம், யசோதர காவியம் நீலகேசி காவியம் எனும் ஐஞ்சிறு காப்பியங்களும் தோற்றம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) தமிழ்க் காப்பியங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

(2) தமிழில் பெருங்காப்பியங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

(3) தமிழில் காப்பிய வளர்ச்சி காணப்படுகிறது.

(4) தமிழில் ஐம்பெருங்காப்பியங்களும் ஐஞ்சிறு காப்பியங்களும் தோற்றம் பெற்றுள்ளன.

16. வியாபாரத்துறையில்தான் முதன் முதல் விளம்பரம் ஆரம்பிக்கப் பட்டது. ஆனால் இன்று கல்வித்துறை, மருத்துவத்துறை, தொழில் துறை என எல்லாத்துறைகளிலும் விளமபரம் முக்கியம் பெற்றுள்ளது.

(1) விளம்பரம் வியாபாரத்துறையில் ஆரம்பிக்கப்பட்டது.

(2) இலாப நோக்கத்திற்காக விளம்பரம் செய்யப்படுகின்றது.

(3) விளம்பரம் இன்று சகலதுறைகளிலும் காணப்படுகிறது.

(4) தொழில் துறையில் இன்று விளம்பரங்கள் காணப்படுகின்றன.

17. விவாதம் என்பது ஒரு விடயம் தொடர்பாக சார்பாகவும் எதிராகவும் முன்வைக்கப்படும் கருத்துக்களாகும். இதில் தர்க்கித்தல், சார்புக் கருத்தை ஆதாரத்துடன் முன்வைத்தல், எதிர்க்கருத்தை ஆதாரத்துடன் வெட்டிப்பேசுதல் போன்றன முக்கிய பணிகளாகும்.

(1) விவாதம் எதிர்த்துப் பேசும் ஒரு மேடை.

(2) விவாதத்தில் கருத்துக்கள் முன் வைக்கப்படும்.

(3) விவாதத்தில் தர்க்கங்கள் பல

(4) சமயோசிதமாக, ஆதாரமாகவும் எதிராகவும் சொற்போர் நிகழ்த்துவது விவாதம்.

18. தகவல் திரட்டும் போது நினைவிலே இருத்த வேண்டிய கருத்துக்கள் பல தோன்றும். அவை எல்லாவற்றையும் அப்படியே நினைவில் வைத்திருத்தல் எளிதளன்று. அக்கருத்து களை நினைவு கூர்ந்து பின்னர் பயன்படுத்துவதற்கு வசதியாக நினைவு குறிப்பு எழுதுவது மாணவருக்குப் பயனுள்ள ஒரு பயிற்சியாகும்.

(1) மாணவர்கள் நினைவு குறிப்பு எழுதுவதனை பழக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

(2) தகவல்களை நினைவில் வைத்திருத்தல் எளிது.

(3) தகவல்கள் அனைவருக்கும் பயன்படும்.

(4) தகவல் திரட்டுவது அனைவருக்கும் கடினமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. நம்முடைய முன்னோர்கள் பலகையிலும் காகிதத்திலும எழுதவில்லை. பனை ஓலையில் இரும்பு எழுத்தாணிக் கொண்டு எழுதினார்கள். அதில் எழுதும் போது ஓலை கிழியாமல் இருக்க வேண்டுமானால் இப்படி வளைவுகளும் சுழிகளும் இருந்தால் தான் எழுத முடியும். இப்படித்தான் எழுதப்படும் பொருளுக்கும் எழுதும் கருவிக்கும் தகுந்தபடி எழுத்துமமுறையும் அமைந்துவிடும்.

(1) தமிழில் எழுதும் கருவிக்கு ஏற்ப எழுத்துமுறை அமைந்துள்ளன.

(2) பலகை எழுதப்படும் ஒரு கருவியாகும்.

(3) சுழிகளும், வளைவுகளும் ஒரு கருவியாகும்.

(4) எழுதும்போது ஓலை கிழியாமல் எழுதவேண்டும்.

20. மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கு ஆராய்ச்சி இன்றியமையாதது ஆகும். ஆய்வால் அறிய முடியாதது எதுவுமில்லை. ஆண்டவனையே அறிவால் அறிந்து ஆராய்ந்து விடலாம் என்பது அருளாளர் துணிவு அறிவின் தூய்மையாயிருந்தால்தான் ஆண்டவனையே காணலாம்.

(1) அனைவரும் ஆண்டவனைக் காணலாம்.

(2) ஆய்வு செய்யும் அனைவரும் ஆண்டவனைக் காணலாம்.

(3) ஆண்டவனைக் காண அறிவில் தூய்மை வேண்டும்.

(4) மனித வாழ்க்கைக்கு கடவுள் இன்றியமையாதது.

## வினாத்தாள் - 22
### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 4 | (2) - 1 | (3) - 4 | (4) - 2 | (5) - 1 |
| (6) - 3 | (7) - 4 | (8) - 2 | (9) - 3 | (10) - 1 |
| (11) - 3 | (12) - 1 | (13) - 3 | (14) - 2 | (15) - 4 |
| (16) - 3 | (17) - 4 | (18) - 1 | (19) - 1 | (20) - 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 பாடல் வினா

புதிய பாடத்திட்டத்தின் படி I இல் பாடல்கள் வழங்கி அதனை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் வினவப்படுகின்றன.

## வினாத்தாள் -23

### பகுதி - 1

01.

என்றன் உள்ளம் கடலினைப் போலவே
எந்த நேரமும் நின்னடிக் கீழே
நின்று தன்னகத்து ஒவ்வோர் அணுவும்
நின்றன் ஜோதி நிறைந்தது வாகி
நன்று வாழ்ந்திடச் செய்குவை ஐயா
ஞாயிற்றின் கண் ஒளி தருந்தேவா
மன்று வானிடைக் கொண்டு உலகெல்லாம்
வாழ நோக்கிடும் வள்ளிய தேவா

1. இப்பாடலில் தேவா என குறிப்பிடப்படுபவர்
   (1) சந்திரன் (2) சூரியன்
   (3) நட்சத்திரம் (4) உடு

2. "என்றன் உள்ளம் கடலினை போலவே" இப்பாடலடியில் பயன்படுத்தப்பட்டுள்ள அணி?
   (1) உவமை (2) உருவகம்
   (3) உயர்வுநவிற்சி (4) தற்குறிப்பேற்றம்

3. இப்பாடலுக்கு பொருந்தாத கூற்று
   (1) சூரியனே உலகுக்கு ஒளி தருகிறது.
   (2) உலகெல்லாம் வாழ சூரியன் முக்கியம் பெறுகிறது.
   (3) சூரியன் உலகில் அழிவை ஏற்படுத்துகிறது.
   (4) ஒவ்வோர் அணுவிலும் ஜோதி நிரம்பியுள்ளது.

02.

காற்று வெளியிடைக் கண்ணம்மா – நின்றன்
காதலை எண்ணிக் களிக்கின்றேன் – அமுது
ஊற்றினை ஒத்த இதழ்களும் – நில
ஊறித் ததும்பும் விழிகளும் – பத்து
மாற்றுப் பொன் ஒத்த நின் மேனியும் – இந்த
வையத்தின் யானுள்ள மட்டிலும் – எனை
வேற்று நினைவின்றி தேற்றியே – இங்கோர்
விண்ணவன் ஆகப் புரியுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இப்பாடலில் வெளிப்படும் உணர்வு.
(1) கோபம் (2) வெறுப்பு
(3) காதல் (4) பொறாமை

2. இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள அணி
(1) உருவகம் (2) தற்குறிப்பேற்றம்
(3) உவமை (4) தன்மை நவிற்சி

3. தலைவனை வேறு நினைவின்றி செய்யத் தூண்டியது என கூறுவதில் பொருத்தமற்ற கூற்று
(1) பெண்ணின் இதழின் அழகு
(2) பெண்ணின் கூந்தலின் அழகு
(3) பெண்ணிக் கண்களின் அழகு
(4) பெண்ணின் உடலின் அழகு

03. **கோளும் நாளும்**
**குறித்து ராமன்**
**கொற்றவன் ஆவதற்கு – அந்த**
**நாளில் என்ன**
**நடந்தது? பாவம்**
**நடந்தான் காட்டுக்கு**

**காலம் பார்த்து**
**நடந்தது தானே**
**கண்ணகி கல்யாணம் – அவள்**
**கோலம் இழந்து**
**கொண்டதுவோ மலர்க்**
**குங்கும அலங்கோலம்**

1. இப்பாடலின் பிரதான கரு
(1) சாதகத்தை நம்பி வாழ்தல் தவறு
(2) ராமன் காட்டுக்குச் சென்றமை
(3) கண்ணகியின் கல்யாண நிலை
(4) கண்ணகியின் அலங்கோல நிலை

2. கொற்றவன் எனும் சொல் உணர்த்தும் கருத்து
(1) வானவன் (2) கானவர்
(3) அரசன் (4) அமைச்சன்

3. இக்கவிதையில் உள்ளடங்கியுள் இரு காவியங்கள்
(1) சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி
(2) மணிமேகலை, இராமாயணம்
(3) இராமாயாணம், சிலப்பதிகாரம்
(4) சிலப்பதிகாரம், மணிமேகலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04.** **வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது**

1. இங்கு வள்ளல் என குறிப்பிடப்படுபவர்
   (1) கொடையாளி (2) இறைவன்
   (3) உலோபி (4) கஞ்சன்

2. உள்ளக்கமலம் என்பது
   (1) உருவக அணி (2) உவமையணி
   (2) தற்குறிப்பேற்றம் (4) உயர்வ நவிற்சி

3. மேலுள்ள கவிதைக்குப் **பொருத்தமற்ற** கூற்று
   (1) வள்ளல மல்லிகையை விரும்பவில்லை.
   (2) வள்ளல் பெரிய மலரை விரும்பவில்லை.
   (3) வள்ளல் மனதை விரும்புகிறோர்.
   (4) வள்ளல் தாமரையை விரும்புகிறார்.

**05.** **வேற்று மொழிகளைக் கற்றோம் – எங்கள்**
**மெய்யான முதுசொத்தை விலைபேசி விற்றோம்**
**ஆற்றிலே புளி கரைத்திட்டோம் – ஐயோ**
**அருமந்த தமிழை அறியாது கெட்டோம்.**

1. மெய்யான முதுசொத்து என இங்கு குறிப்பிடப்படுவது
   (1) வேற்றுமொழி (2) காணி
   (3) தமிழ் (4) தமிழ் மக்கள்

2. "அருமந்த" என்பது
   (1) இலக்கணமுடையது (2) மரூஉ
   (3) இடக்கரடக்கல் (4) மங்கலம்

3. ஆற்றில் புளி கரைத்தல் என்ற தொடரின் கருத்து
   (1) பயனற்ற செயல் (2) பயனான செயல்
   (3) ஆற்றில் புளி கரைக்கக்கூடாது (4) வீணாகாத பயன்

4. இக்கவிதைக்கு **பொருத்தாத** கூற்று
   (1) வேற்று மொழிகளையும் கற்கலாம்.
   (2) தமிழ் மொழியை கற்க வேண்டும்.
   (3) வேற்றுமொழியினை விட தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்.
   (4) வேற்று மொழியினை கற்கவே கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06.** **பயிலுறும் அண்ணன் தம்பி - அக்கம்**
**பக்கத் துறவின் முறையார்**
**தயை மிகு உடையாள் அன்னை - என்னைச்**
**சந்ததம் மறவாத் தந்தை**
**குயில் போற் பேசிடும் மனையாள் - அன்பை**
**கொட்டி வளர்க்கும் பிள்ளை**
**அயலவராகும் வண்ணம் - தமிழ் என்**
**அறிவினில் உறைதல் கண்டீர்**

1. பாடலின் பிரதான கரு
   (1) தாயின் பெருமை (2) சகோதர பாசம்
   (3) மனைவியின் சிறப்பு (4) தமிழின் பெருமை

2. "குயில் போற் பேசிடும் மனையாள்" இவ்வடியில் பன்படுத்தப் பட்டுள்ள அணி
   (1) உருவக அணி (2) தன்மை நவிற்சி அணி
   (3) உவமையணி (4) சிலேடையணி

3. பாடலுக்கு **பொருத்தாத** கூற்று
   (1) அன்னை தயை மிகுந்தவள்.
   (2) அனைத்து உறவுகளும் தமிழை மறக்கச் செய்கிறது.
   (3) மனைவி அன்பாக பேசுபவள்.
   (4) பிள்ளைகளிடம் அன்பு காட்டி வளர்க்கின்றோம்.

**07.** **ஏர் பிடித்து நிலங்கிழித்து பாரதத்தைக் காப்பவர்**
**எழில் மணிக் கரங்கள் கொட்டி ஏறுபோல் வருகவே**
**பேர்படைத்த தமிழர் தாங்கள் முன்னெடுத்த பாதங்கள்**
**பின்னெடுத்து வைத்திடாது பெருமைபாடி வருகவே**

1. பாடலில் கூறப்பட்டுள்ள தொழில்
   (1) உழவுத் தொழில் (2) நெசவுத்தொழில்
   (3) வியாபாரத்தொழில் (4) கடற்றொழில்

2. "கரங்கள் கொட்டி ஏறுபோல் வருகவே" - இவ்வடிகளில் கையாளப்பட்டுள்ள அணி
   (1) தற்குறிப்பேற்றம் (2) சிலேடையணி
   (3) உருவக அணி (4) உவமையணி

3. பாடலுக்கு **பொருத்தமற்ற** கூற்று
   (1) உழவர்கள் பாரதத்தை காக்கின்றனர்.
   (2) முன்னெடுத்த காரியங்களை தொடர்ந்து செய்தல் வேண்டும்.
   (3) சிங்கங்கள் கைகொட்டி வருகின்றன.
   (4) உழவர்கள் சிங்கங்கள் போல் வர வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **தொட்ட தொட்ட இடங்களெங்கும் சுவர்க்கம் செய்யும் சிற்பி நாம் சுரண்டலென்னும் பகை தொலைக்க தோள் குலுக்கி. உலகெனும் பெட்டகத்திலுள்ள செல்வம் யாவும் நமது போரிலே பட்டயங்கள் செய்து பற்ற எட்டி வைக்கும் பயணமாம்.**

1. பாடலின் பிரதான கரு பொருள்
   (1) சிற்பம் (2) சிற்பி
   (3) தொழிலாளர் (4) ஏழை

2. "உலகெனும் பெட்டகம்" - எனும் அடியில் பயன்படுத்தப் பட்டுள்ள அணி
   (1) உருவக அணி (2) தற்குறிப்பேற்ற அணி
   (3) உவமையணி (4) தன்மை நவிற்சியணி

3. பாடலுக்குப் **பொருத்தாத** கூற்று
   (1) தொழிலாளர்கள் சிற்பி போன்றவர்கள்.
   (2) சுரண்டலென்பதை ஒழித்தல் வேண்டும்.
   (3) செல்வங்கள் அனைத்தையும் பறித்தெடுக்க வேண்டும்.
   (4) தொழிலாளர்களால் உலகம் அழகு பெறுகிறது.

09. **எல்லையில்லாதோர் வானக் கடலிடை**
**வெண்ணிலாலே – விழிக்**
**கின்ப மளிப்பதோர் தீவென் றிலங்குவை**
**வெண்ணிலாவே**
**சொல்லையும் கல்லையும் நெஞ்சையும் சேர்த்திங்கு**
**வெண்ணிலாவே – நின்றன்**
**சோதி மயக்கும் வகையது தானென் சொல்**
**வெண்ணிலாவே**

1. இப்பாடலின் கருப்பொருள்
   (1) வானம் (2) கடல்
   (3) மதி (4) மனம்

2. "வானக்கடல்" எனும் அடியில் பயன்படுத்தப்பட்டுள்ள அணி
   (1) உருவக அணி (2) உவமையணி
   (3) சிலேடையணி (4) உயர்வுநவிற்சியணி

3. பாடலுக்கு மிகப் பொருத்தமான கூற்று
   (1) கடல் வானமாக உருவாகிக்கப்பட்டுள்ளது.
   (2) வானம் ஒரு தீவாக காட்டப்பட்டுள்ளது.
   (3) சொல்லும் கல்லும் நிலவின் சோதியை மயக்குகிறது.
   (4) நிலவு ஒரு தீவாகக் காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **பத்து திங்கள் கிடந்து**
**சிப்பி உடல் உடைந்து**
**முத்தே எனக்கொரு முத்தம் கொடு – பவளக்**
**கொத்தே எனக்கொரு முத்தம் கொடு**

**செத்துப் போனேன் உனைப்**
**பெற்றேன் பிழைத்தேன் என்**
**சொத்தே எனக்கொரு முத்தம் கொடு – மனம்**
**வைத்தே எனக்கொரு முத்தம் கொடு**

1. இப்பாடலில் வெளிப்படும் உணர்வு
   (1) தாய்மை (2) காதல்
   (3) வெறுப்பு (4) கோபம்
2. இப்பாடலில் முத்து எனக்குறிப்பிடப்படுபவர்
   (1) குழந்தை (2) தாய்
   (3) சகோதரன் (4) சகோதரி
3. இங்கு திங்கள் எனக் குறிப்பிடப்படுவது
   (1) சந்திரன் (2) நாள்
   (3) மாதம் (4) வருடம்
4. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணி
   (1) உயர்வு நவிற்சி (2) தற்குறிப்பேற்றம் அணி
   (3) உவமை (4) உருவகம்
5. பாடலுக்கு **பொருந்தாத** கூற்று
   (1) குழந்தையை முத்தாக கூறியுள்ளார்.
   (2) குழந்தை சிப்பியில் இருந்து பிறந்துள்ளது.
   (3) ஒரு தாயின் பாசத்தை வெளிப்படுத்துகிறது.
   (4) தனது சொத்தாக குழந்தை காட்டப்பட்டுள்ளது.

## வினாத்தாள் – 23
## விடைகள்

**01. (1) - 2 (2) - 1 (3) - 3**
**02. (1) - 3 (2) - 3 (3) - 2**
**03. (1) - 1 (2) - 3 (3) - 3**
**04. (1) - 2 (2) - 1 (3) - 4**
**05. (1) - 3 (2) - 2 (3) - 1 (4) 4**
**06. (1) - 4 (2) - 3 (3) - 2**
**07. (1) - 1 (2) - 4 (3) - 3**
**08. (1) - 3 (2) - 1 (3) - 3**
**09. (1) - 3 (2) - 1 (3) - 4**
**10. (1) - 1 (2) - 1 (3) - 3 (4) - 4 (5) - 2**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41 ஒழுங்குபடுத்தல்

வழங்கப்படுகின்ற வாக்கியங்கள் வெளிப்படுத்துகின்ற கருத்துக்களின் தொடர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு இவ்வினாவிற்கான விடையினை பொருத்தமாக அளிக்கலாம்.

## வினாத்தாள் -24

### பகுதி - 1

★ **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

1. (அ) பரதன் இராமனை அழைத்து வரச்சென்றான்.
   (ஆ) தசரதன் கைகேயிக்கு வரத்தைக் கொடுத்தான்.
   (இ) பரதன் இராமனின் பாதணிகளுடன் நாட்டிற்குத் திரும்பினான்.
   (ஈ) இராமன் பதினான்கு வருடங்கள் காடாளச் சென்றான்.
   (உ) இராமன் மறுப்புத் தெரிவித்தான்.

   (1) ஆ, அ, ஈ, உ, இ  (2) ஆ, ஈ, அ, உ, இ
   (3) ஆ, இ, உ, ஈ, அ  (4) அ, ஆ, ஈ, உ, இ

2. (அ) உலகில் காலத்துக்குக் காலம் பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன.
   (ஆ) சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி என்பன அவற்றில் சிலவாகும்.
   (இ) இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி.
   (ஈ) இதில் தமிழில் பல பேரிலக்கியங்கள் தோன்றியுள்ளன.
   (உ) காலத்தினைப் படம் பிடித்துக் காட்டக்கூடியது.

   (1) இ, உ, அ, ஈ, ஆ  (2) இ, அ, உ, ஆ, ஈ
   (3) இ, அ, உ, ஈ, ஆ  (4) அ, ஆ, இ, ஈ, உ

3. (அ) இறந்தாலும் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.
   (ஆ) அவர் பல பாடல்கள் எழுதியுள்ளார்.
   (இ) அவர் எட்டயப்புரத்தில் பிறந்தார்.
   (ஈ) அனைத்துப் பாடல்களும் இன்றும் நிலைத்து நிற்கின்றன.
   (உ) பாரதியார் சிறந்த கவிஞர்.

   (1) உ, ஆ, இ, ஈ, அ  (2) அ, ஈ, ஆ, இ, உ
   (3) உ, அ, ஆ, இ, ஈ  (4) உ, இ, ஆ, ஈ, அ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. (அ) அதனால் கையெழுத்து கிறுக்கலாக இருக்கும்.
(ஆ) கண்ணன் அழகாக எழுதுவான்.
(இ) எனவே, தன் நண்பனை விட புள்ளிகள் குறைவாக எடுப்பான்.
(ஈ) மாலன் வேகமாக எழுதுவான்.
(உ) கண்ணனும் மாலனும் சிறந்த நண்பர்கள்.
(1) உ, ஆ, ஈ, அ, இ (2) உ, ஆ, அ, ஈ, இ
(3) உ, அ, ஆ, இ, ஈ (4) உ, இ, ஆ, அ, ஈ

5. (அ) அவர்களின் முக்கிய உணவு தானியமாகும்.
(ஆ) இதில் மாச்சத்து உண்டு.
(இ) உலக மக்கள் பலவேறு உணவுகளை உண்கிறார்கள்.
(ஈ) இது உணவு வகைகளில் முக்கியமானது.
(உ) அரிசி, கோதுமை, கேழ்வரகு, சோளம் முதலியான இதில் அடங்கும்.
(1) அ, ஆ, இ, உ, ஈ (2) இ, ஆ, அ, உ, ஈ
(2) இ, அ, உ, ஆ, ஈ (4) இ, உ, அ, ஆ, ஈ

6. (அ) ஔவையார் விரும்பி உண்டார்.
(ஆ) ஔவையாரிடம் கொடுத்தான்.
(இ) வேடன் நெல்லிக் கனியைக் கொடுத்தான்.
(ஈ) நீண்டகாலம் இவ்வுலகில் வாழ்ந்தார்.
(உ) அதியமான் நெல்லிக்கனியைப் பெற்றான்.
(1) இ, உ, அ, ஆ, ஈ (2) இ, உ, ஆ, அ, ஈ
(3) இ, ஈ, உ, ஆ, அ (4) இ, ஆ, உ, அ, ஈ

7. (அ) பல இலட்ச நியூரன்களும், கிளியல் செல்களும் கொண்டது.
(ஆ) இவை அனைத்தும் மூளையிலேயே இடம் பெறுகிறது.
(இ) இது ஒன்றரைக் கிலோ எடை உடையது.
(ஈ) கேட்டல், உணரல், பார்த்தல் என உணர்வுகளைக் கொண்டது.
(உ) ஒரு மனிதனின் மிகவும் முக்கியமான உறுப்பு மூளையாகும்.
(1) உ, அ, இ, ஈ, ஆ (2) இ, அ, உ, ஆ, ஈ
(3) அ, உ, இ, ஈ, ஆ (4) உ, இ, அ, ஈ, ஆ

8. (அ) பிசிராந்தையார் அரசனைச் சந்தித்து விடயத்தை கூறினார்.
(ஆ) அறிவுடைய நம்பி நாட்டை மறந்து காப்பியம் இயற்றத் தொடங்கினான்.
(இ) இதனையறிந்த சாத்தனார், கூத்தனார் பிசிராந்தையரிடம் முறையிட்டனர்.
(ஈ) அரசன் மீண்டும் நாட்டை ஆளத் தொடங்கினான்.
(உ) இதனால் நாடு வரட்சியடைந்தது.
(1) ஆ, உ, அ, இ, ஈ (2) ஆ, ஈ, உ, அ, இ
(3) ஆ, இ, உ, அ, ஈ (4) ஆ, உ, இ, அ, ஈ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. (அ) குருடர் முடவனைத் தூக்கிக் கொண்டு நடப்பார்.
(ஆ) மற்றையவர் முடவர்.
(இ) இரட்டையர்கள் என்போர் சிறந்த கவிஞர்கள்.
(ஈ) முடவர் அவருக்கு வழி கூறுவார்.
(உ) ஒருவர் குருடன்.
(1) உ, இ, அ, ஆ, ஈ (2) இ, உ, ஆ, அ, ஈ
(3) இ, ஆ, உ, ஈ, அ (4) இ, உ, அ, ஈ, ஆ

10. (அ) தொழிநுட்பத்தால் உலகம் சுருங்கிக் காணப்படுகின்றது என்பர்.
(ஆ) இதேவேளை தீமைகளும் ஏற்படுகின்றன.
(இ) இன்றைய காலத்தில் தொழிநுட்பத்தால் சிறந்த வளர்ச்சி காணப்படுகிறது.
(ஈ) தீமைகளை விடுத்து நன்மைகளைத் தேடினால் பயன் பெறலாம்.
(உ) இதனால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன.
(1) உ, இ, அ, ஆ, ஈ (2) இ, உ, அ, ஆ, ஈ
(3) இ, அ, உ, ஆ, ஈ (4) அ, உ, இ, ஆ, ஈ

11. (அ) இதனால் மொழியும் வளர்ச்சி அடைகிறது.
(ஆ) இதனால் புதிய புதிய வசன நடைகள் உருவாகின்றன.
(இ) இன்றைய சமூகம் பல்வேறு வளர்ச்சியைக் கண்டுள்ளது.
(ஈ) மொழி சிறந்த தொடர்பாடலின் ஊடகமாகும்.
(உ) மொழி வளர்ச்சி புதிய சொற்களின் பெருக்கத்தைக் காட்டுகின்றது.
(1) ஈ, இ, அ, உ, ஆ (2) ஈ, அ, இ, உ, ஆ
(3) ஈ, அ, இ, ஆ, உ (4) ஈ, ஆ, இ, அ, உ

12. (அ) அதனால் மக்கள் அனைவரும் அவனை விரும்பினார்.
(ஆ) சோழன் செங்கோல் ஆட்சி செய்த சிறந்த மன்னன்.
(இ) இதனால் மன்னனும் சந்தோசம் அடைந்தான்.
(ஈ) அவன் மக்களிடத்தில் சென்று மக்களின் குறைகளைப் போக்குவான்.
(உ) மன்னன் வரும் போதெல்லாம் முகமலர்ச்சிக் காட்டுவார்.
(1) ஆ, ஈ, உ, அ, இ (2) ஆ, ஈ, அ, உ, இ
(3) ஆ, ஈ, அ, இ, உ (4) ஆ, அ, ஈ, உ, இ

13. (அ) அதனால் பிசிராந்தையார் என அழைக்கப்பட்டார்.
(ஆ) பிசிர் என சிறிய ஊர் இருந்தது.
(இ) அவ்வூருக்கு அப்புலவரால் சிறப்புக் கிடைத்தது.
(ஈ) அவர் பெயர் ஆந்தையார்.
(உ) அவ்வூரில் புலவர் ஒருவர் இருந்தார்.
(1) ஆ, இ, உ, ஈ, அ (2) ஆ, ஈ, உ, இ, அ
(3) அ, ஆ, இ, உ, ஈ (4) ஆ, உ, ஈ, இ, அ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. (அ) தகவல்களைத் தேடுதல்.
(ஆ) கட்டுரையினை எழுதுதல்.
(இ) தகவல்களைத் தொகுத்தல்.
(ஈ) தகவல் தேடும் முறையினை அறிதல்.
(உ) தலைப்பைத் தெரிவு செய்தல்.

(1) உ, ஈ, இ, அ, ஆ (2) உ, இ, ஈ, அ, ஆ
(3) உ, ஈ, அ, இ, ஆ (4) உ, இ, அ, ஈ. ஆ

15. (அ) விவசாயம் பாதிக்கப்படும்.
(ஆ) இதனால் நீர் பற்றாக்குறை ஏற்படும்.
(இ) உணவு பற்றாக்குறை ஏற்படும்.
(ஈ) காடுகள், பல தேவைகளுக்காக அழிக்கப்படுகின்றன.
(உ) உணவிற்காக வெளிநாட்டை நோக்கி அரசு கையேந்த வேண்டி வரும்.

(1) ஈ, அ, ஆ, இ, உ (2) ஈ, ஆ, அ, இ, உ
(3) ஆ, அ, இ, ஈ, உ (4) ஈ, ஆ, இ, அ, உ

16. (அ) இதன் காரணமாக அச்சியந்திர சாலையை அமைத்தார்.
(ஆ) இவ்வுரை நடை பழமை, புதுமை, கம்பீரம், எளிமை மிக்கதாகக் காணப்பட்டது.
(இ) பத்தென்பதாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கியவர்களில் ஆறுமுகநாவலரும் ஒருவர்.
(ஈ) பல நூல்களை திருத்தமாக பதிப்பித்தார்.
(உ) இவர் தமிழ் வளர்ச்சிக்கு உரைநடையே அவசியம் என வற்புறுத்தினார்.

(1) இ, அ, உ, ஆ, ஈ (2) இ, அ, உ, ஈ, ஆ
(3) இ, உ, அ, ஈ, ஆ (3) இ, ஈ, அ, உ, ஆ

17. (அ) குறிப்புகளை மறுபரிசீலனை செய்தார்.
(ஆ) முக்கிய அம்சங்களுக்குப் பொருத்தமான விடயங்கள் பற்றி குறிப்புகளை எழுதினார்.
(இ) சட்டகம் அமைத்து அறிக்கை முதல் வரைபை எழுதினார்.
(ஈ) முக்கிய அம்சங்களைத் தனித்தனியே குறித்துக் கொண்டார்.
(உ) குறிப்புக்களை முறைப்படி ஒழுங்குபடுத்தினார்.

(அ) ஈ, அ, உ, ஆ, இ (2) ஆ, ஈ, அ, உ, இ
(இ) அ, ஈ, ஆ, உ, இ (4) ஈ, ஆ, அ, உ, இ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. (அ) அந்நகரத்தைக் கொண்டு ஆராய்தார்கள்.
(ஆ) சிந்து நதியில் தமிழர்களின் முன்னோர்கள் வாழ்ந்தார்கள்.
(இ) தமிழர்கள் எழுதிவந்த எழுத்தினை அறிந்தார்கள்.
(ஈ) அவ்வாறு புதைந்து போன நகரத்தை கண்டு பிடித்தார்கள்.
(உ) பல ஆண்டுகளுக்கு முன் அது மண்மேடு இட்டு புதைந்து போயிற்று.

(1) ஆ, உ, ஈ, அ, இ (2) இ, அ, ஈ, உ, ஆ
(3) ஆ, உ, அ, ஈ, இ (4) ஈ, ஆ, உ, அ, இ

19. (அ) இவ்வாறான எழுத்து முறைக்கு எழுதும் கருவிகளே காரணமாகும்.
(ஆ) நம் முன்னோர்கள் பலகையிலும் காகிதத்திலும் எழுத வில்லை.
(இ) இதற்காக வளைவுகளும் சுழிகளும் கொண்டு எழுதினார்கள்.
(ஈ) ஓலையில் எழுதும் போது கிழியாமல் இருக்க வேண்டும் அல்லவா?
(உ) பனை ஓலையில் இரும்பு எழுத்தாணிக் கொண்டு எழுதினார்கள்.

(1) அ, உ, ஆ, இ, ஈ (2) ஈ, இ, ஆ, உ, அ
(3) ஆ, உ, ஈ, இ, அ (4) உ, ஈ, ஆ, அ, இ

20. (அ) அதனால் தன்னைக் காக்க தனிமுயற்சி ஒன்றும் எடுக்கவில்லை.
(ஆ) வள்ளுவர் இயற்கையைப் பாடியுள்ளார்.
(இ) பஞ்ச பூதங்களுக்கு நாம் தான் இயைந்து போக வேண்டும் என உணர்ந்தார்.
(ஈ) பஞ்ச பூதங்கள் மனிதனுக்குக் கட்டுப்பட்டு நடப் பவையல்ல.
(உ) இயற்கைக்கு எதிராக மனித சத்தியால் ஒன்றும் செய்ய இயலாது என அறிந்தார்.

(1) ஈ, உ, ஆ, இ, அ (2) ஆ, உ, ஈ, இ, அ
(3) ஆ, உ, இ, ஈ, அ (4) ஆ, இ, உ, ஈ, அ

## வினாத்தாள் – 24
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 2 | (2) - 1 | (3) - 4 | (4) - 1 | (5) - 3 |
| (6) - 2 | (7) - 4 | (8) - 4 | (9) - 2 | (10) - 3 |
| (11) - 1 | (12) - 2 | (13) - 4 | (14) - 3 | (15) - 2 |
| (16) - 3 | (17) - 4 | (18) - 1 | (19) - 1 | (20) - 3 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 42 நிறுத்தற் குறிகள்

நாம் அனைவருமே பேசும் போது சொற்களை ஏற்றி, இறக்கி, நிறுத்திப் பேசி தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறோம் எனவே எழுதும் போது அவ்வாறான உணர்ச்சிகள் வெளிப்பட வேண்டுமல்லவா? அவ்வாறு வெளிப்படுத்துவதற்காகவே நாம் நிறுத்தற்குறிகளை பயன்படுத்துகிறோம். அவ்வாறான நிறுத்தற்குறிகள் சிலவற்றினைக் கீழே பார்ப்போம்.

1. காற்புள்ளி அல்லது உறுப்பிசைக்குறி - ,
2. அரைப்புள்ளி அல்லது தொடரிசைக்குறி - ;
3. முக்காற்புள்ளி அல்லது விளக்கிசைக்குறி - :
4. முற்றுப்புள்ளி அல்லது முடிப்பிசைக்குறி - .
5. வினாக்குறி அல்லது வினாவிசைக்குறி - ?
6. வியப்புக்குறி அல்லது மெய்ப்பாட்டுக்குறி - !
7. மேற்கோட்குறி அல்லது அனுவாதக்குறி - ""/''
8. சிறுகோடு அல்லது விட்டிசைக்குறி - -
9. பிறை அடைப்பு - ()
10. சதுர அடைப்பு - []

**1. காற்புள்ளி**

**காற்புள்ளி இட வேண்டிய இடங்கள்**

(i) வாக்கியத்தின் ஒவ்வொரு பொருளையும் பிரித்துக்காட்ட

(உ + ம்) ராஜா, ரவி, கண்ணன் மூவரும் வந்தனர்.

(ii) எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் தொடர் வரும் போது எழுவாயை அடுத்து

(உ + ம்) அவன், அவனைக் கண்டு அஞ்சமாட்டான்.

(iii) வாக்கியத்தில் விளக்கத்துக்காக வரும் இடை பிறவைப்பைப் பிரித்துக் காட்டுவதற்கு காற்புள்ளிகள் முன்னும் பின்னும் இடப்படும்.

(உ + ம்) அவன் விளையாட்டில், குறப்பாக உதைப்பந் தாட்டத்தில், மிகுந்த ஆர்வம் செலுத்துவான்.

(iv) பொருள் மயக்கம் தோன்றக் கூடிய இடங்களில் பொருள் மயக்கம் தோன்றாது தவிர்ப்பதற்காக

(உ + ம்) ராமு, கண்ணன் வாசலில் இருந்து கூப்பிட்டான்.

(v) விளிக்கும் சொற்களை அடுத்து

(உ + ம்) "அம்மா, என்ன செய்கிறீர்கள்?" என்றான் ராஜா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vi) இணைப்பு இடைச் சொற்களை அடுத்து

(உ + ம்) அவன் படிப்பான், எனவே சித்தி பெறுவான்.

(vii) தொடர் வாக்கியத்தில் உட்தொடர்கள் நீண்டிருப்பின் பொருள் விளக்கத்திற்காக இடப்படும்.

(உ + ம்) ஆசிரியர் கொப்பியை எடுத்து, பார்த்து, திருத்தி மாணவர்களுக்கு வழங்கினார்.

(viii) ஒருவரின் நேர்கூற்று வாக்கியங்களை அப்படியே எழுதும் போது கூற்றுக்கு முன் காற்புள்ளி இடப்படும்.

(உ + ம்) அப்பா, "படிக்காவிட்டால் அடிப்பேன்" என்றார்.

(ix) வாக்கியத்தில் தொடக்கத்தில் வரும் "ஆம்" "ஆமாம்" "இல்லை" ஓ, ஓகோ" போன்ற சொற்களை அடுத்து

(உ + ம்) ஆமாம், நானும் கண்டேன்.

(x) முகவரி எழுதும் போது

(உ + ம்) வீ. துரைராஜ்
இல. 14, அம்பலாங்கொடை,
ஹொப்டன்.

(ix) ஒரே வாக்கியத்தில் அடுத்தடுத்து வரும் ஏவல் வினாக்களுக்கு இடையில்

(உ + ம்) அவனுடன் போகாதே, வந்துவிடு.

(xii) ஒரே வாக்கியத்தில் அடுக்கி வரும் வினாத் தொடர்களுக்கு இடையில்

(உ + ம்) அவன் வருவானா, வரமாட்டானா?

**2. அரைப்புள்ளி**

**அரைப்புள்ளி இட வேண்டிய இடங்கள்:**

(i) ஓர் எழுவாயுடன் பல பயனிலைகள் வருடமித்தில்

(உ + ம்) ரவி, அப்பா கூறிய படி கடைக்குச் சொன்றான்; பொருட்களை வாங்கினான் ; வீட்டிற்கு வந்தான் ; அப்பாவிடம் கொடுத்தான்.

(ii) இரு வேறுபட்ட கருத்துக்கள் வருமாயின் ஒன்றிலிருந்து ஒன்றினைப் பிரித்துக்காட்ட முற்றுத் தொடர்களுக்கு இடையில்.

(உ + ம்) ராஜா நல்லவன், கண்ணன் கெட்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. முக்காற்புள்ளி**

**முக்காற்புள்ளிகள் இட வேண்டிய இடங்கள:**

(i) *பிரதான கூற்றுக்கு பின்வரும் கூற்று, அதன் விளக்கமாக அமைந்தால்*

*(உ + ம்) அங்கே செல்லக் கூடாது : நாய் கடிக்கும்.*

(ii) *வரையறை அல்லது விளக்கத்தை அறிமுகப்படுத்தும் 'என்பது' 'என்றால்' போன்ற சொற்கள் இல்லாத போது*

*(உ + ம்) ஆத்திகன் : கடவுளை நம்புவான்*

(iii) *பின்னே கொடுக்கப்படும் ஒரு பட்டியலை அறிவிப்பதற்குப் பயன்படும். அவையாவன. உதாரணமாக, பின்வருவன பின்வருமாறு, வருமாறு போன்ற தொடர்களுக்குப் பின்*

*(உ + ம்) உயிர்மெய்யெழுத்துக்கு உதாரணங்கள் வருமாறு : கெ, தெ, ட*

(iv) *பட்டியல் அடுத்த வரியில் தொடருமாயின் முக்காற்புள்ளியை அடுத்து சிறுகோடு இடப்படும்*

*(உ + ம்) பின்வருவோர் பரீட்சைக்குத் தோற்ற முடியாத :-*
*கண்ணன், ராமு, சிவன்*

**4. முற்றுப்புள்ளி.**

**முற்றுப்புள்ளி இடவேண்டிய இடங்கள்.**

(i) *வாக்கியத்தின் முடிவில்*
*(வினா, வியப்பு வாக்கியங்கள் இதில் அடங்காது)*

*(உ + ம்) அவன் மிகவும் நல்லவன்.*

(ii) *சொற்குறுக்கத்தில்*

*(உ + ம்) கி.பி. (கிறிஸ்த்துக்குப்பின்)*
*இ. ஒ. கூ. தா. (இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனம்)*

(iii) *முகவரியின் இறுதியில்*

*(உ + ம்) சி.சின்னய்யா,*
*பசறை வீதி,*
*பதுளை.*

**5. வினாக்குறி -?**

(i) *வினாவாக்கியத்தின் இறுதியில் வினாக்குறி இடப்படும்.*
*(உ + ம்) அவன் எங்கே சென்றான்?*
*நீங்கள் படித்தீர்களா?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. உணர்ச்சி குறி -!**

(i) உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் போது உணர்ச்சிக்குறி பயன்படுத்தப்படும்.

(உ + ம்) ஆகா! என்ன அழகு - வியப்பு
ஐயோ! பாவம்! - இரக்கம்
சீ! போ! - வெறுப்பு

**7. மேற்கோட்குறி - " " / ' '**

**இரட்டை மேற்கோட்குறி இடும் இடங்கள்.**

(i) நேர்க்கூற்று வாக்கியங்கள்

(உ + ம்) "நாளை என்ன கிழமை?" என்றான் ராஜா.

(ii) ஒருவர் கூறிய கருத்தை மேற்கோள் காட்டுகையில்

(உ + ம்) "அறத்தால் வருவதே இன்பம்" என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

**ஒற்றை மேற்கோட்குறி இடும் இடங்கள்.**

(i) ஒருவரின் எண்ணத்தை வெளிப்படுத்தும் கூற்றை தனித்துக் காட்ட.

(உ+ம்) கண்டவுடனேயே 'நீ ராஜா' என்பதை அறிந்தேன்.

(ii) எழுதுபவர் தம் நோக்கில் ஒரு சொல்லையோ தொடரையோ தனித்துக்காட்ட

(உ+ம்) நாடகத்தில் அவர்களைக் கண்டதுமே, 'அவர்கள் நல்லவர்கள்' என்ற நம்பிக்கை உங்களுக்கு வரும்.

**8. சிறுகோடு - -**

**சிறுகோடு பயன்படுத்தப்படும் இடங்கள்:**

(i) வெவ்வேறாகக் கூறப்பட்ட பொருள்களைத் தொகுத்து கூறுவதற்கு.

(உ+ம்) அதிபர்,ஆசிரியர், மாணவர்கள் -எல்லோரும் வந்தார்கள்

(ii) சிலவகைச் செய்யுள்களில்

(உ+ம்) பாட்டுக்கொரு புலவன் பாரதியடா - அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா - அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) சொற்களை சுருக்கி எழுதுகையில்

(உ+ம்) உ -ம் - உதாரணம்

எ - டு - எடுத்துக்காட்டு

**9. பிறை அடைப்பு ()**

**பிறை அடைப்பை பயன்படுத்தும் இடங்கள்:**

(i) விரித்துக் கூறுதல், விளக்கிக் கூறுதல், கூடுதல் தகவல் போன்றவற்றைக் குறிக்க.

(உ+ம்) அவனது மாமா (கந்தையன்) கூறினான்.

(ii) தமிழ்ச்சொல்லை அடுத்து பிறமொழிச்சொல் வரும்போது

(உ+ம்) இணையத்தில் (Internet) நல்ல தகவல்களைப் பெறலாம்.

(iii) மேற்கோளின் ஆதார நூல் மற்றும் அதன் விவரங்களைக் காட்ட

(உ+ம்) உடைமை அதிகாரத்தில் (திருக்குறள்) உள்ளதை அவதானிக்குக.

(iv) நாடகம், சினிமா போன்றவற்றின் காட்சி அமைப்பு, உரையாடல், பாத்திர வருணனை, நடிப்பு முறை முதலியவற்றைக் குறித்துக்காட்ட.

(உ+ம்) மாலா :- (அழுதுகொண்டே) நானும் வருகிறேன்.

**10. சதுர அடைப்பு [ ]**

(i) பிறை அடைப்பிற்குள் இன்னொரு அடைப்பு தேவைப்படும் போது

(உ+ம்) இப்புத்தகத்தில் சிறந்த கதைகள்
(பூ வாசம் [பக். 15 ] நட்சத்திரங்கள் [பக். 40] , அதிசயம் [பக். 61 ] ,) இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் -25

## பகுதி - 1

★ பின்வருவனவற்றுள் பொருத்தமான நிறுத்தக்குறியீடுகள் இடப்பட்டுள்ள வாக்கியத்தின் கீழ் கோடிடுக.

1. (1) நான் பாடசாலைக்கு வரமாட்டேன் என்றான் ராஜா.
   (2) "நான் பாடசாலைக்கு வரமாட்டேன்" என்றான் ராஜா.
   (3) நான் பாடசாலைக்கு வரமாட்டேன். என்றான் ராஜா.
   (4) ["நான் பாடசாலைக்கு வரமாட்டேன்"] என்றான் ராஜா.

2. (1) ஐயோ அவன் பாவம்.
   (2) ஐயோ அவன் பாவம்!
   (3) ஐயோ! அவன் பாவம்!
   (4) "ஐயோ! அவன் பாவம்!"

3. (1) இலங்கை வளர்ச்சியடைந்த நாடு. அங்கே அறிவுபூர்வமான மக்கள் வாழ்கிறார்கள்.
   (2) 'இலங்கை வளர்ச்சிடைந்த நாடு' அங்கே அறிவுபூர்வமான மக்கள் வாழ்கிறார்கள்.
   (3) இலங்கை வளர்ச்சியடைந்த நாடு! அங்கே அறிவூபூர்வமான மக்கள் வாழ்கின்றார்கள்.
   (4) இலங்கை வளர்ச்சியடைந்த நாடு: அங்கே அறிவுபூர்வமான மக்கள் வாழ்கின்றார்கள்.

4. (1) "நண்பர் ராஜா அவர்களே! வாருங்கள்" என்றான்.
   (2) "நண்பன் ராஜா அவர்களே வாருங்கள்" என்றான்
   (3) (நண்பர் ராஜா அவர்களே வாருங்கள்) என்றான்.
   (4) நண்பர்! ராஜா அவர்களே! வாருங்கள் என்றான்.

5. (1) குயில், புறா, கிளி, பாம்பு, போன்றவை வாழ்கின்றன.
   (2) குயில், புறா, கிளி, பாம்பு போன்றவை வாழ்கின்றன.
   (3) 'குயில், புறா, கிளி, பாம்பு' போன்றவை வாழ்கின்றன.
   (4) குயில்; புறா; கிளி; பாம்பு போன்றவை வாழ்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. (1) ஞாயிற்றுக்கிழமை (ஏப்ரல் 3) காலையில் இறந்தார்.

(2) ஞாயிற்றுக்கிழமை ஏப்ரல் 3 காலையில் இறந்தார்.

(3) ஞாயிற்றுக்கிழமை 'ஏப்ரல் 3' காலையில் இறந்தார்.

(4) ஞாயிற்றுக்கிழமை [ ஏப்ரல் 3 ] காலையில் இறந்தார்.

7. (1) "காட்டில் வாழும் பறவைகளில்" சில பின்வருவன, காகம், குயில், மைனா

(2) காட்டில், வாழும் பறவைகளில் சில பின்வருவன: காகம், குயில், மைனா.

(3) காட்டில் வாழும் பறவைகளில் சில பின்வருவன: காகம், குயில், மைனா.

(4) காட்டில் வாழும் பறவைகளில் சில பின்வருவன, (காகம், குயில், மைனா)

8. (1) கி.பி: முதல் மூன்று நூற்றாண்டு சங்ககாலத்துக்குரியது.

(2) (கி.பி) முதல் மூன்று நூற்றாண்டு. சங்ககாலத்துக்குரியது.

(3) 'கிபி' முதல் மூன்று நூற்றாண்டு சங்ககாலத்துக்குரியது.

(4) கி.பி. முதல் மூன்று நூற்றாண்டு சங்ககாலத்துக்குரியது.

9. (1) மிக்க நன்றி. "உங்களுக்கு என்ன வேண்டும்?"

(2) மிக்க நன்றி - உங்களுக்கு என்ன வேண்டும்?"

(3) மிக்க நன்றி. உங்களுக்கு என்ன வேண்டும்?

(4) 'மிக்க நன்றி'. உங்களுக்கு என்ன வேண்டும்?

10. (1) பத்திரிகைகளில் முதியோர்களுக்கான பக்கங்களும் (தினத்தந்தி பக். 20, குமுதம் பக். 6, குங்குமம், பக். 7) உள்ளன.

(2) பத்திரிகைகளில் முதியோர்களுக்கான பக்கங்களும் (தினத்தந்தி [பக். 20 ], [குமுதம் பக். 6,], [குங்குமம் பக். 7]) உள்ளன.

(3) பத்திரிகைகளில் முதியோர்களுக்கான பக்கங்களும் "தினத்தந்தி பக். 20, குமுதம் பக் 6, குங்குமம் பக் 7" உள்ளன.

(4) பத்திரிகைகளில் முதியோர்களுக்கான பக்கங்களும் [தினத்தத்தி (பக் 20), குமுதம் பக்.6, குங்குமம் (பக். 7)" உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. (1) ராஜா : (சிரித்துக் கொண்டே) என்ன நடக்கிறது?
(2) ராஜா சிரித்துக் கொண்டே, என்ன நடக்கிறது
(3) ராஜா (சிரித்துக் கொண்டே) என்ன நடக்கிறது?
(4) ராஜா : [சிரித்துக் கொண்டே] என்ன நடக்கிறது?

12. (1) ஆகா என்ன அழகு?
(2) ஆகா! என்ன அழகு?
(3) ஆகா! என்ன அழகு!
(4) ஆகா! 'என்ன அழகு!'

13. (1) என்ன ராஜா கவலையாக இருக்கின்றாய்? என்றான் கமலன்.
(2) "என்ன ராஜா கவலையாக இருக்கின்றாய்?" என்றான் கமலன்.
(3) "என்ன ராஜா கவலையாக இருக்கின்றாய்"? என்றான் கமலன்
(4) என்ன ராஜா? கவலையாக இருக்கின்றாய்? என்றான் கமலன்.

14. (1) ராமு ராஜா வீட்டிற்கு சென்றான்.
(2) ராமு! ராஜா வீட்டிற்கு சென்றான்.
(3) ராமு, ராஜா வீட்டிற்கு சென்றான்.
(4) 'ராமு' ராஜா வீட்டிற்கு சென்றான்.

15. (1) எத்தனை நாட்கள் காத்திருப்பது? என்னால் இயலாது.
(2) "எத்தனை நாட்கள் காத்திருப்பது?" என்னால் இயலாது.
(3) எத்தனை நாட்கள் காத்திருப்பது - என்னால் இயலாது?
(4) எத்தனை நாட்கள்? காத்திருப்பது என்னால் இயலாது.

16. (1) பெற்றோர், ஆசிரியர், பிள்ளைகள், எல்லோரும் வந்தனர்.
(2) பெற்றோர், ஆசிரியர், பிள்ளைகள் எல்லோரும் வந்தனர்.
(3) பெற்றோர், ஆசிரியர், பிள்ளைகள் - எல்லோரும் வந்தனர்.
(4) "பெற்றோர், ஆசிரியர்,பிள்ளைகள்," எல்லோரும் வந்தனர்.

17. (1) கோமான் இவ்வாறு கூறினார். தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட போது, நான் ஆட்சிக்கு வந்தால் முன்போலவே மக்களுக்காக சேவைகள் செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) கோமான் இவ்வாறு கூறினார்: "தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட போது, நான் ஆட்சிக்கு வந்தால் முன்போலவே மக்களுக்காக சேவைகள் செய்வேன்.

(3) கோமான் இவ்வாறு கூறினார் "தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட போது" நான் ஆட்சிக்கு வந்தால் முன்போலவே மக்களுக்காக சேவைகள் செய்வேன்.

(4) கோமான் இவ்வாறு கூறினார். " [தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட போது] நான் ஆட்சிக்கு வந்தால் முன்போலவே மக்களுக்காக சேவைகள் செய்வேன்".

18. (1) பிப 5. மணிக்கு போட்டி நடைபெறும்.

(2) பி.ப.5. மணிக்கு போட்டி நடைபெறும்.

(3) பி.ப. 5 மணிக்கு போட்டி நடைபெறும்.

(4) பி.ப.5. மணிக்கு போட்டி நடைபெறும்.

19. (1) படித்தவனும் இருக்கின்றான் ; படிக்காதவனும் இருக்கின்றான்.

(2) படித்தவனும் இருக்கின்றான் ; படிக்காதவனும் இருக்கின்றான்;

(3) படித்தவனும் இருக்கின்றான். படிக்காதவனும் இருக்கின்றான்.

(4) படித்தவனும், இருக்கின்றான் படிக்காதவனும் இருக்கின்றான்.

20. (1) உயிரினங்கள் எல்லாம் பிறக்கின்றன, வாழ்கின்றன, இறக்கின்றன.

(2) உயிரினங்கள் எல்லாம் பிறக்கின்றன: வாழ்கின்றன: இறக்கின்றன.

(3) உயிரினங்கள் எல்லாம் பிறக்கின்றன ; வாழ்கின்றன; இறக்கின்றன.

(4) உயிரினங்கள் எல்லாம் பிறக்கின்றன ; வாழ்கின்றன; இறக்கின்றன

21. (1) ஓகோ. எனக்கு புரிந்து விட்டது.

(2) ஓகோ எனக்கு புரிந்து விட்டது.

(3) ஓகோ! எனக்கு புரிந்துவிட்டது.

(4) ஓகோ எனக்கு, புரிந்துவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. (1) 'அவன் மிகவும் நல்லவன் என்றான் ராஜா'
(2) அவன் மிகவும் நல்லவன் என்றான் ராஜா.
(3) 'அவன் மிகவும் நல்லவன்' என்றான் ராஜா.
(4) அவன் மிகவும் நல்லவன் 'என்றான் ராஜா'

23. (1) நீ கடைக்குப் போகாதே, வா,
(2) நீ, கடைக்குப் போகாதே வா
(3) நீ கடைக்குப் போகாதே, வா.
(4) நீ கடைக்குப் போகாதே வா.

24. (1) நீங்கள் 'அவனைப்' பார்த்தீர்களா
(2) நீங்கள் அவனைப் பார்த்தீர்களா?
(3) நீங்கள் அவனைப் பார்த்தீர்களா.
(4) 'நீங்கள் அவனைப் பார்த்தீர்களா'

25. (1) இல்லை அவன் பொருத்தமில்லை.
(2) இல்லை, அவன் பொருத்தமில்லை.
(3) இல்லை, அவன் பொருத்தமில்லை
(4) இல்லை அவன். பொருத்தமில்லை.

## வினாத்தாள் – 25
## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) - 2 | (2) - 3 | (3) - 4 | (4) - 1 | (5) - 2 |
| (6) - 1 | (7) - 3 | (8) - 4 | (9) - 3 | (10) - 2 |
| (11) - 1 | (12) - 3 | (13) - 2 | (14) - 3 | (15) - 1 |
| (16) - 3 | (17) - 4 | (18) - 3 | (19) - 1 | (20) - 3 |
| (21) - 1 | (22) - 3 | (23) - 3 | (24) - 2 | (25) - 2 |

Class No
Acc No
Arasady Public Library
Municipal Council
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

Class No: 494.8
Acc No
Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1437

Class No:
Acc No 1437

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












## இந்நூலாசிரியரின் ஏனைய வெளியீடுகள்

- தமிழ் மொழியும் இலக்கியமும் - தரம் - 6
- தமிழ் மொழியும் இலக்கியமும் - தரம் - 7
- தமிழ் மொழியும் இலக்கியமும் - தரம் - 8
- தமிழ் மொழியும் இலக்கியமும் - தரம் - 9
- தமிழ் மொழியும் இலக்கியமும் - தரம் - 10
- தமிழ் மொழியும் இலக்கியமும் - தரம் - 11
- தமிழ் இலக்கியத் தொகுப்பு - தரம் - 11
- சைவநெறி - தரம் - 6
- சைவநெறி - தரம் - 10
- கட்டுரைகளும் கதை எழுதுவதற்கான பயிற்சிகளும் - தரம் - 5

PBD
201019803
TAMIL MO ILLAKI G-II P 1
19.01.08
Rs. 300.00

9 789557 732916

ISBN - 978-955-7732-91-6

LOYAL PUBLICATION
125, New Moor Street, Colombo 12.
Tel: 011 2433874 / 011 4280880 / 077 7556277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org